இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எட்டாவது
பாராளுமன்றம்
(முதலாவது அமர்வு)

பா.தொ.இல. 2015/12

# கணக்காய்வாளர் தலைமை அதிபதி
# ஆண்டறிக்கை



2014



## திரு. டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதிற்கடமை)

திரு. டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன அவர்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(4) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2014 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பதிற்கடமை கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர் தனது தொழில் வாழ்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் கணக்காய்வுப் பரீட்சகராக 1988 இல் ஆரம்பித்து 1992 இல் திணைக்களத்திலிருந்து வெளியேறி ஏறத்தாழ ஒரு ஆண்டுகாலம் அரசாங்க கணக்காளராக சேவையாற்றினார். மீண்டும் அதே ஆண்டில் கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவராக மீண்டும் இணைந்து 2007 இல் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர், அவர் மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக பதவியுயர்த்தப்பட்டார். அவர் ஏறத்தாழ நான்கு ஆண்டு காலம் சம்பளமற்ற விடுமுறையில் சவூதி அரேபியாவிலுள்ள தனியார் கம்பனியொன்றில் பிரிவுக் கணக்காளர் ஒருவாராக சேவையாற்றினார்.

திரு. டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன அவர்கள் களனிப் பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில் கௌரவ பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட பின்னர் பட்டயக் கணக்காளர் ஒருவராக தகைமை பெற்றார். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ACA) ஆயுட்கால அங்கத்தவரும், பொது நிதி மற்றும் கணக்கியல் பட்டயம்பெற்ற நிறுவனத்தின் (UK) தகுதிவாய்ந்த கணக்காளர் அங்கத்தவரும், இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (ACMA) ஆயுட்கால அங்கத்தவரும் ஆவார்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செய்தி

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள பொது நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டினை பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் பேணிவருவதற்காக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதல் தொடர்பிலான 2014 ஆம் அண்டிற்கான எனது அறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கைகளின் ஏழாவது தொகுதியாக இந்த ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் ஏனைய அறிக்கைகளை பின்வரும் ஏழு தொகுதிகளின் கீழ் வெவ்வேறாக சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.*

| | |
|---|---|
| *முதலாம் தொகுதி* | *அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்* |
| *இரண்டாம் தொகுதி* | *அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள் மற்றும் சபைகள்* |
| *மூன்றாம் தொகுதி* | *நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியக் கணக்குகள்* |
| *நான்காம் தொகுதி* | *வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்* |
| *ஐந்தாம் தொகுதி* | *மாகாண சபைகள்* |
| *ஆறாம் தொகுதி* | *உள்ளூராட்சி மன்றங்கள்* |
| *எட்டாம் தொகுதி* | *செயலாற்றல் கணக்காய்வுகளும் ஏனைய விசேட புலனாய்வுகளும்* |

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் செயலாற்றலும் நியதிச்சட்ட வகிபாகமும் பொது மக்கள் மத்தியில் விரிவான விவாதத்திற்கு உட்பட்டிருந்தமையால் இந்த ஆண்டு அதற்கு முக்கயத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. அதன் விளைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அதனது பதவியணியினருக்கும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவரது சுதந்திரத்தினை செயற்பாட்டுப் பரப்புகளில் மாத்திரமன்றி நிதி மற்றும் நிர்வாகத்திலும் பாதுகாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் மூலம் இது நனவாக்கப்பட்டது. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழு காலக்கிரமத்தில் தாபிக்கப்படவுள்ளதுடன் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையிலுள்ள பதவியணியினரின் நியமனங்கள், பதிவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் பதிவிநீக்கங்கள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து இந்த ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்படவுள்ளது. அரசாங்கத்தால் அல்லது கூட்டுத்தாபனமொன்றால் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றால் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குமூலதனத்துடன் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமை ஏனைய பிரதான மாற்றமாகும்.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த கணக்காய்வு சட்டமூலம் சட்டமா அதிபர், சட்ட வரையுனர் மற்றும் பல்வேறு துறைகளிலுள்ள ஏனைய உயர்தொழிலாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வரையப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்போது காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட மிகை அறவீட்டு அதிகாரத்தினை ஒட்டுமொத்த அரச துறைக்கும் விரிவாக்குவதற்கான பிரேரணை முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வுச் சேவையின் உறுப்பினர்களாலும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள உறுப்பினர்களாலும் நிறைவேற்றப்பட்ட சேவைகளின் பெறுமதியான பங்களிப்பு அமைச்சரவையால்

அங்கீகரிக்கப்பட்டிருந்தமை மற்றும்இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவை என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கும் புதிய இணைந்த சேவைக்கு மேற்குறித்த இரண்டு சேவையினைதும் உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்பதற்கும்அங்கீகாரம் வழங்கியிருந்தமை என்பன திணைக்களம் அடைந்து கொண்ட பாரிய வெற்றிகளாகும்.

கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு உயர்தொழில் புரிவோரிடமிருந்து ஏற்படுகின்ற அழுத்தங்கள் அடங்கலாக நிலையாக மாறுகின்ற மற்றும் அதிகரித்த கேள்வி கொண்ட சூழலில் மேற்குறித்த சவால்களை எதிர்கொண்டு திணைக்களத்தை அங்கீகரித்தல் முக்கியமானதாகும். நிறுவனக் கட்டமைப்பை மீளமைத்தல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கும் நெருக்கமான கண்காணிப்பை உறுதிப்படுத்தி மீளாய்வு செய்வதற்கும் ஆதாரச் சேவைகள் 59 பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்படவுள்ளன.

பொதுத் துறை எதிர்நோக்கியுள்ள பிரதான சிக்கல்களையும் அவ்வாறே பாராளுமன்றம் கவனம் செலுத்துகின்ற முக்கியமான விடயங்களையும் திணைக்களம் சிறப்பாக புரிந்துகொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் பல்வேறு செயற்பாடுகளை அமுல்படுத்தியுள்ளது. எமது கணக்காய்வு அறிக்கைகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் வழங்குவதற்கு உதவுகின்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதில் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இறுதியாக அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுச் சுதந்திரம் திணைக்களத்தின் வினைத்திறனில் முக்கியத்துவம் வாய்ந்த தெளிவான அங்கீகாரமாகவுள்ளது.

கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிவுபூர்வமான பதவியணியொன்றுடன் வேலைசெய்தல் எனக்கு கிடைத்த வரப்பிரசாதமாக உள்ளதுடன் அவர்களது கடமைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன்,பொது முயற்சிகள் குழுவின் தலைவர் மற்றும் அதன் அங்கத்தவர்கள், பொதுக் கணக்குகள் குழுவின் தலைவர் மற்றும் அதன் அங்கத்தவர்கள்,துணையாக நின்று கணக்காய்வுப் பணிகளில் ஈடுபட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள், இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள்,திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளிற்கு உதவியாக இருந்த சனாதிபதியின் செயலாளர் அடங்கலான சனாதிபதி செயலகத்தின் பதவியணியினர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் அடங்கலான பதவியணியினர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழு உள்ளிட்ட நிர்வாகத்திற்கு உதவிபுரிந்த ஏனைய அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் திணைக்களத்தின் பௌதீக மற்றும் மனித வள மேம்பாட்டிற்கு பங்களித்த சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாராளுமன்றத்தினதும் பொது மக்களினதும் தேவைகளிற்கு அமைவாக எனது கணக்காய்வுகள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதில் நான் மிகவும் கவனமாக செயற்படுகின்றேன்.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதிற்கடமை)

# உள்ளடக்கம்

**எமது நிறுவனம் 01**
சட்ட மறுசீரமைப்புக்கள் 05
எமது நிறுவனக் கட்டமைப்பு 09
பதவியணியினர் பயிற்சி 13
தகுதிவாய்ந்த கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துதல் 14
COPE மற்றும் COPA இற்கு உதவுதல் 15
கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் 16
செயலாற்றல் கணக்காய்வுகள் 16
புலனாய்வுக் கணக்காய்வுகள் 22

**2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 29**

**கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு (துறைகளின் படி) 42**
திரட்டு நிதியம் 43
பொது முயற்சிகள் 54
உள்ளூராட்சி அதிகாரசபைகள் 62
வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்கள் 66
வங்கியியல் 69
விவசாயம் மற்றும் காணி 76
கலை மற்றும் கலாசாரம் 79

கல்வி 83
சுற்றாடல் 87

வெளி விவகாரம் 90
வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் 91
மீன்பிடி மற்றும் கால்நடை வளம் 93
சுகாதாரச் சேவைகள் 98
முதலீட்டு மேம்படுத்தல் 103
நீர்ப்பாசனம் 105
வெகுசன ஊடகம் 107
சட்டமும் ஒழுங்கும் 110
துறைமுகங்கள் மற்றும் கப்பற் செயற்பாடுகள் 111
வீதி நிர்மாணமும் புனரமைப்பும் 114
தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி 118
அனர்த்த முகாமைத்துவம் 121
பொருளாதார அபிவிருத்தி 122
விளையாட்டுத் துறை 128

சுற்றுலா 130
நகர அபிவிருத்தி 133

வியாபாரமும் வர்த்தகமும் 135
நிர்மாணக் கைத்தொழில் 143
வீடமைப்பு 148
பயணிகள் போக்குவரத்து 153

இளைஞர் விவகாரம் 160
சமூக சேவைகள் 163

தொழில்நுட்பம் 165
உயர் கல்வி 167
பாதுகாப்பு 177
பெருந்தோட்டக் கைத்தொழில் 178
மின்வலு மற்றும் சக்திவளம் 183
நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு 196
அரசாங்க சேவைக்கான ஓய்வூதிய நலன் 200

**மாகாண சபைகள் கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு 205**
மேல் மாகாண சபை 206
மத்திய மாகாண சபை 210
வட மத்திய மாகாண சபை 212
தென் மாகாண சபை 215
கிழக்கு மாகாண சபை 218
வட மாகாண சபை 221
சப்ரகமுவ மாகாண சபை 224
வடமேல் மாகாண சபை 229
ஊவா மாகாண சபை 236

# எமது நிறுவனம்

## எமது தூர நோக்கு

பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்கி பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

## எமது செயற்பணி

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்

## எமது குறிக்கோள்கள்

1. வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்குள்ள பொதுக் கணக்களிப்பொறுப்பினை உறுதிப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றனவா என்பது தொடர்பில் சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்தல்

2. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்காணிப்புக் குழுக்களிற்கும் உதவுதல்

3. முகாமைத்துவ அறிக்கைளினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களது கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு உதவுதல்

## எமது விழுமியங்கள்

- மேன்மை
- புத்தாக்கம்
- தலைமைத்துவம்

## எமது வரலாறு

முன்னர் சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஆரம்பத்தினை பிரித்தானியர் காலத்தின் ஆரம்பப்பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். கிடைக்கக்கூடியதாகவுள்ள ஆவணங்களிலிருந்து 1776 இல் இலங்கையில் பிரித்தானியர்கள் குடியேற்றம் இடம்பெற்று மூன்று ஆண்டுகளின் பின்னர் அதாவது 1799 இன் ஆரம்ப பகுதியில் சிசில் ஸ்மித் என்பவர் கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. அன்று முதல் இலங்கையின் உயர் கணக்காய்வு நிறுவனமாக முப்பத்தியொன்பது கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் சுதந்திர நிறுவனமொன்றாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் தொழிற்பட்டு வருகின்றது.

## கணக்காய்விற்காக எமக்குள்ள அதிகாரம்

பொதுத் துறை நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான அதிகாரம் முதன்மையாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலிருந்து கிடைத்துள்ளது. அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்று ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றில் வைத்திருக்குமாயின் அக் கம்பனிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த அதிகாரம் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ் மேலும் விரிவுபடுத்தப்பட்டு கீழுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> *"கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள்,சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம்,அமைச்சரவையின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள்,நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளளர், பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூராட்சி அதிகார சபைகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள்,ஏதாவது ஏழுத்துமூல சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகளும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அல்லது பதிவுசெய்யப்பட்டதுமாக கருதப்பட்டுள்ள எந்தக் கம்பனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை வைத்திருக்கின்றதோ அக் கம்பனிகள் எவற்றையும் அவற்றின் கணக்குகளையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்."*

அரசியலமைப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரம் கீழே காட்டப்பட்டுள்ள நியதிகளால் மேலும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

- அரச கூட்டுத்தாபனங்களிற்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II
- மாகாண சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டம் (23 ஆம் பிரிவு)
- மாநகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு
- நகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு
- பிரதேச சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் (172 ஆம் பிரிவு)
- கமத்தொழில் அபிவிருத்திச் சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டம் (58 ஆம் பிரிவு)
- விளையாட்டுச் சங்கங்களைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச்சட்டம் (9 ஆம் பிரிவு).

தேவைப்படுமிடத்து பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறு எவையேனும் கடமைகளையும் புரிவதற்கு அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்குகின்றது. தனது செயற்பாடுகளையும் கடமைகளையும் புரிகையில் தமது கடமையில் உதவி செய்வதற்கு தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பு அதிகாரம் வழங்கியுள்ளது. அத்துடன் கணக்காய்வு தொடர்பான ஏனைய தொழில்நுட்ப, தொழில்சார், விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு விசேட நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154 (5) ஆம் உறுப்புரையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்த ஒரு நபராவது கடமை வெளிப்பாடு, பணிகள் என்பவற்றை ஆற்றுகையில்பொதுத் துறை நிறுவனங்கள் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் சகல புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பெறுவதற்கும் களஞ்சியங்கள் மற்றும் எனைய சொத்துக்கள் என்பவற்றை அணுகுவதற்கும், கணக்காய்வினை மேற்கொள்வதற்கும்அவ்வாறான கடமைகள், பணிகள் என்பவற்றை ஆற்றுவதற்குத் தேவையான தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் அதிகாரத்தினை வழங்கியுள்ளது.

## எமது சேவை பெறுனர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லை அரசியலமைப்பினால் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச்சட்டத்தில் கம்பனிகளையும் உள்ளடக்கி அது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள எமது சேவை பெறுனர் அடிப்படை பின்வருமாறாகும்.

59 அமைச்சுக்கள்
93 திணைக்களங்கள்
25 மாவட்டச் செயலகங்கள்
127 கூட்டுத்தாபனங்கள்
73 பல்கலைக்கழகங்கள் மற்றும் பட்டப்பின்படிப்பு நிறுவனங்கள்
07 அரசாங்க வங்கிகள்
69 நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்
121 வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்கள்
22 ஏனைய சுயாதீன நிறுவனங்கள்
09 மாகாண சபைகள்
335 உள்ளூராட்சி மன்றங்கள்
கமநல சேவை நிலையங்கள்
46 விளையாட்டுச் சங்ககங்கள்

## எமது நோக்கெல்லை

தனது தற்றுணிபின் பிரகாரம், கணக்காய்வின் நோக்கெல்லையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தீர்மானிப்பார். இது தொடர்பில் அவர் தற்போதுள்ள நியமங்கள் அதாவது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச அமைப்பு (INTOSAI), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது ஆசிய அமைப்பு (ASOSAI),தொடர்பான விதிகளும் சிறந்த செயல் முறைகளும் ஆகியவற்றால் வழிநடாத்தப்படுகின்றார்.

இவற்றிற்கும் மேலாக, அரச கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கருதப்பட வேண்டிய கணக்காய்வின் நோக்கெல்லையை மிகத் தெளிவாக வரைவிலக்கணப்படுத்துகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கான விபரமான அறிக்கை, கூட்டுத்தாபனம் ஒன்றின் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரசுரிக்கப்படும் அறிக்கை, பாராளுமன்றத்திற்கான பிறிதொரு அறிக்கை என்ற வகையில்மூன்று முக்கிய நியதிச்சட்ட அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. நிதிஅதிகாரச்சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள்,சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் தொடர்பிலான கணக்காய்வு நோக்கெல்லையில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

(அ) தகவல் தெரிவிப்பதற்கான நோக்கில் கூட்டுத்தாபன செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பிடக்கூடிய வகையில் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பன உரிய விதத்தில் போதியளவில்

தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும் அவ்வாறான முறைமைகள் நடைமுறைகள் புத்தகங்கள் பதிவுகள் ஏனைய ஆவணங்கள் யாவும் பயனுள்ள வகையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதும்,

(ஆ) அரசாங்க கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் அக் கூட்டுத்தாபனச் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கிணங்க உள்ளனவா மற்றும் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் நியாயம் நிலவுகின்றதா என்பதும்,

(இ) நிதிகளின் கடப்பாடு மற்றும் நிதிகளின் பயன்பாடு சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் உள்ளனவா என்பதும்,

(ஈ) பணம் வைத்திருத்தலும் சொத்துப் பாதுகாப்பும் திருப்திகரமாக உள்ளனவா,

(உ) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் கூட்டுத்தாபனக் காலப் பகுதிக்குரிய விவகாரங்களது உண்மையானதும் நேர்மையானதுமான தன்மையை வெளிப்படுத்துமாறு கணக்கீடு, நிதியளிப்பு, பெறுமதியிடல் போன்ற அடிப்படைகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதும்,

(ஊ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தேவையெனக் கருதப்படுகின்ற அவ்வாறான ஏனைய விடயங்கள்

## எமது சுதந்திரம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரம் அரசியலமைப்பினால் சிறப்பான விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் INTOSAI இன் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் (SAI) சுதந்திரம் மீதான அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***"கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவிவகித்தலும் வேண்டும்."***

நோய்வாய்ப்படல் அல்லது உடல் அல்லது உள ரீதியான இயலாமை காரணமாக மாத்திரம் சனாதிபதியினால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு அவரை பதவிநீக்கம் செய்யலாம்.

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை மேலும் தெரிவிப்பது யாதெனில்,கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டு அது திரட்டிய நிதிக்குச் சாட்டுப்படுவதுடன் அவரது பதவிக்காலத்தில் குறைக்கப்படவுமாகாது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்தவொரு அமைச்சரினதும் அல்லது அரசாங்க அலுவலகத்தினதும் மேற்பார்வைக்கு உட்படுவதில்லை.

## சட்டரீதியான மறுசீரமைப்புகள்

## சட்டரீதியான மறுசீரமைப்புக்கான தேவைப்பாடுகள்

கணக்காய்வாய்வாளர் தலைமை அதிபதியின் பணியாற்றும் சுதந்திரம் இற்றை வரை அரசியலமைப்பின் வாயிலாகப் பாதுகாக்கப்பட்டபோதும், அவரது நிதிசார் மற்றும் நிர்வாகச் சுதந்திரம் என்பன இவ்விடயங்கள் மீதான அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஏற்பாடுகளினால் நிறைவேற்றுநர்களது இடர்பாட்டுக்கு உள்ளாகின்றது. மனிதவளம் மற்றும் நிதி ஆகிய மூலவளங்களுக்கு நிறைவேற்றுநர் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதி தங்கியிருப்பதானது பாராளுமன்றத்தின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளது உண்மையான, சுதந்திரமான தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஏனெனில் எந்தவொரு நிறுவனத்திற்கோ தனிநபருக்கோ முற்றாக கடப்பாடு இன்றியும் சர்ச்சைக்குரிய பழிவாங்கல்களுக்கு உட்படாதவராயும் அவர் இருத்தல் வேண்டும்.பணிகளையும் நிதியையும் உள்ளடக்கியவாறான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு சட்டங்களின் வாயிலாக பாராளுமன்றத்தால் விரிவான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது.

தற்போது தனது வரவு, செலவுத் திட்டத்திற்குப் பொதுத் திறைசேரியிலேயே அவர் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அவரது திணைக்களத்திற்கான மூலவள ஒதுக்கீடு பொறுப்புக்குரிய அபாயங்களுடன் பிணைந்தவை அல்ல.ஏனைய முன்னேறிய பொதுநலவாய நாடுகள் போல் அல்லது இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது வரவு, செலவுத் திட்டம் நீதித்துறைக் குழு ஒன்றினால் பரிசீலிக்கப்படுவதோ அல்லது அங்கீகரிக்கப்படுவதோ இல்லை. அவரது வரவு, செலவுத் திட்டத்தின் மீதான நிறைவேற்றுநர்களது கட்டுப்பாடுகளிலிருந்து அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதுமில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினதும் அவரது பதவியணியினரதும் நிர்வாகச் சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. கண்காய்வாளர் தலைமை அதிபதியினது பதவியணியினரது நியமனம், பதவி உயர்வு இடமாற்றம், ஒழுக்காற்று விடயங்கள், சம்பளம் மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் என்பன முன்னர் சனாதிபதியின் செயலாளரில் தங்கியிருந்தது. பின்னர் அரசியலமைப்பின் பதினேழாவது திருத்ததையடுத்து அந்த அதிகாரங்கள் அரசசேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முழுமையான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்காமையால் தற்போதைய ஏற்பாட்டின் கீழும் தனது பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி இடர்களை எதிர்நோக்குகின்றார். நீதித்துறைச் சேவை ஆணைக்குழு எனும் விசேட அமைப்பின் கீழ் வரும் நீதித்துறைச் சேவை போன்று சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டிய விசேட சேவை ஒன்றாகக் கணக்காய்வுச் சேவையையும் கருதப்படக் கூடியதாகும்.

மேலும்,அரசியலமைப்பின் படி அரசாங்க உத்தியோகத்தர் விதிவிலக்கு நிரலில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியும்சேர்த்துக் கொள்ளப்படாமையால், தாபன விதிக்கோவையில் விபரிக்கப்பட்டவாறான சகல அரசாங்க நிர்வாகப் பிரமாணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பதவியணியினருக்கும் ஏற்புடையனவாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரம் இதனால் மேலும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. இவ்வாறான நிர்வாகக் குறைபாடுகள் அவரது கணக்காய்வு பணிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்க தடைகளாக இருந்துள்ளன.

''இன்டொசாய்'', அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சர்வதேச அமைப்பின் 1977 இன் ''லீமா பிரகடனத்தில்'' அரசாங்க கணக்காய்வுச் சுதந்திரத்திற்கான மூலதத்துவங்கள், முறைகள் மற்றும் தொழில்சார் விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் 30 ஆண்டுகளிற்குப் பின்னர் மெக்ஸிகோ பிரகடனத்தில் மேற்படி தேவைப்பாடுகளின் தற்போதைய அபிவிருத்தியாக 2011 திசெம்பர் 22 ஆந் திகதி கூடிய ஐக்கிய நாடுகளின் 66 ஆம் பொதுச் சபை நிறைவேற்றிய ஏ/ஆர்ஈஎஸ்/66/209 தீர்மானத்தின் படி ''அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களை (அஉகநி) பலப்படுத்துவதன் மூலம் வினைத்திறன், கணக்களிப் பொறுப்பு, பயனுறுதி மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றை மேம்படுத்தலாம்''என்பதற்கமைய அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பிலான XIX ஒன்றுகூடலின் போதான மெக்சிகோ பிரகடனத்தில் (இன்டசாய் 2007) அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சுதந்திரத்திற்கு பின்வரும் எட்டு விடயங்கள் அத்தியாவசியமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

1. தற்றுணிபு பிரயோகித்திற்கான ஏற்பாடுகள் அடங்கலாக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தினை விரிவுபடுத்துவதற்கு அரசியலமைப்பிலும் நியதிச்சட்டங்களிலும் சட்டரீதியான ஏற்பாடுகள் குறித்துரைக்கப்பட்டும் தெளிவானவையாகவும் காணப்படுதல் வேண்டும்.

2. அதி உயர் கணக்காய்வு நிறுவனங்கள் (SAI) தேவையானதும் நியாயமானதுமான மனித வளம், பொருட்கள் மற்றும் நிதி வளத்தினைக் கொண்டிருப்பதோடு அரசாங்கத்தினதும் ஏனைய அதிகாரத் தரப்பினரதும் தலையீடின்றி தனது சொந்த பாதீட்டில் முகாமை செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

3. அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களது (SAI) தலைவர்களையும் நிறுவன அங்கத்தவர்களையும் நியமிப்பதற்கான நிபந்தனைகள் நியதிச்சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும். போதியளவு நீண்டகால நிரந்தர விதிகளுடன் நிறைவேற்றுனரிலிருந்து சுதந்திரமாக நீங்கக்கூடியதாக அஉக நிறுவங்களின் தலைவர்களும் அவரது அங்கத்தவர்களும் நியமனங்களைப் பெற்றுக்கொள்தல் வேண்டும். எவ்வித அச்சுறுத்தலுமின்றி தமது பணிப்பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு இது அவர்களிற்கு வாய்ப்பளிக்கும்.

4. தமது சட்டபூர்வ பணிப்பொறுப்புகளை வினைத்திறனாக ஆற்றுவதற்கு கணக்காய்வு விடயங்களைத் தெரிவு செய்தல், கணக்காய்வினைத் திட்டமிடல், மற்றும் கணக்காய்வு முறைகளை அமுல்படுத்தல் அவ்வாறே அவர்களது கணக்காய்வை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தினையும் அவற்றினது உத்தியோகத்தர்களையும் முகாமைத்துவம் செய்வதற்கு அஉகசுதந்திரம் கொண்டிருத்தல் வேண்டும். அதன்காரணமாக அஉக ஆனது தனது கணக்காய்வு வேலைகளை நிறைவேற்றுவதற்காக நியதிச்சட்டரீதியான வழிகாட்டல்கள் மற்றும் தலையீடுகள் என்பவற்றிலிருந்து சுதந்திரமானதாக இருத்தல் வேண்டும்.

5. கணக்காய்வாளர்கள் தமக்குரிய பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றுவதற்காக தேவையான நேரத்தில் சகல ஆவணங்கள் மற்றும் தகவல்களை அணுகிப் பெறுவதற்கும் சுதந்திரமான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. தமது கணக்காய்வு வேலைகளை குறைந்தது ஆண்டுக்கொரு முறையாவது அறிக்கை மூலம் அஉக வெளியிடுதல் வேண்டும் இருப்பினும், தேவையெனக் கருதப்படுமிடத்து அதற்கு மேற்பட்ட தடவைகளில் அறிக்கையிடுவதற்கு அவர்கள் சுதந்திரத்தினைக் கொண்டவர்கள்.

7. தமது கணக்காய்வு அறிக்கைகளது உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பதற்கும் பொருத்தமன அதிகாரத்தரப்பினர்களிற்கு முறைப்படியாக முன்வைக்கப்பட்ட அவர்களது அறிக்கையினை பிரசுரிப்பதற்கும் வெளியிடுவதற்கும் அஉகநி சுதந்திரம் உடையதாகும்.

8. கணக்காய்விற்குள்ளான நிறுவனம் கணக்காய்வாளரின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை கவனித்திற் கொண்டு தேவையான திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என பின்தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளும் சுதந்திரத்தை அஉகநி கொண்டிருக்கும்.

அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மாத்திரம் தொடர்பில் குறிப்பிடுவதுடன் அவரது பதவியணியினரைக் குறித்துக் குறிப்பிடவில்லை. ஆகையால் ஏனைய நாடுகளிலுள்ளவாறு தனிப்பட்ட அதிகாரச்சட்டமொன்றினூடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணியனரது அதிகாரமும் பொறுப்பும் வரையறுத்துக் கூறப்படுதல் வேண்டும்.

அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளை மாத்திரமே கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரிசோதிக்க முடியும். இருப்பினும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருவதில்லை. பொது முயற்சிகளால் அல்லது திறைசேரியினால் 50 சதவீதத்திற்கும் மேல் மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்யப்பட்ட அவ்வாறான 200 இற்கும் மேற்பட்ட கம்பனிகள் காணப்படுகின்றன. அத்துடன் குறிப்பிடத்தக்களவு கம்பனிகள் பொது முயற்சிகளால் தாபிக்கப்பட்டுமுள்ளன. மேலும், பொது முயற்சிகளிலிருந்து நிதிகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் அடங்கலான தனியார் நிறுவனங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி விசாரணை செய்ய முடியாதுள்ளது.

## அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் ஊடாக அரசியலமைப்பின் 153 மற்றும் 154 ஆம் உறுப்புரைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எதிர்கொள்ளப்பட்ட நிர்வாக மற்றும் நிதிசார் சுதந்திரத்திலுள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்குடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவி வகித்தலும் வேண்டும்.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினை தாபித்தல். பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவியினை வகித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் அத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I இன் அலுவலர் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய 3 ஆண்டுகள் நிரந்தர பதவிக்காலத்திற்காக சனாதிபதியினால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்பவற்றிற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்படுகின்றது.*

- *முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசாங்கத்தினால் பொது வளங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்கள் அடங்கலான சகல பொதுத்துறை நிறுவனங்களினதும் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும்.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் அவரது பதவியணியினரும் அவர்களது சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக ''பகிரங்க உத்தியோகத்தர்'' என்ற வரைவிலக்கிணத்திலிருந்து நீக்கப்படுகின்றனர்.*

- *தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீடு ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுனர்களின் எவ்வித தலையீடுகளுமின்றி மேற்கொள்வதற்கு போதியளவு நிதிகள் வழங்கப்படுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் தேசிய பாதீட்டில் கூட்டிணைப்பதற்காக நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.*

## முன்மொழியப்பட்டுள்ள தேசிய கணக்காய்வுச் சட்டமூலம்

பொது நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டுக்கு பலப்படுத்தலை வழங்குதல், பொது வளங்களின் பயன்பாட்டில் வகைகூறலை உறுதிப்படுத்துதல், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அதிகாரத்திலும் தொழிற்பாடுகளிலும் சுதந்திரத்தினை மேம்படுத்துதல்; பொது வளங்களின் பயன்படுத்தலில் சிக்கனம், வினைத்திறன் மற்றும் பயனுறுதியினை முன்னேற்றுதல் என்பவற்றிற்கான அதிகாரங்கள் விபரிக்கப்பட்ட கணக்காய்வுச் சட்டமூலமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வுச் சட்டமூலம் சட்டமா அதிபருடனும் சட்ட வரைஞருடனும் மேற்கொள்ளப்பட்ட அநேக

கலந்துரையாடல்களின் பின்னர் வரையப்படுள்ளது. இது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்களின் கருத்துரைக்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட சட்டமூலத்திலுள்ள பிரதான பண்புகள் கீழே தரப்படுகின்றன.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வொன்றின் நோக்கெல்லையினை கணக்குகளின் பரிசோதனைகள், நிதிகள், நிதி நிலைமை மற்றும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பொது நிதியினதும் ஆதனங்களினதும் நிதிக் கட்டுப்பாடு மற்றும் அவற்றினது கணக்காய்வுப் பொறுப்புடன் தொடர்புடையபணத்திற்கான பெறுமதிக் கணக்காய்வு (செயலாற்றல்) சுற்றாடல் கணக்காய்வுகள் மற்றும் தொழில்நுட்பக் கணக்காய்வுகள் அல்லது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் வேறு எவையேனும் விசேட கணக்காய்வுகள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கி விரிவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவரது தற்றுணிபின் பிரகாரம் எந்தவொரு பொது நபராலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்ற எந்தவொரு விடயத்தினையும் விசாரணை செய்து அதில் அவர் அவசியம் எனக் கருதுகின்றவற்றை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவார்.

- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையினால் நிச்சயிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்களை தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கணக்காய்வுகளிற்கும் பிரயோகித்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு உதவுவதற்குத் தவறுதல் குற்றமொன்றாகும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரம் எழுத்துமூல அல்லது இலத்திரனியல் பதிவேடுகள், புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது இரகசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*

- *கணக்காய்வு கிரயத்தினை அறவிட்டுக் கொள்ளும் நோக்குடன் எந்தவொரு ஆளினதும் அல்லது நிறுவனத்தினதும் கணக்குகளை கணக்காய்வு செய்தமைக்கான கட்டணமொன்றை விதிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படும்.*

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் படி கொடுக்கல்வாங்கலொன்று ஏதேனும் சட்டத்திற்கு, பிரமாணத்திற்கு அல்லது விதிகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டும் அதில் ஈடுபட்டவர்கள் மோசடி, கவனயீனம், விரயம் அல்லது தவறிழைத்தல் செய்திருந்தமை காரணமாக அந்த கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அதில் ஏதேனுமோர் கொடுக்கல்வாங்கல் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளில் தவறாக உள்ளடக்கப்பட்டு அல்லது கணக்குகளிலிருந்து விடுபட்டிருப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலை, நிதிசார் அல்லது ஏனைய விடயத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுமதிக்காதிருப்பதற்கு அதிகாரம் வழங்கப்படுவதுடன் கூட்டாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ பொறுப்புடைய ஆளுக்கு அல்லது ஆட்களிற்கு எதிராக அவ்வாறான கொடுக்கல்வாங்கலின் பெறுமதிக்கு குறையாத தொகையொன்றினை (மிகை அறவீடாக) கணக்காய்வாளர் தலைமை அதிபதி விதிக்க அதிகாரம் வழங்கப்படுகின்றது.

- மிகை அறவீட்டை விதிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றால் திருப்திப்படாத எவரேனும் ஆளொருவர், அத்தகைய தீர்மானத்திற்கு எதிராக முறைப்பாடொன்றை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு உரித்துப் பெறுவதுடன் ஆணைக்குழுவினால் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

- *கணக்காய்வு அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக கால அட்டவணை நிச்சயிக்கப்படவுள்ளது.*

- *நாட்டின் அதியுயர் கணக்காய்வு நிறுவனமாக தேசிய கணக்காய்வு அலுவலகமொன்று தாபிக்கப்படவுள்ளதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலுள்ள சகல உத்தியோகத்தர்களும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.*

- *தேசிய கணக்காய்வு அலுவலகத்தினை கணக்காய்வு செய்வதற்காக தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை ஆணைக்குழு நியமிக்கும் என்பதுடன் அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.*

- *பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குள்ள பொறுப்புக்கள் இச் சட்டத்தினால் நிச்சயிக்கப்படும்.*

- *உள்ளகக் கணக்காய்வுகளின் தேவைப்பாடும் அவற்றின் தொழிற்பாடுகளும் இச்சட்டத்தினால் வரையறுத்துக் கூறப்படும்.*

- *குடியரசின் வருடாந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பில் குறிப்பிடப்படுகின்றது.*

- *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் காணப்படுதலும் வினைத்திறனான தொழிற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தகவல்களை வழங்கும் ஆட்களின் பாதுகாப்பு குறித்து விளக்கப்பட்டுள்ளது.*

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது பதவியணியிலுள்ள எந்தவொரு அங்கத்தவரும் அவரது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக அல்லது அரசியலமைப்பின் கீழுள்ள சட்டரீதியான தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காக அவரால் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்வதற்கு தவறிய குற்றத்திற்காக சட்டரீதியான நடவடிக்கையிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

## எமது நிறுவனக் கட்டமைப்பு


திணைக்களத்தின் தற்போதைய நிறுவகக் கட்டமைப்பு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இணையாக ஒவ்வொரு மட்டத்திலும் குறித்தளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களுடன் அதன் அமைப்பில் 04 மட்டங்களைக் கொண்டதாகும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிலை எனும் முதலாம் மட்டம் திணைக்களத் தலைவராவதுடன் சகல ஊதியம், படிகள் மற்றும் நிர்வாக நோக்கங்களிற்காக அவர் அமைச்சுச் செயலாளருக்கு இணையானவராவார்.

இரண்டாம் மட்டம் பிரதான முப்பத்தி இரண்டு பிரிவுகளை உள்ளடக்குவதுடன் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது உதவிக் கணக்காய்வாளர் தலைமை அப்பிரிவுக்கு தலைவராக உள்ளார். இப் பிரிவுத் தலைவர்களிற்கு ஒப்படைக்கப்படுகின்ற கிளைகளின் கிளைத் தலைவர்களாக கணக்காய்வு அத்தியட்சகர்கள் அல்லது கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள மூத்த உத்தியோகத்தர் ஒருவர் காணப்படுகின்றார். அவர்களிற்கு குறிப்பிட்டளவு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மூன்றாவது மட்டத்தில் உள்ளனர். அதற்கமைய குறித்துரைக்கப்பட்ட விதத்தில் தங்களது கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டு கணக்காய்வுக் கிளைகள் செயற்பட வேண்டிய முறையினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான முழுமையான பொறுப்பும் பிரிவுத் தலைவருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. கிளைத் தலைவர்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதகர் சேவையிலுள்ள உதவி உத்தியோகத்தர்களை வினைத்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் சேவையில் ஈடுபடுத்தி அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி கிளைத் தலைவர்களுக்கு உதவி வழங்கும் அந்தக் கள உத்தியோகத்தர்கள் நான்காம் மட்டத்தில் உள்ளனர். இலங்கை கணக்காய்வு நியமங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளிற்கு இணங்க பரிசோதனைகள், அவதானிப்புக்கள் மற்றும் தமது அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க களப் பரிசோதனைகளை நிறைவேற்றுவதன் ஊடாக அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொண்டு தமது கிளைத் தலைவர்களுக்கு உதவுகின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டாம் மட்டத்திற்கு உரித்தான பிரதான முப்பத்தி இரண்டு பிரிவுத் தலைவர்களிலிருந்து ஒன்பது பிரிவுகளின் தலைவர்கள் பிராந்திய மட்டத்தில் அதாவது மேற்கு, தெற்கு, ஊவா, சப்ரகமுவ, வடக்கு, கிழக்கு, வட் மத்திய, வடமேல் மற்றும் மாகாண அலுவலகங்களிற்கு பொறுப்பாக செயற்படுகின்றனர்.

நாடு முழுவதிலுமுள்ள கணக்காய்வு உப அலுவலகங்களிற்கு பதவியணியனரில் ஒரு பகுதியினர் இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் பெரும்பாலானோர் கொழும்பு பிரதேசத்தில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். 2015 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் நிறுவன மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பும் ஒவ்வொரு தொகுதியின கீழ் கீழே காட்டப்பட்டுள்ளது.




கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் வகிபாகம் தொடர்பில் மதிப்பாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 நவம்பர் 14 அங்கீகரிக்கப்பட்ட புதிய ஊழியர்கோப்பின் பிரகாரம், இலங்கை கணக்காய்வுச் சேவை

உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 350 ஆக உயர்த்தப்பட்டதுடன் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்கள் 1,200 ஆக காணப்பட்டனர். புதிதாக அங்கிகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பின் படி, இலங்கை கணக்காய்வுச் சேவையில் விசேட தரமொன்று உருவாக்கப்பட்டு இத்தரத்தில் மூன்று மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்த மூன்று மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் அடங்கலாக புதிய ஊழியர் கோப்பு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளை 08 இனாலும், உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளை 30 பதவிகளாலும் கணக்காய்வு அத்தியட்சகர்களை 70 பதவிகளினாலும் கணக்காய்வு பரிசோதகர் பதவிகளை 121 பதவிகளாலும் அதிகரித்திருந்தது.

இக் கட்டத்தில், 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழு மற்றும் பொது நிர்வாக அமைச்சின் கலந்தாலோசனையுடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் 2012 நவம்பரில் அங்கீகரிக்கப்பட்டது. சேவைப் பிரமாணக் குறிப்பு அமைச்சரவையின் பரிந்துரைக்காக சனாதிபதி செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களால் அமைச்சரவைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுதல் தாமதமடைந்திருந்தது. பொதுச் சேவைகள் அங்கீகாரத்துடன் சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரவேண்டிய போதிலும் மேற்குறிப்பிட்டவாறு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதிலேற்பட்ட தாமதம் காரணமாக அத்திகதியில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்ப முடியாது போயிருந்தது.

மேற்படி நிலமையின் கீழ், ஆண்டின் 2014 இன் ஆரம்பத்திலும் இறுதியிலும் அவ்வாறே 2015 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறும் திணைக்களத்தின் ஒவ்வொரு பதவியிலும் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| பதவி | 2014 சனவரி 01 இல் உள்ளவாறு | | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | 2015 யூன் 30 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் |
| மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் | 03 | - | 03 | 03 | *03 | - | 03 | *03 | - |
| பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் | 15 | 06 | 09 | 15 | 12 | 03 | 15 | 12 | 03 |
| உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் | 44 | 32 | 12 | 44 | 21 | 23 | 44 | 20 | 24 |
| கணக்காய்வு அத்தியட்சகர்கள் | 288 | 172 | 116 | 288 | 175 | 113 | 288 | 174 | 114 |
| கணக்காய்வு பரிசோதகர்கள் | 1200 | 815 | 385 | 1200 | 791 | 409 | 1200 | 1085 | 115 |

* பதிற்கடமை அடிப்படையில் மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டனர்.

மேலே குறிப்பிட்டவாறு, திணைக்களத்தின் ஒவ்வொரு பதிவியிலும் வெற்றிடங்கள் பாரியளவில் நிலவுதல் திணைக்களத்தின் நியதிச்சட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியமையால் இந்நிலமை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட பின்னர், அப்போது அமுலில் இருந்த தற்போதைய சேவைப்பிரமாணக் குறிப்பின் செல்லுபடியாகும் காலமம் 6/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் எதிர்காலத் திகதியொன்று வரை காலநீடிப்புச் செய்யப்பட்டது. அதன்படி, மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்திருந்தமையால், பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளில் காணப்பட்ட 08 வெற்றிடங்களையும் உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளில் காணப்பட்ட 20 வெற்றிடங்களையும் 2014 இல்

நிரப்பக்கூடியதாக இருந்தது. அத்துடன், உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் ஓய்வுபெற்றமையாலும் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிகளுக்கு பதவியுயர்த்தப்பட்டமையாலும் மேலும் இரண்டு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் ஓய்வுபெற்றமையாலும் ஏற்பட்ட 13 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் 2015 மே மாதம் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இருப்பினும், அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் நிர்வாக மற்றும் நிதிசார் அதிகாரங்கள் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன ஆணைக்குழு தாபிக்கப்படும் வரை, அந்த அதிகாரங்கள் அமைச்சரவைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆகையால், மேற்படி நியமங்களுக்கு அங்கீகாரம் பெறுவதற்காக அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அங்கீகரித்த பதவியணியிலுள்ள 03 மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவி வெற்றிடங்களை நிரப்புவதன் அவசரத் தேவை பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட பின்னர், அந்த வெற்றிடங்களை பதிற்கடமை அடிப்படையில் நிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், அப் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டு தற்போதுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பினை திருத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்திருந்தது. அதன்பிரகாரம், அந்த ஏற்பாடுகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் நிரந்தரமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டளவில் நிலவிய 316 கணக்காய்வுப் பரிசோதகர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் 2014 மார்ச் 28 ஆந் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் கோரப்பட்டதுடன் போட்டிப் பரீட்சைகள் 2014 ஒக்தோபரில் நடாத்தப்பட்டன. பரீட்சைப் பெபேறுகள் 2015 மார்ச் இல் வெளியிடப்பட்டு தகைமைபெற்ற விண்ணப்பதாரிகள் அந்த மாதத்திலேயே நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டனர். நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கணக்காய்வு பரீட்சகர் பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.

### சேவைப் பிரமாணக் குறிப்பை உருவாக்குதல்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பதவியணி, இலங்கை கணக்காய்வுச் சேவை மற்றும் கணக்காய்வுப் பரிசோதகர் சேவை உத்தியோகத்தர்களை உள்ளடக்குகின்றது. அப்போது காணப்பட்ட நிலமையின் கீழ், 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இரு சேவைகளிற்காகவும் தனித்தனியான சேவைப் பிரமாணக் குறிப்புகள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் பதவியணியனரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பிரேரணைகள் மற்றும் கோரிக்கைகளை ஆராய்வதற்காக சனாதிபதியின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்டு இரண்டு முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளையும் சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஒருவரையும் உள்ளடக்கியிருந்தது. குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர், இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து ‘‘இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை’’ என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2014 திசெம்பர் 23 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள ‘‘இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை’’ அரசாங்கத்தினால் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி புதிய சேவைக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு

வருவதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் தொழிற்பாடுகளையும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக மிக உயர்தொழில் தரத்தில் பதவியணியினரை பேணுவதற்கான வாய்ப்பினை இது வழங்கும். அத்துடன், புதிய சேவையின் நியமன மற்றும் ஒழுக்காற்று அதிகாரி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவாக உள்ளமையால் அத்தொழிற்பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கான இயலுமை, திணைக்களத்தின் செயலாற்றலை உயர்த்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

## பதவியணியினர் பயிற்சி

பதவியணியினரின் உயர்தொழில் மற்றும் தொழில்நுட்ப திறன்களை அபிவிருத்தி செய்வதற்காகவும் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்களிற்கும் சவால்களிற்கும் வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கும் திணைக்களம் தனது பதவியணியினருக்கு பயிற்சிகள் வழங்குவதனை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. பயனுள்ளதும் விளைவினை அடிப்படையாகக் கொண்டதுமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் நோக்கில் பொதுத் துறை இயலளவை கட்டியெழுப்பதல் செயற்திட்டத்தின் கீழ் உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி ரூபா 150 மில்லியன் கிரயத்தில் இரத்தினபுரியில் தனியானதோர் பயிற்சி நிலையத்தினை ( பொதுக் கணக்காய்வு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் "சீபிஏரீடீ") திணைக்களம் தாபித்தது. அது கௌரவ பொது முயற்சிகள் குழுவின் தலைவர் (சீஓபிஈ), கணக்காய்வாளர் தலைமை அதிபதி, முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் திணைக்களத்தின் பதவியணியினர் ஆகியோரின் பங்குபற்றலுடன் கௌரவ சபாநாயகரினால் 2014 ஒக்தோபர் 29 ஆந் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. பயிற்சி நிலையமானது மிகவும் வினைத்திறனான மற்றும் பயனுள்ள பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு ஏற்ற விதத்தில் கணனி ஆய்வுகூடம், வாசிகசாலை, கேட்போர் கூடம், விடுதித் தொகுதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கி பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பண நிகழ்வாக உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிக் கணக்காய்வுத் துறையில் ஓர் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் இந்த பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கான கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான வழிகாட்டல், புதிதாக சேர்த்தக்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதகர்களிற்கான அறிமுக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கான புதிய நிதிக் கணக்காய்வு நுட்ப முறைகள், தமிழ் மொழித் தேர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான கொள்வனவு நடைமுறைகள் மற்றும் சிவில் நிர்மாண வேலைகள் மீதான பயிற்சிகள் மீளாய்வாண்டின் பொது இப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட ஏனைய பிரதான பயிற்சி நெறிகளாகும். இச் சகல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் பதவியணியினரின் பௌதீக மற்றும் உளவியல் ரீதியான உறுதியினை முன்னெற்றுவதனை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்தன. ஆகவே, இப் பயற்சி நெறிகள் காலைநேர தேகப்பியாசங்கள், தியாணங்கள், தலைமைத்துவ திறன்கள் மற்றும் குழுவாக இணைந்து கருமமாற்றல் செயற்பாடுகளையும் அவ்வாறே ஏனைய தனிப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் உள்ளடக்கியிருந்தன.

2011 இல் ஆரம்பித்த வைக்கப்பட்டிருந்த திணைக்களம் முழுவதற்குமான புதிய கணக்காய்வு நுட்ப முறைகள் நிகழ்ச்சித்திட்டம் 2014 இல் மேலும் சிறப்பாக முன்னேடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நிதிக் கணக்காய்வு நுட்பமுறைகள் தொடர்பில் 6 நாட்கள் கொண்ட மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 83 உத்தியோகத்தர்களிற்காகவும் செயலாற்றல் கணக்காய்வு நுட்பமுறைகள் தொடர்பான 3 நாட்கள் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 30 உத்தியோகத்தர்களிற்காகவும் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டதுடன் புதிய கணக்காய்வு நுட்ப முறைகளை அமுல்படுத்தவதிலுள்ள சிக்கல்களை ஆராய்வதற்காக புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டு வருகின்றது.

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பிரதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பயற்சியளிப்புத் துறை | பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | பயிற்சி மணித்தியாலங் களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நிதிக் கணக்காய்வு | 442 | 7,809 |
| கொள்வனவுகள் மற்றும் சிவில் நிர்மாணங்கள் | 40 | 1,600 |
| செயலாற்றல் கணக்காய்வு | 30 | 720 |
| புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட கணக்காய்வு அத்தியகட்சகர்களிற்கான அறிமுகப் பயிற்சி | 35 | 1,680 |
| உள்ளுராட்சி அதிகாரசபை – நிதிக் கணக்காய்வு | 300 | 2,400 |
| **மொத்தம்** | **847** | **11,209** |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உதவுவதற்காக தகுதியுள்ள கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

தற்போது நிலவும் வெற்றிடங்கள் காரணமாக உருவாகியுள்ள வளப் பற்றாக்குறைக்கான இடைவெளியை நிரப்பும் நோக்கிலும் நிபுணத்துவ சேவையின் தேவைப்பாட்டை குறிப்பாக அரச வங்கிகளின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும் தகைமை பெற்ற கணக்காய்வாளர்கள் தேவைப் படுகின்றனர். அரசியலமைபின் 154 ஆம் உறுப்புரை மூலம் தகமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் கணக்காய்வு கட்டண நியமிப்புக் குழுவின் அங்கீகாரத்தின் மீது அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சேவைகளுக்காக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவகங்களால் செலுத்தப்பட்ட மொத்த தொகை 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 32,469,326 ஆகவும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 33,094,818 ஆகவும் காணப்பட்டன. தகமை பெற்ற கணக்காய்வாளர்கள் நியமிக்கப்படுகையில் முன்னர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் தரம், அவர்களது நிறுவனத்தில் ஈடுபட்டுள்ள பங்காளர்களின் எண்ணிக்கை, அவர்களது நிறுவனத்தில் கடமையாற்றும் கணக்காய்வுப் பயிலுனர்களின் எண்ணிக்கை என்பவை தேர்வுக் காரணிகளாக அமைகின்றன. அவர்களுக்குள்ள சர்வதேச தொடர்புகள் மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்படும் தொழிற்திறன் தரமும் நியமத்தையும் கருத்தில் கொள்வதற்கான ஓர் காரணியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, ஓர் குறித்த நிறுவகத்திற்கு ஓர் குறித்த கணக்காய்வு ஒப்படை தொடர்ந்து 05 ஆண்டுகளுக்கே ஆகக் கூடிய அளவில் வழங்கப்படும். அதே நிறுவனத்திற்கு குறைந்தது 05 ஆண்டுகள் முடிவடைந்த பின்னரே அதே கணக்காய்வு ஒப்படை மீண்டும் வழங்கப்பட முடியும்.

2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக 03 அரச வர்த்தக வங்கிக் கிளைகள் உள்ளடங்கலாக முறையே 174 மற்றும் 174 நிறுவகங்களினதும் கணக்காய்வில் எனக்கு உதவி வழங்குவதற்காக 2014

ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது பொதுத் தொழில் துறையில் ஈடுபடும் முறையே 135 மற்றும் 158 கணக்காய்வாளர் கம்பனிகளின் சேவைகள் பெறப்பட்டிருந்தன

## அரசாங்க கணக்குகள் குழு மற்றும் பொது முயற்சிகள் குழுவிற்கு உதவுதல்

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 125 மற்றும் 126 இன் கீழ் முறையே அரசாங்க கணக்குகள் குழுவும் (COPA) பொது முயற்சிகள் குழுவும் (COPE) தாபிக்கப்பட்டுள்ளன. அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் விளைத்திறன் மற்றும் நிதி ஒழுக்கம் தொடர்பில் உண்ணிப்பாக பரிசோதிப்பதே அரசாங்க கணக்குகள் குழுவின் பிரதான நோக்கமாக உள்ளதுடன் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரசாங்க முயற்சிகளின் கணக்குகள், பாதீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் நிதி ஒழுங்குவிதிகள், செயலாற்றல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் பொது முயற்சிகள் குழுவின் பிரதான நோக்கமாக உள்ளது.

இந்த இரண்டு குழுக்களினாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வெளியிடப்படுகின்ற அறிக்கைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இச் செயன்முறையில் கலந்துரையாடலின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எழுப்பப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் சில வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. இக் குழுக்களால் அரசாங்க நிறுவனங்களிலுள்ள பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த சான்றுகள் பெறப்படுவதுடன் நிதிகளை ஈடுபடுத்துதல் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு தேவையான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு குழுக்களினாலும் அவற்றினது அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. அரசாங்க நிறுவனங்களை உயர் தரத்தில் நிர்வகித்து நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கும் அரசாங்கத்தின் பொறுப்பினை உறுதிசெய்தல் தொடர்பில் பரிசோதிப்பதற்கு இக் குழுக்களிற்கு உதவியாக செயற்படுவதற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொறுப்புள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகளை தொடர்ச்சியாக கலந்துரையாடுதல் இக்குழுக்களினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதுடன் வளங்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த சான்றுகள் பெறப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு இது தொடர்பில் கருத்திற்கொள்ள வேண்டிய முக்கியமான ஆண்டாவதுடன் இவ்வாண்டில் பொது முயற்சிகள் குழுவினால் 105 அரசாங்க நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இந் நிலமை எமது திணைக்களத்திற்கு பெரும் சவாலாக இருந்த போதிலும், நானும் எனது உத்தியோகத்தர்களும் செயற்திறனாக இவற்றில் பங்குபற்றி அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பரிசோதிப்பதற்கு இக் குழுக்களிற்கு உதவியளித்தனர்.

2014 ஆம் ஆண்டில் 44 அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் செயற்பாடுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் அரசாங்க கணக்குகள் குழுவின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் அவரது பதவியணியினரும் பங்களித்திருந்தனர்.

மேற்குறித்த இரண்டு பாராளுமன்ற குழுக்களிலும் பங்குபற்றுதல் மாத்திரமன்றி 09 மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்களின் நடவடிக்கைகளை பரீட்சிப்பதற்காக மாகாண கணக்குகள் குழுக்களிற்கு உதவியளித்திருந்தனர். இதற்காக 2014 ஆம் ஆண்டில் 120 கூட்டத் தொடர்களில் எனது உத்தியோகத்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படுகின்ற மிகை அறவீடுகள்

23 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 271 பிரதேச சபைகளை உள்ளடக்கிய 335 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அவற்றுடன் தொடர்புடைய அதிகாரச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சட்டத்திற்கு முரணான கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது தவறிழைப்புகள் மற்றும் கணக்குகளில் காட்டப்பட வேண்டிய போதிலும் காண்பிக்கப்பட்டிருக்காத விடயங்கள் சம்பந்தமாக மிகை அறவீட்டினை விதிக்கும் அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உள்ளது. மேற்குறித்த மிகை அறவீட்டு நடவடிக்கை உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், குறித்த அதிகார தரப்பினரால் மிகை அறவீட்டை செயற்படுத்துவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளமையை காண முடியவில்லை.

மிகை அறவீட்டிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் மாநகர சபைகளினதும் நகர சபைகளினதும் விடயத்துக்குப் பொறுப்பான மத்திய அரசாங்கத்தின் அமைச்சருக்கும் பிரதேச சபைகள் தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் உள்ளூராட்சி அதிகாரசபைகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கும் கையளிக்கப்பட்டுள்ளமை சட்டமா அதிபரின் கருத்துத் தெரிவிப்பின் மூலம் உறுதியாகின்றது.

இருப்பினும், 2014 திசெம்பர் 31 வரையான காலத்தில் வழங்கப்பட்டிருந்த மிகை அறவீடுகளிலிருந்து ரூபா 6.73 மில்லியன் தொகை உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராலும் அமைச்சின் செயலாளராலும் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பில் 33 தரப்பினருக்கு எதிராக ரூபா 5.81 மில்லியன் கூட்டுத் தொகைக்கான 07 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இதற்கு மேலாக 2014 ஆம் ஆண்டினுள் ரூபா 294.75 மில்லியன் கூட்டுத் தொகைக்கான 17 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் 178 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் கணக்காய்வு

நிதிக் கணக்காய்விற்கு இணையாக தெரிவு செய்யப்பட்ட விஷேட துறைகளில் தொடர்பாக ஒவ்வொரு அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளின் சிக்கனம், செயற்திறன், வினைத்திறன் மற்றும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு குறித்த கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக பரிந்துரைகள் உட்பட அறிக்கையிடல் செயலாற்றல் கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டிலிருந்து திணைக்களத்தில் புறம்பான பிரிவொன்றாக செயலாற்றல் கணக்காய்வுப் பிரிவு செயற்படுத்தப்பட்டு வருவதுடன் அரச நிறுவனங்களின் வெவ்வேறு துறைகள் டொடர்பாக ஏனைய கணக்காய்வு கிளைகளினால் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் இச் செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட விஷேட துறைகளுக்குரிய தலைப்புக்கள் உட்பட கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் அவசியமானதென தீர்மானிக்கப்படுகின்ற துறை ஊடாக செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிக்கணக்காய்வுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட இச்செயற்பாடுகள் மீதான அறிக்கைளை பாராளுமன்றத்தில் முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இத் துறையில் குறித்த திணைக்கள உத்தியோகத்தர்கள் பயிற்சியும் அளிக்கப்படுகின்றனர்.

செயலாற்றல் கணக்காய்வுகளை அமுல்படுத்துவது தொடர்பில் விளைவினை அடிப்படையாகக் கொண்ட பாதீட்டு முறைமையொன்று முக்கியமான போதிலும், அவ்வாறான விளைவினை அடிப்படையாகக் கொண்ட பாதீட்டு முறைமையொன்று இலங்கையில் காணப்படவில்லை. அதன் காரணமாக செயலாற்றல் கணக்காய்விற்கான அளவீடுகள் எம்மால் நிச்சயிக்கப்படுகின்றன.

## இலங்கை போக்குவரத்து சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் அரச நிதிப்பயன்பாடு தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு

1957 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபை ஆரம்பிக்கப்பட்டு பின்னர் காலத்திற்கு காலம் வெவ்வேறு நோக்கங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களின் பின்னர் பொது மக்களுக்கு செயற்திறனை போக்குவரத்துச் சேவையொன்றை வழங்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபை நாடளாவிய ரீதியில் 1.4 பிரதான டிபோக்கள் 16 உப டிபோக்கள், 12 பிராந்திய அலுவலகங்கள் 11 பிராந்திய வேலைத்தளங்கள் மற்றும் 07 சாரதிப் பயிற்சி பாடசாலைகள் என்பவற்றை கொண்டிருந்தன.

2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்து சபையிடம் 4900 பேருந்துகள் ஆக இருந்த போதிலும் இதில் உள்ளபடியாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பஸ் வண்டிகள் 4400 அல்லது 56 சதவீதமாக இருந்தன. 2012 ஆம் ஆண்டின் போது நுழைவுச்சீட்டு வருமானம் ரூபா 18,357 மில்லியனாக இருப்பதுடன் அவ்வாண்டில் திறைசேரியிடமிருந்து கிடைத்த தொகையில் ரூபா 1,508 மில்லியன் தொகையை கருத்திற் கொண்டதன் பின்னர் ஆண்டின் நட்டம் ரூபா 2,458 மில்லியனாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட பிரதான அவதானிப்புக்களுக்கு மேலதிகமாக ஓட்டத் தேவைப்பாடு கருதி போதியளவில் பேருந்து தொகுதியொன்று காணப்படாமையும், உள்ளவாறான ஓட்டத்தில் ஈடுபடும் பேருந்து தொகுதியில் 55 – 60 சதவீதத்திற்கு கிடைக்கப்பட்டமை பேருந்துகள் முறையாக பராமரிக்கப்படாமை தனியார் பேருந்து ஓட்டத்தின் மூலம் ஸ்ரீ லங்காவிற்கு உள்ள தடைகள், பிராந்திய வேலைத்தளங்களின் பலவீனமான செயலாற்றல், கூடிய எரிபொருள் கிரயத்தை முகாமைத்துவம் செய்யாமை, வெற்றியளிக்காத பேருந்துகளை நல்ல நிலைமைக்கு கொண்டு வராமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உடைந்த பஸ் வண்டிகளை பிரசித்தி ஏலத்தில் விற்பனை செய்தல், ஸ்ரீ லங்காவிற்கு உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யும் போது தேசிய கொள்வனவு வழிகாட்டி ஏற்பாடுகளுக்கு முரணாக கொள்வனவுகளை மேற்கொள்ளல், சுற்றாடல் விடயங்கள் தொடர்பாக கருத்திற் கொண்டமை, ஸ்ரீ லங்காவிற்கு வருமான உழைக்கக்கூடிய மாற்று மூலகங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாமை ஸ்ரீ லங்காவிற்குச் சொந்தமான காணி, கட்டிடங்கள் மற்றும் ஆதனங்களின் உரிமை தொடர்பாக சிக்கலுடன் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை மற்றும் அவை பாவனைக்கு எடுக்காமல் விடல் போன்ற அவதானிப்புக்களுக்கு மேலதிகமாக ஸ்ரீலங்காவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று காணப்படாமை. மற்றும் ஆட்சேர்ப்பு பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்கள் என்பவற்றிக்காக முறையான நடைமுறையொன்று காணப்படாமை உரியகாலத்தில் சம்பளங்களை செலுத்தாமை, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செய்ய வேண்டிய சட்ட ரீதியான கொடுப்பனவுகளை உரிய காலத்தில் மேற்கொள்ளாமை ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவை தாமதமாக்குதல் மற்றும் அதற்காக அதிகளவான பணத்தொகையொன்று மிகை அறவீடாக கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தமை போன்ற விடயங்கள் காரணமாக ஸ்ரீ லங்காவின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, மேலும், ஸ்ரீ லங்காவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தேவையான செயற்பாட்டு செலவினங்களுக்காக போதியளவான நீதியை அதிகளவில் ஸ்ரீ லங்கா டிப்போக்களில் காணப்படாமை மற்றம் அதற்காக திறைசேரியின் ஈடுபாடு எப்போதும் தேவைப்படுவது ஏனைய அவதானிப்புக்களாக இருந்தன.

## போத்தலில் அடைக்கப்பட்ட அல்லது பொதி செய்யப்பட்ட குடிநீர் உற்பத்தி தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் பாவனை தற்போது துரித வளர்ச்சியடைந்திருந்ததுடன், அதிக நகரமயமாக்கள், தொழில் மயமாக்கல், சனத்தொகை வளர்ச்சி, பாவனையாளர், கேள்வி மாற்றமடைதல், குடிப்பதற்கு பொருத்தமான குடிநீர் பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்கள் போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு இவ்வறிக்கையில் இலகுவாக சிறந்த வளமாக காணப்படும் நீர், போத்தலில் அடைக்கப்பட்டு புதிய வடிவத்தில் சந்தைப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது.

குடிநீர் போத்தலில் அடைத்தல் உற்பத்தி நிறுவனங்களை பேணிச்செல்லல் தொடர்பான சட்டரீதியான அனுமதிகளை வழங்கும் அரச நிறுவனமொன்றான சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டு நிர்வாக அலகு தொடர்பாகவும் உரிய நீர் மூலம் அமைந்துள்ள பிரதேசத்தின் சகாதார உத்தியோகத்தர்களின் செயலாற்றல் தொடர்பாக இங்கு கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1980 இன் 26 ஆம் இலக்க உணவு சட்டத்தின் பிரகாரம் நீர் தகாரமொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகாரமொன்றாக கருதப்படும் நீர், மனித பாவனைக்கு பொருத்தமானதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு முறைமையொன்றின் பிரகாரம், நுண்ணுயிர்கள் மூலம் ஏற்படக்கூடிய உணவு நஞ்சாதலைத் தவிர்ப்பதற்காக சிறந்த சுகாதார பழக்க வழக்கங்கள் உட்பட, உற்பத்தி சந்தர்பத்திலிருந்து நுகர்வு சந்தர்ப்பம் வரை உணவு அமைப்பு முறையாக திட்டமிடல் எதிர்பார்க்கப்படுகின்றது. இரசாயனப் பாதுகாப்பிற்காக விஷ இரசாயன பொருட்கள் மூலம் உணவிற்கு ஏற்படக்கூடிய சேதங்களை தவிர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பௌதிக பாதுகாப்பு தொடர்பாக உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து வேலையின் போது விபத்துக்கள் அல்லது பொதியிடும் போது ஏற்பட முடியும். பாவனையாளரை ஏமாற்றுதல், இடம் பெறாத வகையில் தேவையான தகவல்களை பட்டியலிடல் நேர்மையாக முன்வைப்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கணக்காய்வின் பிரதான நோக்கம் மேற்குறித்த தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு தரமான குடிநீர் போத்தல் உற்பத்தி தொடர்பாக உரிய அரச நிறுவனங்களுடன் திருப்திகரமாக பங்குபற்றி செயலாற்றல் மதிப்பிடாகும். குடிநீர் போத்தலில் அடைக்கும் கைத்தொழில் காணப்படும் சட்டங்கள் விதிகள் என்பன முறைப்படி செயற்படுத்தாமை போதிய மேற்பார்வை இடம் பெறாமை, செல்லுபடியான பதிலொன்று இல்லாமல் நீர் இறக்குமதி செய்தல், தரமான நீர் போத்தல் ஒன்றில் இருக்க வேண்டிய ஆக்கக்கூறுகள் எதிர்பார்த்த அளவை விட மாற்றமாக இருத்தல், மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட நீர் போத்தல் தொடர்பாக உரிய கண்காணிப்பொன்று காணப்படாமை போன்ற விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் சந்தையில் உரிய மேற்பார்வையொன்று மற்றும் எழுமாறான பரிசோதனை மூலம் வெளிப்படுத்தப்பட்ட பலவீனங்கள் தொடர்பாக உரிய சட்டத்தை அமுல்ப்படுத்தல் மூலம் இத்துறையின் பலவீனங்கள் விடுபடலாம்.

## மோட்டார் வாகனங்கள் தொடர்பாக புகை பரிசோதனை நியமங்களுக்காக வருடாந்த தகுதிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

பொசில் எரிபொருள் பயன்பாட்டினால் காபன் மொனோசைட், நைதரசன் டையொக்சைட் மற்றும் சல்பர் டயொக்சைட் வாயு வகைகளினால் வாயு மண்டலத்திற்கு விடுவிக்கப்படுகின்றவை அதிகமாக இருப்பதால் வாயு மண்டலத்தின் சாதாரண வெப்பநிலை அதிகரிப்பதற்கு தாக்கம் செலுத்தியுள்ளது.

இதனால் உரிய தரத்தின் பிரகாரம் வாகனம் பராமரிப்பினாலும் எரிபொருள் பயன்பாட்டை வினைத்திறனாக கூடிய மட்டத்தில் பேணுதல், சுற்றாடலுக்கு பொசில் எரிபொருள் மூலம் சேர்க்கப்படும். விஷ வாயுக்களின் அளவைக் குறைத்து சிறந்த சுற்றாடலைப் பேணிச்செல்வது சமூகப்

பொறுப்பொன்றை நிறைவேற்றுவதற்கும் இருந்த செயற்பாடொன்றாக நிறைவேற்றுவதற்கும் இருந்த செயற்பாடொன்றாக மோட்டார் வாகனங்களுக்காக புகை பரிசோதனை வேலைத் திட்டம் 2008 ஆம் ஆண்டின் போது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தை வழி நடத்தும் பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபையினாலும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தினாலும் மஹிந்த ஆய்வு கூட வசதிகள் மற்றும் தரவு தகவல் வழங்கல், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

புகை பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியமொன்று 2010 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் உருவாக்கப்பட்டது. (2012 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 108.12 மில்லியன் மற்றும் ரூபா 32.691 மில்லியன் தொகையும் பொது திறைசேரியில் முதலீடு செய்து ரூபா 36,499,331 ஆன வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது). எனினும் இந் நிகழ்ச்சித்திட்டதின் அடிப்படை நோக்கம் இதன் மூலம் நிறைவேற்றப்படவில்லை. மேலும் புகை பரிசோதனை மேற்கொள்ளும் 02 நிறுவனங்களினால் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பட வேண்டிய தண்டப் பணம் தொடர்பான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

புகைப் பரிசோதனை நிதியத்தை பேணிச் செல்வதற்காக போதியளவில் பதவியணியினர் காணப்படாதிருந்ததுடன், 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் குறித்த 2 கம்பனிகளின் கீழ் மேல் மாகாணத்திலுள்ள 61 பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் 16 நிறுவனங்களே இணக்கச் சான்றிதழ்களைப் பெற்றிருந்தன.

குறித்த அதிகாரச்சட்டத்தின் கீழ் வருமான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் போது இச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மேல் மாகாண மோட்டடார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திற்குரிய அவதானிக்கப்பட்ட குறைபாடுகளாக இருந்ததுடன் சில வாகனங்கள் எதுவித தேவைப்பாடொன்றில்லாமல் விடுவிக்கப்படல் மற்றும் அச் சான்றிதழ் உட்பட ஏனைய மாதிரிப் படிவங்கள் தொடர்பான கட்டுப்பாடு திருப்திகரமாக இல்லாமை தொடர்பாக காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

புகைப்பரிசோதனை நிதியத்தினால் தன்னியக்க செயற்பாடுகளிலுள்ள பின்வரும் பிரிவுகளிலுள்ள குறைபாடுகளை திருத்திக்கொள்ள வேண்டியுள்ளது.

- மோட்டார் வாகனங்களுக்காக உரிய சேவைகளை வழங்குவதற்கு பொருத்தமான கரரஜ்களை இனங்காண்பதும், தேவையான தொழில்நுட்ப அறிவு வழங்குதலும்
- அந்த கராஜ்களில் நடவடிக்கைகளை முறையாக மேற்பார்வை செய்தல்
- நடமாடும் பரிசோதனைகளை முறைப்படுத்தல்
- நிதியத்தின் கீழ் உள்ள தரவுகளை சரியாக பேணுதல்
- புகைச் சான்றிதழ் போலியாக பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதாக பொதுமக்களிடம் காணப்படும் பாதகமான அபிப்பராயத்தை அகற்றுதல்.

## மத்திய கிழக்கு வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடு செல்லும் ஊழியர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் தலையீடு செய்யும் அரச நிறுவனங்களின் செயலாற்றல் பதிப்பாய்வு

இலங்கையின் 20.483 மில்லியன் மொத்த சனத்தொகையில் மொத்த ஊழியப் படையணி 8.8 மில்லியன்களாகும். இவ் ஊழியப் படையின் விகிதமாக 53.8 சதவீதமானோர் தொழில் புரியும் மக்களாவதுடன், தொழிலற்றோர் விகிதமானது 4.4 சதவீதமாகும். இலங்கை தொழிலின்மை விகிதத்தில் 6.6. சதவீதம் பெண்களும் 3.2 சதவீதம் ஆண்களும் ஆகும். இந் நிலமையின் கீழ் தொழில் வாய்ப்புக்காக 2013 ஆம் ஆண்டில் 293,218 சேவகர்கள் வெளிநாடு சென்றிருந்தனர். அதில் 48 சதவீதமானோர் பெண்களாவர். வீட்டுப் பணிப்பெண் சேவைக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை 93 சதவீதத்திற்கும் அதிகமான அளவில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கின்றமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு வெளிநாடு செல்லும் மொத்த இலங்கையர்களினால் உழைக்கப்படுகின்ற வெளிநாட்டு வருமதியில் மத்தியக் கிழக்கு நாடுகளில் தொழில் புரிவோரினால் ஈட்டப்பட்ட வருமதி சாதாரணமாக 55.6 சதவீதமாகும்.

கடந்த ஆண்டுகளில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக வெளிச்செல்லல் பாரியளவில் அதிகரிப்புடன் இடம்பெற்றிருந்ததுடன், வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்களுக்கு எற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளும் அதிகரித்தவாறு உள்ளது. அந்த முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன தலையிட்டு செயற்பட்டிருந்தன.

இலங்கையின் அந்நிய செலவானிக்கு முக்கியமான பங்களிக்கும் வெளிநாட்டில் தொழில் புரிவோரின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக அவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு செல்லும் முன் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபடும் போது அவர்கள் இலங்கைக்கு வருகை தந்த பின்வரும் அவர்களின் நலனுக்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள், வெளிநாடு சென்றுள்ளோரின் 5 சதவீதமானதுடன், அவற்றுள் பெரும்பாலானோர் வீட்டு பணிப்பெண் சேவைக்காக சென்ற பெண்னொருவர் அதனுள் உடல் ரீதியான மற்றும் மன ரீதியான துன்புறுத்தல்கள் தொழில் உடன்படிக்கையை மீறல், குறித்த நாட்டினது சட்டத்திற்கு முரணாக செயற்படல் மற்றும் தொழிலுக்கான தகைமை இல்லாதிருத்தல் ஆகிய விடயங்கள் முதன்மை பெறுகின்றமையுடன் அது தொடர்பில் தேடியறிந்து செயற்பட வேண்டிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மற்றம் உரிய உயர்ஸ்தானிகர் அலுவலகங்களின் தலையீடு போதியளவில் இல்லாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு கிடைக்கும் பெரும்பாலான முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருந்ததெனினும், முறைபாடுகளுக்குரிய சில கோவைகள் தீர்க்கபடாதிருக்கும் போது அக் கோவைகளை மூடி புதிய முறைப்பாடொன்றாக புதிய கடிதக் கோவையாளரினை ஆரம்பித்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய கோவைகள் முழுமையற்றவையானதுடன் முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக பிரதிநிதித்துவ நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு போதியதல்லாத சந்தர்பப்ங்களானது.

ஊழியர்கள் வெளிநாட்டுக்கு செல்வதற்கு மன்னர் வழங்கப்படும் பயிற்சி திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பயிற்சியிலன பெறும் போது சிறு பிள்ளைகள் உள்ள தாய்மார், மனநலம் அல்லது அலல்து உடல் நிலை பாதிக்கப்பட்ட நபர்கள இனங்காணப்பட்டு அந்த ஊழியர்கள் ஊனமுற்றோர் பதிவேட்டில் உள்ளடக்கம், வெளிநாடு செல்லும் ஊழியர்களை வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்தும் போது கர்ப்பம் தரித்துள்ளமையை இனங்கண்டு கொள்ளாமை, நோய் இலட்சினைகளை இனங்கணடு கொள்ளாமை, போலியான வைத்திய சான்றிதழ்களை சமர்ப்பித்தல், வெளிநாடு செல்வதற்கு முன்னர் அந்த நாடுகளில் உள்ள சட்டம் மற்றும் மொழிகள் தொடர்பில் போதிய அறிவினை பெற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் அறிவூட்டல் மேலும் பரவலாக்கப்பட வேண்டும்.

போலியான தகவல்களை வழங்கி போலியான பயண அனுமதிச் சீட்டுக்களை பெற்றுக்கொண்டு குறைந்த வயதெல்லையிலுள்ள தொழிற்படைக்கு வெளிநாடு செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், பதவாளர் நாயகத் திணைக்களம் மற்றும் குடிவரவு, குடியகழ்வுத் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் ஒன்றினைந்து தரவுத் தளமொன்றின் மூலம் தொடர்பு படுத்தப்படாமையால் இவ்வாறான போலியான கடவுச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ளக் கூடிய இயலுமை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதன் மூலம் தகுதியற்ற நபர்கள் வெளிநாடு செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமையினால் அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக குறித்த நிறுவக செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

## தரமான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்தல் தொடர்பில் அரசாங்க நிறுவகங்களின் தலையீடு

திறந்த பொருளாதார கொள்கையினை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியமையுடன், அதுவரையில் அரச தலையீட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நாட்டிற்கு தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் செயற்பாடுகளுக்காக தனியார் துறையின் தலையீடானது தனித்து புலப்பட்டது. இவ் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் நுகர்வுக்கு உகந்தவை மற்றும் குணநலன்கள் தொடர்பில் ஊடகங்கள் மூலம் அவ்வப்போது பல்வேறு குறைபாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்கள் நுகர்வுக்கு உகந்த நிலையிலும் குணநலன்கள் அடங்கிய நிலையிலும் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக செயற்படும் பிரதான அதிகாரமுடையவர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாவதுடன் உணவுப் பொருட்களுக்கு பொறுப்பானவர் சுங்க பணிப்பாளர் நாயகமாவார்.

இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் பரிசோதனை தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குகின்ற அரசாங்க இரசாயணப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இலங்கை நியமங்கள் நிறுவகம், வைத்திய ஆராய்ச்சிகள் நிறுவகம் போன்ற நிறுவகங்களின் இரசாயன கூடங்களின் மூலம் பெறப்படுகின்ற ஒத்துழைப்பு தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற தரமற்ற மற்றும் குணநலமற்ற பின்வரும் உணவுப் பொருட்கள் சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 10 சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மீன் இருப்பினுள் குறித்துரைக்கப்பட்ட போமலின் அளவினை விஞ்சிய மீன் இருப்புக்கள்
- 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 5 சந்தர்ப்பங்களில் குறித்துரைக்கப்பட்ட வீச்செல்லையினுள் அயடீன் இல்லாத உப்பு இருப்பு
- 2013 ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட மீன் இருப்பினுள் சுவாச நாடி அடங்கிய மீன் இருப்பு
- 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 04 சந்தர்ப்பங்களில் பாலில் உள்ளடங்க வேண்டிய உரிய கொழுப்பற்ற பால்மா இருப்பு
- 2013 ஆம் ஆண்டினுள் செல்மொன்ல்லா உள்ளடங்கியுள்ளமையால் நுகர்வுக்கு பொருத்தமற்றதென தீர்மானிக்கப்பட்ட கோழி இறச்சி பெட்டிகள் 1425 மற்றும் ஸ்டெபிஸாகோகஸ் அடங்கியுள்ளமையால் நுகர்வுக்கு பொருத்தமற்றதான தீர்மானிக்கப்பட்ட 4,768 இறால் பொதிகள்
- பால்மா மற்றும் டின் மீன்களுக்குரிய அணுசக்தி அதிகாரசபையின் உரிய இரசாயன கூட அறிக்கைகள் இன்றி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 39 மற்றும் 83 உணவுப் பொருள் இருப்புக்கள்

சந்தைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முறையே 113,993 மெற்றிக் தொன் மற்றும் 150,889 மெற்றிக் தொன் கொண்ட பருப்பு இருப்பானது உரிய நியமத்தினுள் உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரு தடவை மாத்திரம் இரசாயனக் கூட பரிசோதனைகளுக்கு உட்படுத்தியிருந்தது.

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே 145,912 மெற்றிக் தொன் மற்றம் 168,874 மெற்றிக் தொன் எனும்படியாக பெரிய வெங்காயமும், 110,823 மெற்றிக் தொன் மற்றும் 123,204 மெற்றிக் தொன் எனும்படி உருளைக்கிழங்கும் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றின் கிருமி நாசினி மீதிகள் பரிசோதனைக்காக இரசாயனக் கூட பரிசோதனைகளுக்கு உட்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது.

இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் இரசாயன கூடங்களின் உபகரணங்கள் அடிக்கடி மீள்திருத்தத்திற்குட்படுத்த வேண்டி ஏற்பட்டமை மற்றும் உரிய அறிக்கைகளின் தாமதம் காரணமாக உணவுப் பொருட்களை சந்தைக்கு விடுவிப்பதில் தாமதம்மேற்படுகின்றமையும் வைத்திய ஆராய்ச்சிகள் நிறுவகம் தொடர்பில் ஆட்சேர்க்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களின் பற்றாக்குறை, உணவுப் பொருட்கள் இரசாயன ஆய்வு கூடமொன்று இல்லாதிருத்தல், அரசின் சுவைப் பரிசோதனையாளரிடம் சில உணவுப் பொருட்களை பரிசோதிப்பதற்கான வசதிகள் இல்லாதிருத்தல் தொடர்பில் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுக் கணக்காய்வு

முகாமைத்துவ கட்டுப்பாடு தொடர்பில் அதிகாரமுள்ள நபர்கள், ஊழியர்கள் அல்லது மூன்றாம் தரப்பினரிடையே ஒரு நபர் அல்லது அதற்கு மேற்பட்டோரால் அசாதாரணமான அல்லது சட்டவிரோத இலாபமொன்றினை பெற்றுக்கொள்வதற்காக ஏமாற்றங்களை பயன்படுத்திக்கொள்ளும் எண்ணப்பிரகாரமான செயற்பாடுகளுடன் தொடர்புடைய அச்சுறுத்தல் மீது முதன்மையான கவனத்தை செலுத்தி புலனாய்வு கணக்காய்வு அமுல்ப்படுத்தப்படுவதுடன், அதன் போது புலனாய்வுக் கணக்காய்வினால் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளும் பொருட்டு கட்டமைப்புகளை வலுப்படுத்துவது எவ்வாறென்பது தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கையிடப்படுகின்றது.

இலங்கையின் நல்லாட்சி எண்ணக்கருவிற்கு முன்னுரிமை வழங்கி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினை வலுப்படுத்துவதற்காக செயற்படல் மூலம் அரச நல்லாட்சியொன்றினை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பினை நல்குவதற்கு திணைக்களத்தினால் விசேடமாக புலனாய்வு கணக்காய்வு பிரிவின் பதவியணியை 08 இலிருந்து 20 வரையான 150 சதவீதத்தால் அதிகரிப்பதன் மூலம் மற்றும் பௌதீக வளங்களை அதிகரிப்பதன் மூலமும் புலனாய்வு பிரிவின் இயலளவினை மேம்படுத்துவதற்கு இன்றளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு கணக்காய்வு பிரிவினால் கடந்த காலங்களின் கருத்திற்கொள்ள வேண்டிய சம்பவங்களான மானிய உரப்பாவனை, காட்டு யானைகளை சட்ட விரோதமாக தனியார் பொறுப்பில் வைத்திருத்தல், காட்டு யானைகள் கிராமங்களுக்கு உட்புகுவதை கட்டுப்படுத்துவதற்காக மின்சார வேலிகளை நிர்மாணித்தல், நெல் கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலிலான நலிவுகள், பாடசாலைக் கட்டமைப்பின் முறையற்ற நிதிக் கட்டுப்பாடு மற்றும் பாடசாலை மாணவர்களிடம் முறையற்ற விதத்தில்

பணம் அறவிடல், குடிசைவாசிகளுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மாடிவீடுகள் நிர்மாணித்தல் மற்றும் வீடுகள் வழங்குதல், தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச உடமைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் மற்றும் கனிய எண்ணெய் உற்பத்தி கொள்வனவு தொடர்பில் முறையற்ற பாவனை தொடர்பில் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடப்பட்டது.

மேற்குறித்த அவதானிப்புக்கள் தொடர்பில் ரூபா 13.86 பில்லியன் செலவினம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், சொத்துக்கள் முறையற்ற பாவனைக்குட்படுத்தல் முறையற்ற அல்லது சட்டத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியான ரூபா 12.85 பில்லியன் என அவதானிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டினுள் திணைக்களத்திற்கு 806 மக்கள் பிரதிநிதித்துவங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவற்றைப் பரிசீலனை செய்வதற்காக திணைக்களத்தின் உரிய பிரிவுகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவற்றுள் விசேடமான 87 பிரதிநிதித்துவங்கள் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றும் முக்கியமான 30 பிரதிநிதித்துவங்கள் மற்றும் ரூபா 4.12 பில்லியன் செலவினத்தை பரிசீலனை செய்தபோது அரசிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 3.77 பில்லியன் என அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளுக்கு உரிய முக்கியமான அவதானிப்புக்கள் நான்கினது பொழிப்புக்கள் பின்வருமாறு.

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

பணியகம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் தெரிவுப் பரிசோதனையில் போலியான அறிக்கைகளை தயாரித்து நிதி மோசடிகளில் ஈடுபடல், கொள்வனவு வழிகாட்டல்கள் கோவைக்கு முரணாக செயற்படல், முறையற்ற மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகள் மூலம் நட்டமேற்படுத்தல், அரசியல் மற்றும் பிரத்தியேக நடவடிக்கைகளுக்காக பணத்தினை தவறான முறையில் பயன்படுத்தல், நோக்கங்களுக்கு முரணாக செலவுகளை மேற்கொண்டமை ஆகிய விடயங்களின் காரணமாக 16 சந்தர்ப்பங்களில் ரூபா 113 மில்லியனிற்கு அதிகமான அரச நிதி தவறான பாவனைக்குட்படுத்தப்பட்டிருந்தது.

## இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் - கிடைத்த நன்கொடைகள் மற்றும் நிதி உதவிகள்

கழுத்துறை உதைப்பந்தாட்ட மைதானத்தை நவீனமயப்படுத்துவதற்காக இத்தாலிய வீரர்களின் சங்கத்திடமிருந்து பெறப்பட்ட அன்பளிப்புகள் ரூபா 6.29 மில்லியன் (40,400 யூரோக்கள்) மற்றும் ஆசிய உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் கிண்ணத்திற்கான போட்டிக்காக பெறப்பட்ட உபசரணை நன்கொடை ரூபா 6.41 மில்லியன் (59,900 ஐ.அ.டொலர்) மோசடியான முறையில் தனியார் வங்கிக் கணக்குகளுக்கு பெற்றுக்கொள்வதற்காக போலி கட்டளை கடிதங்களை வங்கிக்கு சமர்ப்பித்ததன் மூலம் ரூபா 12.70 மில்லியன் தொகையான பணம் மோசடி செய்யப்பட்டிருந்தது.

சுனாமிப் பேரலையால் பாதிப்புக்குள்ளான வீடுகளை நிர்மாணிப்பதற்காக கிடைத்த ரூபா 5 மில்லியன் நன்கொடை பணம், வீடுகளை நிர்மாணிப்பதற்காக பணம் செலுத்தாது நிதி மோசடி இடம் பெற்றிருந்தது.

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு - தெற்கு அதிவேக வீதியின் நாளாந்த பயணிகள் பேரூந்து சேவைகள் அனுமதிச்சிட்டு வழங்குதல்

2014 ஏப்ரல் 09 ஆம் திகதியிலிருந்து 22 ஆந் திகதி வரை உற்சவங்களுக்காக முறையான மற்றும் பொருத்தமான நடைமுறையொன்று இன்றி 13 தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி அதன் தலைவரின் எண்ணப்பிரகாரம் 2014 செப்தம்பர் 02 ஆம் திகதி வரையான 05 மாத காலப்பகுதியினுள் 10 சந்தர்ப்பங்களையும் விட அதிகமான தடவைகள் தற்காலிக அனுமதிப்பத்திரங்களின் கால எல்லையானது முறையற்ற விதத்தில் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு தற்காலிக அனுமதிப்பத்திரங்களின் காலத்தை நீடிப்புச் செய்வதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை.

பேரூந்துகளை மீள்திருத்தல், புதிய பேரூந்து அல்லது வேறொரு பேரூந்தின் உரித்திலான திருத்தம் ஆகிய காரணங்களை முன்வைத்து நாளாந்த பிரயாணிகள் சேவைகள் ஈடுபடாத பேரூந்து உரிமையாளர்களுக்கு 07 தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## சிறைச்சாலைகள் திணைக்களம் - நிதிக் கட்டுப்பாட்டிலான நலிவுகள்

2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக கைவிரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டிருந்ததெனினும் வெலிகடை சிறைச்சாலை, சிறைச்சாலை வைத்தியசாலை மற்றும் வெலிகடை சிறைச்சாலை வைத்தியசாலை ஆகிய இடங்களில் விரலடையாள இயந்திரங்கள் 2009 செப்தம்பர் மாதம் பொருத்தப்பட்டிருந்ததெனினும் அவை உரிய பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நிலைமையில் பேணப்படாமல் உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டின் கீழ் பேணப்பட்டு வரும் வருகைப் பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டு 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,506,988 தொகையான மேலதிக நேர கொடுப்பனவுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படாமை

## கல்வி அமைச்சு - பாலசாலைக் கட்டமைப்பின் முறையற்ற நிதி மற்றும் நிர்வாக கட்டுப்பாடு

1982 மார்ச் 30 ஆந் திகதிய 1982/2 ஆம் இலக்கம் கொண்ட அமைச்சரவை சுற்றறிக்கையின் 15.2 உப பிரிவின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட திட்டம் மற்றும் செயற்பாட்டு பத்திரங்களுக்கு பிரதேச கல்விப் பணிப்பாளரின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், அவ் அனுமதி இன்றி கொழும்பு தர்ஸ்டன் பாடசாலையின் சிற்றுண்டிச்சாலை ரூபா 3.32 மில்லியன் செலவிடப்பட்டு மீளமைப்பு செய்யப்பட்டிருந்தமை மற்றும் பெரும்பாலான மீள் திருத்தங்கள் உரிய நியமொன்று இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் செயற்பாடு தோல்வியடைந்திருந்தது.

கொழும்பு தர்ஸ்டன் பாடசாலைக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது 2012 மே 28 ஆந் திகதி மற்றும் 2013 மே 23 ஆம் திகதிகளில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2012/19 ஆம் இலக்க மற்றும் 2013/23 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 15.46 மில்லியன் தொகை மாணவர்களின் பெற்றோரிடமிருந்து அறவிட்டு பழைய மாணவர் சங்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமை

## வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் - வளங்கள் பயன்படுத்தப்படாமை

எப்பாவலயில் அமைந்துள்ள 60 மில்லியன் தொன் அளவான இயலளவைக் கொண்ட பொஸ்பேட் படலம் தேசிய கைத்தொழிலுக்கு அவசியமான கேவல சுபர் பொஸ்பேட் மற்றும் மும்மாதிரி சுபர் பொஸ்பேட் உற்பத்திக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக ரூபா 3,220 மில்லியன் தொகையான அரச செலவினத்தை குறைத்துக் கொள்வதற்கு அல்லது வருடாந்தம் ஐ.அ.டொலர் 45.9 மில்லியன் வெளிநாட்டு வருவாயினை சேமிப்பதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

## கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கொள்வனவு முறைகேடுகள்

யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு கூட்டணியின் நன்கொடையின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் 59 தொகுதிகளில் 11 இற்கு விலை மனுக்களின் வேலை விடயங்களின் செலுத்துகை விலைகள் மோசடியான முறையில் அதிகரிப்பதன் மூலம் ரூபா 174 மில்லியனிற்கும் அதிகமான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.

## வனசீவராசிகள் திணைக்களம் - யானைகளினால் மக்களுக்கு இடையிலான மோதல்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்துவதிலுள்ள நலிவுகள்

யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதல்களை மட்டுப்படுத்தும் உபாய மார்க்கங்களில் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் அதிக கவனம் செலுத்தியிருந்த மின்சாரக் வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் யானைப் பட்டாசுக்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவதில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

2012 சனவரி 06 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் சனாதிபதியின் அறிவுரைகளுக்கமைய மின்சார வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பினை முறையாக நடாத்துவதற்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவியினைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டு 710 கி.மீ நீளமான மின்சார வேலியினை நிர்மாணிப்பதற்காக ரூபா 67.92 மில்லியனான நிதி ஒதுக்கீடு சிவில் பாதுகாப்பு படைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் 68 சதவீதம் பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்று பொது வைப்புக் கணக்கில் இருந்தது.

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் மின்சார வேலிகளை நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்குமான மேற்கொள்ளப்பட்ட செலவின் பிரகாரம் உயரிய நிதிச்செயலாற்றலொன்றை

காண்பிக்கின்றமையுடன், அதற்கு ஒப்பாக பௌதீக நிர்மாணங்களின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது. நிர்மாணங்களுக்காக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாண சிவில் பணிகளுக்காக, நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னர் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு நிதி விடுவிக்கப்பட்டமை நிதி செயலாற்றல் அதிகரித்தமைக்கு காரணமாக அமைந்துள்ளது. 2014 சனவரி 01 திகதியன்று 33 செயற்பாடுகளுக்கு உரியதாக நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்ய வேண்டிய 1,020 கி.மீ நீளமான மின்சார வேலிகளில் 2014 மே 15 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது 14 செயற்பாடுகளுக்குரிய 490 கி.மீ நீளமான மின்சார வேலிகள் மாத்திரமே ஆகும். எனவே பௌதீக செயலாற்றல் 48 சதவீதமாகும். தெரிவு பௌதீக தேடுதல் பரிசோதனைகளின் போது நியமமொன்றில்லாமல் மரத்தூண்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாணங்கள் உரிய விதப்புரைகளுக்கு இணங்காமை போன்றன அவதானிக்கப்பட்டன.

தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 155 கி.மீ நீளமான மின்சார வேலிகளை நிர்மாணிக்கும் 09 செயற்பாடுகளுக்காக 2012 மற்றும் 2013 ஆம் அண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 28.4 மில்லியன் பெறுமதியான உபகரணங்களின் இருப்பு 2015 மே 15 ஆம் திகதி வரையிலும் உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் இருந்தது.

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை – உள்நாட்டு சுற்றுலா பயணிகள் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் - ஊவா மாகாணம்

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அறிவூட்டுவதற்கான பிரசாரண நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக என குறிப்பிட்டு உரிய அதிகார பலம் மற்றும் அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் நலன்புரி சங்கத்திற்கு ரூபா 5.74 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப் பணத்தில் 2014 ஊவா மாகாண சபைகள் தேர்தலுக்காக ரூபா 4.77 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் எஞ்சிய பணமான ரூபா 0.97 மில்லியன் தொகை சங்கத்தினால் அதிகாரசபைக்கு செலுத்தப்படாமல் சங்கத்தின் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## இலங்கை சுற்றுலாப் பயணிகள் மேம்படுத்தல் பணியகம்

2014 ஆம் ஆண்டின் உலக சுற்றுலாப் பயணிகள் தினத்தினை கொண்டாடுவதற்காக 8000 ரீ - சேட்களினை உற்பத்தி செய்வதற்காக என குறிப்பிட்டு அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவைக்கு முரணாக போலியான ஆவணங்கள் தயாரித்து பணியகத்தின் நோக்கங்களுக்கு முரணாக அரசியல் கட்சியொன்றினை மேம்படுத்தும் நோக்கில் மற்றும் இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக ரூபா 5.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

2014 ஆம் அண்டில் சுற்றுலாத்துறையில் சமூக பொறுப்பினை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் (Social Responsibility Promotional Campaign in Tourism) கீழ் ரூபா 166.75 மில்லியன் மதிப்பீடொன்றுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 02 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 55.45 மில்லியன் தொகையான பணம்

செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறித்த இரண்டு நிறுவனங்களையும் தெரிவு செய்யும் போது அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவைக்கு முரணாக முறையற்ற விதத்தில் கூறுவிலை கோரப்பட்டு, ஒரே உரிமையாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த இரு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே பணியகத்தின் நோக்கங்கள் எய்தப்படாதிருக்கும் போது மற்றும் பூர்த்தி செய்த பணிக்காக தொழில்நுட்பக் கணிப்பீட்டு குழுவிடம் உரிய கணிப்பீடொன்றில்லாமலும் அங்கீகாரமின்றியும் மொத்த ஒப்பந்தம் பெறுமதியில் 55.76 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது.

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை - கலப்பு கட்டிடங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

அரசின் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் வழிகாட்டல் விதப்புரைகளுக்கு முரணாக ரூபா 90.67 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

பணம் வழங்கிய 28 மாடிக் கட்டிடமொன்றின் 11 மாடிகள் வரையான நிர்மாண நோக்கெல்லை 42 சதவீத்தாலும், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 2,015 மில்லியனிலிருந்து ரூபா 1,567 மில்லியன் வரை ரூபா 448 மில்லியன்களால் குறைவடைந்திருந்ததெனினும் கிரயத்தினடிப்படையில் மதியுரைசேவைகள் கட்டணங்கள் திருத்தப்பட்டிருக்காமையின் காரணத்தால் ரூபா 8.53 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

செயற்திட்ட அறிக்கையை தயாரிக்காமை, முன் விற்பனை முறைமையின் கீழ் நிதிகள் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட வியாபார நிலைய மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிராமை மற்றும் பூர்வாங்க சுற்றுச்சூழல் பரிசிலனைகள் சுற்றுச்சூழல் தாக்கங்கள் மற்றும் சமூக தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு ஆகிய தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை ஆகிய காரணங்களால் செயற்திட்டத்திற்குரிய நிர்மாணப் பணிகளில் தாமதங்கள் மற்றும் திருத்தங்கள் காணக்கூடியதாக இருந்தது.

## நெல் சந்தைப்படுத்தல் சபை - நெல்லிருப்பினை அரிசியாக்கும் செயன்முறை

2012/2013 ஆண்டின் பெரும் போகத்திற்காக மற்றும் 2013 ஆம் ஆண்டின் சிறு போகத்திற்காகவும் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பு கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் பரிந்துரைகளுக்கமைய தனியார் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்குதல் மற்றும் அந்த அரிசியினை சதொச கம்பனியின் சந்தைப்படுத்தல் நிலையங்களுடாக பகிர்ந்தளித்தல் தொடர்பான பரிசீலனை.

மேற்குறித்த பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றன.

2013 அம் ஆண்டிற்கு உரிய பதிவு செய்யப்பட்ட தனியார் ஆலை உரிமையாளர்கள் 154 பேரில் 133 பேருக்கு கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நெல் இருப்பு

விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 10 பேருடன் மாத்திரமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 123 அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ரூபா 2,906.12 மில்லியன் பெறுமதியான 112,092 மெற்றிக் தொன் நெல் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஆலை உரிமையாளர்களிடமிருந்து 2012 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய மீதியும் சீராக்கல்களின் பின் 2013 திசெம்பர் 31 திகதிக்கு 5 வகையான அரிசி வகைகளின் 61,767 மெற்றிக் தொன்னிற்காக ரூபா 2,962 மில்லியன் பெறவேண்டி இருந்தது. மேலும் சதொச கம்பனி ஆலை உரிமையாளர்களிடமிருந்து அரிசியை பொறுப்பேறல் தொடர்பான பரிசீலனையில் அதிகளவில் தரம் குறைந்த அரிசிவகைகளை பொறுப்பளித்தல் மற்றும் ஆட்சேபனை செய்தமை போன்றன இடம் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித்திட்டதின் கீழ் தனியார் அரிசி ஆலை உரிமையாயர்கள் 95 பேருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 262 மில்லியன் பெறுமதியான நெல்லினை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகிப்பதன் கிழ் 65 அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நெல்லிருப்பிற்கான கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 17.72 மில்லியன் தொகையான அரச கட்டணங்கள் உள்ளடங்கலாக ரூபா 88.60 மில்லியன் தொகை 2013 திசெமபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டியதாக இருந்தது.

கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் கீழ் செயற்படும் இரு அரிசி ஆலைகளின் 2012 ஆம் ஆண்டிற்கான அரிசி உப உற்பத்தியாக பெறப்பட்டிருந்த உடைந்த அரிசி 258,272 கி.கி கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமல் குறைந்த விலைக்கு சந்தைப்படுத்தப்பட்டிருந்தது.

# 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

## வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட சொத்துக்களை இச்செயன்முறையின் அறிமுகப்படுத்தலின் ஊடாக நிதிக்கூற்றுக்களில் கூட்டிணைத்தலின் மூலம் அவற்றின் கட்டுப்பாடு, நாட்டின் சார்பாக அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் சொத்துக்களை கணிப்பிடுதல் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலம் அவற்றின் பாதுகாப்புக்கு உறுதிப்படுத்தலை வழங்குகின்றமையை குறிப்பிட்டாக வேண்டும். அத்துடன் இம்முறைமையில் வருமானம் மற்றும் செலவினம் அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்யப்படுவதனால் வருமானங்களை சேகரிப்பதற்கும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

## வருடாந்த ஒதுக்கீடுகள்

முன்னைய ஆண்டிற்கான 1,024 மில்லியன் ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் திணைக்களத்திற்கான 2014 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு ரூபா 1,042 மில்லியன் ஆகும். மொத்த ஏற்பாடுகளிலரூபா 210 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையால் நிதியிடப்பட்ட இயலளவை கட்டியெழுப்புதலுக்கான செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான ரூபா 153 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான செயற்திட்டச் செலவினம் ரூபா 59 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டச் சபைகள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் என்பவற்றிலிருந்து கணக்காய்வுக் கட்டணங்களாக ரூபா 100 மில்லியன் சேகரிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதுடன் பாதிடப்பட்ட ரூபா 90 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 10 மில்லியன் மிகைச் சேகரிப்பைக் காட்டுகின்றது.

## இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

சொத்துக்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் செயற்பாடுகளின் வினைத்திறன் என்பவற்றை அளவிடுவதற்கான கருவியொன்றாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான ஆரம்பப் படி 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. காலணித்துவக் காலம் முதல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு வந்திருந்த நிறுவனம் என்ற வகையில் முதல் முறையாக திணைக்களத்தில் இம்முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2013 ஜனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ சுற்றறிக்கையின் மூலம் இம்முறைமை சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் 2013 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் அறிமுகத்தினைத் தொடர்ந்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அரம்பப் படியாக திணைக்களம் அரசாங்கத் துறைக்கு முன்னுதாரணமொன்றை வழங்கியுள்ளது.

**2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று**

| மதிப்பீடு 2014 | | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| *ரூபா.000* | | | *ரூபா.000* | *ரூபா.000* |
| | **வருமானம்** | | | |
| 90,000 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 1 | 117,238 | 104,185 |
| 200 | வாடகை | | 232 | 134 |
| 9,000 | வட்டி | | 10,110 | 10,303 |
| - | தண்டப்பணமும் கோரப்படாதவைகளும் | | 69 | - |
| 2,000 | ஏனையவை | 2 | 2,714 | 2,225 |
| | கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் மீதான இலாபம் | | 3,637 | 571 |
| | **மொத்த செயற்பாடு வருமானம்** | | **134,000** | **117,418** |
| | மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரி மானியம் | 3 | 780,973 | 740,296 |
| | **மொத்த வருமானம்** | | **914,973** | **857,714** |
| | **செலவினம்** | | | |
| 700,650 | தனியாள் ஊதியங்கள் | 4 | 670,988 | 635,327 |
| 21,900 | பதவியணியினர் பயணங்கள் | 5 | 13,611 | 19,425 |
| 16,500 | வழங்கல்கள் | 6 | 21,033 | 15,498 |
| 14,200 | பேணுகைகள் | 7 | 14,954 | 9,746 |
| 48,519 | சேவைகள் | 8 | 52,693 | 42,268 |
| 10,114 | மாற்றீடுகள் | 9 | 10,326 | 10,054 |
| 500 | பயிற்சியும் இயலளவு கட்டியெழுப்புதலும் | | 251 | 316 |
| | பெறுமானத்தேய்வு | 10 | 79,530 | 72,843 |
| | இயலளவைக் கட்டியெழுப்புதல் செயற்திட்டத்தின் மீண்டெழும் செலவினம் | | 1,788 | 25,058 |
| | அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு பதிவழித்தல் | | - | 67 |
| | கணக்காய்வு முறை அபிவிருத்திக் கிரய காலக்கழிவு | 11 | 24,904 | 24,904 |
| | **மொத்த செலவினம** | | **890,078** | **855,506** |
| | **செலவினங்களுக்கு மேலான வருமான மிகை/(பற்றாக்குறை)** | | **24,895** | **2,208** |

**2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2014 திசெம்பர் 31 | | 2013 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|
| | | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசு மீதி | | - | | - | |
| பதிவேட்டுப்பொருட்கள் | 12 | 6,577 | | 5,449 | |
| அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் | 13 | 231,840 | | 251,605 | |
| பெறவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | 14 | 214,810 | | 189,456 | |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | | **453,227** | | **446,510** |
| கணக்காய்வு முறைகளின் அபிவிருத்தி | 11 | | 176,284 | | 201,188 |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 10 | 1,151,089 | | 1,027,340 | |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | | - | 1,151,089 | 139,188 | 1,166,528 |
| **மொத்த சொத்துக்கள்** | | | **1,780,600** | | **1,814,226** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்த வேண்டிய செலவுகள் | 15 | 2,897 | | 115,310 | |
| வைப்புகள் - செலுத்தவேண்டியவை | | 18,221 | | 8,456 | |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | **21,118** | | **123,766** |
| **திரட்டிய நிதியம்** | | | | | |
| சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | | 193,595 | | 191,387 | |
| ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை) | | **24,895** | | **2,208** | |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | | 218,490 | | 193,595 |
| **பங்களிப்பு** | | | | | |
| திறைசேரி | 16 | 623,327 | | 662,610 | |
| அரசாங்கத் துறை இயலளவு கட்டியெழுப்புதல் செயற்திட்டம் | 17 | 917,665 | 1,540,992 | 834,255 | 1,496,865 |
| **வரி செலுத்துனர்களின் மொத்த உரிமைத்துவம்** | | | **1,780,600** | | **1,814,226** |

**டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன**
**பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
**2015 ஒக்தோபர் 28 ஆந் திகதி**

**எஸ்.ஜீ. சேனாரத்ன**
**பிரதான கணக்காளர்**

## கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. அறிக்கையிடல் நிறுவகம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஸ்தாபிப்பு தொடர்பாக எவ்வித குறித்துரைக்கப்பட்ட சட்டமும் இல்லை. எவ்வாறெனினும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154(1) மற்றும் (3) ஆம் உறுப்புரைகளில் விதந்துரைக்கப்பட்டவாறு அரசாங்க நிறுவகங்களிற்கு கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதே கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதான பணியாகும். இந்த நிதிக்கூற்றுக்கள் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானதாகும்.

### 2. அறிக்கையிடல் காலப்பகுதி

அறிக்கையிடல் காலப்பகுதி சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் தினக்குறிப்பேட்டு ஆண்டாகும்.

### 3. தயாரிப்பிற்கான அடிப்படை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சகல பெறுமதிகளும் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சகல பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

### 4. வருமானம்

திணைக்கள வருமானத்தின் பிரதான மூலங்களாக திறைசேரியிடமிருந்து கிடைத்த மீண்டெழும் செலவினத்திற்கான மானியம், கணக்காய்வுக் கட்டணங்கள், கடன்களின் வட்டி, கட்டிடவாடகை, சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களைக் கருத முடிவதுடன் இவை அட்டுறு அடிப்படையில் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. வருமானங்கள் அவற்றின் பெறுவனவைக் கருத்திற்கொண்டு நியாய அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளன.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச் சட்ட நிதியங்களிற்கு கணக்காய்வுக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. கட்டணமானது அவை உரித்தான காலப்பகுதிக்குரிய வருமானமாக இனங்காணப்படுகின்றன. கணக்காய்வுக் கட்டணப் பெறுமதியானது கணக்காய்விற்காகச் செலவிடப்பட்ட காலத்தையும் குறித்த கணக்காய்விற்காக செலவிடப்பட்ட ஏனைய நேரடிக் கிரயத்தையும் சார்ந்து தீர்மானிக்கப்படுகின்றது.

கடன்கள் மீதான வட்டி, கட்டிட வாடகைகள், சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களிற்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஏனைய திணைக்களங்களின் தலைவர்களாக உள்ள போதிலும், திணைக்களத்துடன் தொடர்புபட்ட அந்த வருமானங்கள் சேகரிக்கின்ற உத்தியோகத்தர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதனாலும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானங்கள் மொத்த வருமானத்தில் சிறிய சதவீதமொன்றாக காணப்படுவதனாலும் அந்த வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. காசு அடிப்படையில் திறைசேரியின் மீண்டெழும் செலவினத்திற்கான மானியங்கள் கணக்கீடு செய்யப்படுகின்ற போதிலும், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு பெறவேண்டிய மீண்டெழும் செலவினத்திற்கான மானியமாக கணக்கீடு செய்யப்படுகின்றது.

## 5. செலவினம்

சகல மீண்டெழும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்படுகின்றன.

## 6. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் அவை இடம் பெற்ற திகதியில் நிலவிய செலாவணி விகிதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றப்படுகின்றது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவில் இருந்து விளையும் அந்நிய செலவாணி இலாபங்களும் நட்டங்களும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

## 7. காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்குச் சமமானவைகளும் கைகளில் உள்ள காசையும் உயர் திரவத் தன்மையுடைய வங்கியுடனான குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

## 8. கடன்பட்டோரும் ஏனைய பெறவேண்டியவைகளும்

கடன்பட்டோரும் பெறவேண்டியவைகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றன. அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அடிப்படை நிபந்தனைகளின் படி காசினை அல்லது பெறவேண்டிய மீதியினை திணைக்களம் அறவிட முடியாதுள்ளமைக்கு சான்றுகள் காணப்படமாயின் பெறவெண்டிய தொகைகள் நட்டமாக கருதப்படுகின்றன.

## 9. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் என்பதில் காணி, கட்டிடம், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், கனணி உள்ளடங்கலான அலுவல உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள், சிறு அச்சகம், மின்சார பாரந்தூக்கி என்பன உள்ளடங்கியுள்ளன. ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. மீதிகள் முன் கொண்டுவரப்பட்டு முதற் தடவையாக 2009 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2010 சனவரி 01 அன்று நிலவிய காணிகளும் கட்டிடங்களும் நில அளவைத் திணைக்களத்தின் திட்டங்களின் படியும் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட பெறுமதியிலும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன. அரசாங்க மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு சகல மோட்டார் வாகனங்களும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டதுடன் தளபாடங்கள், கணனிகள் மற்றும் ஏனைய விடயங்கள் மதிப்பீட்டாளர்களின் சுதந்திரமான ஓர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன.

திணைக்களத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடிய அல்லது எதிர்காலத்தில் சேவைகளை திணைக்களத்திற்கு உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் என நிச்சயிக்கப்படுவதோடு அவ்விடயங்களின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுகின்றன. கிரயம் இன்றி கையேற்கப்பட்ட அல்லது பெயரளவுக் கிரயத்தில் கையேற்கப்பட்ட சொத்தின் கிரயம் அச் சொத்து கையேற்பட்ட திகதியில் உள்ளவாறான சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

### 9.1 கைதவிர்ப்புக்கள்

சொத்துக்களின் முன்கொண்டுசென்ற தொகையினை விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுவதன் மூலமே கைதவிர்ப்பின் மீதான இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்படுகிறது. கைதவிர்ப்பின் மீதான இலாபமும் நட்டமும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 9.2 பிந்திய நிகழ்வுக் கிரயம்

திணைக்களத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடியதாக அல்லது எதிர்காலத்தில் சேவைகளை உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பதுடன் அவ்விடயங்களின் கிரயத்தினை நம்பகரமான முறையில் அளவிட முடியுமாயின் மாத்திரமே ஆரம்பக் கொள்வனவை அடுத்து ஏற்பட்ட கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன.

## 9.3 பெறுமானத்தேய்வு

சகல பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையின் அடிப்படையில் அவற்றின் கிரயத்திலிருந்து தேறத்தக்க பெறுமதியினைக் கழித்து வரும் தொகைக்கு பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் பகிர்ந்தளிக்கக்கூடிய விதத்தில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது. சொத்துக்களின் பிரதான வகுதிகளிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரக்கூடிய ஆயுட்காலமும் பெறுமானத் தேய்வு வீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள | ஆயுட்காலம் (ஆண்டுகள்) | பெறுமானத்தேய்வு வீதம் சதவீதம் |
|---|---|---|
| கட்டிடங்கள் | 50 | 2 |
| சிறிய அளவான அச்சகம் | 20 | 5 |
| மின்சாரத் தூக்கி | 20 | 5 |
| மோட்டார் வாகனங்கள் | 08 | 12.5 |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 05 | 20 |
| கணனிகள் மற்றும் வன்பொருட்கள் | 04 | 25 |

## 10. செலுத்த வேண்டியவைகள்

ஐந்தொகைத் திகதியில் உள்ள பெறுமதியில் செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்குக் கொண்டுவரப்படுகின்றன. செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

## 11. வருடாந்த மதிப்பீடுகள்

வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருப்பவையே பிரதான மதிப்பீட்டுத் தொகைகளாகும். குறைநிரப்பு மதிப்பீடுகள் அல்லது நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழான மாற்றங்களுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரான தொகைகளே இறுதித் தொகைகளாக காட்டப்பட்டுள்ளன.

## 12. தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

கொள்கைகள் பிரயோகிக்கப்படுவதனையும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினதும் வருமானங்கள் மற்றும் செலவினங்களினதும் தொகைகளை அறிக்கையிடுவதனையும் பாதிக்கின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் இந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுகின்றன. இந்த மதிப்பீடுகளும் ஒருங்கிணைந்த எதிர்வுகூறல்களும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நியாயமானவையாக நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அமைந்ததாகும்.

## நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்

குறிப்பு இல.1

| மதிப்பீடு 2014 | விபரம் | 2014 | 2013 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| | **பெறுவனவுகள்** | | |
| 90,000 | அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 38,809 | 42,986 |
| - | உள்ளூராட்சி மன்றங்கள் | 15,025 | 16,324 |
| - | கமநல சேவை நிலையங்கள் | 725 | 489 |
| 90,000 | **மொத்தம்** | **54,559** | **59,799** |
| | **பெறப்பட வேண்டியவை** | | |
| - | அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 32,852 | 16,004 |
| - | உள்ளூராட்சி மன்றங்கள் | 28,171 | 26,704 |
| - | கமநல சேவை நிலையங்கள் | 1,656 | 1,678 |
| - | **மொத்தம்** | **62,679** | **44,386** |
| **90,000** | **முழு மொத்தம்** | **117,238** | **104,185** |

குறிப்பு இல. 02 சொத்துக்களின் கைதவிர்ப்பு

| மதிப்பீடு 2014 | விபரம் | 2014 | 2013 |
|---|---|---|---|
| *ரூபா.000* | **வாகனங்களின் கைதவிர்ப்பு** | *ரூபா.000* | *ரூபா.000* |
| - | வாகனங்களின் விற்பனைப் பெறுமதி | 7,241 | - |
| - | நிகர தேறப்படத்தக்க பெறுமதி | (3,610) | - |
| - | வாகனங்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்) | ***3,631*** | **-** |
| | **தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு** | | |
| - | தளபாட உபகரணங்களின் விற்பனைப் பெறுமதி | | |
| - | நிகர தேறப்படத்தக்க பெறுமதி | 8 | 710 |
| - | தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்) | (2) | (139) |
| - | | ***6*** | ***571*** |
| | சொத்துக்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்) | ***3,637*** | ***571*** |

குறிப்பு இல. 03 மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரி மானியம்

| மதிப்பீடு 2014 | விபரம் | 2014 | 2013 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா 000* | *ரூபா 000* |
| 711,183 | திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி | 676,539 | 637,100 |
| | முன்னைய ஆண்டுச்ச சீராக்கம் - பதிவேட்டுப்பொருள் | - | 5,449 |
| - | பெறுமானத்தேய்விற்காக பெறவேண்டிய கட்டுநிதி | 79,530 | 72,843 |
| - | கணக்காய்வு முறை அபிவிருத்திக் கிரயம் | 24,904 | 24,904 |
| 711,183 | **மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரிப் பங்களிப்பு** | **780,973** | **740,296** |

குறிப்பு இல. 04 **ஆளுக்குரிய வேதனங்கள்**

| மதிப்பீடு 2014 | விபரம் | 2014 | 2013 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 370,650 | சம்பளங்களும் கூலிகளும் | 341,291 | 340,820 |
| 3,000 | மேலதிக நேர மற்றும் விடுமுறைதினக் கொடுப்பனவுகள் | 2,999 | 2,584 |
| 327,000 | ஏனைய படிகள் | 326,698 | 291,923 |
| 700,650 | **மொத்தம்** | **670,988** | **635,327** |

குறிப்பு இல. 05 **பிரயாணச் செலவினம்**

| மதிப்பீடு 2013 | விபரம் | 2014 | 2013 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 12,000 | உள்நாடு | 11,226 | 12,555 |
| 2,713 | வெளிநாடு | 2,385 | 6,870 |
| 14,713 | **மொத்தம்** | **13,611** | **19,425** |

குறிப்பு இல. 06 **வழங்கல்கள்**

| மதிப்பீடு 2014 | விபரம் | 2014 | 2013 |
|---|---|---|---|
| *ரூபா.000* | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 9,000 | எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 9,131 | 8,652 |
| 12,000 | எரிபொருள் | 11,454 | 6,398 |
| 450 | உணவுகள் மற்றும் சீருடைகள் | 448 | 448 |
| 21,450 | **மொத்தம்** | **21,033** | **15,498** |

குறிப்பு இல. 07 **பராமரிப்புச் செலவினம்**

| **மதிப்பீடு 2014** *ரூபா.000* | **விபரம்** | **2014** *ரூபா.000* | **2013** *ரூபா.000* |
|---|---|---|---|
| 8,500 | மோட்டார் வாகனங்கள் | 6,238 | 5,406 |
| 5,250 | பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 4,662 | 1,016 |
| 4,500 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 4,054 | 3,324 |
| 18,250 | **மொத்தம்** | **14,954** | **9,746** |

குறிப்பு இல. 08 **சேவைகள்**

| **மதிப்பீடு 2014** *ரூபா.000* | **விபரம்** | **2014** *ரூபா.000* | **2013** *ரூபா.000* |
|---|---|---|---|
| 11,200 | போக்குவரத்து | 10,920 | 4,110 |
| 10,500 | தபால் மற்றும் தொடர்பாடல் | 10,118 | 7,915 |
| 12,500 | மின்சாரம் மற்றும் நீர் | 11,518 | 11,212 |
| 1,500 | வாடகைகள் மற்றும் உள்ளூர் வரிகள் | 548 | 622 |
| 19,600 | ஏனையவை | 19,589 | 18,409 |
| 55,300 | **மொத்தம்** | **52,693** | **42,268** |

குறிப்பு இல. 09 **மாற்றல்கள்**

| **மதிப்பீடு 2014** *ரூபா.000* | **விபரம்** | **2014** *ரூபா.000* | **2013** *ரூபா.000* |
|---|---|---|---|
| 600 | சந்தாக்கள் மற்றும் உதவு தொகைகள் | 468 | 440 |
| 9,900 | அரசாங்க உத்தியோகத்தர் கடன்களிற்கான வட்டி | 9,858 | 9,614 |
| - | ஏனையவை | - | - |
| 10,500 | **மொத்தம்** | **10,326** | **10,054** |

குறிப்பு இல. 10 **பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்**

| | **காணி** | **கட்டிடம்** | **வாகனங்கள்** | **கணனிகள் மற்றும் மென்பொருட்கள்** | **தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்** | **சிற்றளவு அச்சகம்** | **மின் தூக்கி** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* | *ரூபா.000* |
| **கிரயம்** | | | | | | | | |
| 2014 ஜனவரி 01 இல் மீதி | 256,147 | 581,513 | 88,208 | 131,057 | 82,388 | 26,023 | 8,828 | 1,174,164 |
| சேர்த்தல்கள் | - | 193,515 | - | 1,337 | 12,039 | - | - | 206,891 |
| கைதவிர்ப்புகள் | - | - | (5,775) | - | (6) | - | - | (5,781) |
| 2014 திசெம்பர் 31 இல் மீதி | 256,147 | 775,028 | 82,433 | 132,394 | 94,421 | 26,023 | 8,828 | 1,375,274 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | | | |
| 2014 ஜனவரி 01 இல் மீதி | - | 24,361 | 30,381 | 59,761 | 28,580 | 2,602 | 1,139 | 146,824 |
| கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் தேய்வு | - | - | (2,165) | - | (4) | - | - | (2,169) |
| ஆண்டிற்கான தேய்வு | - | 15,501 | 10,304 | 33,099 | 18,884 | 1,301 | 441 | 79,530 |
| 2014 திசெம்பர் 31 இல் மீதி | - | 39,862 | 38,520 | 92,860 | 47,460 | 3,903 | 1,580 | 224,185 |
| **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய தொகை** | **256,147** | **735,166** | **43,913** | **39,534** | **46,961** | **22,120** | **7,248** | **1,151,089** |

குறிப்பு இல. 11 **கணக்காய்வு முறையினை அபிவிருத்தி செய்தல் கிரயம்**

| **விபரம்** | **2014** | **2013** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| 2014 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 201,188 | 206,497 |
| 2014 ஆம் ஆண்டிற்கான செலவினம் | - | 19,595 |
| 2014 ஆம் ஆண்டிற்கான காலக்கழிவு (மொத்தக் கிரயத்தில் 10சதவீதப் படி) | (24,904) | (24,904) |
| **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி** | **176,284** | **201,188** |

குறிப்பு இல. 12 **பதிவேட்டுப் பொருட்கள்**

| **விபரம்** | **2014** *ரூபா.000* | **2013** *ரூபா.000* |
|---|---|---|
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி | | |
| - கட்டிட பராமரிப்புப் பொருட்கள் | 367 | 284 |
| - எழுதுகருவிகளும் தேவைகளும் | 4,973 | 4,846 |
| - டயர்களும் டியூப்களும் | 1,237 | 319 |
| | **6,577** | **5,449** |

குறிப்பு இல. 13 **அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள்**

| **விபரம்** | **2014** | **2013** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| திணைக்களத்தில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தத் தொகை | 228,663 | 248,265 |
| திணைக்களத்திலிருந்து இடமாற்றத்தில் சென்றஉத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தத் தொகை | 187 | 1,730 |
| மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து | 1,917 | 435 |
| பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து | 475 | 580 |
| பதவி முடிவிற்கு கொண்டு வரப்பட்ட உத்தியோர்கத்தர்களிடமிருந்து | 598 | 595 |
| **மொத்தம்** | **231,840** | **251,605** |

குறிப்பு இல. 14 **பெறவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள்**

| **விபரம்** | **2014** | **2013** |
|---|---|---|
| | *ரூபா.000* | *ரூபா.000* |
| அபிவிருத்தி மன்றங்கள் | 30 | 30 |
| மாநகர சபைகள் | 24,493 | 22,706 |
| நகர சபைகள் | 50,187 | 47,732 |
| பிரதேச சபைகள் | 24,601 | 24,443 |
| அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 105,207 | 86,153 |
| கமநல சேவை நிலையங்கள் | 10,254 | 8,392 |
| பொருளாதார நிலையங்கள் | 38 | - |
| மொத்தம் | **214,810** | **189,456** |

**குறிப்பு இல.15 – செலுத்தவேண்டிய செலவினங்கள்**

| **விபரம்** | **2014**<br>*ரூபா.000* | **2013**<br>*ரூபா.000* |
|---|---|---|
| புகையிரத ஆணைச்சீட்டு – விடுமுறை | 416 | 105 |
| புகையிரத ஆணைச்சீட்ட – பயணச் செலவினம் | 44 | 5 |
| எரிபொருள் செலவினம் | - | 33 |
| தபால் கட்டணங்கள் | 21 | 15 |
| தொலைபேசிச் சிட்டைகள் | 844 | 163 |
| மின்சாரச் சிட்டைகள் | 808 | 945 |
| நீர்ச் சிட்டைகள் | 60 | 34 |
| வாகன பராமரிப்பு | 296 | 10 |
| இரத்தினபுரி கட்டிடம் - மதியுரைக் கட்டணம் | - | 3,556 |
| ஒலிபெருக்கி முறைமைக் கட்டணங்கள் | - | 441 |
| இரத்தினபுரி கட்டிடத்திற்கான தளபாடங்கள் | - | 13,541 |
| கணக்காய்வு முறைமை | - | 19,595 |
| இரத்தினபுரி கட்டிட நிர்மாணம் | - | 76,867 |
| எழுதுகருவிகளும் அலுவலகத் தேவைகளும் | 355 | - |
| பொறி மற்றும் இயந்திர பராமரிப்பு | 53 | - |
| **மொத்தம்** | **2,897** | **115,310** |

குறிப்பு இல. **16 மூலதன செலவினம் மற்றும் பொது வைப்புக் கணக்கிற்கான அரசாங்க மானியம்**

| **விபரம்** | **2014**<br>*ரூபா.000* | **2013**<br>*ரூபா.000* |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்களிற்காக | 231,840 | 251,605 |
| வைப்புக் கணக்கிற்காக | (18,221) | (8,456) |
| நிலையான சொத்துக்களிற்காக | 409,708 | 419,461 |
| மொத்தம் | **623,327** | **662,610** |

குறிப்பு இல. **17 அரசாங்கத் துறை இயலளவு கட்டியெழுப்புதல் செயற்திட்டம்**

| **விபரம்** | **2014**<br>*ரூபா.000* | **2013**<br>*ரூபா.000* |
|---|---|---|
| நிலையான சொத்துக்களிற்காக | 741,381 | 652,662 |
| கணக்காய்வு முறைக்காக | 176,284 | 181,593 |
| மொத்தம் | **917,665** | **834,255** |

# கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு (துறைகளின் படி)

# திரட்டு நிதியம்

திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் அந்நிதியத்திலிருந்து பணத்தை எடுத்தல் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க நிறைவேற்றுதல் வேண்டும்.

அரச வருமானத்தை உழைத்தல் மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய நிதிகளைச் சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது மேற்பார்வையும் நிதிப் பிரமாணம் 124 இன் பிரகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள அனைத்து வகையிலான திணைக்களம் சார்ந்த பணக் கொடுக்கல் வாங்கல்கள் பொதுவாக எந்த எல்லைக்குட்பட்டு மேற்கொள்வது என்பது தொடர்பாக நிதி அமைச்சரால் அல்லது அவர் சார்பாக திறைசேரியால் நிர்ணயிக்கப்படும். சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு பதிலளித்தல் நிதி அமைச்சரின் பொறுப்பாக இருப்பதுடன், அதற்காக பொது நிதிகளைச் சேகரித்தல் மற்றும் செலவு செய்வதற்காக அமைச்சரால் ஒவ்வொரு அமைச்சின் செயலாளரும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டு திறைசேரியின் ஏற்பாடுகளுக்கு கீழாக திணைக்களங்களின் நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தலின் பொறுப்பினை அவ் உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பளிக்கப்படுகின்றது. அமைச்சின் செயலாளர்களுக்கு மேலதிகமாக அரசியலமைப்பின் 52(7) உறுப்புரையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் அமைச்சு செயலாளரினால் மேற்பார்வை செய்யப்படாத ஏனைய திணைக்களங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் அத்திணைக்களங்களின் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்பார்வை செய்து அரசியலமைப்பு உறுப்புரைகளின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக இருக்கின்றனர்.

பொது நிதி நிர்வாகத்திற்குரிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பொது நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டினை திறைசேரி கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டிற்கான அரசாங்க செலவினங்களுக்கு தேவையான ஏற்பாடு 2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது 2014 இன் 42 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 208 செலவினத் தலைப்புகளுக்காக ரூபா 992.50 பில்லியன் மீண்டுவரும் செலவினத்திற்காகவும், ரூபா 700.05 பில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் மொத்தம் ரூபா 1,692.55 பில்லயன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காணப்படும் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள திரட்டிய நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக இருக்க வேண்டிய மீண்டெழும் செலவினம் ரூபா 610.12 பில்லியனாகவும் மூலதனச் செலவினம் ரூபா 448.33 பில்லியனாகவும் மொத்தம் ரூபா 1,058.45 பில்லியனான செலவினமொன்று செலவிடப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,750.99 பில்லியன் ஆன பில்லியன் நிதிஏற்பாடு 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் குறிப்பிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக விசேட சட்டச் சேவைகளுக்காக மேலதிகமாக வழங்கப்பட்ட ரூபா 16.04 பில்லியனான ஏற்பாட்டுடன் 2014 ஆம் ஆண்டிற்காக வருடாந்த ஏற்பாடு ரூபா 2,767.04 பில்லியனாக இருந்தது. பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக தலைப்பு 240 தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2 ஆம் இலக்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 8,13 பில்லியனும், மூலதனச் செலவினத்திற்காக ரூபா 20.12 பில்லியனாக மொத்தம் ரூபா 28.44 பில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு ஒதுக்கிட்டு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி வளங்கள், 22 விசேட செலவின அலகுகள், 59 அரச அமைச்சுக்கள், 93 அரச

திணைக்களங்கள், 25 மாவட்ட செயலகங்கள் 09 மாகாண சபைகள் மூலம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதன ஏற்பாடு ரூபா 595,71 பில்லியன் ஆகவும் மீண்டுவரும் செலவினமாக ரூபா 2,006.01 பில்லியனுமாக மொத்தம் ரூபா 2,601.72 பில்லியனாக இருந்தது.

2014 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்காக, நிதியங்களை வழங்குவதற்காக 99 வருமானக் குறியீடுகளின் கீழ் திருத்தங்கள் உட்பட ரூபா 1,331.45 பில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அம்மதிப்பிடப்பட்ட வருமானத்தில் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,127.63 பில்லியனாக இருந்தது. இதற்கு மேலதிகமாக நிதியங்களைச் வழங்குவதற்காக ரூபா 646.01 மில்லியன் வெளிநாட்டுக் கடன் பெறல், ரூபா 13.4 பில்லியன் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் ரூபா 989.233 பில்லியன் உள்நாட்டு வங்கியல்லாக் கடன் வழங்கல், ரூபா 14.75 உப கடன் அறவீடு செய்தல் மற்றும் ரூபா 0.3 பில்லியன் மூலதனச் சொத்துக்கள் விற்பனை செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் முறையே ரூபா 422.54 பில்லியன், 9.42 பில்லியன், ரூபா 965.45 பில்லியன், ரூபா 14.89 பில்லியன், ரூபா 17.60 பில்லியன் மற்றும் வைப்புக் கணக்குகள் மற்றும் பொறுப்புக் கணக்குகளில் தேறிய மாற்றங்கள் மூலம் ரூபா 16.92 பில்லியன் காசு மற்றும் காசுக்குச் சமமானவை அதிகரிப்பு ரூபா 27.27 பில்லியன் என்ற வகையில் நிதியங்களைச் சேகரிப்பதற்கு அரசிற்கு முடியுமாக இருந்தது. உள்நாட்டு வங்கியல்லாக் கடனின் கீழ் பிரதான நிதியத்தை வழங்கும் மார்க்கமாக திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் வழங்குதல் என்பன அரசினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## அரச வருமானமும் பாதீட்டு பற்றாக்குறையும்

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக அரசின் மீண்டெழும் செலவினம் ரூபா 1.370.05 பில்லியனாகவும். அரசின் மூலதனச் செலவினம் ரூபா 595.71 பில்லியன் ஆகவும் இருந்தன. எனினும் அரசினால் உழைக்கப்பட்டிருந்த திரட்டிய வருமானம் ரூபா 1,127.63 பில்லியனாக இருந்ததன் காரணமாக அது 2014 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை தீர்த்துக் கொள்வதற்கு போதியதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம் திரட்டிய அரசின் வருமானத்தை விஞ்சி ரூபா 242.42 பில்லியன் செலவிடப்பட்டிருந்தன. இதன் காரணமாக ரூபா 595.71 பில்லியனான மூலதனச் செலவினத்துடன் இடம்பெற்றுள்ள திரட்டிய வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையான ரூபா 838.13 பில்லியனைத் தீர்த்துக் கொள்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மார்க்கங்களுடன் தொடர்புபடுத்துவதற்கு மேலும் நேர்ந்திருந்தது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு மானியங்கள் உட்பட மொத்த வெளிநாட்டு நிதியீட்டம் ரூபா 324.98 பில்லியன் வரை 211.64 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், தேறிய உள்நாட்டுக் கடன் எடுத்தல் ரூபா 436.46 பில்லியன் வரை 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 9.46 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

அரச வருமான முகாமைத்துவம் மற்றம் தொடர்புடைய மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது வருமானம் உழைக்கும் நிறுவனங்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்யும் போது பின்வரும் விடயங்களினால் அரசாங்க வருமானத்திற்கு ஏற்படும் தாக்கத்தினை தவிர்க்க முடியாதுள்ளது.


- அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற வரி திருத்தங்கள்
- இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவுகளின் அதிகரிப்பு
- வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் ஏற்படும் விலகல்
- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை விபர வேறுபாடு

## நிதியப் பயன்பாடு

2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,767.04 பில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 2,601.72 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 165.32 பில்லியன் சேமிப்பாக இருந்தது. முன்னைய ஆண்டின் சேமிப்பான ரூபா 191.37 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 26.05 பில்லியனால் சேமிப்பில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்தன் பிரகாரம் ரூபா 2,767.04 பில்லியனான ஏற்பாடுகள் செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் 41 செலவின விடயங்களில் ரூபா 9.78 பில்லியனான தேறிய ஏற்பாட்டில் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. அது ஒட்டு மொத்த சேமிப்பின் 5.9 சதவீதமாக இருந்தது. தேறிய நிதிஏற்பாட்டில் 76 சதவீதத்திலிருந்து 99.0 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 14.87 பில்லியனாக இருந்தது. அது ஒட்டு மொத்த சேமிப்பின் 9.0 சதவீதமாக இருந்தது. அவ்வாறே தேறிய ஏற்பாட்டில் 51 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 62.75 பில்லியனாக இருந்தது. அது திரட்டிய சேமிப்புக்களின் 37.9 சதவீதமாக இருந்தது. அவ்வாறே ரூபா 165.32 பில்லியனான திரட்டிய சேமிப்பில் 40.3 சதவீதம் அதாவது ரூபா 66.616 பில்லியனான மீண்டெழும் ஏற்பாட்டின் சேமிப்பாக இருந்ததுடன், ஒட்டுமொத்த சேமிப்பில் 59.7 சதவீதம் அல்லது ரூபா 98.70 பில்லியன் தொகையான மூலதன ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டிற்குரிய கடன் கொடுப்பனவு தவிர மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 671.66 பில்லியனாக இருந்ததுடன், அதில் 88.7 சதவீதம் அதாவது ரூபா 595.71 பில்லியன் ஆக இருந்தது. அது முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட ரூபா 455.58 ஆன மூலதன நிதிஏற்பாட்டுடன் ஒப்பிடும் போது ரூபா 140.13 பில்லியனான அதிகரிப்பொன்றாகும்.

## மொத்த தேசிய உற்பத்தியும் அரச வருமானமும்

மீளாய்வாண்டின் போது அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் 12.2 சதவீதமாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் அது 13.1 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் இக்குறைவு மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டு காலப்பகுதியிலும் ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. இக்குறைவிற்காக உழைக்கும் போது செலுத்தும் வருமானம் தவிர ஏனைய அனைத்து வருமான வரிகளிலிருந்து பெற்ற வருமானம் குறைவடைந்தமை காரணங்களாக இருந்தன.




அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக
மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2014

மேற்குறிப்பிட்ட பொது வருமானங்களை சேகரித்தல், ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் என்பன தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- திறைசேரி உண்டியல்கள்வழங்கப்படும் போது அதன் மூலம் ஈட்டப்படுகின்ற வட்டி வருமானம் மற்றும் முகப்புப் பெறுமதியை விடக் கூடுதலாக வழங்கியதன் மூலம் பெறப்பட்ட மேலதிகத் தொகை பிறிதொரு வருமானமாகக் கணக்கிடப்பட வேண்டியிருப்பினும், மீளாய்வாண்டில் ஊண்டியல்கள் வழங்குவதன் மூலம் பெறப்பட்ட வட்டி வருமானம் மற்றும் மேலதிகத் தொகைகள் முறையே ரூபா. 17.89 பில்லியன் மற்றும் ரூபா. 35.26 பில்லியன் ஆகியன உள்நாட்டுக் கடன்களுக்காகச் செலுத்தப்பட்ட வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டில் வழங்கப்பட்டுள்ள திறைசேரி முறிகளின் முகப்புப் பெறுமதியை விடக் கூடுதலான பெறுமதிக்கு திறைசேரி முறிகள் வழங்கப்பட்டதன் மூலம் அரசுக்குக் கிடைத்த மேலதிக வருமானம் ரூபா. 35.26 பில்லியனாக இருந்ததுடன் முகப்புப் பெறுமதியை விடக் குறைந்த விலையில் திரைசேரி முறிகள் வழங்கப்பட்டதன் மூலம் அரசுக்கு ஏற்பட்டிருந்த குறைபாடு ரூபா. 3.09 பில்லியனாக இருந்தது.

- முகப்புப் பெறுமதியை விடக் குறைந்த விலையில் திரைசேரி முறிகள் வழங்கப்படுகின்ற பொழுது முறிகளின் முகப்புப் பெறுமதி கணக்கில் வரவிடப்படாமல், முறிகளின் விற்பனைப் பெறுமதி திறைசேரி உண்டியல்கள்கணக்கில் வரவிடப்பட்டிருந்தமையால் அரசின் நிதிக் கூற்றுக்களில் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் பொறுப்புப் பெறுமதி ரூபா. 609.97 பில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

- அரசுக்குச் செந்தமான 8 வியாபாரங்கள் தொடர்பிலான கூட்டுத்தொகை ரூபா. 323.38 பில்லியன் திறைசேரியினால் மூலதனத்திற்காகப் பங்களிப்புச் செய்துள்ளதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்களின் பௌதீக நிதிப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்ட மூலதனப் பங்களிப்பின் பெறுமதியானது ரூபா. 373.87 பில்லியனாக இருந்தது. அதற்கமைய அந்த 8 வியாபாரங்கள் தொடர்பிலான கூட்டுத்தொகை ரூபா. 50.49 பில்லியன் குறைவாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

- முதலீட்டுப் பத்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வுக் குழு அறிக்கையின் படி 07 நிறுவனங்கள் தொடர்பிலான முதலீட்டுப் பெறுமதி ரூபா. 19.50 பில்லியன் குறைவாகவும், 14 நிறுவனங்கள் தொடர்பிலான முதலீட்டுப் பெறுமதி ரூபா. 20.93 பில்லியன் கூடுதலாகவும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

- அரச மூலதனப் பங்களிப்புடன் தொடர்பான 49 நிறுவளங்களின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 9.69 பில்லியன் பெறுமதியான பங்குகளுக்கான பத்திரங்கள் வருடாந்த மதிப்பிடலுக்காக மதிப்பிடல் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படாமலிருந்தமையால் அப் பங்குகளின் முதலீட்டுப் பெறுமதியை மதிப்பிடல் குழு உறுதி செய்திருக்கவில்லை.

- அரசுக்குச் சொந்தமான 92 நிறுவனங்கள், 24 பெருந்தோட்டச் சங்கங்கள், 02 அபிவிருத்தி வங்கிகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மூலம் இயங்கி வரும் 03 கூட்டுத்தாபனங்கள் என 121 நிறுவனங்களின் பங்கு மூலதனத்தின் கூட்டுத்தொகை ரூபா. 397.84 பில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்த பொழுதும் மீளாய்வாண்டில் ரூபா. 91.32 பில்லியன் முதலீடு செய்திருந்த 40 நிறுவனங்களில் ரூபா. 4.68 பில்லியன் மாத்திரமே இலாபமீட்டப்பட்டிருந்தது. இத்தொகையானது முதலீட்டுப் பெறுமதியில் 1.17 சதவீதமாகும்.

- மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டுக் கடன் மீதிகள் மற்றும் வெளிநாட்டு வளங்கள் கூட்டுத்தாபனத்தின் 854-1 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடன் மீதிகளுடன் ஒப்பிடுகையில் 81 கடன் ஒப்பந்தங்களுடன் தொடர்பான ரூபா. 2.92 பில்லியன் கூடுதலாகவும் 90 கடன் ஒப்பந்தங்களுடன் தொடர்பான ரூபா. 3.33 பில்லியன் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

- 206 தலைப்புகள் தொடர்பில் மீளாய்வு ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளில் D.G.S.A.8(i), 8(ii), 8(iii) படிவங்கள் மூலம் முன்வைக்கப்பட்டிருந்த 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படாத மீண்டெழும் செலவினங்களுக்கான பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா. 85.32 பில்லியனாகவும், மூலதனச் செலவினங்களுக்கான பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா. 94.86 பில்லியனாகவும் முழுப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா. 180.18 பில்லியனாகவும் அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

- குத்தகை அடிப்படையிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24,017 வாகனங்களுக்காக (21498 மோட்டார் சைக்கிள்கள் உட்பட) திறைசேரியின் மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று இருந்தவாறான முழுப் பொறுப்புத் தொகை ரூபா. 10.06 பில்லியன் அரசின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 03 வங்கிக் கணக்குகளின் மேலதிகப் பற்று மீதிகளுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா. 11.87 பில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது ரூபா. 1.604 பில்லியனால் அதிகரித்திருந்தது.

- அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் PF/FD/04/148 மற்றும் 2014 ஒக்டோபர் 31 ஆம் இலக்கக் கடிதத்தின் படி தானிய உற்பத்திக்காக சுழற்சி நிதியமொன்றினை அமைப்பதற்கு 277-1-1-0-2502 இலக்க செலவினத் விடயங்களினூடாக ரூபா. 0.3 பில்லியன் 6000/0000/00/0011/0602 இலக்க வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அக் கடிதத்தின் விதிமுறைகளுக்கமைவாக செயற்படாமையினால் அவ் வைப்பானது செயலிழந்த வைப்பாகக் காணப்பட்டது.

- மீளாய்வாண்டில் நட்டம் மற்றும் சேதங்களின் பெறுமதியாக அரசின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூபா. 0.38 பில்லியனாக இருந்ததுடன் இது கடந்த வருடத்தின் நட்டம் மற்றும் சேதங்களின் பெறுமதியான ரூபா. 0.03 பில்லியனை விட ரூபா. 0.16 பில்லியன் அதாவது 69.02 சதவீத அதிகரிப்பாகும். ஒதுக்கீட்டுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட D.G.S.A. 7 படிவத்திலே உள்ளடங்கிய 26 தலைப்புகளில் இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 0.54 பில்லியன் தொகை அரசின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 09 உப கடன் ஒப்பந்தங்களுடன் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான கடன் தொகை ரூபா. 1.23 பில்லியனாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களால் உறுதி செய்யப்பட்ட கடன் தொகையானது ரூபா. 0.81 பில்லியனாக இருந்தது. இதனால் இந்த 09 நிறுவனங்களின் கூட்டுத்தொகை ரூபா. 0.43 பில்லியன் கூடுதலாகப் பதியப்பட்டிருந்தது.

- திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட நிலுவைத் இருப்பு அறிக்கைக்கு அமைவாக 2014 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிலுவை வருமானமாக

இனங்காணப்பட்டிருந்த ரூபா 8.69 பில்லியன் அரச நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- இலங்கைக் கடற் படையினால் 2013 மற்றும் 2014 ஆகிய வருடங்களில் வெளிவாரிப் பிரிவினர்களுக்காக வழங்கப்பட்ட சேவைகள் மூலம் ஈட்டப்பட்டிருந்த வருமானமாகிய ரூபா 1.09 பில்லியன் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வு ஆண்டின் திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு நிலுவை ரூபா 777 பில்லியனாக இருந்த பொழுதிலும் உள்ளவாறான வரவு செலவு நிலுவை ரூபா 838 பில்லியனாக இருந்தமையால் அது உத்தேச வரவு செலவு நிலுவையை விட ரூபா 61 பில்லியன் பாதகமான நிலைமையாக இருந்தது. அதேவேளை மீளாய்வு ஆண்டில் உள்ளவாறான வரவு செலவு நிலுவை மொத்தத் தேசிய உற்பத்தியில் 8.5 சதவீதமாக இருந்தது.

- அரசின் நிதிக்கூற்றுக்களுக்கமைவாக 2014 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான அரசின் மொத்தப் பொறுப்புகள் ரூபா. 6,971.18 பில்லியனாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் அரசின் மொத்தப் பொறுப்புகளான ரூபா. 6344.94 பில்லியனுடன் ஒப்பிடும் பொழுது இது ரூபா. 626.23 பில்லியன் அதாவது 9.86 சதவீத அதிகரிப்பாகும்.

## அரச வருமான முகாமைத்துவம் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வு மற்றும் அதன் மூலம் அரச வருமானத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தாக்கங்கள்

கணக்காய்வாளர் தலைமை திணைக்களத்தினால் அவ்வப்போது அரச வருமான முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வுகளின் போது அரச வருமான முகாமைத்துவத்தில் காணப்படும் பிழைகள், பலவீனங்கள், வினைத்திறனின்மை மற்றும் சிக்கனமற்றதன்மை என்பன சுட்டிக் காண்பிக்கப்பட்டன. இது தொடர்பாக கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் தொடர்ச்சியாக அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்குறைபாடுகளை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மந்தகெதியில் இருந்தமை அரச வருமான முகாமைத்துவத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தனை சுட்டிக் காண்பிப்பதற்கு நேர்திருந்தது. விசேடமாக மீளாய்வாண்டின் மொத்த அரச வருமானத்தில் வருமானச் சேகரிப்பு 04 பிரதான நிறுவனங்களான உள்நாட்டு இறை வரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மது வரித் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் என்பன 85.35 சதவீத பங்களிப்பினை வழங்குவதுடன், அந்நிறுவனங்களின் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

- ரூபா 210.08 பில்லியனான நிலுவை வருமானம் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- முத்திரை வரி வருமானம் ரூபா 11.93 பில்லியனாக இருந்த போதிலும், அதில் 8.33 பில்லியன் தொகை மொத்த தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி வருமானமான ரூபா 57.68 பில்லியனாக ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 13.1 பில்லியன் வருமானம் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரி அறிக்கையின் பிரகாரம் மூன்று வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரி வருமானம் மற்றும் திணைக்கள வருமானம் என்பவற்றிற்கிடையே காணப்பட்ட ரூபா 0.66 பில்லியன் வேறுபாட்டிற்கு காரணங்கள் கண்டுபிடிக்கப்படாமல் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

- தேசத்தை கட்டியெழுப்பும் வரியை மீளச் செலுத்தும் அதிகாரி உள்நாட்டு இறைவரி ஆணையாளராக இருந்த போதிலும், திறைசேரியால் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி மீள் செலுத்துகைகளாக ரூபா 7.66 பில்லியன் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதற்கான விபரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

- 4 வருடங்களுக்குரிய ரூபா 0.07 பில்லியன் வரி வருமானத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அனுப்புகை பத்திரங்கள் கிடைக்காமையால் வரியிருப்பாளர்களின் கணக்குகளுக்கு அவ்வரிக் கணக்கு, கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

- திருத்திய வருமான மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வரி வருமானம் ரூபா 605.33 பில்லியனாக இருந்த போதிலும், ரூபா 485.39 பில்லியன் அதாவது 80 சதவீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டினுள் பெறுமதிசேர் வரி அறிக்கை சமர்ப்பிக்காமை, வரி குறைவாக கணக்கிடல் மற்றும் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்தல் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட மூன்று கணக்காய்வு ஐயவினாக்கள் காரணமாக 13 வரியிருப்பாளர்களிடமிருந்து ரூபா 0.12 பில்லியன் மேலதிகமான வரி வருமானம் சேகரிக்க முடியுமாக இருந்தது.

- 2006 இன் 06 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 120 ஆம் பிரவின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதிலும், சம்பளத்தில் கழிக்கப்பட்ட உழைக்கும் போது செலுத்தும் வரி மாதாந்த அறிக்கை 226 அரச நிறுவனங்களால் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை சுங்கம்**

- 2014 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களுக்குரிய சுங்கக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டு 192,848 இற்கு 170,120 அதாவது 88 சதவீதத்திற்கு அண்மித்த அளவில் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் விடுவிக்கப்பட்டிருந்தமையால் சுங்க அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக நிறுவனங்கள் விடுவிப்பதற்கு அதிகளவில் இடமளிக்கப்பட்டிருந்தன.

- சுங்கப் பரிசோதனையின் தன்மையைத் தீர்மானித்தல் ஸ்கிரீனிங் (SCREENING) பிரிவிற்கு இணைக்கப்பட்டிரந்த உத்தியோகத்தர்களின் அனுபவம் மற்றும் இறக்குமதியாளர்களின் வரலாற்றுத் தகவல்களின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்ற தெனினும் அவ்வாறான தகவல் முறைமையொன்று ஸ்கிரீனிங் (SCREENING) பிரிவினுள் தாபிக்கப்படாமல் இருந்ததுடன், பரிசோதனை முறைமை உத்தியோகத்தர்களின் விருப்பத்தின் படி தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- அநேகமான ஏற்றுமதிக்கான கொள்கலன்கள் விரிவான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- டொயோட்டா ஹைலுக்ஸ் விகோ ஸ்மார்ட் கெப் (Toyota Hilux Vigo) மாதிரியிலான வாகனங்களை உற்பத்தி செய்துள்ள வடிவமைப்பின் பிரகாரம் நிர்ணயித்த பொருட்கள் வகைப்படுத்தலுக்கு புறம்பாக வரி அறவிடப்பட்டமையால் ஒரு வாகனத்திலிருந்து ரூபா 0.002 பில்லியன் தொகையான சுங்க வரி அரசினால் இழக்கப்பட்டிருந்ததுடன், இவ்வகையான 3000 வாகனங்களுக்கு அதிகமான அளவில் சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- சலுகை அடிப்டையிலான வாகன அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களின் பெறுமதியை குறைவாக மதிப்பீடு செய்து வரி செலுத்துவதற்கு இறக்குமதியாளர்களால் நடவடிக்கை எடுத்தமையால் ரூபா 0.72 பில்லியனுக்கு அண்மித்த வரி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

- வெகுமதி முறையில் தபால் மூலம் கொண்டு வரப்படுகின்ற பொருட்களின் பெறுமதியை தீர்மானிக்கும் பொருட்டு குறிப்பான சுங்கப் பெறுமதி உள்ளடக்கப்பட்ட தகவல் முறைமையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- உற்பத்தி வரி அறவிடப்பட வேண்டிய புதிய நிறுவனங்களை இனங்காண்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்று இல்லாமை, உற்பத்திவரி சேகரிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் நாளதுவரையாக்கப்படாமை, நிலுவை உற்பத்தி வரி அறவிடுவதில் மந்தகதி நிலை காணப்பட்டமை, உற்பத்தி வரி தொடர்பான சுற்றிவளைப்புக்கள் மற்றும் புலனாய்வு என்பன முறையாக மேற்கொள்ளப்படாமை, உற்பத்தி வரி கொடுப்பனவை எய்ப்புச் செய்தல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள சட்டரீதியான படிமுறைகளை திருப்திகரமாக செயற்படுத்தாமை, உற்பத்தி வரிப் பிரிவின் உத்தியோகத்தர்களின் செயலாற்றலை உயர்நிலைக்கு கொண்டுவரக்கூடிய முறையான உள்ளக வேலைத்திட்டமொன்று இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வர்த்தக ரீதியிலான பொருட்கள் கொண்டு வருவதற்காக விமானநிலையத்தின் பயணிகள் துறை பயன்படுத்தப்படுகின்றமை மற்றும் 2014 ஆம் ஆண்டில் விமானம் மூலம் 06 பேரால் 391 சந்தர்ப்பங்களின் போது ரூபா 0.02 பில்லியன் தொகை பெறுமதியான வர்த்தக தன்மையிலான பொருட்கள் கொண்டு வரப்பட்டிருந்தமை சுட்டிக் காண்பிக்கப்பட்டது.

- அரச உடமையாக்கப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் செயற்பாட்டில் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

- இறக்குமதியாளர்களால் இறக்குமதியின் பின்னர் கைவிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுங்கப் புலனாய்வுகளின் போது புலனாய்வுகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களின் தற்றுனிவின் படி தண்டப்பண்தை தீர்மானித்தல், பொருட்களின் பெறுமதியை குறைத்து மதிப்பிடல், சுங்க தவறுகளைச் செய்யக்கூடிய இறக்குமதியாளர்களுக்கே பொருட்கள் விடுவிக்கப்படுதல், சுங்க புலனாய்வுகளை துரிதமாக மேற்கொள்ளாமை காரணமாக பொருட்கள் அழிவடைதல், போன்ற விடயங்கள் காரணமாக போதியளவு அரச வருமானம்

பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன், அவ்வாறான 02 சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் ரூபா 0.05 பில்லியன் அரச வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

- கடல் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக கப்பல்கள், சாரதி மற்றும் லஸ்கார் உத்தியோகத்தர்கள் போதியளவில் இணைக்கப்படாதிருந்தமையால் சட்டவிரோத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக பிராந்திய சுங்க விலக்கு அலுவலகங்களின் செயற்பாடு போதியளவில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- சுங்கத் தவறுகள் மற்றும் மோசடிகள் செய்வதற்குரிய தண்டனைகளை விதிப்பதனாலும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் விற்பனையிலிருந்து இலங்கை சுங்கத்தால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2.98 பில்லியன் மற்றும் ரூபா 2.63 பில்லியன் வருமானம் உழைக்கப்பட்டு / சேகரிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வருமானத்தில் அரச வருமானத்திற்கு 30 சதவீதம் அதாவது முறையே ரூபா 0.89 பில்லியன் மற்றும் ரூபா 0.79 பில்லியன் தொகைகள் மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 70 அதாவது முறையே ரூபா 2.09 பில்லியன் மற்றும் ரூபா 1.84 பில்லியன் சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதிக்காகவும் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது.

### மதுவரித் திணைக்களம்

- 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 0.5 பில்லியன் தொகையான மதுவரி நிலுவை வருமானம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1.54 பில்லியன் வரை துரிதமாக வளர்ச்சியடைந்த போதிலும், நிலுவையாக உள்ள வருமானத்தை அறவிடுவதன் செயன்முன்னேற்றம் திருப்திகரமாக இன்மை மற்றும் நிலுவை வருமானத்தை அறவிடுவதில் உரிய மற்றும் பயனுள்ள நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மதுபான ஏற்றுமதியின் போது ஏற்றுமதி மீளளிப்பு வழங்கலுக்காக திணைக்களம் சுங்க ஏற்றுமதிப் பத்திரங்களை (Customs Export Entry) மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், உள்ளபடியாக ஏற்றுமதி செய்த அளவினை அறிந்து கொள்வதற்கு முறையொன்று திணைக்களத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- மதுபான உற்பத்தி கம்பனிகளுக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வருமான சேகரிப்புச் செயற்பாடு, திணைக்களத்தினால் தொடர்ச்சியாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- திணைக்களத்தினால் சிகரட் ஏற்றுமதி தொடர்பாக அனுமதிப்பத்திரங்களை விநியோகித்திருந்த போதிலும், ஏற்றுமதி செய்யப்படுகின்ற சிகரட்டின் அளவினை உள்ளபடியாக ஏற்றுமதி செய்யப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறைமையொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை.

- ஸ்பிரிட் உள்நாட்டுக் கொள்வனவின் போதும் இறக்குமதியின் போதும் அறவிடப்படுகின்ற நிறுத்தி வைத்தல் வரித்தொகை, அவ் ஸ்பிரிட்டைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற மதுவரி கொடுப்பனவின் போது எதிரீடு செய்வதற்கு இடமளிக்கப்பட்ட போதிலும், ரூபா 0.51 பில்லியனான நிறுத்தி வைத்தல் வரியை மதுவரி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

- இலகவாகவும் சரியாகவும் மதுவரி வருமான சேகரித்தல் மற்றும் கணக்கீடு செய்வதற்கு பொருத்தமான கணனி தளமுறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

- ஆடம்பர வரி அறவீட்டு நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றாத 18 காப்புறுதி நிறுவனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஆடம்பர வரிக் கொடுப்பனவை பகிஷ்கரித்த 371 வாகன உரிமையாளர்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- சுனாமி, பயங்கரவாத முயற்சிகளோ அல்லது விபத்திற்குட்ட அல்லது வேறு வகையில் முழுமையாக அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத வாகனங்களின் பதிவினை செல்லுபடியற்றதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- செல்லுபடியற்றதாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

- நாட்டில் உள்ளவாறான ஓட்டத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களின் அளவு தொடர்பாக ஒப்பீட்டுத் தகவல்கள் இனங்காணக்கூடிய வகையில் ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

- திணைக்களத்தில் நாளாந்தம் பதிவுசெய்யப்படுகின்ற வாகனங்களின் மூலக்கோவைகளைப் பாதுகாத்து வைத்தல் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட வேண்டிய அத்தியவசிய செயற்பாடொன்றான போதிலும் வாகனங்களின் மூலக்கோவைகள் பாரியளவில் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படாமை/ காணாமல் போதல் இடம்பெறுவது கணக்காய்வின் போது தொடர்ச்சியாக சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கோவைகளை பாதுகாத்துக் கொள்வது தமது பொறுப்பு என்பதை உத்தியோகத்தர்கள் புறக்கணித்திருந்தனர்

- விசேடமாக கடந்த 04 ஆண்டுகளின் போது மாத்திரம் கணக்காய்விற்கு அத்தியவசியமான மோசடிகளுடன் தொடர்புடைய 597 கோவைகள் கணக்காய்விற்கு இதுவரை சமர்ப்பித்திருக்கவில்லை.

- மேற்குறித்ததன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் வாகனங்களின் மூலக்கோவைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியாக கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மோசடிகள், முறைகேடுகள் மற்றும் அரசிற்கு அதிகளவில் வருமானம் இழக்கப்படுவதில் பிரதான காரண்ஙகளாக இருந்தன.

- அவ்வாறே மோசடியாக பதிவு செய்யும் நோக்கில் 141 மோட்டார் சைக்கள்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்ட 85 சுங்கக் குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டு 2,577 மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் எதுவித மோட்டார் சைக்கிள் இறக்குமதி செய்யப்படாத 07 சுங்கக் குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டு 2,098 மோட்டார் சைக்களிகள் இறக்குமதி செய்யப்பட்டதாக திணைக்களத்தின் கணனி முறைமைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

- விபத்திற்குள்ளாகிய அல்லது வேறு வகையில் அகற்றப்பட்ட வாகனங்களின் அடையாளம் காணக்கூடிய இலக்கத்தின் கீழ் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட தயாரிக்கப்பட்ட நவீனரக வாகனங்களை தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்டிருந்தமை தொடர்ச்சியாக கணக்காய்வு

ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான 29 வாகனங்கள் தொடர்பாகவும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- தற்போது திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பழைய வாகனங்களின் அடிச்சட்டக இலக்கத்தைப் பயன்படுத்தி நவீனரக வாகனங்கள் பழைய இலக்கத்தின் கீழ் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு அவகாசமளித்திருந்தமை தொடர்பாக கணக்காய்வின் போது சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த அவ்வாறான 05 வாகனங்கள் தொடர்பாகவும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் மூலம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாமல் எந்தவொரு நபரினாலும் இலங்கையில் மோட்டார் வாகனமொன்றைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றுசேர்த்தல், புதிதாக வடிவமைத்தல், பாகங்களாகப் பிரித்தல், மெருகூட்டுதல் அல்லது வடிவமைப்பை மாற்றுதல் என்பன மேற்கொள்ள முடியாதொன குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த ஏற்பாடுகளை மீறி 26 வாகனங்களின் வடிவமைப்பை முழுமையாக மாற்றியிருந்ததாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய வாகனங்களைப் பரிசோதித்து சட்டரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அந்நிலைமை சட்டரீதியானதுஎன்ற அடிப்படையில் திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

- சிங்கள் கெப் வண்டியாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு பின்னர் ஜீப் வண்டிகளாக மாற்றப்பட்டிருந்த 18 வாகனங்களிலிருந்து ரூபா 0.004 பில்லியன் சொகுசு வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அரைப்பங்கு வரி செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டிருந்த விசேட செயற்பாட்டு வாகனங்களில் 22 இரட்டை நோக்கு வாகனங்களாகவும் 56 வாகனங்கள் லொறியாக பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை மூலம் பாரியளவிலான அரசின் வருமானம் இழக்கப்படுதல் மற்றும் 7 ஆண்டுகள் வரையான பழைய வாகனங்கள் நாட்டினுள் வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- சட்டரீதியற்ற வகையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் அதிகளவில் நாள்தோறும் மோசடியாக திணைக்களத்தில் பதிவு செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு பாரியளவு வரி வருமானமொன்று இழக்கப்படுவதும் 2014 யூன் மாதத்தின் போது 05 நாட்களில் மாத்திரம் அவ்வாறான பதிவுகள் 108 மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- மேற்படி சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வின் போது தொடர்ச்சியாக சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பொறுப்பான உத்தியோகத்தர்கள் சட்டவிரோத செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன், அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# பொது முயற்சிகள்

இலங்கையிலுள்ள பொது முயற்சிகள் பொருட்கள் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளதுடன் மின்சாரம், நீர், விமானச்சேவைகள் பெற்றொலியம் போன்ற தேசிய பொருளாதாரத்தின் தந்துரோபாயத் துறைகளை செயற்படுத்தி வருகின்றன. ஆகையால், அந்த நிதிசார் மற்றும் தொழில்முயற்சிகளின் செயற்பாட்டுச் செயலாற்றல் என்பன நாட்டின் பேரின பொருளாதா உறுதிப்பாட்டில் நேரடியான தாக்கத்தை செலுத்துகின்றன. குறித்துரைத்த மற்றும் பொதுவான நோக்கங்களிற்காக வேறுபட்ட பல்வேறு நிதியங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டிற்கான பொது முயற்சிகளினதும் நிதியங்களினதும் நிதிச் செயலாற்றல் பகுப்பாய்வினை இந்த அத்தியாயம் உள்ளடக்கியுள்ளது.


இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளவாறு பொது முயற்சிகள் என்பது ''கம்பனிகள் சட்டம் தவிர்ந்த எந்தவொரு எழுத்துமுல சட்டத்தினாலும் அல்லது சட்டத்தின் கீழும் தாபிக்கப்பட்டு அரசாங்கத்தினால் மானியம், கடன் அல்லது வேறு வகையில் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மூலதனமிடப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டு வரப்படுகின்ற கூட்டுத்தாபனம், சபை அல்லது ஏனைய எந்தவொரு நிறுவனமும்'' ஆகும்.


இப் பகுப்பாய்வில், நிதியங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 276 பொதுக் கூட்டுத்தாபனங்கள் பொது மயற்சிகளாகக் கருதப்பட்டு அவைகளின் பருமண், தன்மை, செயற்பாடு போன்றவற்றின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

| **வகை** | **நிறுவனங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| குறித்துரைக்கப்பட்ட வணிக முயற்சிகள் (எஸ்பீஈ) | 53 |
| ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் நிறுவனங்கள் (ஆர்எம்ஐ) | 22 |
| பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சியளித்தல் நிறுவனங்கள் (யூஆர்ரீ) | 74 |
| ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் (டீஎன்பி) | 64 |
| நிதியங்கள் | 69 |
| **மொத்தம்** | **282** |

எவ்வாறாயினும், மேற்குறித்த பகுப்பாய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். 12 எஸ்பீஈ, 1 ஆர்எம்ஐ, 5 யூஆர்ரீ, 12 டீஎன்பி மற்றும் 8 நிதியங்கள் உள்ளடங்கலான 38 பொது முயற்சிகளின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஒக்தோபர் 20 வரையிலும் கணக்காய்விற்காச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஜனதிரிய நிதியம் மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி நிதியம் என்ற இரண்டு பொது முயற்சிகள் மீளாய்வாண்டில் செயற்பட்டிருக்கவில்லை. இலங்கை சமுர்த்தி அதிகாரசபையானது திவிநெகும திணைக்களத்துடன் இணைக்கப்பட்டமையால் பொது முயற்சிகளிலிருந்து நீக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் நிறுவனம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.


2014 ஆம் ஆண்டில் பொது முயற்சிகளால் உழைக்கப்பட்டிருந்த மொத்த வருமானம் அரசாங்கத்தினால் உழைக்கப்பட்டிருந்த மொத்த வருமானத்தை மிகைத்து ரூபா 1,431 பில்லியனாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத அதிகரிப்பை பிரதிநித்துவப்படுத்தியது. இவற்றின் மொத்தச் சொத்து அடிப்படை ஏறத்தாழ 9,000 பில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் காணப்பட்ட மொத்தச் சொத்து அடிப்படையுடன் ஒப்பிடுகையில் 15 சதவீத அதிகரிப்பாகும். 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமானம் மற்றும் சொத்து அடிப்படைகளின் உள்ளடக்கம் கீழுள்ள உருக்கள் A மற்றும் B இல் காட்டப்பட்டுள்ளன.





உரு A இன் படி, எஸ்பீஈ பொது முயற்சிகளின் மொத்தச் சொத்து அடிப்படையில் 59 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாரிய சொத்து அடிப்படையொன்றை வைத்திருந்த அதேவேளை மொத்தச் சொத்தில் 18 வீதத்தை பிரதிநிதித்துவம் செய்து நிதியங்கள் இரண்டாம் இடத்திலுள்ளன. அவ்வாறே, உரு B இல் காண்பிக்கப்பட்டவாறு எஸ்பீஈ பொது முயற்சிகளின் மொத்த வருமானத்தில் 76 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாரிய வருமான அடிப்படையொன்றை கொண்டிருக்க நிதியங்கள் 13 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தன. மொத்த வருமானத்தில் 89 சதவீதத்தினை எஸ்பீஈ மற்றும் நிதியங்கள் ஈட்டியிருக்க மொத்த சொத்து அடிப்படையில் 77 சதவீதத்தைக் கொண்டிருந்தன. ஆகையால் இந்த இரண்டு வகையினதும் செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட உபாயத் தீர்மானங்கள் பொது முயற்சிகளின் நிதிசார் செயலாற்றல்களில் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன.

மேலும், கீழே தரப்பட்டுள்ள உருக்கள் C மற்றும் D இல் காட்டப்பட்டுள்ளவாறு ஆண்டில் கிடைக்கப்பெற்ற அரசாங்க மானியங்கள் நீங்கலாக முன்னைய ஆண்டின் 86 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமானத்தில் 87 சதவீதமானவற்றை 10 உயர் வருமான பொது முயற்சிகள் ஈட்டியிருந்தன. அத்துடன், 10 பொது முயற்சிகள் மொத்தச் சொத்து அடிப்படையில் 89 சதவீதமானவற்றை மீளாய்வாண்டிலும் அவ்வாறே முன்னைய ஆண்டிலும் வைத்திருந்தன. இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனம் பொது முயற்சிகளின் மொத்த வருமானத்தில் 39 சதவீதத்தினை பிரதிநிதித்துவம் செய்து உயர் வருமானத்தை ஈட்டியிருக்க ஊழியர் சேமலாப நிதியம் 16 சதவீத சொத்து அடிப்படையினை பிரதிநிதித்துவம் செய்து பொது முயற்சிகளின் மொத்தச் சொத்தில் உயர் சொத்து அடிப்படையினை கொண்டிருந்தது. பொது முயற்சிகளின் நிதி முகாமைத்தவத்தைக் கருத்திற்கொள்கையில் இந்த நிறுவனங்கள் தொடர்பில் மிக முக்கியமான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இந்த நிறுவனங்களின் மீதான பொருத்தமான நிதி முகாமைத்துவம் நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளின் வினைத்திறனில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியனவாகும்.



## இலாபத்தன்மை

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, பொது முயற்சிகளின் வரிக்கு முந்திய இலாபம் 2013 உடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இருப்பினும், எஸ்பீஈ இன் வரிக்கு முந்திய இலாபம் 11 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்திருந்தது. மேலும், 71 பொது முயற்சிகள் 2014 ஆம் ஆண்டிற்கு எதிர்மறையான வரிக்கு முந்திய இலாபத்தினை ஈட்டியிருக்க 77 பொது முயற்சிகள் 2013 ஆம் ஆண்டில் நட்டத்தினை அனுபவித்திருந்தன. அதில் 07 எஸ்பீஈ, 07 ஆர்எம்ஜ, 32 யூஆர்ரீ, 20 டீஎன்பி மற்றும் 05 நிதியங்கள் உள்ளடங்கியிருந்தன. 2013 இல் நட்டத்தில் இயங்கியிருந்த 24 பொது முயற்சிகள் 2014 இல் இலாபத்தில் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாக இருந்ததுடன் அவற்றில் 18 பொது முயற்சிகள் 2014 இல் நட்டத்தில் இயங்கியிருந்தன.

இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற டீஎன்பி மற்றும் யூஆர்ரீ வகைகளின் கீழ் உள்ள பல்வேறுபட்ட பொது முயற்சிகள் 30 பில்லியனுக்கு மேற்பட்ட மோசமான நட்டத்தை ஈட்டியிருந்தன. எவ்வாறாயினும், எஸ்பீஈ இன் வகைப்படுத்தப்பட்டிருந்த இலங்கை மின்சார சபை போன்ற சில பொது முயற்சிகள் பாரிய நட்டத்தை ஈட்டியிருந்தன. எமது மீளாய்வான் படி பல பொது முயற்சிகள் நிர்வாகம் மற்றும் நல்லாளுகை விடயங்கள், ஊழியர்களின் குறைவான உற்பத்தித் திறன், மோசமான நிதி முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் கட்டமைப்பு ரீதியான குறபைாடுகள் போன்ற அநேக காரணிகள் காரணமாக தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கிவந்திருந்தன. இலாபத்தன்மையும் வளர்ச்சி நிலையும் தனியார் நிறுவனங்கள் போன்ற ஏனைய நிறுவனங்களால் எதிர்நோக்கப்படுகின்ற குறைவான போட்டி காரணமாக அவ்வாறான பொது முயற்சிகள் விடயத்தில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவை அல்ல. கட்டுப்பாடு காலத்திற்குக் காலம் மாறுகின்றமையால் அடிப்படையில் குறுங்கால இலக்குகள் கருத்திற்கொள்ளப்பட்டு பொதுவாக நீண்டகால வெற்றிகரமான திட்டங்கள் காணப்படுவதில்லை. பொது முயற்சிகளின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் சமூக ரீதியில் அல்லது பொருளாதார ரீதியில் தாக்கமற்றவையாக, அரசாங்க கொள்கைகளிற்கும் பிரமாணங்களிற்கும் முரண்பட்டுக் காணப்படுகின்றன.

## ஏனைய வருமானங்கள்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் படி பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி மேலதிக நிதிகளை முதலீடு செய்வதற்கு பொது முயற்சிகளிற்கு அதிகாரமில்லை என்பதுடன் அவற்றின் மேலதிக நிதிகளை பொது திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த ஏற்பாட்டிற்கு முரணாக, அநேக பொது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான முதலீடுகளிலிருந்து வட்டி வருமானத்தை ஈட்டியிருந்தன. சில பொது முயற்சிகள் அவற்றின் பிரதான செசயற்காடுகளின் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்திலிருந்தன்றி இவ்வாறான வருமானங்களிலிருந்தே அவற்றின் வழமையான செலவினங்களை மேற்கொள்ளும் போக்குகள் காணப்பட்டமை நாட்டின் பெறுமதி சேர்த்தலுக்கு வரையறையை தோற்றுவித்திருந்தது. இவ்வாறான பொது முயற்சிகளின் முகாமைத்துவங்கள் அவற்றின் பிரதான செயற்பாடுகளையன்றி இவ்வாறான முதலீடுகளை முகாமைத்தவம் செய்வதில் தமது நேரங்களை செலவிட்டிருந்தன.

அதிகமான யூஆர்ரீ மற்றும் 03 எஸ்பீஈ ஆகியவை அவற்றின் மொத்தச் செலவினத்தில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவற்றை மேற்கொள்வதற்கு அரசாங்க உதவு தொகைகளிலேயே தங்கியிருந்தன. எவ்வாறாயினும். எஸ்பீஈ மற்றும் நிதியங்கள் அவற்றின் மொத்த வருமானத்தடன் ஒப்பிடுகையில் 1 சதவீதத்திற்கும் குறைவான மீண்டெழும் மானியத்தையே பெற்றுக்கொண்டிருந்த போதிலும், யூஆர்ரீ அவற்றின் மொத்த வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவற்றை மானியமாக பெற்றிருந்தன.

## செலவினம்

பொது முயற்சிகளின் ஆளுக்குரிய வேதனாதிகள் நிர்வாக செலவினத்தில் முக்கியமான பங்கை பிரதிநிதித்தவம் செய்திருந்தது. இருப்பினும், 101 பொது முயற்சிகள் மாத்திரமே அவற்றின் நிதிக்கூற்றுக்களில் ஆளுக்கரிய கிரயங்களை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தன. அந்த நிறுவனங்களின் ஆளுக்குரிய வேதனாதிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 11 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 8 எஸ்பீ, மற்றும் 03 நிதியங்கள் உள்ளடங்களாக 56 பொது முயற்சிகள் அவற்றின் மொத்தச் செலவினத்தில் 53 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை ஆளுக்குரிய வேதனாதிகளிற்காக செலவிட்டிருந்தன. அத்துடன் 3 எஸ்பீ, மற்றும் நிதியங்கள் உள்ளடங்களாக 67

பொது முயற்சிகளின் ஆளுக்குரிய வேதனாதிகள் அவற்றின் பிரதான செயற்பாடுகளிலிருந்தான மொத்த வருமானத்தைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டன. அரசாங்கத்தின் உதவிகளின்றி அவற்றினால் செயற்படாதுள்ளமையை அது உறிதிப்படுத்துகின்றது. இருந்தபோதிலும், எஸ்பீஈ இன் பெறுமதிசேர் செயற்பாடுகளிலிருந்து அல்லது பிரதான செயற்பாடுகளிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்திருந்தது. பொதுத் துறையின் அபிவிருத்திக்காக பொருத்தமான பயிற்சிகள், அவர்களின் மனோபாவத்தை மீளக் கட்டியெழுப்புதல் போன்ற வழிகளினூடாக அரசாங்க ஊழியர்கள் தமது வினைத்திறனை அதிகரித்தக்கொள்ள வேண்டிய தேவையை இது உணர்த்துகின்றது. சில எஸ்பீஈ கள் இலாபம் சார்ந்த நிறுவங்களாக காணப்பட்ட போதிலும் ஆண்டிற்காக ஈட்டப்பட்டிருந்த அவற்றின் வருமானத்தைக் காட்டிலும் அதிகமான தொகையை ஆளுக்குரிய வேதனாதிகளிற்காக செலவிட்டிருந்தன.

பொது முயற்சிகளின் ஆராய்ச்சி அபிவிருத்தி செலவினம் ஏனைய அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் ஆராய்ச்சி அபிவிருத்தி செலவினத்துடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவினத்தில் மிகக் குறைவான 0.1 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. பொது முயற்சிகளிலுள்ள யூஆர்ரீ வகையான நிறுவனங்கள் மொத்தச் செலவினத்தில் ஆராய்ச்சி அபிவிருத்தி செலவினத்திற்காக உயர் கிரயமான 1.21 சதவீதத்தை செலவிட்டிருந்தன. அவற்றில் அதிகமானவை ஆராய்ச்சி நிறுவனங்களாகவும் பல்கலைக்கழகங்களாகவும் காணப்பட்டதுடன் அவ்வாறான யூஆர்ரீ மொத்த வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட மானியத்தைப் பெற்றுக்கொண்டிருந்தன. இக் காரணிகளைக் கருத்திற்கொள்கையில் அவ்வகையின் கீழுள்ள யூஆர்ரீ களின் மொத்தச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் ஆராய்ச்சி அபிவிருத்திக்காக குறிப்பிடத்தக்க தொகையை அவைகள் செலவிட்டிருக்கவில்லை. எஸ்பீஈ கள் அவற்றின் மொத்தச் செலவினத்தில் 0.01 சதவீதமானவற்றையே ஆராய்ச்சி அபிவிருத்திக்காக செலவிட்டிருந்தன. அதன்படி வழமையாக, பொதுமுயற்சிகள் புத்தாக்க பொருட்கள் மற்றும் சேவைகளிற்காக ஆர்வமுள்ள தரப்பினரை ஊக்குவிப்பதற்கு ஆராய்ச்சி அபிவிருத்திக்காக செலவிட்டிருக்கவில்லை.

பொது முயற்சிகளின் நிதிக் கிரயம் மொத்தச் செலவினத்தில் 2.73 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது. டீஎன்பி வகைகள் ஏனைய வகைகளுடன் ஒப்பிடுகையில் மிக அதிகமாக அவற்றின் மொத்தச் செலவினத்தில் 8 சதவீதத்தை நிதிக்கிரயத்திற்காக செலவிட்டிருந்தன. அதிகமான பொது முயற்சிகள் அவற்றின் நிதித்தேவையை பூர்த்தி செய்துகொள்வதற்காக ஏனைய கடன் வசதிகளைக் காட்டிலும் அதிகூடிய வட்டிச்செலவு கொண்ட வங்கி மேலதிகப்பற்றையே பெற்றுக்கொண்டிருக்க போதியளவு முதலீடுகளையும் செய்திருந்தன. அரசாங்கத்தால் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதிகளிலிருந்து உச்ச பயனை பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான நிதி முயாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

2014 ஆம் ஆண்டில் பொது முயற்சிகள் ஏறத்தாழ ரூபா 5,099 மில்லியன் வருமான வரிகளை செலுத்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு உதவியிருந்ததுடன் அதில் அதிகளவான தொகை எஸ்பீஈ களினால் பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## நிதிக் கட்டமைப்பு

பொது முயற்சிகளின் நிதிக் கட்டமைப்பின் படி மொத்த நடைமுறைச் சொத்தினைக் காட்டிலும் மொத்த நடைமுறைப் பொறுப்பை அதிகமாகக் காண்பித்து நடைமுறை விகிதம் 0.72 சதவீதமாக பேணப்பட்டிருந்ததுடன் உடனடியான பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதியளவு திரவச் சொத்துக்களின் பற்றாக்குறை காரணமாக குறுங்கால கடப்பாடுகளை தீர்த்துவைக்கும் நிலைமையில் பாதகத் தன்மையினை காட்டுகின்றது. ஆர்எம்ஜ வகை மிகவும் மோசமான நடைமுறை விகிதமான 0.44 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தன. சிக்கலான நிலைமையினை வெளிக்காட்டி 0.78 விகித நடைமுறை விகிதத்தினை எஸ்பீஈ கொண்டிருந்தன.

பொது முயற்சிகளின் நிதிக்கட்டமைப்பின் படி 40 சதவீதம் நடைமுறைச் சொத்துக்களாகவும் 60 சதவீதம் நடைமுறையல்லா சொத்துக்களாகவும் காணப்பட்டன. இவற்றில் 55 சதவீதமானவை குறுங்கால நிதியிடல் மூலங்களிலிருந்தும் 45 சதவீதம் நீண்டகால நிதி மூலங்களிலிருந்தும் நிதியிடப்பட்டிருந்தன. நீண்டகாலச் சொத்துக்களின் ஒரு பகுதி குறுங்கால நிதி மூலங்களினால் நிதியிடப்பட்டிருந்தைமையை இது காட்டுகின்றது. அதாவது நடைமுறையல்லா சொத்துக்களின் 25 சதவீதம் குறுங்கால நிதி மூலங்களினால் நிதியிடப்பட்டிருந்தன. குறுங்கால நிதி மூலங்களுடன் குறுங்கால சொத்துக்கள் சமநிலையில் காணப்படாமையால் பொது முயற்சிகளின் நீண்டகால நிலைத்திருத்தலிலும் அவ்வாறே குறுங்கால திரவத்தன்மையிலும் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

நீண்டகால சொத்துக்களையும் நிண்டகால நிதி மூலங்களுடன் குறுங்கால சொத்துக்களின் ஒரு பகுதியையும் முகாமைத்துவம் செய்து குறுங்கால நிதி மூலங்களை சமப்படுத்துதல் நிதியிடலின் சிறப்பான அணுகுமுறைக்கான தேவையாகவுள்ளது. எவ்வாறாயினும், நடைமுறைச் சொத்துக்களிற்கும் நடைமுறைப் பொறுப்புக்களிற்கும் இடையேயுள்ள சமநிலையற்ற தன்மை அடிப்படையில் எஸ்பீஈ மற்றும் ஆர்எம்ஜ வகைகளில் காணப்பட்டது. எஸ்பீஈ மற்றும் ஆர்எம்ஜ வகைகளின் நடைமுறையல்லா சொத்துக்களில் முறையே 34 சதவீதம் மற்றும் 72 சதவீதத்திற்கு மேற்பட்டவை குறுங்கால நிதி மூலங்களால் நிதியிடப்பட்டிருந்தன. ஆர்எம்ஜ களின் மொத்த வேறுபாட்டுக்கு இலங்கை மத்திய வங்கி பங்களிப்புச் செய்திருந்தமை இதன் விளைவாகும். இருப்பினும், தேவையான சகல நிதிகளையும் நீண்டகால நிதிகளிலிருந்து நிதியிடுகின்ற மற்றும் அவசரத் தேவைக்காக அல்லது எதிர்பாராத வெளிப்பாய்ச்சல்களிற்கு மாத்திரம் குறுங்கால நிதிகளை பயன்படுத்துகின்ற பொது முயற்சிகள் சிறந்த அணுகுமுறையுடன் அவற்றின் நீண்டகால மற்றும் குறுங்கால சொத்துக்களையும் பொறுப்புக்களையும் முகாமைத்துவம் செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

பொது முயற்சிகள் 1.7 சதவீதத்திற்கும் மேற்பட்ட கடன் உரிமை விகிதத்தினை கொண்டிருந்தமை நீண்ட கால நிதி உறுதித்தன்மையில் பாதகமான நிலமையை இது வெளிக்காட்டுவதுடன் அவை அதிகூடிய நிதிக் கிரயத்தை மேற்கொள்ள வேண்டியவையாக உள்ளன. இருப்பினும், எஸ்பீஈ கடன் உரிமை விகிதத்தை 3 சதவீதமாக பேணியிருக்க ஆர்எம்ஜ 1.5 சதவீதமாக பேணியிருந்தது. ஆர்எம்ஜ கள் இலங்கை மத்திய வங்கியால் செயற்படுத்தப்பட்டமை இதன் விளைவாகும்.

பொது முயற்சிகளில் சில எதிர்மறையான சொத்த நிலமையினை கொண்டிருக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றன நேர்மறையான வரிக்கு முந்திய இலாபத்தை ஈட்டியிருந்தன. நீண்டகால நோக்கில் பாதகமான நிலைமையிலே அதிகளவான பொது முயற்சிகள் செயற்பட்டு வருகின்றன. அதாவது அநேக பொது முயற்சிகள் அவற்றினது அன்றாட செயற்பாடுகளிற்கு அதிகளிவில் அரசாங்க மானியத்திலேயே தங்கியுள்ளமையை இது காட்டுகின்றது. அவற்றில் சில இலாப நோக்கமற்ற அவதாவது பொது மக்களுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களாகும். எவ்வாறாயினும், அவற்றில் சில உயர் எதிர்மறையான சொத்து நிலைமையைக் கொண்ட இலாப நோக்குடைய எஸ்பீஈ களாகும்.

விசேடமாக டீஎன்பீ மற்றும் யூஆர்ரீ வகைகளிலுள்ள சில பொது முயற்சிகள் அவற்றின் கூறப்பட்ட மூலதனத்தை தனியாக இனங்கண்டிருக்கவில்லை. பொது முயற்சிகளை கூட்டிணைக்கையில் வழங்கப்பட்ட அரசாங்க உதவிகள் கூறப்பட்ட மூலதனமாக இனங்காணப்பட்டு வருடாந்தம் கழிவிடப்படுகின்ற விசேட நோக்கங்களிற்காக அவ்வப்போது பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க மானியங்களுடன் இணைத்து முன்வைக்கப்படுதல் வேண்டும். ஆகவே, கூறப்பட்ட மூலதனம் அடிக்கடி மாறுவதுடன் மானியங்கள் கழிவுநீக்கம் செய்யப்படுவதனால் அதிகமான சந்தர்ப்பங்களில் அது குறைவடையும் போக்கை காட்டுகின்றது. இந்த நடைமுறை பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டிய நிதி அறிக்கையிடல் சட்டகத்தினால் பரிந்துரைக்கப்படுவதில்லை

## நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பித்தல்

அரசாங்க துறையின் பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பதற்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிலும் (SLPSAS) இலங்கை கணக்கீட்டு நியமங்களிலும் (LKAS மற்றும் SLFRS) உள்ள படிவங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், விசேட வணிக முயற்சிகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களையே (LKAS மற்றும் SLFRS) பின்பற்றுதல் வேண்டும். அதற்கமைய 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த வருடாந்த நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக்கூற்று, முற்றுமடங்கிய வருமானக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை உள்ளடக்கியிருக்க வேண்டுமென்பதுடன் நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு 236 பொது முயற்சிகள் தமது நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தன. இருப்பினும், 66 பொது முயற்சிகளே உரிய திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்ததுடன் 170 பொது முயற்சிகள் உரிய திகதிக்கு பின்னரே நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்திருந்தன. இவற்றில் ஏறத்தாழ 65 பொது முயற்சிகள் அவற்றின் நிதிக்கூற்றுக்களை மூன்று மாதங்களிற்கு மேல் தாமதம் செய்து சமர்ப்பித்திருந்ததுடன் 38 பொது முயற்சிகளும் நிதியங்களும் அவற்றின் நிதிக்கூற்றுக்களை இது வரை சமர்ப்பித்திருக்கவில்லை. 02 பொது முயற்சிகள் மீளாய்வாண்டில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக SLPSAS, LKAS மற்றும் SLFRS மூலம் மாதிரி படிவங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒரே வகையின் கீழுள்ள நிறுவனங்கள் முழுமையாக ஒன்றுக்கொன்று வேறுபட்ட விதத்திலேயே நிதிக்கூற்றுக்களை தயாரித்திருந்தன. பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களில் ஒத்த தன்மையினை ஏற்படுத்துவதற்காக பொதுவான மாதிரியொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

## கணக்காய்வு அபிப்பிராயங்கள்

பொது முயற்சிகளின் நிதி மற்றும் செயற்பாட்டு துறைகள் தொடர்பில் அவற்றின் நிதிச் செயலாற்றல், பொருளாதார வினைத்திறன், செயற்பாட்டு பயனுறுதி மற்றும் நிதித் தகவல்கள் தொடர்பான விடயங்களை கணக்காய்வு அறிக்கையில் சமர்ப்பிப்பதற்கு இலக்கிடப்படுகின்றது. அறிக்கையின் முதலாவது பகுதியினால் பொது முயற்சிகளின் அபிப்பிராயத்திற்கான நியாயமான உறுதிப்பாடொன்று வழங்கப்படுகின்றது. ISSAI 1000-1810 இற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்காய்வு நியமங்களின் மூலம் பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை தருகின்றது என நியாயமான உறுதிப்பாடொன்று வழங்கப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் பொருண்மையான தன்மை, நிச்சயமற்ற தன்மை மற்றும் தவறான கூற்றுக்களின் தாக்கங்களிற்கமைய நிதிக்கூற்றுக்களின் மீதான அபிப்பிராயம் வேறுபடுகின்றது. நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன, முனைப்பழியற்ற முனைப்பழியுள்ள,மறுப்பு மற்றும் பாதகமான அபிப்பிராயங்களாகும். பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் காணப்படுகின்றன என்ற உறுதிமொழி முனைப்பழியற்ற அபிபிப்பிராயத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. முனைப்பழியற்ற அபிப்பிராயம் தவிர்ந்த ஏனைய அபிப்பிராயங்கள் பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது வரையறையுடைய உறுதிப்பாட்டை வழங்குகின்றன. நோக்கெல்லைக்கான வரையறை, நிச்சயமற்ற தன்மை காரணமாக பாதகமான அபிப்பிராயமும் முகாமைத்தவத்துடன் இணக்கமின்மை காரணமான நிச்சயமற்ற நிலமைகளில் மறுப்பு அபிப்பிராயமும் வழங்கப்படுவதுடன் அவைகள் முகாமைத்தவத்திற்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும். முனைப்பழியற்ற அபிப்பிராயத்தை வழங்க முடியாதுள்ள ஆனால் முகாமைத்துவத்துடன் இணக்கமின்மை காணப்படுதல் அல்லது நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருந்தல் பொருண்மையாக காணப்படினும் பாதகமான அபிப்பிராயத்தை தெரிவிற்கும் அளவிற்கு காத்திரமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வழங்குவதன் மூலம் குறித்த விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளின் படி தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அபிப்பிராயங்களின் வகைகள் | 2014 | 2013 |
|---|---|---|
| முனைப்பழியற்ற | 41 | 43 |
| முனைப்பழியுள்ள | 157 | 181 |
| மறுப்பு அபிப்பிராயம் | 12 | 9 |
| பாதகமான அபிப்பிராயம் | 8 | 7 |
| 2015 ஒக்தோபர் 20 வரை தீர்மானத்திற்கு வராதவை | 29 | 12 |
| நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாதவை | 43 | 30 |

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிதிக்கூற்றுக்கள் மீது பாதகமான அபிப்பிராயங்கள் மற்றும் அபிப்பிராயத்தினை பழியுள்ளதாக்குவதற்கு வழியமைத்துள்ள பாரதூரமான தவறான கூற்றுக்கள் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பின்னர் சில பொது முயற்சிகளால் அவற்றின் நிதிக்கூற்றுக்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அவ்வாறான நிறுவனங்களிற்கு திருத்திய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு கணக்காய்வு பரிசோதனைகளின் அடிப்படையில் அவைகளிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இருப்பினும், அவ்வாறான சில பொது முயற்சிகளால் இது வரை நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இன்னும் சில நிறுவனங்களால் குறிப்பிடத்தக்களவு தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான காரணங்களால் இது வரைக்கும் கணக்காய்வு அபிப்பிராயம் நிச்சயிக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்களைக் காணலாம்.

## ஏனைய பொதுவான விடயங்கள்

கடந்த ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தொடர்ந்தேர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டிருப்பினும், அநேகமான பொது முயற்சிகள் திருத்தமற்ற கொள்கைகளையே பின்பற்றியிருந்தன. அவ்வாறான திருத்தமற்ற கொள்கைகளை திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதன்மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களின் மீதான ஏனைய அறிக்கைகள் உதாரணமாக காணி கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் பொருத்தமான அறிக்கைகள் பேணப்பட்டிருக்காமை பொதுவாக காணப்படுகின்ற குறைபாடாகும். இதன் விளைவாக நடைபெற்று வரும் வேலைகளிற்குத் தேவையான மூலதனத்தை பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்களவு காலதாமதம் ஏற்பட்டுள்ளமைக்குக் காரணம் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களினால் முழுமையான அறிக்கைகளை வழங்குவதிலேற்பட்ட தாமதமாகும் என்பது அவதானிக்கப்பட்டது. சில பொது முயற்சிகளிற்குரிய காணிகள் தொடர்பான அறிக்கைகள் பூரணமற்றுக் காணப்படுதல், அமைவிடம் தொடர்பான விபரமான பட்டோலைகளை வழங்குவதற்கு தவறியிருந்தமை காரணமாக கணக்காய்வில் அவற்றின் காணப்படும் தன்மை, உரிமைத்துவம் போன்றவற்றை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

வர்த்தக ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்காகவும் பொது முயற்சிகளிற்காக பயிற்றப்பட்ட பதவியணியை இணைத்துக் கொள்வதற்கும் அதிகமான அங்கீகாரங்கள் தேவைப்படுவதனால் பணிப்பாளர்களிற்கு வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களே காணப்பட்டன. இதன் காரணமாக அதிகமான பொது முயற்சிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் அதிக சம்பளம் செலுத்தப்பட்டு தகைமையுள்ள உயர்தொழிலாளர்களை ஆட்சேர்ப்பதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் சிக்கல் நிலை காணப்படுவது தனியார் துறையுடன் ஒப்பிடுகையில் பொதுத்துறையில் பலவீனமான சம்பள அளவுத்திட்டங்கள் காணப்படுவதனாலாகும். சில பாரிய பொது முயற்சிகளின் உயர் முகாமைத்துவப் பதவிகளில் நீண்டகாலமாக வெற்றிடங்கள் காணப்படுவது அவற்றை நிரப்புவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராமை மற்றும் திட்டங்களை தயாரிப்பதிலுள்ள குறைபாடுகளின் காரணத்திலாகும்.
சில பொது முயற்சிகளினால் உயர்மட்ட உத்தியோகத்தர்களிற்கான உழைக்கும் போதே செலுத்தும் வரி அவர்கள் சார்பாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உழைக்கும் போதே செலுத்தும் வரி நிறுவனத்திற்கு நிறுவனம் மாற்றமடையாதிருப்பதற்காக பொதுத் திறைசேரியினால் நிரந்தர தீர்வு காணப்பட வேண்டியிருப்பதுடன் அதன்போது சகல அரசாங்க உத்தியோகத்தர்களிற்காகவும் நியாயமான தன்மையினைக் கரத்திற்கொள்தல் அவசியமாகும்.

நீண்டகாலமாக குறிப்பிடத்தக்களவு நிதியினை முற்பணமாக வைத்திருந்து அந்த முற்பணத்திலிருந்து இதுவரை பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது சேவைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவை செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களை தீர்வுசெய்திருக்க முன்னர் சில உத்தியோகத்தர்களினால் வெறு கொள்வனவுகளிற்காக முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்பட்டிருந்தன.

பேரளவிலான பொது முயற்சிகளினால் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கம்பனிகள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் கூட்டிணைப்புச் செய்யப்பட்டிருந்தமையால் அதன் காரணமாக பிரதான பொது முயற்சிகளின் பணிகள் முடங்கியிருந்தன. எவ்வறாயினும், சில பொது முயற்சிகளிற்கு உரித்தாக துணைக் கம்பனிகளும் உப கம்பனிகளும் காணப்பட்டிருந்த போதிலும், காணப்படுகின்ற தன்னியக்க கட்டுப்பாட்டில் பலவீனங்கள் காணப்படுகின்றன.

கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த பிரச்சினைகளிற்கு மேலதிகமாக பின்வரும் பொதுவான சிக்கல்களையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

- தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட் காலத்தை மீள மதிப்பிடுவதற்கும் நியாய பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் சில சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன.

- தொடர்புடைய தரப்பினர்கள் சம்பந்தமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களின் தனிப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நேரொத்த பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. துணைக்கம்பனிகள் தொடர்புடைய தரப்பினர்கள் குறித்து கவனம் செலுத்துகின்றமை மிக பலவீனமான நிலையில் காணப்படுவதனை இது காட்டுகின்றது. ஆகவே, நிதிக்கூற்றுக்களில் உண்மையான நிலையினை மறைப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.

- சில பொது முயற்சிகள் காணிகளைக் கொள்வனவு செய்வதற்காக பெருமளவான தொகையினை முதலீடு செய்திருந்த போதிலும் அவை கொள்வனவு செய்யப்பட்டது தொடக்கம் விளைவற்றுக் காணப்பட்டன. மேலும், தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் அதிகாரசபை போன்ற சில பொது முயற்சிகள் பல பாரிய செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பல ஆண்டுகளிற்கு முன்னர் தனியார் கம்பனிகளிற்கு முற்பணங்களை வழங்கியிருந்தன. அக் கம்பனிகள் அச் செயற்திட்டங்களை அமுல்படுத்தாது அவற்றை முதலீடு செய்து பாரிய வட்டி வருமானத்தை ஈட்டியிருந்தன. இவை காணமாக அந்த நிதிகளிலிருந்து உச்ச பயனைப் பெறுவதற்கு பொது முயற்சிகள் தவறியிருந்ததுடன் பாரிய தொடர்புடைய கிரயத்தையும் அனுபவத்திருந்தன.

- அநேகமான பொது முயற்சிகள் மனித வள முகாமைத்துவம் தொடர்பில் முன்னுரிமை வழங்கியிருக்காமை அவதானிக்கப்பட்டது. இயலளவை/நிறுவனத்தின் உற்பத்தியை அதிகரிக்காது மேலதிக பதவியணியினரை வைத்திருத்தல் பிரதான பிரசிசனையாக காணப்பட்டதுடன் அதன் விளைவாக நிறுவனத்தின் வினைத்திறன் குறைவடைந்திருந்தது. பணிப்பாளர்கள் போன்ற பொறுப்பு வாய்ந்த பதவிகளிற்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் காணப்பட்ட போதிலும், தேவையான தகைமைகளைக் கொண்டிராத மற்றும் கோரப்பட்ட வயதினைக் காட்டிலும் கூடுதலான வயதுடைய ஆட்களையே சில நிறுவனங்கள் ஆட்சேர்ப்புச் செய்திருந்தன. மேலும், சில தொழில்முயற்சிகளிடம் போதிய தகைமையுடைய அவ்வாறான ஊழியர்கள் காணப்பட்ட போதிலும் வெளித் தரப்பினர்களிடமிருந்து மதியுரை மற்றும் உயர்தொழில் சேவைகளைப் பெற்று பயன்படுத்தியிருந்தன. ஆகையால் தொழில்முயற்சிகள் தேவையற்ற செலவினங்களை செய்திருந்தன.

# உள்ளூராட்சி அதிகாரசபைகள்

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள 335 உள்ளூராட்சி நிறுவனங்களில் 23 மாநகரசபைகள் 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வாயிலாக நிறுவப்பட்டு அமுலாகியவாறு இருப்பதுடன், 41 நகரசபைகள் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வாயிலாக நடைபெற்றவாறுள்ளதை 271 பிரதேச சபைகள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் வாயிலாக நடைபெற்றவாறுள்ளன. 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றினது எண்ணிக்கை 335 ஆகும். இவ்வுள்ளூராட்சி நிறுவனங்களது கணக்குகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல், கணக்காய்வை மேற்கொள்ளல் மற்றும் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் சம்பந்தமான பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| உள்ளூராட்சி நிறுவன வகை | கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டியவை | 2015 செப்டம்பர் 30 இல் உள்ளவாறு கணக்குகளைச் சமர்ப்பித்தவை | கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டவை | 2015 செப். 30 இல் உள்ளவாறான அறிக்கைகளின் படி கணக்காய்வு அபிப்பிராயங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | **முனைப் பழியுள்ள** | **முனைப் பழியற்ற** | **அபிப்பிராய மறுப்பு** | **பாதக அபிப்பிராயம்** |
| மாநகர சபைகள் | 23 | 22 | 19 | 16 | - | 03 | - |
| நகர சபைகள் | 41 | 40 | 40 | 36 | 01 | 03 | - |
| பிரதேச சபைகள் | 271 | 267 | 261 | 240 | 12 | 02 | 07 |
| **மொத்தம்** | 335 | 329 | 320 | 292 | 13 | 08 | 07 |

ஒவ்வொரு ஆண்டின்போதும் கணக்காய்வில் புலனாகிய குறைபாடுகள் உள்ளூராட்சி ஆணையாளர்களது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. எனினும், முன்னர் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சகல ஆண்டுகளிலும் கணக்காய்வின்போது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாயிற்று. இவ்வாறாகச் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் ஒரே விதமான குறைபாடு தொடர்ந்தும் அறிக்கையிடப்பட ஏதுவாயிற்று. இந்நிலைமை காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் உதவி வழங்குவதானது கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தியாகியதன் பின்னரே என அறிவுறுத்தப்பட்டு அதன் காரணமாக அவ்வுதவிகளைப் பெறுவதற்கு கணக்காய்வு அறிக்கைகளிலுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டவெனும் தீர்த்து வைத்தல் சான்றிதழ்களைக் கோரும் நிலைமையை உருவாக்கியது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் ஒன்பதாவது நிரலின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மேற்பார்வை மாகாண சபைகள் வசைப்படும். எனினும், உள்ளூராட்சி நிறுவனங்களது மேற்பார்வை தொடர்பாக முறையான நடைமுறைகளை மாகாண சபைகள் அமுலாக்கி இராததுடன், உள்ளூராட்சி நிறுவனக் கணக்குகளது கணக்காய்வில் புலனாகிய விடயங்கள் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்களது கவனத்திற்கே கொண்டுவரப்பட்டிருந்தன.

- உள்ளூராட்சி நிறுவனங்களது குறைபாடுகளைக் கலந்துரையாடுவது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மாகாண சபைகளுக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் விரிவான அறிக்கையின் மூலம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. மொறட்டுவை நகரசபைத் தலைவர் சட்டமா அதிபரிடமிருந்து பெற்ற அபிப்பிராயத்துக்கு ஏற்ப, மாகாண சபைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கைகளைக் கலந்துரையாட அதிகாரமில்லை எனத் தெரிவிக்கப்பட்டதால் மேல் மாகாண சபை உள்ளூராட்சி நிறவனக் கணக்காய்வு அறிக்கைகளைக் கலந்துரையாடுவதை நிறுத்தியிருந்தது. இந்நிலைமையின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விரிவான அறிக்கைகளைப் பாராளுமன்றமா அல்லது மாகாண சபை மூலமா எனும் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

- மாகாண சபைகள் முறைமை ஆரம்பந்தொட்டே 2012 ஆம் ஆண்டுவரை (யாழ்ப்பாணம் மற்றும் மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள் நீங்கலாக) அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அறிக்கைகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளபோதும், இதுவரை கலந்துரையாடலுக்கான கோரிக்கை விடுக்கப்படவில்லை. இவ்வறிக்கைகள் பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்பட வேண்டும் என முன்மொழிகின்றேன். இந்நிலைமையின் கீழ் உள்ளூராட்சி நிறுவனக் கணக்குகள் தொடர்பான கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பொதுக் குறைபாடுகள் தொடர்பான அவதானிப்புகள் கீழே (அ) தொடக்கம் (ஏ) வரை காணப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி நோக்கெல்லைக்குரிய ஒவ்வொரு பிரதேசங்களிலும் நிறுவப்பட்டுள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் வருவாயைச் சேகரிப்பது உள்ளூராட்சி நிறுவனப் பணியாகும். எனினும், குறித்த மாகாண சபைகள் அனுமதிப் பத்திர வழங்கலுக்கான உப விதிகளை ஏற்படுத்தாமையால் பெருமளவு வருவாயைப் பெறுவதற்கான வாய்ப்பு இழப்பிற்குள்ளாகியிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களது சட்டங்களின் பிரகாரம், ஊழியர் ஆட்சேர்ப்பிற்கான அங்கீகாரத்தை மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்தே பெறவேண்டும். அதன் பொருட்டுத் தேவைப்படும் சம்பள மீளளிப்பை மாகாண சபையிடமிருந்தே பெற வேண்டும். எனினும், இதற்கு முரணாக அநேக உள்ளூராட்சி நிறுவனங்கள் முறையற்றவாறு நியமனங்களை வழங்கியமையால் சம்பள மீளளிப்பைப் பெற முடியாதிருந்ததுடன், சபையின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டு வங்கி மேலதிகப்பற்று அல்லது பிற நிதி வழங்கல் மூலமாகச் சம்பளத்தை வழங்க வேண்டியதாயிற்று.

(இ) மாகாண சபை முறைமை ஏற்படுவதற்கு முன்னர் மத்திய அரசாங்கத்தின் கீழிருந்த உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கும் சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்கள் நேரடியாக வருவாயைச் சேகரித்தல் மற்றும் சேகரிக்கப்படும் வருவாயை அதிகரிப்பதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவாயைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு சபையின் அங்கீகாரத்தைக் கோரியபோதும், சில உள்ளூராட்சி நிறுவனங்கள் அவ்வாறான அங்கீகாரத்தைப் பெறாததால் சேகரிக்கப்படக்கூடிய வருவாய் இழப்பிற்குள்ளானது. கடை வாடகை அறவிடப்படாமையை உதாரணமாகக் கொள்ளலாம்.

(ஈ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான சந்தையில் உள்ள கடைகளை மூல உரிமையாளருக்கு வழங்கியதன் பின்னர் அவர்கள் அதனைக்காலப் போக்கில் உப குத்தகைக்கு வழங்கியிருந்தனர். அவற்றைச் சீராக்கி வருவாயைப் பெறுவதற்கு அநேக உள்ளூராட்சி நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(உ) மாகாண சபைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உள்ளூராட்சி நிறுவனங்களைச் சேரவேண்டிய முத்திரைக் கட்டணமும் நீதிமன்றத் தண்டப் பணமும் துரிதமாக அறவிடப்படுவதற்கான வாய்ப்பிருந்தபோதும், அவ்வருவாயானது மாகாண சபைகளது வருவாய்த் திணைக்களங்களுக்கூடாக வழங்கப்படுவதால் உள்ளூராட்சி நிறுவனங்கள் அவ்வருவாயைப் பெறுவது தாமதமாவதாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) மாகாண சபைகள் உருவாகியதையடுத்து அவற்றிற்குப் பொருந்தி வருமாறு உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய மாநகரசபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் என்பன காலத்துக்குக் காலம் திருத்தங்களுக்குள்ளாக வேண்டிய போதும், அவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையால் எதிர்வரும் காலத்திற்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதில் இடர்கள் ஏற்பட்டிருந்தன.

(எ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் அவ்வப் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான நிதியேற்பாட்டை வழங்குவதில் இணக்கப்பாடு நிலவியபோதும், அந்த அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்படுவதில் உள்ள குறைபாடுகள் காரணமாகக் குறித்த நிதியேற்பாடு வழங்கப்படாது போன சந்தர்ப்பங்களும் நிலவின. எனினும், அத்தொகையானது கடன்பட்டோராகக் கணக்குகளில் தொடர்ந்து காட்டப்பட்டவாறிருந்தன.

(ஏ) அரசியலமைப்புக்கான 13 ஆம் திருத்தத்தினது 9 ஆம் பட்டோலையின் 1 ஆம் நிரலாக அமையும் மாகாண சபை நிரலின் 4.2 க்கமையய உள்ளூராட்சி நிறுவனங்களது அதிகாரங்களை இல்லாதொழிக்க முடியாது. எனினும், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185(2) பிரிவின் பிரகாரம் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பட்டோலையில் குறிப்பிடப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்திற்கமைய மாநகர சபை எல்லைக்குள் மதுபான விற்பனைக்கான வெவ்வேறாக வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக அறவிடப்படும் கட்டணம் தற்போது அமுலில் உள்ள 23 மாநகர சபைகளுக்கும் வழங்கப்படுமாறு அரசாங்கமோ அல்லது மாகாண சபைகளோ பொருத்தமான ஏற்பாடுகளை அமுலாக்கவில்லை.

மேலும், உள்ளூராட்சி நிறுவனங்களது கணக்குகள் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் புலனாகிய முக்கிய அவதானிப்புகள் கீழே காணப்படுகின்றன.

- 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 335 உள்ளூராட்சி நிறுவனங்கள் அறவிட வேண்டியிருந்த வருவாய் நிலுவை ரூபா 15,466,673,808 ஆகும். உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டியிருந்த உதவு தொகையினது நிலுவை ரூபா 733,883,520 ஆகும்.

- கொழும்பு மாநகர சபையின் நடைமுறைக் கணக்கொன்றில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த வங்கிமேலதிகப் பற்று மீதி ரூபா 935,022,666 ஆகும். இதன் பொருட்டு மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட மேலதிகப்பற்று வட்டி ரூபா 31,747,468 ஆகும். இதற்குப் புறம்பாக, ஆண்டின் இறுதியில் சபையின் நடைமுறைக் கணக்கில் ரூபா 844.9 மில்லியன் மேலதிகப் பற்று மீதி நிலவியதால் சபையின் நிதி முகாமைத்துவம் நலிவுற்ற நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

- கொழும்பு மாநகரசபையின் ஒரு பகுதியில் திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் பொருட்டு தனிப்பட்ட ஒப்பந்தகாரர் ஒருவரது சேவை பெறப்பட்டு 2014 ஜனவரி முதல் ஒக்டோபர் வரை ரூபா 101.29 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், உடன்படிக்கை இன்மையால் கேள்வி நிபந்தனைகளை அமுலாக்குவது தொடர்பாக ஒப்பந்தகாரரை வற்புறுத்த முடியாது போயிற்று.

- கொழும்பு மாநகர சபை கொள்வனவு செய்து ஏறக்குறைய 23 ஆண்டுகள் பழமையான லேண்ட் லோவர் வாகனம் ரூபா 2.17 மில்லியன் கிரயத்தில் பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன், பழுதுபார்த்ததன் பின்னர் அதனைப் பயன்படுத்தாது மாநகரசபை வளாகத்தில் வைத்திருப்பது அவதானிக்கப்பட்டது.

- வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்கருகே கோட்டே மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் மாநகரசபைக் கட்டிட நிர்மாணவேலைச் செயற்திட்டம் சம்பந்தமாக கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாது குறித்த சேவை வழங்கும் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 900.27 மில்லியன் செயற்திட்ட மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

  (i) புதிய கட்டிட நிர்மாண வேலைச் செலவினம் எவ்வாறு நிதியளிக்கப்படுகின்றது எனப் புலப்படுத்தப்படாததுடன் சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படாதுமிருந்தது.

  (ii) ஒப்படைப்புக் கட்டளை நிபந்தனைகளை மீறும் வண்ணம் இக்காணி வணிக செயற்திட்டம் அல்லாத நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

  (iii) சேவை வழங்கும் நிறுவனத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 15.21 மில்லியன் வழங்கப்படாததன் காரணமாக உடன்படிக்கையின் சாதாரண பணிகளுக்கான 06 ஆம் நிபந்தனையின் கீழ் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் ஆற்றல் அந்த நிறுவனத்திற்கு உள்ளமை அவதானிக்கப்பட்டது.

- குளியாப்பிட்டிய நகர சபைக்குச் சொந்தமான நீரைத் தூய்மையாக்கும் நிலையத்தினூடாக சபையே நீர் செயற்திட்டம் ஒன்றை அமுலாக்கி இருந்ததுடன். மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ஏறக்குறைய 1,855 நீர்ப்பாவனையாளர்களுக்கு நீர் வழங்கப்பட்டபோதும், கையிருப்பைக் காட்டும் நீர்மானி இல்லாததாலும் மாதாந்த உற்பத்தி, விநியோகம் போன்ற

தகவல்கள் இல்லாமையாலும் நீர்ச் செயற்திட்டத்தின் ஆக்கபூர்வத்தன்மையைப் பகுப்பாய்வு செய்ய முடியவில்லை. அவ்வாறே, மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு நிலுவையாக உள்ள நீரின் மீதி ரூபா 3.69 மில்லியன் ஆகியதுடன் அது ஆண்டிற்கான விலைக் கட்டணப் பட்டியலின் வாயிலாகப் பெறப்படும் வருவாயில் ஏறக்குறைய 81 சதவீதம் ஆகவுமிருந்தது.

- மஹரகம நகர சபைக்குச் சொந்தமான கங்கொடவிலவில் அமைந்துள்ள 1 ஏக்கர், 3 ரூட், 30 பர்ச்சஸ் பயிர் விலையக்கூடிய காணியின் ஒரு பகுதி ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபையால் சுவீகரிக்கப்பட்டு தெல்கந்த சந்தையை அங்கே நடாத்துவதற்கான நோக்குடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது 2013 டிசெம்பர் 30 அன்று ரூபா 8.6 மில்லியன் கோட்டை மாநகரசபையால் நகர்புற அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அக்காணியில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அதன்மூலம் வருவாய் எதுவும் பெறப்படாததுடன் அக்காணியினது உரித்து கோட்டே மாநகரசபையால் சுவீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படாதிருந்தது.

- வீட்டுக்கு வீடு, ஊருக்கு ஊர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பலாங்கொடை பிரதேச சபைக்கு ரூபா 2.6 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு 8 வேலைகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 2.56 மில்லியன் தொகையில் 8 சங்கங்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வேலைகளை முடிவுக்குக் கொண்டு வரவிருந்தபோதும், ரூபா 918,537 பெறுமதிக்கான வேலைகள் முடிவுற்ற நிலையில் ஏற்பதற்கில்லாத காரணம் எதுவுமின்றி அதனை முடிவுறுத்தாது இடைநடுவே கைவிடப்பட்டிருந்தது.

- 2007 ஆம் ஆண்டில் உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 4.62 மில்லியன் கடனைப் பயன்படுத்தி ஹோமாகம பிரதேச சபை ஹோமாகம நகர மத்தியில் அமைத்திருந்த பழைய சந்தைக் கட்டிடம் 2014 ஒக்டோபரில் ரூபா 200,000 செலவில் தகர்க்கப்பட்டு அதன் காரணமாக ரூபா 4.82 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. தகர்க்கப்பட்ட வாரச் சந்தைக்குப் பதிலாக தற்காலிகக் கொட்டகையை நிர்மாணிப்பதற்கு மாதாந்தம் ரூபா 585,125 வீதம் 2015 மார்ச் வரை கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 3.51 மில்லியன் மற்றும் அக்காலப்பகுதியில் சபையால் வாரச் சந்தையால் பெறப்பட்ட ரூபா 2.12 மில்லியன் வருவாயுடன் ஒப்பிடுகையில் இத்தற்காலிகச் சந்தையைச் சபை நடாத்தியமையால் அக்கலைப்பகுதியின் போது ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 1.39 மில்லியன் ஆகும். ரூபா 70 மில்லியன் செலவில் விற்பனைச் சந்தையை நவீனமயப்படுத்தும் வேலையை நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபை 2015 மே 15 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்திருந்த போதும், அவ்வாரச் சந்தை திறந்துவைக்கப்படாது தற்காலிகக் கொட்டகைக்குத் தொடர்ந்து கொடுப்பனவு செய்யப்பட்டவாறிருந்தது.

- குளியாப்பிட்டிய பிரதேச சபை முறையற்றவாறு 1988 ஆம் ஆண்டிற்கான இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு வழங்கியமையால், தமக்குஏற்பட்ட பாதிப்பு தொடர்பாகப் பிரிதொரு குத்தகையாளரால் குளியாப்பிட்டிய மாவட்ட நீதி மன்றில் தாக்கல் செய்த வழக்கினது தீர்ப்புப் பிரகாரம் 1988 ஜனவரி 1 தொடக்கம் 1988 டிசெம்பர் 31 வரை நாளொன்றிற்கு ரூபா 1,800 வீதப்படி ரூபா 657,000 உடன் ஒரு சேர வழக்குக்கான செலவையும் குறித்த நபர்களுக்குச் செலுத்துமாறு சபைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- கல்கமுவ பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியை மட்டப்படுத்தும் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமையால் பெறவேண்டிய வருவாய் ரூபா 499,554 ஆகும். அதில் ரூபா 457,940 வெளிநபர்களிடமிருந்து அறவிடப்பட்ட வேண்டியதாகும். அவ்வாறே, JCB இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதன் மூலம் மீளாய்வண்டு முடிவில் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 2.68 மில்லியன் ஆகும்.

- நிக்கவரட்டிய பிரதேச சபையினது கேள்வி கோரல் நிபந்தனைகளுக்கமைய ஒரே தடவையில் செலுத்தப்படும் தொகை (கீமனி) 5 மாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். எனினும், கேள்வி கோரலின் பின்னர் 5 மாதங்களுக்கு மேற்பட்டதன் பின்னரும் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 9 கடைகள் தொடர்பாக ரூபா 1.42 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

- சீதாவகபுர பிரதேச சபைக்குச் சொந்தமான வாடிவீடு மற்றும் காணி என்பவற்றை முகாமைத்துவம் செய்வது நகர்புற அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், 2001 முதல் பெறவேண்டிய குத்தகை வாடகையான ரூபா 11.24 மில்லியன் அறவிடப்படுவதற்கும் அச்சொத்தை மீள சபை சுவீகரித்துக் கொள்வதற்குமான நடவடிக்கைககள் எடுக்கப்படாதிருந்தன.

# வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்கள்

நிதியமைச்சின் புள்ளிவிபரங்களின்படி, 2014 டிசம்பர் 31ஆம் திகதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் தொகை ரூபா 3,131 பில்லியனாக இருந்ததுடன், அதில் சலுகையடிப்படையிலான கடன் நிபந்தனைகளுடன் பெறப்பட்ட வெளிநாட்டுக்கடன் தொகை ரூபா 1,491 பில்லியனாக இருந்தது. 2013 டிசம்பர் 31ஆம் திகதியில் இருந்த சலுகையற்ற கடன் நிபந்தனைகளுடன் பெறப்பட்ட ரூபா 1,467.60 பில்லியன் வெளிநாட்டுக்கடன் தொகையுடன் ஒப்பிட்ட 2014 டிசம்பர் 31ஆம் திகதியில் அக் கடன் தொகை ரூபா 1,622 பில்லியனாக மாறியிருந்தமை சலுகையற்ற கடன் நிபந்தனைகளுடன் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகை உயர்ந்திருந்ததனாலாகும். 2014 டிசம்பர் 31ஆம் திகதியில் கடன்சந்தையில் நேரடியாகப் பெறப்பட்ட கடன் தொகை ரூபா 1,164.5 மில்லியனாக இருந்ததுடன், அதனை 2012ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த நிலையுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 12.94 வீத அதிகரிப்பாக இருந்தது.

சலுகையடிப்படை நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்ட கடனில் ரூபா 786 பில்லியன் இருபக்க மூலங்களையுடையதாக இருந்ததுடன் அதில் ரூபா.416 பில்லியன் பங்களிப்பு ஜப்பான் அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்தது. இந்திய அரசின் உதவித் தொகை ரூபா.120 பில்லியன் ஆகும். பலபக்க மூலங்களிலிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகையில் ரூபா.471 பில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் ரூபா.363 பில்லியன் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்டிருந்தது.

சலுகை நிபந்தனைகளின்கீழ் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் முக்கியமாக வறுமை ஒழிப்பு, வாழ்வாதார உதவி, சமூக நலன்புரிகள், கல்வி, சுகாதார அடிமட்ட வசதிகளை உயர்த்துதல் ஆகிய செயற்பாடுகளிலும் மின்சக்தி மற்றும் வலு, நீர்வழங்கல், வீதிகள், பாலங்கள், துறைமுகங்கள், விவசாய மற்றும் நீர்ப்பாசனம் போன்ற துறைகளிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

சலுகை நிபந்தனையடிப்படையிலும், சலுகையற்ற நிபந்தனையடிப்படையிலும் 2014 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன் பொருளாதாரத்தில் வெவ்வேறு துறைகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த விதம் கீழ்வரும் அட்டவணையில் காணப்படுகின்றது.

| துறை | நூற்றுவீதமாக முதலீடு |
|---|---|
| வீதிகள் மற்றும் பாலங்கள் அபிவிருத்தி செய்தல் | 64 |
| நீர்வழங்கலும் சுகாதாரமும் | 6 |
| அனர்த்த முகாமைத்துவம் | 5 |
| தொழில் மற்றும் திறன் பயிற்சி | 5 |
| வீடு மற்றும் நகர அபிவிருத்தி | 3 |
| கல்வியும் ஊடகமும் | 3 |
| மின்சாரமும் வலுவும் | 3 |
| ஏனையவை | 11 |

2014ஆம் ஆண்டின் போது சலுகை நிபந்தனையடிப்படையில் பலபக்க கடன் மூலங்களிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் மூலம் செயற்பட்ட 121 செயற்றிட்டங்கள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 27 நிதிக்கூற்றுக்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியாலும் 25 சர்வதேச அபிவிருத்தி நிதிநிறுவனங்களாலும் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களாகும். அச்செயற்றிட்டங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கிய முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றன.

- வெளிநாட்டு செயற்றிட்டங்களின் கீழ் செயற்படும் செயற்பாடுகளின் நடவடிக்கைகள் பிற்காலங்களில் வேறுபடும் காரணத்தால், மதிப்பிடப்பட்ட கிரயம் பாரிய அளவு உயர்ந்து, விரும்பப்பட்ட கால எல்லையுள் செயற்றிட்டங்களின் செயற்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. அவ்வாறான இவ்முக்கிய அவதானிப்புக்கள் கீழே காட்டப்படுகின்றன.

(i) ரூபா.72.92 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த கொட்டாவ தொடக்கம் கடவத்தை வரையிலான 2 ஆம் கட்டத்தில் உள்ளடங்கியிருந்த கொழும்பின் வெளிப்பகுதியைச் சூழ்ந்த அதிவேக நெடுஞ்சாலையின் அத்துருகிரிய மாறுதல் செயற்றிட்டத்தின் ஆரம்பத் திட்டத்தில் அடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அத்துருகிரிய மாறுதல் ஆரம்ப மதிப்பீட்டிற்கு செய்யப்பட்ட மாற்றம் எனக் கருதப்பட்டு ரூபா.475 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) தேசிய வீதிப்பகுதி செயற்றிட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைகள் செயலாளர் அலுவலகத்திற்காக ஒரு கட்டடம் நிர்மாணிக்கும் பணி 2010 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 08 மாடிகளைக் கொண்டதாகத் திட்டமிடப்பட்ட இந்தக் கட்டிடம் பிற்காலத்தில் 10 மாடிவரை வேறுபட்ட காரணத்தால், ரூபா 1,167.44 மில்லியன் ஆன முதல் மதிப்பீடு 2014 டிசம்பர் 31ஆம் திகதி வரை ரூபா 1,963.17 மில்லியன்வரை உயர்ந்திருந்தது. இந்தக் கட்டடத்தின் பணிகள் 2014 டிசம்பர் 31ஆம் திகதிவரை கூட முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய வீதிப்பகுதி (மேலதிக நிதிக்கடன்) செயற்றிட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட மாத்தறையிலிருந்து கொடகம வரையிலான பாதையின் முதல் திட்டங்களுக்கு இணங்காத நடவடிக்கைகளின் காரணமாக கிரயம் ரூபா 14 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(iv) உலர்வலய நகர்ப்புற நீர்வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு செய்தலில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக செயற்பாடுகள் திருத்தம் செய்தமையால் அதில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 113 மில்லியனிலிருந்து ரூபா 163 மில்லியன் வரை உயர்ந்திருந்தது.

- செயற்திட்டங்களுக்கான மொத்தத் திட்டம் அல்லது வருடாந்த செயற்பாட்டுத்திட்டங்கள் தயாரிக்காமல் செயற்படுத்தப்பட்ட பல செயற்றிட்டங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டிருந்தன. அவ்வாறான முக்கிய செயற்றிட்டங்களின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| **செயற்திட்டத்தின் பெயர்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை நீடிக்கும் செயற்றிட்டம் | 187,010 |
| காலநிலை முன்னுரைத்தலை மேம்படுத்தும் செயற்றிட்டம் | 14,617 |
| நகர மற்றும் கிராமிய மக்கள் நீர்வழங்கல், சுகாதார பாதுகாப்பு செயற்றிட்டம் | 2,290 |
| தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை இணைக்கும் செயற்றிட்டம் | 791 |
| வடக்கு, கிழக்கு நீர்வழங்கல், சுகாதார பாதுகாப்பு செயற்றிட்டம | 220 |
| உலர்வலய நகர்ப்புற நீர்வழங்கல், சுகாதார பாதுகாப்பு செயற்றிட்டம் | 113 |

- 2007 ஏப்பிரல் 05ஆம் திகதியிட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 33ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி, எந்தச் செயற்திட்டத்தின் ஆளணியும் பகிரங்க விளம்பரத்தின மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவுசெய்யப்பட வேண்டுமென்பதுடன் அந் நியமனங்கள் ஒப்பந்த அடிப்படையில் மூன்று வருட காலத்திற்கு மட்டுப்படுத்தப்படலும் வேண்டும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி, நீர்வழங்கல் பகுதிகளின் செயற்திட்டங்களுக்காக பகிரங்க விளம்பரம் செய்யப்படாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினதும், நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினதும் நிரந்தர சேவையில் இருக்கும் அலுவலர்கள் இரண்டாம்படிச்சேவை அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த அலுவலர்களின் ஒரு செயற்றிட்டக் கால எல்லை முடிவுற்றதும் மற்றொரு செயற்திட்ட ஆளணியில்இணைத்துக் கொள்வதன் மூலம் தொடர்ச்சியாக செயற்றிட்ட அலுவலகங்களில் இணைக்கப்பட்டிருந்தனர் என்பதும் அவதானிக்கப்பட்டது.

- பொதுமக்களின் எதிர்ப்பினால் செயற்திட்டங்கள் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்பட முடியாதிருந்த சந்தர்ப்பங்களும் கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்டிருந்தன. 2011 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர்வழங்கல், சுகாதார பாதுகாப்பு செயற்றிட்டத்தின் பணிகள் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக 2014 டிசம்பர் 31ஆம் திகதி வரை கூட ஆரம்பிக்கப்பட முடியாதிருந்தன. பேஸ்லைன் வீதி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ்

கிருலப்பனையிலிருந்து கொழும்பு – ஹொரணை வீதி வரை வீதி அபிவிருத்தி செய்யும் பணிகள் 2014 டிசம்பர் 31ஆம் திகதி வரையிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

- வெளிநாட்டுச் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்காக தாமதமாகச் சமர்ப்பிக்கப்படுதல் காரணமாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தப்பட்ட கடன் / நன்கொடை வழங்கும் நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. மின்சார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்கள் தொடர்பாக 2014 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31ஆம் திகதி கணக்காய்வுக்காகக் கிடைக்க வேண்டியிருந்தும், சம்பந்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை மாதத்திலேயே கிடைக்கப்பெற்றிருந்தன. இதற்கு மேலதிகமாக, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட 07 செயற்திட்டங்கள் தொடர்பான 2014 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை கூட கணக்காய்வுக்காகச் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

- தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்ட நாளுக்குச் சமாந்தரமாக கொழும்பு புறநகர் சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவ மாறுதல் கட்டிடங்கள் நிர்மாணித்தல் தாமதமான காரணத்தால் ரூபா 259 மில்லியன் செலவில் தற்காலிக மாறுதல் நிலையமொன்று கொட்டாவையில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பின்னர் இத் தற்காலிக மாற்றல் நிலையம் ரூபா 8.27 மில்லியன் செலவில் அகற்றப்பட்டு ரூபா 945 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிரந்தர மாறுதல் நிலையம் பாவனைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. இதற்கு மேலாக, கடுவெல கொத்தலாவல பிரதேசத்தில் ரூபா 176 மில்லியன் கிரயத்தில் தற்காலிக மாற்றல் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது 2015 மார்ச் மாதத்தில் ரூபா 10 மில்லியன் செலவிடப்பட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்தக் கிரயச் செலவு கொழும்பு புறநகர் சுற்றுவட்டப் பாதைகள் செயற்திட்டத்தின் 01ஆம் கட்ட செயற்திட்டச் செலவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

# வங்கியியல்

## இலங்கை வங்கி

2013 இலுள்ள இலங்கை வங்கியின் சொத்து அடிப்படை ரூபா 1,193 பில்லியனுடன் ஒப்பிடும் போது முதலீடுகள் ரூபா 99.5 பில்லியனால் அல்லது 29 சதவீதமாக ரூபா 446 பில்லியனுக்கு அதிகரித்தமையால் 2014 இல் 10.9 சதவீதத்தால் அல்லது ரூபா 1,323 பில்லியனுக்கு வளர்ச்சியடைந்திருந்தது. தேறிய வட்டி எல்லையானது 2013 இல் 29.3 சதவீதத்திலிருந்து 2014 இல் 34.8 சதவீதத்திற்கு அதிகரித்தமையால் வங்கியின் தேறிய வட்டி வருமானது 2014 இல் 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வங்கியின் 2013 இலுள்ள வரிக்கு முந்திய தேறியலாபம் ரூபா 15.2 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 20.8 பில்லியனை பதிவு செய்திருந்தது. 2014 இல் வங்கியானது ரூபா 6.8 பில்லியனை திரண்ட நிதியத்திற்கு பங்களித்திருந்தது. வைப்பு அடிப்படையானது 11.8 சதவீதத்தால் மாத்திரமே 2014 இல் வளர்ச்சியடைந்திருந்ததுடன் இந்த வளர்ச்சியானது 2013 இல் பதிவு செய்திருந்த 21 சதவீதத்தைவிட குறைவானதாகும்.

வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் (என்பீஎல்) 2013 இல் 4.3 சதவீதத்தால் அதிகரித்திருநததுடன் ஒப்பிடும் போது 2014 இன் இறுதியில் செயற்பாடற்ற அடவு முற்பணங்கள் ரூபா 7.8 பில்லியனால் ரூபா 4.1 பில்லியனிற்கு குறைவடைந்தமையால் 2014 இல் இவ் விகிதமானது 3.8 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது.

2014 ஆம் ஆண்டின் போது வங்கி அதன் கிளை வலையமைப்பை விரிவாக்குவதற்கு 06 புதிய கிளைகள் மற்றும் 02 எஸ்எம்ஈ நிலையங்களை திறந்திருந்தது. வங்கியானது பிற்ச் தரப்படுத்தலிருந்து (லங்கா) 2014 இலும் ஏஏ + 3 நீண்டகால தரப்படுத்தலில் நிலைத்திருந்தது.

## மக்கள் வங்கி

2014 இறுதியளவில் 1 ரில்லியன் சொத்து அடிப்படை இருந்ததுடன் 2013 இல் 927 பில்லியனிலிருந்து 2014 இல் ரூபா 1,026 பில்லியனாக 10.6 சதவீத வளர்சசியை பதிவு செய்திருந்தது. தேறிய வட்டி வருமானம் 2013 ஐ விட ரூபா 6.8 பில்லியனால் அல்லது ரூபா 18.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தாலும் ஏனைய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் மற்றும் கடன்களினதும் ஏனைய நட்டங்களின் அழிவின் திருப்பத்தாலும் வங்கியின் வரிக்கு முந்திய இலாபமானது ரூபா 17.2 பில்லியனாக அதிகரித்திருந்தது. 2013 இன் 11.4 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது 2014 இல் 4.0 சதவீதமான குறைந்த வைப்பு வளர்ச்சி வீதத்தை பதிவு செய்திருந்தது.

செயற்பாடற்ற கடன் விகிதமானது ரூபா 12.7 பில்லியனால் 0.95 பில்லியனிற்கு குறைவடைந்தமையால் செயற்பாடற்ற கடன் விகிதமானது 2013 இன் 5.3 சதவீதத்தைவிட 2014 இறுதியளவில் 3.2 சதவீதமாக அதிகரித்திருந்தது.

வங்கி 348 கிளைகள், 391 சேவை நிலையங்கள் மற்றும் இலங்கையிலுள்ள ஒட்டு மொத்த பகுதிகளையும் மேவக் கூடிய வகையில் 463 ஏரீஎம் இயந்திரங்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. பிற்ச் தரப்படுத்தல்கள் (லங்கா) மக்கள் வங்கிக்காக ஏஏ + (எல்கேஏ) தேசிய நீண்டகால தரப்படுத்தலை தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக உறுதி செய்திருந்தது.

## தேசிய சேமிப்பு வங்கி

வங்கியின் சொத்து அடிப்படை 2014 இறுதியில் 19 சதவீதத்தால் 779 பில்லியனிற்கு வளர்ச்சியடைந்திருந்தது. 2013 இலிருந்தான தேறிய வட்டி எல்லையில் ஏற்பட்ட முன்னேற்றத்தோடு சேர்ந்து வட்டி வருமான அதிகரிப்பான 1.7 சதவீதத்தை விட 2014 இல் 3 சதவீதமாக இருந்ததுடன் 2013 இலுள்ள வரிக்கு முந்திய இலாபம் ரூபா 2.3 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 10.5 பில்லியனை பதிவு செய்திருந்தது. 2014 இறுதியில் வைப்பு அடிப்படை 10.4 சதவீதத்தினால் ரூபா 554 பில்லியனிற்கு வளர்ச்சியடைந்தது. இது 2013 இல் பதிவு செய்திருந்த 9 சதவீதத்தான வளர்ச்சியை விட அதிகமாக இருந்தது.

2014 இறுதியில் செயற்பாடற்ற அடவு கடன்கள் 103 சதவீதத்தால் 13.4 மில்லியனிற்கு அதிகரித்தமையால் 2013 இலுள்ள 7.0 சதவீதமான செற்பாடற்ற கடன் விகிதத்துடன் ஒப்பிடும் போது 2014 இல் 7.8 சதவீத எல்லையில் குறைவடைந்திருந்தது. வங்கியானது அதனுடைய கிளை வலையமைப்பை 2014 இல் 07 புதிய கிளைகளை திறந்து 236 கிளைகளாக விரிவாக்கியிருந்ததுடன் தொடர்ச்சியாக 12 ஆவதாக 2014 இலும் பிற்ச் தரப்படுத்தலினால் ஏஏஏ(எல்கேஏ) தேசிய நீண்டகால தரப்படுத்தல் உறுதி செய்யப்பட்டிருந்தது.

## பிரதேச அபிவிருத்தி வங்கி

பிரதேச அபிவிருத்தி வங்கி (பிஎஸ்பீ) ஸ்தாபித்தலின் நோக்கமானது நகர பொருளாதார வலுப்படுத்தலிற்கு பங்களிப்பு செய்யக் கூடிய வகையில் அணுகக் கூடியதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதமான கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் நகர மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றல் ஆகும்.

வட்டி செலவினம் குறைவடைந்தமையாலும் வட்டி வருமானம் அதிகரித்தமையாலும் தேறிய இலாபம் 2014 இல் 84 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வைப்புக்களிற்காக வழங்கப்பட்ட உயர்ந்த வட்டிவீத சீராக்கங்களினால் 2014 இல் வட்டிச் செலவினங்கள் 10.6 சதவீதத்தால் ரூபா 5,312 ஆக குறைவடைந்திருந்தது.

வங்கியின் வைப்பு அடிப்படை 15.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2013 இலுள்ள செயற்பாடற்ற கடன்கள் விகிதம் 7.3 சதவீதத்திலிருந்து அடவு கலவையிலுள்ள நட்டங்களின் காரணமாக 2014 இல் 7.6 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

2014 ஆம் ஆண்டின் போது வங்கி 19 கிளைகளை மீள்நிறுவியிருந்ததுடன் 8 கிளைகளை விரிவாக்கியும் 8 எஸ்எம்ஈ நிலையங்களை திறந்துமிருந்தது.

## அரச முதலீட்டு வங்கி

வங்கியின் தேறிய வட்டி எல்லை 2013 இல் 4.76 சதவீதத்திலிருந்து 2014 இல் 4.90 சதவீததிற்கு அதிகரித்திருந்தது. ஆகையால் இலாபமானது 42 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. தொழிற்துறை வீதங்களான முறையே 12.4 சதவீதம் மற்றும் 13.7 சதவீதத்திற்கு எதிராக வைப்புக்கள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சமமான சதவீதத்தால் 14 சதவீதமாக அதிகரித்திருந்தது.

செயற்பாடற்ற கடன் (என்பிஎல்) வீதம் 2013 இலிலுள்ள 37.11 சதவீதத்திலிருந்து 2014 இல் 34.06 சதவீதமாக குறைவடைந்தது. 2014 ஆம் ஆண்டில் வங்கி இரண்டு புதிய கிளைகளை திறந்ததன் மூலம் கிளை வலையமைப்பை விரிபடுத்தியிருந்தது.

## வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (எச்டிஎவ்சீ வங்கி)

கொழும்பு வங்கி பரிவர்த்தனையில் அரச வங்கி மாத்திரமே பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் எச்டிஎவ்சீ வங்கி வீடமைப்பு நோக்கத்திற்காக கடன் வசதிகளை வழங்குவதில் பிரதானமாக ஈடுபடுகின்றது.

வங்கியின் சொத்து அடிப்படையானது முதலீடுகள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் அதிகரித்தமையால் 2014 இல் 25 சதவீதத்தால் ரூபா 35 பில்லியனிற்கு வளர்ச்சியடைந்திருந்தது.

2013 இலுள்ள தேறிய வட்டி எல்லை 4.38 சதவீதத்தை விட 2014 இல் 5.94 ஆக முன்னேறியதுடன் வட்டி வருமானம் இரு மடங்காக அதிகரித்தமையால் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் 165 சதவீத அதிகரிப்புடன் ரூபா 818 மில்லியனாக பதிவு செய்திருந்தது.

வங்கியின் வைப்பு அடிப்படை 2014 இறுதியளவில் ரூபா 5.5 மில்லியன் அல்லது 29.5 சதவீதத்தால் ரூபா 24.5 மில்லியனிற்கு அதிகரித்திருந்ததுடன் இதில் 87 சதவீதம் கால வைப்பினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்) விகிதம் 2013 இன் 19.85 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2014 இல் 22.57 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

2014 ஆம் ஆண்டின் போது புதிய 3 கிளைகளை திறந்து வங்கியின் கிளை வலையமைப்பானது 36 ஆக விரிவாக்கப்பட்டிருந்தது. 2014 இலும் பீபீ + இன் தேசிய நீண்டகால தரப்படுத்தல்களை பிற்ச் தரப்படுத்தல்கள் (லங்கா) உறுதி செய்திருந்தது.

மூலம்:- நிதியமைச்சின் ஆண்டறிக்கை - 2014

## பிரதான கணக்காய்வு சுட்டிக்காட்டல்கள்

### இலங்கை மத்திய வங்கி (CBSL)

- நாணய அதிகாரச்சட்டத்தின் பிரிவு 39 இலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய ஒதுக்கீடுகள் மற்றும் தீர்ப்பனவு செய்த பின்னர் இலங்கை மத்திய வங்கியால் உழைக்கப்பட்ட இலாபம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும் இதற்கிணங்க, ரூபா 32.31 பில்லியன் தொகையான நட்டம் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்கான முதல் இரண்டு காலாண்டிற்கான இலாபத்திடமிருந்து முற்பண கொடுப்பனவுகளாக 2014 இல் 2 சந்தர்ப்பங்களில் பொதுத் திறைசேரிக்கு ரூபா 8.5 பில்லியன் அனுப்பப்பட்டிருந்தது. தேறிய வெளிநாட்டு நாணயமாற்று மதிப்பீட்டு இலாபம் ரூபா 32.27 பில்லியன் மற்றும் வெளிநாட்டு சொத்துக்கள் மீது "சந்தைக்கு சந்தை" நட்டம் 7.97 பில்லியன் என்பன கணக்கிற்குள் எடுத்த பின்னர் இலங்கை மத்திய வங்கியால் பகிரக்கூடிய இலாபம் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் நிறுத்திவைத்த இலாபம் மீளாய்வாண்டு இறுதியிலும் ரூபா 5.7 பில்லியனான பாதக மீதியாக இருந்தது.

- இலங்கை மத்திய வங்கி ரூபா.122.81 மில்லியனை செலவழித்து பிரேசில் எதிர்கால தொழிற்பாடுகளிற்காக மீளாய்வாண்டில் சொத்தொன்றை கொள்வனவு செய்திருந்தது. இலங்கை மத்திய வங்கி அச் சொத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சொத்தின் பயன்பாட்டிற்கான எதிர்கால திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த சொத்தானது 2015 பெப்ரவரி 01 இலிருந்து இரண்டு (02) ஆண்டு காலத்திற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் அந்த திகதியிலிருந்து பிரேசிலுள்ள இலங்கை தூதரகம் அந்த இடத்தில் செயற்பட்டிருந்தது.

- இலங்கை மத்திய வங்கி 2011 ஆகஸ்ட் 24 இல் ஐ.அ.டொலர் 6,207,116 (ரூபா 607,121,953) செலவழித்து நியூயோக்கில் கட்டிடமொன்றை கொள்வனவு செய்திருந்தது. குறித்த நோக்கத்திற்காக கட்டிடத்தை பயன்படுத்தாமல் ஐ.அ.டொலர் 68,000 மாதாந்த வாடகையில் 2012 யூன் 01 இலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், நாணய அிகாரச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம், "இலங்கை மத்திய வங்கியானது அதன் கோரிக்கைகளின் ஏதாவது திருப்திப்படுத்தலின் போது கட்டாயமாக ஏதாவது கொள்வனவு செய்வதற்கான ஈடுபாட்டைத் தவிர வேறு எந்தவித நேரடி ஈடுபாடுள்ள வர்த்தக, கைத்தொழில் மற்றும் ஏனைய முயற்சிகளிலோ அல்லது வியாபாரத்திலோ ஈடுபடவில்லை" என்று குறிப்பிடப்பட்பது.

- இலங்கை மத்திய வங்கி திறைசேரியிடமிருந்து ஆலோசனை சேவைக்காக மூன்று வெளிநாட்டு சேவை வழங்குனருக்கு இலங்கை அரசாங்கத்திற்கத்திற்கு பதிலாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,396.22 மில்லியன் தொகையினை மீளச்செலுத்தல் அடிப்படையில் செலத்தியிருந்தது. இந்த தொகையானது திறைசேரியிடமிருந்து கோராமல் 2014 இலங்கை மத்திய வங்கியின் செலவினமாக கருதப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது ஏற்படுத்தப்பட்ட ரூபா 2,050.62 மில்லியன் தொகையானது மொத்த ஆலோசனை தொழிற்சேவையில் 68 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

- இலங்கை மத்திய வங்கி இலங்கையில் சர்வதேச நிதியியல் நிலையத்தை நிறுவுவதற்கு வெளிநாட்டு கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், 2014 ஒக்ரோபரில் முதலாவது தவணைக்கட்டணமாக யூ.எஸ்.டொலா் 250,000 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் இலங்கை மத்திய வங்கி மேலே குறிப்பிடப்பட்ட

தொகையை அறவிடாமல் அந்த கம்பனியிடமிருந்து பெறுகின்ற சேவையை நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்தது.

## இலங்கை வங்கி

## இலங்கை வங்கி சீசெல்ஸ் கிளை

### இலங்கை வங்கிக்காக நியூயோர்க் மற்றும் பிறாங்பேர்ட் இலிலுள்ள இணையான வங்கிகளில் யூஎஸ்டீ மற்றும் யூரோ கணக்குகளை திறத்தல்

சீசெல்ஸ் கிளையின் ஒட்டுமொத்த கொடுக்கல் வாங்கல்களும் கடல் கடந்த வங்கியியல் பிரிவு மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கி (யூகே) யினூடாக வரிசைப்படுத்தப்படுகின்றது. ஆகையால் இடைநடுவர் வங்கியால் அதிக கட்டணங்கள் அறவிடுதல் மற்றும் செயன்முறைகள் காலதமாகுதல் போன்ற நிலைமைகளில் வங்கி வாடிக்கையாளர்கள் திருப்திகரமாக இருக்கவில்லை. இது செலேஸ் கிளைக்கு யூஎஸ்ஏ மற்றும் ஈயூ இலுள்ள வங்கிகளுடன் நேரடி வங்கி தொடர்பினை வைத்திருப்பதற்கு நன்மையாகவிருக்கும்.

உதவி பொது முகாமையாளர் (கரை கடந்த கிளைகள்) மற்றும் பிரதம பிரதி முகாமையாளரால் (சர்வதேசம் மற்றும் திறைசேரி) இயக்குனர் சபைக்கு 2014 மே 21 ஆந் திகதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் நியூயோர்க்கிலுள்ள சாட்டட் வங்கியிலும் மற்றும் அமெரிக்கா மற்றும் நியூயோர்க் டச்ற் கம்பனியிலும் யூஎஸ்டி கணக்குகளை திறப்பதற்கும் பிறாங்பேட்டியிலுள்ள டச் வங்கியில் யூரோ கணக்குகளை திறப்பதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

வங்கி சபையின் அனுமதியை பெற்றதன் பின்னர் நியூயோர்க் மற்றும் பிறாங்பேட் இலுள்ள வங்கிகளில் யூஎஸ்டி மற்றும் யூரோ போன்றவற்றில் கணக்குகளை திறப்பதற்கு முயற்சி செய்திருந்தது. எனினும், சீசெல்ஸிலுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் இணங்காமையால் இது பயன்பாடற்றிருந்தது. ஆகையால் கிளை சீசெல்ஸின் வணிக தொழிற்பாடுகளை அதிகரிப்பதற்கு கஷ்டங்களை எதிர்கொண்டது.

### வாடிக்கையாளரிடமிருந்தான வைப்புக்கள் - சில வாடிக்கையாளர்களில் தங்கியிருத்தல்

வைப்புக்களின் மீளாய்வின் போது மூன்று பிரதான வாடிக்கையாளர்கள் மொத்த வைப்புக்களில் 62 சதவீதத்தையும் 10 பிரதான வைப்புக்கள் வாடிக்கையாளர்கள் வைப்புக்களில் 77 சதவீதத்தையும் 2015 ஏப்ரல் 30 இலுள்ளவாறு வைத்திருந்தார்கள் என அவதானிக்கப்பட்டது. இது வங்கியானது மிகவும் வரையறுத்த வைப்பாளர்களின் மீது தங்கியிருந்ததுடன் அதிக திரவ இடரை வெளிப்படுத்துகிறது எனவும் சுட்டிக்காட்டுகின்றது. ஆகையால் இவ் நிலைமையானது வங்கியின் தொடர்ந்து செல்லும் தன்மையான பாதகமான பாதிக்கும் என அவதானிக்கப்பட்டது.

### ரூபா 750 மில்லியன் பெறுமதியான பெறுமதி சேர் வரியின் முற்பண கொடுப்பனவு

2014 திசெம்பர் 30 இல் வங்கி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பெறுமதி சேர் வரியாக (வற்) ரூபா 750 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட முற்பண கொடுப்பனவுகள் நிதிச் சேவைகளின் மீதான பெறுமதி சேர் வரியின் எதிர்கால வரி பொறுப்புக்களிலிருந்து அறவிடப்பட முடியும். பெறுமதிசேர் வரி வழிகாட்டல்களின் பிரகாரம், வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வரி விதிக்கக்கூடிய நடவடிக்கைகளின் அடிப்படையில் சேவைகள் செயற்பட்ட பின்னரே பெறுமதிசேர் வரி அறவிடப்பட முடியும். இருப்பினும், வங்கியால் 2014 ஆம் கணக்காண்டிற்கான மேலே குறிப்பிடப்பட்ட வரி முற்பணங்களானது இலாபம்/வருமானத்தை பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் இது வங்கியின் எதிர்கால காசுப்பாய்ச்சலை பாதகமாக பாதித்திருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விளைவால் குறுங்கால முதலீட்டினூடாக இலாபம் அல்லது வருமானத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் கைவிடப்பட்டிருந்தன.

## முகாமைத்துவ பயிற்சியாளர்களை நேரடியாக வேலைக்கமர்த்தியமை

2013 ஒக்தோபர் 03 ஆந் திகதிய சபை பத்திரிகையின் பிரகாரம் மேலே கூறப்பட்ட வேலைக்கமர்த்தலுக்காக இரண்டாம்தர எழுத்துமூல பரீட்சை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடாத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும் இந்த பரீட்சையை நடாத்துவதில் அனுபவமில்லாத தனியார் ரியூசன் வகுப்புக்களை நடாத்திவரும் ஒரு தனியார் நிறுவனத்தை பயன்படுத்தி நடாத்தப்பட்டிருந்தன.

மேலே குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திற்காக அனுமதியை எடுக்கும் போது உதவி பொது முகாமையாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) உயர் மட்டத்திலுள்ள முகாமைத்துவத்தை தவறாக வழிப்படுத்தவதற்காக இந் நிறுவனங்களை பல்கலைக்கழகம் என கூறி தவறான தகவல்களை வழங்கியிருந்தார்.

மேலே குறிப்பிட்ட நிறுவனம் இரண்டாம்தர எழுத்துமூல பரீட்சையை நடாத்தும் நோக்கில் தேர்ந்தெடுக்கப்டப்ட போதிலும் கேள்வி பத்திரங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பீடு போன்றவற்றை மட்டுமே மேற்கொண்டதுடன் மேற்பார்வை மற்றும் பரீட்வையை நடாத்துதல் என்பன இலங்கை வங்கி பதவியணியாளரல் கையாளப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் இந்த இரண்டு செயற்பாடுகளுக்காக மாத்திரம் ரூபா 2.1 மில்லியன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உதவி பொது முகாமையாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) மேலே குறிப்பிடப்பட்ட வேலைக்கமர்த்தலுக்கான ஒட்டுமொத்த கடமைகளையும் நடாத்தியிருந்ததுடன் அவருடைய மகள் மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கு தோற்றி வெற்றியடைந்தார். இந்த விடயமானது உயர் முகாமைத்துவத்துவதிற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க, இந்த சூழ்நிலைகளிற்கு கீழுள்ள நிலமைகளின் சார்பின்மை சந்தேகத்திடமாக இருந்தது.

## மக்கள் வங்கி

- 18 கிளைகளிலுள்ள ஒரு மில்லியனுக்கு மேலதிகமாகவுள்ள 74 கடன்களிற்கு எதிராக ரூபா 361.69 மில்லியன் பெறுமதியான நிலுவை மீதி எந்த ஒரு தவணைக்கட்டணத்தையும் செலுத்தாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகைப்படுத்தலுக்கு மாற்றப்பட்டிருந்தது.

- முக்கிய 10 வாடிக்கையாளர்களின் செயற்பாடற்ற கடன்கள் மற்றும் வங்கி மேலதிகப்பற்று முறையே ரூபா 6,176.16 மில்லியன் மற்றும் ரூபா 601.26 மில்லியன் மீதிகள் நீண்டகாலத்திற்கு அறவிடாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்தன.

- செயற்பாடற்ற பதவியணி கடன்களை அறவிடுவதற்கு முறையான கொள்கை இல்லாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது செயற்பாடற்ற பதவியணி கடன் ரூபா 260 மில்லியனிலிருந்து ரூபா 336 மில்லியனிற்கு அதிகரித்தருந்தாலும் அந்த செயற்பாடற்ற கடன்களை அறவிடுவதற்கு முகாமைத்துவம் செயற்திறனுள்ள நடவடிக்கையொன்றை எடுத்திருக்கவில்லை.

## தேசிய சேமிப்பு வங்கி

- வரிக்கு பிந்திய இலாபத்தில் 30 சதவீதம் அல்லது உரியாண்மையில் 15 சதவீதம் இதில் எது அதிகமாக உள்ளதோ அந்த தொகையே. அக்குறைந்த பங்குலாபமாக செலுத்த வேண்டும் என்று கூறப்பட்ட பங்குலாப கொள்கைக்கு முரணாக ரூபா 510.96 மில்லியன் மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக வங்கியின் உரிமையாண்மை மற்றும் சொத்துக்கள் ரூபா 510.96 மில்லியனால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறைந்து காட்டப்பட்டிருந்தது.

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் (ஆர்டீஏ) அங்கீகரிக்கப்பட்ட 55,371 மில்லியன் பெறுமதியான செயற்திட்ட கடன்களில் ரூபா 49,218 மில்லியன் மாத்திரமே ஆண்டின் இறுதி வரை செலவழிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 11,711 மில்லியன் அல்லது 24 சதவீதம் 2014 திசெம்பர் மாதத்தின் போது செலவழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், வங்கி செயற்திட்ட நிதியியல் கையேட்டிற்கிணங்க தவணைக்கட்டணத்தை விடுவிப்பதற்கு முன்னர் செயற்திட்டத்தின் ஒவ்வொரு செலவழிப்புக்கள் தொடர்பிலும் ஆர்டீஏ யிடமிருந்து பௌதீக முன்னேற்ற அறிக்கை பெற்றிருக்கவில்லை.

- 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தவறான மீளப்பெறல்கள் மற்றும் காசாளரின் பற்றாக்குறை முறையே ரூபா 26.53 மில்லியன் மற்றும் ரூபா 1.51 மில்லியன் தொகையாக இருந்ததுடன் இதில் முறையே ரூபா 17.64 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேலாகவும் மற்றும் ரூபா 1.4 மில்லியன் 3 வருடத்திற்கு மேலாகவும் நிலுவையாக இருந்தன.

## பிரதேச அபிவிருத்தி வங்கி

- 1942 இன் 13 ஆம் இலக்க அடகு தரகரின் சட்டஒழுங்கின் 31 ஆம் பிரிவின் பிரகாரம், தங்க தரகர், விற்பனையின் போது கொள்வனவிற்காக முன்வைக்கப்படும் விலை மனுவை ஏலத்தின் மூலமோ அல்லது இந்த சட்ட ஒழுங்கமைப்பை உள்வாங்கியோ மேற்கொண்டு வாடிக்கையாளரோடு தங்க அடகை மேற்கொள்வதோடு அந்த கொள்வனவின் போது அடகு தரகரானவர் அடகு கொள்வனவின் உண்மையான உரிமையாளராக கருதப்படுவார். இதற்கு முரணாக 23.95 கிலோகிரம் விற்பனை செய்யப்படாத தங்க நகைகள் அந்த நகைகளின் உண்மையான உரிமையை பெற்றுக்கொள்ளாமல் உருக்கப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட சட்டஒழுங்கின் 28 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டது போல் உருக்கப்பட்ட தங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட நகைகளை விற்பனை செய்வதன் மூலம் வங்கியின் தங்க அடகிலுள்ள நிலுவைகளை தீர்ப்பனவு செய்திருந்ததுடன் வாடகையாளரிற்கு மிகையாக அளித்தலை நிறுத்தியிருந்தது.

- உருக்குதல் கட்டணங்கள், தங்க எடுத்துசெல்லல் கட்டணங்கள் மற்றும் உருக்கப்பட்ட தங்கத்தின் விற்பனை விலைகள் போன்ற உருக்குதல் செய்முறையின் போது போட்டி விலைகோருதல் செயன்முறைகளை பின்பற்றியிருக்கவில்லை.

- 2012 பெப்ரவரி 23 இன் 03/2012 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் ஒருவருக்கு பொது திறைசேரியிடமிருந்து முறையான அனுமதி பெற்றுக்கொள்ளாமல் ஒரு வாகனம் கையளிக்கப்பட்டிருந்தது.

- மிகிந்தலவிலுள்ள தற்போதைய கிளை அலுவலக கட்டிடத்தை திருத்துதல் மற்றும் திறப்பன கட்டிடத்தின் நிர்மாணம் போன்றவற்றின் இரண்டு நிர்மாண ஒப்பந்தத்தின் போது வழங்கப்பட்ட மொத்த ஒப்பந்த விலையின் சதவீதமாக முரண்பாட்டு கட்டளைகளின் பெறுமதி முறையே 217 சதவீதம் மற்றும் 46 சதவீதமாக இருந்தது.
  சதவீதங்களை ஆகக்குறைந்த எல்லையைவிட அதிகமாக இருந்த போதும் 2006 அரச கொள்வனவு வழிகாட்டலின் 8.13.4 ஆம் பிரிவின் நிபந்தனைக்கு இணங்கவந்த முரண்பாட்டு கட்டளைகளை விநியோகிப்பதற்கு முன்னர் வரிசை அமைச்சின் செயலாளரிடமிருந்து முறையான அனுமதி பெற்றிருக்கவில்லை.

## அரச ஈட்டு முதலீட்டு வங்கி

- வாடிக்கையாளர்களால் 2013 யூலை 01 தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது ஹம்பகா கிளையில் வைப்புச்செய்யப்பட்ட ரூபா 7.06 மில்லியன் தொகையானது கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

- கண்டி கிளையால் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 13.73 மில்லியன் தொகையான கடன் தவணைப்பணம் (தோட்டம்) உரிய கணக்குகளிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.அதனால் வருமானம் மற்றும் கடன் மீதிகளானது முறையே ரூபா 5.57 மில்லியன் மற்றும் ரூபா 6.16 மில்லியன் ஆல் குறைத்தும் அதிகரித்தும் இருந்தது.

- 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வசூலிக்கின்ற காசோலைகள் கணக்கில் பதிவு செய்தலில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக வரவு மீதி காணப்பட்டது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர்கள் ரூபா 22.81 மில்லியன் ஆல் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

- 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹம்பகா கிளையின் வசூலிக்கின்ற காசோலைகள் கணக்கில் - 004/1/09/1607 இருந்த ரூபா 1.12 மில்லியன் மீதியானது வங்கியால் இணக்கம் செய்யப்பட்டிருந்தபோதிலும் , 2014 திசெம்பர் 31 வரை கணக்குகளில் அது தொடர்பில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- கிளைகளின் நடைமுறைக் கணக்கிற்கும் கிளைகளில் மேற்கொள்ளப்பட்ட தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கிற்கும் இடையில் ரூபா 18.58 மில்லியன் ஆன இணக்கம் செய்யப்படாத ஆரம்ப வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் , ஒதுக்கீடற்ற கணக்குகள் , நிலையான வைப்பிற்கு எதிரான கடன்கள் தொடர்பில் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட தொகைக்கும் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை மூலம் உருவாக்கப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 69.96 மில்லியன் ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- முற்பணக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 4.21 மில்லியன் மீதியானது இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபன வங்கி (எச்டிஎவ்சீ)

- வங்கியின் மொத்த வாடிக்கையாளர் வைப்புக்களில், 49 சதவீதத்திற்கும் மேற்பட்டவை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருபது வைப்பாளர்களிற்கு உரித்தாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அது 42 சதவீதமாக காணப்பட்டமையால் வங்கி ஒருசில வரையறுக்கப்பட்ட வைப்பாளர்களில் தங்கியுள்ளமையும் உயர் திரவத்தன்மை ஆபத்தை எதிர்கொண்டுள்ளமையும் வெளிக்காட்டப்படுகின்றது.

- வங்கியின் சார்பாக நிலையான வைப்புக்களை திரட்டுவதற்கு நிதிக் கம்பனியொன்றுடன் வங்கி உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அந்த வைப்புக்களின் பெறுமதியின் மீதும் அதன்பின்னர் நிலையான வைப்புக்களின் ஏதேனும் புதுப்பித்தல்களின் மீதும் வருடாந்தம் 0.5 சதவீத தரகொன்றை செலுத்துவதற்கும் உடன்பட்டிருந்தது.

- இரண்டு பிரதான முகாமையாளர்களின் தலைமையின் கீழ் திறைசேரி மற்றும் சந்தைப்படுத்தல் என்ற இரண்டு தனிப்பட்ட பிரிவுகளை வங்கி கொண்டிருந்த போதிலும், மூன்றாம் தரப்பினர் ஊடாக நிதிகளை சேகரிப்பதற்கு ரூபா 1.29 மில்லியன் மேலதிக கிரயம் வங்கிக்கு ஏற்பட்டிருந்தது.

- மேற்குறித்த நிதிக் கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 3 மில்லியனுக்கு மேற்பட்ட உயர் பெறுமதிகொண்ட வைப்புக்களிற்கு விசேட வீதமொன்றை செலுத்துவதற்கு வங்கி உடன்பட்டிருந்தது. இருப்பினும், வைப்புக்களின் பெறுமதியினை கவனத்திற்கொள்ளாது,ரூபா 3 மில்லியனுக்கு குறைந்த வைப்புக்களிற்கும் வங்கி விசேட வீதத்தினை வழங்கியிருந்தது.

- வங்கி 14.5 சதவீதம் முதல் 15.5 சதவீதம் வரையிலான வீச்செல்லை கொண்ட ரூபா 2 பில்லியன் பெறுமதியான ஈட்டுத்தொகுதிக் கடன்களை 2013 ஒக்தோபர் மாதத்தில் வழங்கியிருந்தது. அதேவேளை, வங்கி 8 சதவீதம் முதல் 9.75 சதவீதம் வரையிலான வீச்செல்லை கொண்ட ரூபா 850 மில்லியன் பெறுமதியான வெற்றுத் தொகுதிக் கடன்களை 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்திருந்தமையால் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிச் சந்தை எதிர்வுகூறல்கள் கேள்விக்குறியாக உள்ளது.

- 2014 செப்தெம்பர் முதல் 2014 திசெம்பர் வரையான காலத்தில் வங்கி ரூபா 850 மில்லியன் தொகையை தொகுதிக்கடன்களில் முதலீடு செய்திருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகுதிக்கடன்களின் முகப்பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ரூபா 9.87 மில்லியன் மதிப்பீட்டு நட்டமொன்று வங்கிக்கு ஏற்பட்டிருந்தது.

# விவசாயம் மற்றும் காணி

## விவசாய அமைச்சு

விவசாய அமைச்சும் ஹதபிம அதிகாரசபை, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய அலுவல்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை, அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் தேசிய உணவு மேம்படுத்தல் சபை ஆகிய 05 நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனி போன்ற அரசுக்குச் சொந்தமான இரு கம்பனிகளும் அமைச்சிற்குரித்தாவதுடன் கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல், விவசாய பல்வகைமை மற்றும் உற்பத்தியினை அபிவிருத்தி செய்தல் சேதனப் பசளைப் பாவனையினை பிரபல்யப்படுத்தல் மணல் பாதுகாப்பு அதிகாரச் சட்டம், மரம் வெட்டுதலை கட்டுப்படுத்தும் அதிகாரச் சட்டம் கன்றுகள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம், உர அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கிருமி நாசினிகள் அதிகாரச்சட்டத்தின் கட்டுப்பாடு விவசாயக் கல்வி ஆராய்ச்சி மற்றும் செயற்திட்ட சேவைகள் விவசாய முயற்சியாண்மை அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் மற்றும் உயர் தொழில்நுட்ப அலுவல்கள் அபிவிருத்தி அமைச்சின் பிரதான செயற்பாடுகளாகும். மீளாய்வாண்டில் விவசாய அமைச்சு மற்றும் விவசாய திணைக்களத்திற்காக ரூபா 41,004 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 37,757 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

- மேலதிக உணவும் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தவதற்காக 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 7.2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இவ் ஒதுக்கீட்டில் ரூபா 9,800,000 தொகை அரிசி சோயா மற்றும் தானியங்கள் மூலமான குளிர்களி உற்பத்தியினை அறிமுகப்படுத்தல் மற்றும் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் கீழ் நலனாளிகளுக்காக 50 சதவீத பங்களிப்பினை மாத்திரம் அரசினால் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததெனினும், அதற்கு முரணாக ரூபா 4.2 மில்லியன் செலவிடப்பட்டு 20 குளிர்களி உற்பத்தி இயந்திரங்கள் 2014 திசெம்பர் 10 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததெனினும் 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அவ்வியந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

- அரிசி ஏற்றுமதியினை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், அந் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அது தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்றினை மேற்கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள இயலுமைகள் மற்றும் அதன் பிரச்சினைகளை இனங்கண்டிருக்கவில்லை. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2014 ஆம் அண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 04 அரிசி ஏற்றுமதி வலயங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும் அவற்றுள் 02 வலயங்கள் மாத்திரமே தாபிக்கப்பட்டிருந்தன.

- மரக்கறி மற்றும் பழவகைகளின் அறுவடைக்குப் பின்னரான சேதத்தினை குறைப்பதற்காக கொள்கலன்படுத்தல் மற்றும் போக்குவரத்தினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.17 மில்லியன் பெறுமதியான தக்காளி கொள்கைலன்கள் மற்றுமு் 5,448 பிளாஸ்டிக் கூடைகள் 2015 யூலை 30 ஆம் திகதியளவிலும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவகத்தின் களஞ்சியங்களில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

- அமைச்சினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலும் தேசிய விவசாய தின கண்காட்சி நடாத்தப்பட்டிருந்ததெனினும், விசேட செயற்திட்டமொன்றாக இனங்கண்டு வருடாந்த மதிப்பீடுகளின் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளாது மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 26.19 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் முறையான அதிகாரமொன்று இல்லாமல் வருடாந்த மதிப்பீட்டில் மேலதிக உணவுப் பயிர் உற்பத்தி மற்றும் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பாவனையினை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆகிய இரு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 13.2 மில்லியன் தொகை இச் செலவினங்களை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

- விவசாய திணைக்களத்தின் செயலாளரின் 4/3/2/8/1 ஆம் இலக்க மற்றும் 2013 திசெம்பர் 11 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வர்த்தக விவசாயப் பண்ணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 50

சதவீத பங்களிப்பினை அரசினால் வழங்குவதற்காக மரக்கறி பழவகை மற்றும் மேலதிக பயிர்களை பயிரிடும் விவசாயிகள் தெரிவுசெய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், இரத்தினபுரி மற்றும் கொழும்பு மாவட்டங்களிலுள்ள 12 பூ பயிர்ச்செய்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அரச பங்களிப்பாக ரூபா 2.76 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- அரசின் உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 300,000 மெற்றிக் தொன் அளவான உரம் இறக்குமதி செய்யப்பட்டு இலங்கை பூராகவும் பகிர்ந்தளிப்பதற்கு கொழும்பு கொமர்ஷியல் உரக் கம்பனி மற்றும் இலங்கை உரக் கம்பனி உட்பட 12 தனியார் கம்பனிகளால் நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது. வருடாந்தம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏறத்தாள ரூபா 32 பில்லியன் அரசினால் செலவிடப்படுவதுடன் இச் செலவினத்தினுள் உரக் கம்பனிகளால் குறித்த திகதியில் நாணயக்கடிதங்களை தீர்ப்பனவு செய்யாமையால் வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கடன்களுக்காக செலுத்தப்படும் வட்டி தொகை பாரிய அளவில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2013 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2014 யூன் 30 வரையான காலப்பகுதியினுள் மேற்குறித்த இரு அரச உரக் கம்பனிகள் மூலம் பெறப்பட்ட குறுகிய கால மற்றும் நீண்ட கால கடன்களுக்காக வட்டி மற்றும் வங்கிக் கட்டணங்களாக ரூபா 4,922.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 4,752.06 மில்லியன் தொகை திறைசேரியினால் மீளளிக்கப்பட்டிருந்தது.

## காணி அமைச்சு

தேசிய நிலக் கொள்கையினை நாளதுவரையாக்கல் மற்றும் நடைமுறைப்படுத்தல், நிலத்தினை பாதுகாத்தல், காணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், நிலப் பாவனை கொள்கையினை நடைமுறைப்படுத்தல், அரச நிலங்களை முறையாக முகாமை செய்தல் மற்றும் பொருத்தமான நிலத்தினை நிலமற்ற பிரசைகளுக்கிடையில் பகிர்ந்தளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக காணிகளை வழங்குதலும் நாட்டின் அனைத்து நிலங்களினதும் உரித்தினை உறுதிப்படுத்தி உரிமையை பதிவு செய்தல் ஆகிய பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நில அமைச்சும் அதன் கீழான நில ஆணையாளர் நாயகம் திணைக்களம் நில அளவையாளர் திணைக்களம் நில தீர்ப்பனவு செய்தல் திணைக்களம் நிலப் பாவனை கொள்கைத் திட்ட திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களான நில அளவைச் சபை மற்றும் நில மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆகியன செயற்பாட்டில் உள்ளன. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்காக மீளாய்வாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடானது ரூபா 6,150.3 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 6,025.1 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

2004 ஆம் ஆண்டிற்குரிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

- அமைச்சில் 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியினுள் தற்போது நடைமுறையிலுள்ள 4,408 நிலம் கைப்பற்றல் கடிதங்களில் நட்டஈடு வழங்கி பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை 122 ஆனதுடன் செயற்படுத்தப்படாத கடிதங்களின் எண்ணிக்கை 298 ஆகும். 2014 ஆம் ஆண்டில் நிலம் கைப்பற்றியமைக்காக நட்டஈடாக ரூபா 1,704.69 மில்லியன் உம் வட்டியாக ரூபா 525.03 மில்லியன் தொகையும் அமைச்சு செலுத்தியிருந்தது. இவற்றுள் 2005 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டிருந்த காணிகளுக்காக மட்டும் ரூபா 110.37 மில்லியன் தொகையான வட்டி உள்ளடக்கப்பட்டிருந்தது. காணிகளை கைப்பற்றியமைக்காக நட்டஈடு செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வட்டிக்காக பாரிய கிரயமொன்றிகை அமைச்சிற்கு ஏற்க வேண்டியிருந்தது.

- அமைச்சினால் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்துவதற்காக நில ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டினுள் ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் திணைக்களம் அதில் ரூபா 41.68 மில்லியன் தொகையினை செலவிட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டினுள் முன்வைக்கப்பட்ட 199,641 பிரச்சினைகளில் தீர்க்கப்பட்டிருந்த பிரச்சினைகளின் எண்ணிக்கை 81,954 ஆனமையால் செலவினத்திற்கு ஒப்பாக ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் குறைவான மட்டத்தில் நிலவியது.

- அமைச்சினால் வழிமுறைப்படுத்தப்படுகின்ற பிம்சவிய வேலைத்திட்டத்தின் கடந்த நான்கு வருட காலத்தினுள் ஒட்டுமொத்த முன்னேற்றம் கீழவருமாறாகும்.

| வருடம் | நிதிஏற்பாடு | செலவினம் | இலக்கிடப்பட்ட உரித்துக்களின் எண்ணிக்கை | அளவிடப்ப துண்டுகளின் எண்ணிக்கை | வர்த்தமானியில் வெளியிடப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட உரித்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | | | |
| 2011 | 1,000 | 481 | 200,000 | 157,470 | 79,678 | 25,697 |
| 2012 | 1,100 | 416 | 200,000 | 124,717 | 62,130 | 26,386 |
| 2013 | 800 | 670 | 500,000 | 110,630 | 58,690 | 63,943 |
| 2014 | 446 | 445 | 500,000 | 121,973 | 66,759 | 50,672 |
| | **3,346** | **2,012** | **1,400,000** | **514,790** | **267,257** | **166,698** |

2021 ஆம் ஆண்டின் இறுதியாகும் போது சகல காணி உரிமையாளர்களுக்கும் உரிமைச் சான்றிதழ்களை வழங்கி பிம்சவிய வேலைத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதெனினும், வேலைத்திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 12 சதவீதம் மட்டுமேயாகும். 2007 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரை 97 பிரிவுகளில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததெனினும் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 05 பிரிவுகள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன.

- நில ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்குரித்தாகவுள்ள 310 உத்தியோகபூர்வ இல்லங்களில் வாடகை அறவிடப்படும் இல்லங்களின் எண்ணிக்கை 90 ஆனதும் 220 உத்தியோகபூர்வ இல்லங்களில் 70 இல்லங்கள் மீள்திருத்தப்பட வேண்டிய நிலையிலும் 22 இல்லங்கள் அழிவடைந்தும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் 23 இல்லங்கள் வெறுமையாக காணப்பட்டன. மேலும், அனுமதியில்லாத குடியிருப்பாளர்கள் 37 உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பதுடன் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து அந்த அனுமதியில்லாத குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- நில அளவையாளர் திணைக்களத்தின் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது நில அளவையாளரொருவர் மாதமொன்றிற்கு நிறைவேற்ற வேண்டிய குறைந்தபட்ச பணிகளின் அளவு (Monthly norms) தீர்மானிக்கப்பட்டிருந்ததெனினும் மாதமொன்றிற்கு ஊக்குவிப்பு கெடுப்பனவினை செலுத்துவதற்குரிய ஆகக்கூடிய காணித்துண்டுகளின் எண்ணிக்கை அல்லது அடிப்படைச் சம்பளத்தின் சதவீதமாக செலுத்தக்கூடிய எல்லையொன்றினை தீர்மானிக்காது 2012 மற்றும் 2013 கண்காணிப்பு கட்டணங்கள் 2014 இல் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2014 வருடாந்த அடிப்படைச் சம்பளத்தின் 50 சதவீதத்திலிருந்து வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் போன்ற இரு மடங்கினையும் விஞ்சி 207 உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தற்போது அளவைப் பணிகள் மிகவும் முன்னேறிய தொழில்நுட்ப உபகரணங்களுடன் செய்மதி மற்றும் கணனி தொழில்நுட்பம் போன்ற வழிமுறைகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றமையுடன் திணைக்களத்தினால் போதியளவான அளவை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், 30 வருடங்களை விட பழமையான வழிமுறையான நில அளவையாளரொருவரால் மாதமொன்றிற்கு அளக்க வேண்டிய குறைந்தபட்ச காணித்துண்டுகளின் எண்ணிக்கை (Norm) 30 ஆன எல்லையின் கீழ் அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை காலத்திற்கு உகந்தது இல்லையென்பதால் மேற்படி ஊக்குவிப்ப படி கொடுப்பனவுகளின் ஒழுங்கற்ற நிலைக்கு அது பிரதானமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- நிலப் பாவனை கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குவதாக குறிப்பிட்டு ரூபா 1.87 மில்லியன் தொகை செலவிட்டு பொல்கொல்லை பிரதேசத்தில் செயலமர்வொன்றினை நடாத்தியிருந்தது. கொள்கைப் பத்திரத்தின் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்ட கலந்துரையாடலுக்காக சுமார் 01 மணித்தியாலம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அரச நிதிகள் விளைவற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

# கலை மற்றும் கலாசார அலுவல்கள்

இலங்கையின் கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் பிரசித்திப்படுத்துவதற்கு தேவையான கொள்கை மற்றும் வேலைத்திட்டங்கள் தயாரிப்பதற்காக கலை மற்றும் கலாசார அமைச்சும் தேசிய மரபுரிமைகள் அமைச்சும் தாபிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் கலாசார மற்றும் கலை அலுவல்கள் மற்றும் தேசிய உரிமைகள் மக்களின் நடத்தையை செயற்படுத்தும் பிரதான கூறாக கருதி மேற்குறித்த நோக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் 5 நிறுவனங்களும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் கீழ் 4 நிறுவனங்களும் தாபிக்கப்பட்டிருந்தன.

2014 ஆம் ஆண்டினுள் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 4 நிறுவனங்களுக்கு ரூபா 2,186 மில்லியன் தொகையான மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவினங்கள் என்பவற்றிக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,675 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வருமானம் உழைக்கப்படுகின்ற நிறுவனமொன்றான மத்திய கலாசார நிதியம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,309 மில்லியன் பிரதானமாக சுற்றுலா நுழைவுச்சீட்டு விற்பனை மூலம் உழைத்திருந்ததுடன் ரூபா 1,830 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## செயலாற்றல் மீளாய்வு

### கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

- உள்நாட்டு வெளிநாட்டு கலாசார பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சாாக் நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் சார்க் கலாசார நிலையத்தை நிர்மாணத்திற்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,177 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய நிதி முன்னேற்றம் ரூபா 648.59 மில்லியன் அதாவது 29.79 சதவீதமாக இருந்தது.

- உரித்தினை முறையாக கையேற்காமல் 3 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கு அரசின் ஏற்பாடு ரூபா 11 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- ரூபா 323 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் கலாசார நிலையமொன்றையும் சுனாமி ஆராய்ச்சி நிலையமொன்றையும் நிர்மாணித்தல் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 82.91 மில்லியன் செலவினம் மாத்திரமே அதாவது திரட்டிய ஏற்பாட்டின் 20 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

### கலாசார அலுவல்கள் திணைக்களம்

முறையான நாடக கலையை ஆய்வு செய்வதன் குறைவை நிவர்த்தி செய்யும் வகையிலும் சிங்களம் மற்றும் தமிழ் கலாசார ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர நாடகப் பயிற்சி பாடசாலை 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 11.3 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினம், இச் செயற்பாட்டிற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கபட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் திணைக்கள உத்தியோகத்தர்களின் செயல் நிமித்த கட்டுநிதியைப் பெற்றுக்கொண்டதன் மூலம்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே கலாசார அலுவல்கள் பணிப்பாளரினால் 59 சந்தர்ப்பங்களில் ரூபா 2.27 மில்லியன் தொகை செயல்நிமித்த கட்டுநிதியாக பெற்றுக்கொள்ளப்பட்டு தீர்ப்பனவு 01 மாதம் முதல் 08 மாதங்கள் வரையான காலம் தாமதமாக்கப்பட்டிருந்தன. பதவிநிலைத் தரமல்லாத 40 உத்தியோகத்தர்களுக்கு 247 சந்தர்ப்பங்களில் ரூபா 4.3 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்பனவு 02 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான காலம் தாமதமாக்கப்பட்டிருந்தன.

## மத்திய கலாசார நிதியம்

மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 301 தொல்பொருளியல் வேலைத் தளங்களுக்காக மதிப்பிடப்பட்ட பொருள் கிரயம் ரூபா 211 மில்லியனும் நேர் உழைப்புக் கிரயம் ரூபா 368 மில்லியனாகவும் இருந்தது. எவ்வாறாயினும் உள்ளபடியான பொருள் கிரயமான ரூபா 52 மில்லியனுக்கு ஒப்பாக ரூபா 402 மில்லியன் உழைப்புக் கிரயமாக செலவிடப்பட்டிருந்தமை காரணமாக மொத்த பதவியணியின் செயலாற்றல் உழைப்பிற்கான பங்களிப்பு கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக காணப்பட்டது.

நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக கஹவில்கொடை தேசிய மரபுரிமைகள் நூதனசாலையை நிர்மாணிப்பதற்காக தேசிய உரிமை உயன பொறுப்பு என்ற பெயரிலான எந்தவொரு சட்டரீதியான அடிப்படையொன்றும் இல்லாத நிறுவனத்திற்கு மூன்று ஆண்டுகளில் ரூபா 60 மில்லியன் தொகைக் கடன் அடிப்படையில் 03 வருடங்களின் போது வழங்கப்பட்டிருந்தது. இத்தொகையை முறையற்ற வகையில் பயன்படுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நிதியத்தின் செயலாற்றலுடன் நேரடியாக உரித்தல்லாத மற்றும் தேவைப்பாடொன்று இல்லாமல் தேசிய உரிமைகள் தொடர்பான மென்பொருள் இருவட்டு (DVD) உற்பத்திக்காக ரூபா 70.7 மில்லியன் தொகை 2014 ஆம் ஆண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 50 மில்லியன் மாத்திரம் முறையற்ற விதத்தில் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## டவர்ஹோல் நாடக மன்றம்

எல்பின்டன் கலையரங்க நவீனமயப்படுத்தலுக்கான 2012 மே 31 ஆந் திகதி வரையிலும் உழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று எதுவும் மீளாய்வாண்டின் இறுதிவரை கையொப்ப மிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 37,549 மனித நாட்கள் பெற்றுக்கொண்டமைக்கு ரூபா 17 மில்லியன் தொகை அத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நாட்டிய அரங்கு மூடப்பட்டிருந்த காலம் 3 ஆண்டுகளை மிகைத்திருந்ததுடன் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக அண்ணளவாக ரூபா 6 மில்லியன் அளவில் வருடாந்தம் மன்றத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

## தேசிய மரபுரிமைகள் அமைச்சு

மரபுரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் பிரபல்யமான பிரபலமல்லாத 100 தொல்பொருளியல் வாய்ந்த இடங்கள் தொடர்பாக அறிக்கை ரீதியான நிகழ்ச்சித்திட்ட நியதிகள், கீழ் நாட்டு சம்பிராதயங்களுடன் அண்மித்த சமய அனுஷ்டங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் நேரடியாக நடாத்துதல் மற்றும் அவற்றை ரூபவாஹினி அலைவரிசைகளில் ஒளிபரப்புச் செய்வதற்காக ரூபா 60 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 30 மில்லியன் இற்கு அண்மித்த

நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிரபல்யமான மற்றும் பிரபல்யமற்ற 100 இடங்கள் தொடர்பான அறிக்கை ரீதியான நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட இரு வட்டுவடிவமைப்பிற்காகவும் முன் விளம்பரங்களை தயாரிப்பதற்கும் ரூபா 13.69 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இத்தகவல்கள் ரூபாவாஹினி ஊடகத்தினூடாக ஒளிபரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## தொல்பொருளியல் திணைக்களம்

தீகவாவி, நீலகிரி மற்றும் யுடகனவா தூபிகளை பாதுகாப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 6 மில்லியன் பெறுமதியான 377,000 கற்கள் தீகவாவி தூபி பாதுகாப்பு இடத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இக் கற்களின் தரம் தொடர்பாக சிக்கல்களும் பாதுகாப்பிற்குரிய மதிப்பீடு தயாரிக்கப்படாமையாலும் போன்ற விடயங்களின் அடிப்படையில் 2015 யூன் மாதம் வரையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே தொல்பொருளியல் பாதுகாப்பு நினைவுச்சின்னம் ஒன்றாக 2002 நவம்பர் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட இரத்தினபுரி நகர மத்தியில் உயர்ந்த இடம்மொன்றில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக ரூபா 6.5 மில்லியன் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 மே மாதம் வரையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1998 இன் 24 ஆம் இலக்கம் தொல்பொருள் (திருத்த) அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1940 இன் 9 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டததின் கீழ் தாபிக்கப்பட்ட தொல்பொருள் வெகுமதிநிதியத்திற்காக நாட்டில் அமைந்துள்ள வெவ்வேறு பிரதேசங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்பட்டதண்டப் பணத்திலிருந்து 2010 முதல் 2014 திசெம்பர் 31 வரை சேர்ந்திருந்த 64 மில்லியன் தொகையை நிதியத்தை தாபித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

### கொழும்பு தேசிய நூதனசாலையின் புனரமைப்பு நடவடிக்கைகள்

நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் கட்டிடங்கள் பராமரிக்கப்படாமையால் கொழும்பு நூதனசாலையின் பிரதான படிக்கட்டில் இடதுபகுதி 2013 மார்ச் 28 ஆம் திகதி உடைந்து விழுந்தமை காரணமாக திருத்தங்களுக்காக நூதனசாலையின் 14 கூடங்களில் 9 மாத்திரம் பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது. இதனால் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நூதனசாலையின் வருமானம் ரூபா 4 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

### கொழும்பு நூதனசாலையின் பாதுகாப்பு

2012 மார்ச் 16 ஆம் திகதி கொழும்பு தேசிய நூதனசாலையில் இடம்பெற்ற திருட்டினால் காணாமல் போன நூதனப் பொருட்கள் 221 ஆக இருந்ததுடன் அப் பொருட்களின் பெறுமதி ரூபா 4,440,140 இற்குப் மதிப்பிடப்பட்டிருந்தது. அதில் 94 பொருட்கள் ஆரம்ப நிலைமையிலும் 57 பொருள் பகுதிகளாகவும் கற்களாகவும் மீண்டும் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் ஏனைய பொருட்கள் வெட்டி, நொறுக்கப்பட்டிருந்தமையால் அழிவடைந்திருந்தன. 2015 யூன் மாதம் வரையிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

2014 ஆம் ஆண்டின் மேலும் நூதனசாலையின் புடவை மற்றும் மட்பாண்ட கூடத்தின் கதவு உடைக்கப்பட்டு அனுமதியின்றி நுழைந்திருந்தமை இடம்பெற்றிருந்ததுடன் இது தொடர்பில் எந்தவொரு சந்தேகநபரும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

திணைக்களத்தின் கட்டிடங்களை விரிவுபடுத்துவதன் கீழ் ரூபா 637 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டு 2012 நவம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்டிருந்த புதிய கட்டிடத்தின் வளவின் வெவ்வேறு பகுதிகளுக்காக தேவையான 285 தளபாட உபகரணங்கள் உருப்படிகள் 105 கணனி உருப்படிகள் நான்கு மாடிகளுக்கும் தேவையான mobile Racking System கொள்வனவு செய்வதற்கு தாமதமானவையால் கட்டிடம் குறைப்பயன்பாட்டிற்கு உள்ளாகியிருந்தது.

# கல்வி

கல்வி அமைச்சுடன் இணைந்துள்ள பல நிறுவனங்கள் நன்மையான, வலுவான, மற்றும் ஆரோக்கியமான அறிவினை வழங்கி தாய்நாடு, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது அன்பு செலுத்தும் குடிமக்களை உருவாக்குவதனூடாக இலங்கையிலுள்ள மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பணியினை நோக்கி செயற்படுகின்றது. இந்த நிறுவனங்களிற்குள் மாகாண கல்வித் திணைக்களங்கள், பரீட்சைத் திணைக்களங்கள், கல்வி வெளியீட்டுத் திணைக்களங்கள், தேசிய கல்வி நிறுவகம், மற்றும் யுனஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு போன்றன உள்ளடங்குகின்றன. இதற்க மேலதிகமாக கல்வித்துறையிலுள்ள இலக்குகளை அடைவதற்கு வெளிநாட்டு உதவி மற்றும் வெளிநாட்டு கடன் நிதியங்கள் பங்களித்திருந்தன.

கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகள் முறையே 2009 இல் ரூபா 85,198 மில்லியன் மற்றும் ரூபா 7,511 மில்லியனானதுடன் 2013 ஆம் ஆண்டிற்கான மேலே குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் முறையே ரூபா 107,740 மில்லியன் மற்றும் 10,726 மில்லியனாக இருந்தன. 2014 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகள் வெளிநாட்டு கடன்கள் மற்றும் உதவிகளாக பெறப்பட்ட ரூபா 2,907 மில்லியன் தொகை உள்ளடங்கலாக முறையே ரூபா 118,982 மில்லியன் மற்றும் ரூபா 17,202 மில்லியன் ஆகும். 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகள் முறையே 10 சதவீதத்தினாலும் மற்றும் 60 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன.

## பாடசாலைகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை

2009 இல் உள்ளபடியான அரச பாடசாலைகளின் எண்ணிக்கை 9,410 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கையானது 2014 ஆம் ஆண்டு இறுதியளவில் 10,119 ஆக அதிகரித்திருந்தது. 2009 இல் உள்ளபடியான அரச பாடசாலை மாணவர் சனத்தொகையானது 3,860,176 ஆக இருந்ததுடன் இவ் எண்ணிக்கையானது 2014 ஆம் ஆண்டு இறுதியளவில் 4,078,037 வரை அதிகரித்திருந்தது. 2009 இல் உள்ளபடியான ஆசிரியர்களின் எண்ணிக்கை 213,694 ஆக இருந்ததுடன் இந்த எண்ணிக்கையானது 2014 இறுதியளவில் 232,989 வரை அதிகரித்திருந்தது. இதற்கிணங்க, 2009 ஆம் ஆண்டிற்காக ஒரு பாடசாலைக்கான சராசரி மாணவர்களின் எண்ணிக்கை 410 ஆக இருந்ததென அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டளவில் இவ் சராசரி எண்ணிக்கையானது 403 ஆக குறைவடையும் போக்கு காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2009 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர்- மாணவர்கள் விகிதமானது 18 ஆக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டளவில் இந்த விகிதமானது 17 வரை அதிகரிக்கும் போக்கினை அவதானித்திருந்தது.

## அடைய எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள்

### ஆசிரியர்களிற்கான இடமாற்றலை அமுல்படுத்தல்

ஒரு உகந்த கல்லூரிச் செயன்முறைகளுக்கான ஒரு வழிகோலாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலன்புரிகளை உயர்த்தும் வகையில் பாடசாலை ஆசிரியர்களை இடமாற்றுவதற்கான திட்டத்தின் தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தல் நோக்கமானது முறையாக அடையப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முறையே 193 மற்றும் 163 தேசிய பாடசாலைகள் தொடர்பிலான 2248 பற்றாக்குறையான

மற்றும் 1,387 மிகையான ஆசிரியர்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என தெரிவுச் செவ்வை வெளிக்காட்டியிருந்தது. 200 தேசிய பாடசாலைகளின் 4,268 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படாமல் அதே பாடசாலைகளில் 12 – 35 வருடங்கள் கடமையாற்றியிருந்தனர். விஷேட தேவைகள் கல்வித் தளத்தில் வேலைக்கமர்த்தி பயிற்சியளிக்கப்பட்ட 118 ஆசிரியர்கள் விசேட தேவைகள் கல்விக்கான 72 தேசிய பாடசாலைகள் சன்ஸ் பிரிவிற்கு நியமித்திருந்ததுடன் விஷேட தேவைகள் கல்விக்கான பிரிவில் தயார்படுத்தப்பட்ட 40 பாடசாலைகளுக்கு நியமித்த 58 பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்கள் சாதாரணமான மாணவர்களிற்கென திட்டமிடப்பட்ட வகுப்புகளில் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

## பாடசாலை மாணவர்களிற்கான அனுமதிகள்

ஒவ்வொரு மாணவருக்கான நோக்கம் - நியாய கல்விக்கு முரணாக, தேசிய பாடசாலைகளின் முதலாம் தரம் மற்றும் இரண்டாம் தரங்களுக்கு இணையொத்த வகுப்பில் இருக்க வேண்டிய அதிகூடிய மாணவர்களின் எண்ணிக்கை முறையே 40 மற்றும் 45 போன்றன சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளாக இருந்ததுடன் இதனை மீறி பிரபல்யமிக்க 20 பாடசாலைகளிற்கு 9329 மாணவர்கள் அனுமதித்திருந்தனர் என மாதிரிப் பரிசோதனையில் வெளிக்காட்டப்பட்டிருந்தது.

## தொழில்நுட்ப பிரிவை அறிமுகப்படுத்துதல்

2013 ஆம் ஆண்டில் ஜீசீஈ உயர்தர பரீட்சையினுள் புதிதாக அறிமுகப்படுத்திய தொழில்நுட்ப பாட பிரிவிற்கு வசதியளிப்பதற்கான 250 மஹிந்தோதயா தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் நிர்மாணத்தின் மொத்த கிரய மதிப்பீடானது ரூபா 7,000 மில்லியன் ஆகும். 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆய்வுகூடங்கள் முழுமையாக நிர்மாணம் செய்யப்பட்டதுடன் 248 ஆய்வு கூடங்கள் ரூபா 2791 மில்லியனை ஏற்படுத்தி அரைவாசி கட்டியெழுப்பப்பட்டிருந்தது. ஆய்வுகூடங்களின் நிர்மாணத்தை முடிவுறுத்துவதற்கு முன்னர் ரூபா 970 மில்லியன் கிரயத்தில் 2014 ஆம் ஆண்டின் போது அந்த 250 ஆய்வுகூடங்களிற்காக தொழில்நுட்ப கருவிகள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் அந்த சொத்துக்கள் ஒரு வருடத்திற்கு அதிகமாக பயன்பாடற்றிருந்தது. ஆகையால், வாக்குறுதிகள் காலங்கடந்திருந்தது. பௌதீக மற்றும் மனித வளங்கள், பொருத்தமான உட்கட்டமைப்பு போன்றவற்றிக்கு வசதியளிப்பதற்கு முன்னராக தொழில்நுட்ப பிரிவிற்கு மாணவர்கள் சேர்ந்திருந்தனர். வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள் உள்ளடங்குபவை, பாடப்பரப்பில் 15 சதவீததிற்கு சமமான செயல்முறையை உட்படுத்தி மாணவர்களை கவரச்செய்வதுடன் 2015 ஆகஸ்ட் இல் உயர்தரப் பரீட்சையை நடாத்துவதற்கு அவர்கள் நெறிப்படுத்தப்பட்டிருந்தனர். 13 பாடசாலைகளின் எந்தவொரு மாணவர்களும் தொழில்நுட்ப பிரிவை தெரிவு செய்திருக்கவில்லை. 20 – 62 பாடசாலைகளில் தொழில் நுட்ப பிரிவிற்கு வாசிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1 – 9 ஆக இருந்ததுடன் ஒவ்வொரு பாடம் தொடாபிலான ஆசிரியர்களின் ஒட்டுமொத்த பற்றாக்குறையானது 165 ஆக இருந்தது. ஆகையால் புதிதாக உட்சேர்க்கப்படுகின்ற மாணவர்களிற்கு தேவையான ஆய்வுகூடத்தின் நிர்மாணத்தை முடிவுறுத்துவதற்கும் கருவிகளை முறையாக பயன்படுத்தப்படுவதற்குமான ஒரு முறையான வழிமுறையை தயாரிப்பதன் முக்கியத்துவம் அவதானிக்கப்பட்டது.

## மஹிந்தோதயா தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் நிர்மாணம்

800 மஹிந்தோதயா தொழில்நுட்ப ஆய்வு கூடங்களை நிர்மாணம் செய்வதற்காக ரூபா 8,557 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டிருந்த அதே நேரம் 2014

திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான செலவினம் ரூபா 8,519 மில்லியனாக இருந்தது. அந்த திகதியில் முழுமையாக கட்டியெழுப்பப்ப்பட்ட ஆய்வுகூடங்களின் எண்ணிக்கையானது 38 அரைவாசியாக கட்டியெழுப்பப்பட்ட ஆய்வுகூடங்களுடன் சேர்த்து 822 ஆக இருந்தது.

### புதிய 457 முன்மாதிரி பாடசாலைகளை முன்னேற்றுதல்

பிரபல்யமிக்க பாடசாலைகளிற்கு அருகில் தாராளமான வளங்கங்கள் அமைந்துள்ளபோதிலும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களோடு பாடசாலைகளை முன்னேற்றுதல், பாடசாலைகளுக்கிடையில் முரண்பாடுகளை குறைத்தல், எஸ்ஓ - அழைக்கப்பட்ட பிரபல்யமான பாடசாலைகளின் போட்டியை குறைத்தல், பாடசாலையை விட்டுச் செல்வதை குறைத்தல் மற்றும் பாடசாலைகளுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பினை முன்னேற்றுதல் போன்ற நோக்கங்களோடு 2008 இல் 457 நவீன மாதிரி பாடசாலைகளின் முன்னேற்றமானது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. முன்பிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 04 வருடத்திற்கு மேலதிகமாக ரூபா 316 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தபோதும் ரூபா 118 மில்லியன் மாத்திரமே ஒட்டுமொத்த 2012,2013 மற்றும் 2014 மூன்று ஆண்டுகளிற்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் 73 மில்லியன் தொகை மாத்திரமே ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு வருடத்திற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் காட்டக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்காமையால் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் செயலாற்றலை மீளாய்வு செய்வது சாத்தியமற்றிருந்தது. செயற்திட்டமானது வெற்றிகரமற்றதால் ஏற்பாடுகள் படிப்படியாக குறைவடைவதையோ அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப இலக்கை அடைவதால் ஏற்பாடுகள் குறைவடைவதையோ சரிபார்த்தல் சாத்தியமற்றதாக இருந்தது.

### ஐந்தாம் தர புலமைப்பரிசில் உதவு தொகை கொடுப்பனவு

ஒட்டுமொத்த 97 வலயக் கல்வி அலுவலகங்களில் 50 மாதிரிகளை பரீட்சிக்கின்ற போது ஐந்தாம் தர புலமைப்பரிசாலர்களுக்கான உதவித்தொகை கொடுப்பனவுடன் தொடர்புடைய கல்வி அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்படாத உதவு தொகையின் மொத்தப் பெறுமதியானது, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பாடுகள் மற்றும் கட்டு நிதிகளை கல்வி அமைச்சால் வழங்குவதற்கு இயலாத காரணத்தால் 119 தேசிய பாடசாலைகளின் 24,506 புலமைப்பரிசாளர்களுக்கு செலுத்த வேண்டிய 52 மில்லியன் தொகையை உள்ளடக்கியும் மற்றும் பற்றுச்சீட்டுக்களை முறையாக சமர்ப்பிக்க தவறியிருந்தமை காரணமாக 29 தேசிய பாடசாலைகளின் 1813 புலமைப்பரிசாளர்களுக்கு செலுத்த வேண்டிய 4 மில்லியன் தொகையையும் உள்ளடக்கி 57 மில்லியனாக காணப்பட்டது. என வெளிப்பட்டிருந்தது. ஆகையால் உதவித்தொகையை இழந்து வருந்தும் குறைந்த வருமானம் கொண்ட பெற்றோர்களின் பிள்ளைகளின் கல்வி மற்றும் மனப்போக்கானது இழிவுபடுத்தப்பட்டிருந்தது.

### நூலகங்களிற்கான உதவிகள் மற்றும் பிரிவேனா மாணவர்களிற்கான மானியங்கள்

மாணவர்கள் வருகை மீதான ஆண்டறிக்கைகளை தயாரிப்பதற்கும் பெறுவதற்கும் ஒரு முறையான முறைமையை அறிமுகப்படுத்த தவறியிருந்தமை, பின்தொடரும் நடவடிக்கைகளை எடுக்க தவறியிருந்தமை, போதியளவான ஏற்பாடுகளை ஒதுக்குதல் கவனமின்மை, செயல் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமம் நன்கொடைகள் மற்றும் உதவிகளை முறையாக மற்றும் நியாயமாக பங்கிடுவதற்காக ஒரு முறைமையை அறிமுகப்படுவதற்கு தவறியிருந்தமை போன்ற காரணங்களால் மாணவர்களிற்கான நன்கொடைகள் மற்றும் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட பிரிவேனாவிற்கு செலுத்த

வேண்டிய நூலகங்களிற்கான உதவிகள் அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் பிரிவேனா கல்வியின் சட்ட ஒழுங்கிற்கிணங்க முறையாக வழங்கப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் இல் உள்ளவாறான நிலுவைகள் ரூபா 3 மில்லியனாகும்.

## 775 கணணி ஆய்வு கூடங்களிற்கு தேவையான கணணிகள், மடிக்கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களின் கொள்வனவு

கொள்வனவு நடைமுறைகள் மற்றம் அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக கணனிகள், மடிக்கணனிகள், மற்றம் உதிரிப்பாகங்களை சர்வதேசரீதியில் பிரபல்யமிக்க வடிவமைப்பில் கொள்வனவு செய்வதற்காக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் உள்ளூரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுடன் இணங்கியிருக்காததுடன் அவற்றை வழங்குவதற்கும் ஸ்தாபிப்பதற்கும் ரூபா 5618 மில்லியன் தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒரு ஆய்வு கூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட மடிக்கணனிகள் மற்றும் கணனிகள் மீது ஏற்பட்ட ரூபா 7.2 மில்லியன் தொகைக்கு பதிலாக கொள்வனவு வழிகாட்டல்களின்படி ஏனைய 40 ஆய்வுகூடங்களுக்காக சர்வதேச ரீதியில் பிரபல்யமான மடிக்கணனிகள் மற்றும் கணனிகளை கொள்வனவு செய்யும் போது ஒரு ஆய்வுகூடத்திற்காக ரூபா 6.9 மில்லியன் ஏற்பட்டிருந்தது.

## பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

2008 – 2014 காலத்தின் போது உபகரணங்களின் செயற்பாடுகள் மற்றும் வழங்கலிற்காகவும் மற்றும் பாடசாலைகள் மற்றும் 1724 கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பாடசாலை கணனி வலைப்பின்னலிற்கான தொலைபேசிச் சிட்டை தீர்ப்பனவிற்காகவும் ரூபா 855 மில்லியன் தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தது. பாடசாலை வலையமைப்புடன் தொடர்புடைய தொலைபேசி சீட்டை தீர்ப்பனவிற்கு முன்னர், வலையமைப்பின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறன் தொடர்பாக பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளாமலும் சிட்டைக்கு உரிமையான பாடசாலை மற்றும் நிறுவனங்களை இணங்காணாமலும் 2012,2013 மற்றும் 2014 இல் மாத்திரம் தீர்ப்பனவு செய்யப்பட்ட தொலைபேசி சிட்டையின் பெறுமதியானது ரூபா 814 மில்லியன் ஆகும். புாடசாலைகள் வீழ்ச்சியான வேகம், சமிக்ஞை பலத்தில் குறைபாடு போன்ற பல்வேறு காரணங்களால் பாடசாலை வலையமைப்பு கைவிட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக, மனித மற்றும் பௌதீக வளங்களுடன் தொடர்புடைய தகவல்களை அணுகுதல், பாடசாலை, பிரதேச, வலய, மாகாண, அமைச்சு மட்டங்களிலுள்ள அனைத்து கல்விசார் நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள் இணையத்தினூடாக ஆசிரியர்களின் தனிப்பட்ட கோப்புக்களிற்கான நேரடி அணுகுமுறையை அதிகரித்தல், ஆசிரியர்கள், அவர்களுடைய தகவல்களை தேடுவதற்கும் நாளதுவரையாக்குவதற்கும், அவர்களுடைய மாற்றங்கள் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களை விண்ணப்பிப்பதற்கும் இயலுமானதாக இருத்தல், அமைச்சால் வேண்டப்படுகின்ற புள்ளி விபர அறிக்கையை பெற்றுக்கொள்ளுதல் போன்ற குறிக்கோள்களை அடையும் வகையில் கல்வி முகாமைத்துவத்தின் மீதான தகவல் முறைமையை ஸ்தாபிப்பதற்காக 2011 தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரை ரூபா 64 மில்லியன் மொத்த தொகை ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் போதிலும் இது தொடர்பிலான செயலாற்றல் மற்றும் செயற்பாடுகளை அடையாவிட்டால் இந்த செலவானது செயற்பாடற்றதாகிவிடும் என வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

# சுற்றாடல் துறை

சுற்றாடல் மாசடைதலை தடுத்து சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் சிறந்த சுற்றாடல் நிலைமையினை நாட்டில் பேணிச் செல்லல் என்ற நோக்கத்திற்காக சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவள அமைச்சினதும் வனச்சீவராசிகள் வள அமைச்சினதும் கீழ் காணப்படுகின்ற வனப் பாதுகாப்ப திணைக்களம், வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் கடல்சார் சுற்றாடல் கண்காணிப்பு அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் இலங்கையின் சுற்றாடலை பாதுகாத்து பராமரித்துச் செல்வதற்காக இணைந்து செயற்பட்டு வருகின்றன.

## வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

இலங்கையின் மரபுரிமையாகவுள்ள பாரிய உயிரிணப் பல்லினத்தன்மை, சுற்றாடல் முறைமையினை பாதுகாத்துக் கொள்வதற்காக வனச்சீவராசிகள் பாதுகாப்ப வலையமைப்பை தாபித்து முகாமைத்துவம் செய்தல், அருகிப்போகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள வனச்சீவராசிகளையும் விசேட தாவரங்களையும் பாதுகாத்தல் மற்றும் வன வளங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்கின்ற மக்களுக்காக சமூக மற்றும் பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு அமுல்படுத்தல் என்பன திணைக்களம் பிரதானமாக நிறைவேற்ற வேண்டிய கருமங்களாகும். இந்நாட்டில் காணப்படுகின்ற வனப் பாதுகாப்பு பிரதேசங்களிற்குப் பொறுப்பாகவுள்ள இத் திணைக்களம் வனப் பூங்காங்களிற்கு பிரவேசிப்பதற்கான நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்வதன் மூலமும் ஏனைய நடவடிக்கைகளிலிருந்தும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 2.5 பில்லியன் வருமானத்தை ஈட்டி வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்திற்கு செலவு வைத்திருந்தது. இதற்கு மேலதிகமாக திறைசேரியினால் திணைக்களத்திற்கு ரூபா 1,243 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டுகளில் காட்டிலிருந்து பிடிக்கப்பட்ட யானைக் குட்டிகளிற்காக சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பின்னர், 2014 ஆம் ஆண்டில் 6 யானைக் குட்டிகளை தம்வசம் வைத்திருந்த நபரொருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

யானைகளிற்கும் மனிதர்களிற்கும் இடையிலான மோதல்களை குறைக்கும் நடவடிக்கையாக ரூபா 189 மில்லியன் செலவில் 1,117 ஹெக்டயார் நிலப்பிரதேசத்தில் யானைகள் சரணாலயமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக ரூபா 81.2 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் முறையான சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொண்டு விஞ்ஞான ரீதியற்ற விதத்தில் இந்த சரணாலயம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை மற்றும் சரணாலயத்தை நடாத்திச் செல்வதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று காணப்படாமை என்பன காரணமாக இதன் முக்கிய குறிக்கோளான யானைகளை பாதுகாத்து வைக்கும் நடவடிக்கை வெற்றிகரமாக அமைவதற்கான வாய்ப்பு குறைவாகக் காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

திணைக்களத்திற்குச் சொந்தமான வனச் சீவராசிகள் நிதியத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்டிருந்த சுற்றுலா விடுதிக்கான ஒப்பந்த காரருக்கு ரூபா 15 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## வனப் பாதுகாப்பு திணைக்களம்

ஹக்கல அதியுயர் இயற்கை வனப் பிரதேசத்தில் நுவரெலியா மாவட்டத்திற்கு உரித்தான பிரதேசத்தினுள் அனுமதியின்றி 116 காணிகள் பிடித்துக் கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் பதுளை மாவட்டத்திற்கு உரித்தான பிரதேசத்தினுள் அனுமதியின்றி 103 காணிகள் பிடித்துக் கொள்ளப்பட்டிருந்தமை என்பன அறிவிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் அவதானப் பிரதேசமான இந்த வனப் பிரதேசத்தை பாதுகாப்பதற்கு தேவையான முயற்சிகள் அவதாவது அனுமதியின்றி பிடித்துக்கொள்ளப்படுதலுக்கு எதிராக சட்டரீதியான படிமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் படி ஏதேனும் உள்ளூராட்சி அதிகாரசபையொன்றுக்கு அந்த உள்ளூராட்சி அதிகாரபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பிலான பரிந்துரைகளை வழங்கி அப் பரிந்துரைகளின் பிரகாரம் செயற்படுமாறு அவைகளை கோருதல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதான குறிக்கோளாகும். அதிகாரசபையால் அமுல்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட பிரதான செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

மீளபயன்படுத்தக்கூடிய பிளாத்திக்கு மீள்சுழற்சி செயற்திட்டங்களின் கீழ் ஒரு பொலிதீன் தட்டுக்களை தயாரிக்கும் இயந்திரத்தையும் ஒரு பிளாத்திக்கு பொலிதீன் அட்டைகள் தயாரித்தல் இயந்திரத்தையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 6.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் திட்டமொன்றின்றி அவசர தேவையாகக் கருதி விமானத்தில் இயந்திரங்களை போக்குவரத்துச் செய்திருந்தமையால் ரூபா 1.2 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

ரூபா 395 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணித்து முடிக்கப்பட்டு அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த தொம்பே சுகாதாரமான நிலங்களை நிரப்புதல் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை தொடங்காது ஓராண்டுக்கும் மேற்பட்ட காலமாக விளைவற்று வைக்கப்பட்டிருந்தமை 2015 மார்ச் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறாறே செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பில் இடம்பெற்றிருந்த ரூபா 49.6 நட்டத்தை அறவிடுதல் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பொருளாதார ஒத்துழைப்பு நிதிய கடன் வசதியின் கீழ் தின்மக் கழிவகற்றல் வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 4 நில நிரப்பு நிலைய நிர்மாணித்தல் நடவடிக்கைகளை 2013 நவம்பர் மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் கொரிய அரசாங்கம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த யூஎஸ்டொலர் 1,340,608 தொகையை செயற்திட்டத்திற்காக பயன்படுத்திக்கொள்ள முடியாது போயிருந்தது.

பிளிசறு செயற்திட்டத்தை 2010 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆகஸ்ட் இறுதி வரையிலும் முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5.633 பில்லியன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை 42 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் தின்மக் கழிவு முகாமைத்துவ கூறின் கீழ் 121 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் சேதனைப் பசளை பிரிவுகளை நிர்மாணிப்பதற்காக செயற்திட்டம் ரூபா 1,601 மில்லியன் தொகை நிதி அனுசரணையாக காண்பிக்கப்பட்டிருந்தது. இப் பிரிவுகளின் 06 பிரிவுகளில் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்படாமலும், 05 பிரிவுகள் நிர்மாணிக்கப்பட்டு வரப்படுகின்றமையும், 05 பிரிவுகள் செயலிழந்து காணப்படுகின்றமையும் 02 பிரிவுகள் நிர்மாணிக்கப்படாதுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

நாய கங்கை சிற்றளவு நீர் மின்சார செயற்திட்டத்தின் மூலம் சமனல வனப் பாதுகாப்பு பிரதேசத்தினுள் நீரோடையொன்றை நிர்மாணித்து நீரை திசைதிருப்பி மின்சார உற்பத்தி நிலையமொன்று தாபிக்கப்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த சுற்றாடல் பாதிப்பு தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகள் குறித்து அதிகாரசபை எவ்வித நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை. உமா ஓய பல்நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக சுற'றாடல் அங்கீகாரத்தை வழங்குவதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டத்தின் உத்தேச அமைச்சான நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு தவறியிருந்தமை களப் பரிசோதனையின் போதும் பின்தொடர் பரிசோதனைகளின் போதும் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த அவதானிப்புக்களை கருத்திற்கொள்ளாது 2011 ஏப்ரல் 12 முதல் 2017 ஏப்ரல் 12 வரை சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பாய்வு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொது மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து 113 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும், அது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதன்படி, ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கைக்கான அங்கீகாரத்தை வழங்குகையில் சுற்றாடலுக்கான ஆபத்து நிலைமைகளை கருத்திற்கொள்ளாதிருந்தமையால் இவ்வாறான சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இதற்கமைய, அதிகாரசபை அடிப்படை சமூக பொறுப்புக்களிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் 2053 சுற்றாடல் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அதில் 1614 முறைப்பாடுகள் அல்லது 79 சதவீதமானவை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய முறைப்பாடுகளை தீர்த்துவைக்கும் செயன்முன்னேற்றம் மிகக் குறைவான மட்டத்தில் நிலவியமை அவதானிக்கப்பட்டது. 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தினை திருத்தி முன்னேற்றுவதற்குத் தேவையென இனங்காணப்பட்டிருந்த 18 பிரிவுகளிற்காக சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

## கடல்சார் சுற்றாடல் கண்காணிப்பு அதிகாரசபை

கடல்சார் சுற்றாடல் கண்காணிப்பு அதிகாரசபையின் பிரதான குறிக்கோள்களில் இலங்கையின் நீர் பிரதேசங்களில் அல்லது ஏனைய ஏதேனும் கடல்சார் வலயங்களில் அல்லது இலங்கையின் கரைக்கு அப்பாற்பட்ட அல்லது கரையோரப்பகுதியில் கப்பல் சார்ந்த கருமங்களாலும் கரையோரத்தை அண்மித்த கடல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கருமங்களாலும் மாசடைதல்களை தடுத்தல், குறைத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பன உள்ளடங்கியுள்ளன.

2012 ஆம் ஆண்டில் கப்பலொன்றிலிருந்து எண்ணைக் கசவு ஏற்பட்டமையால் ஏற்படுவதற்கிருந்த கடல்சார் சுற்றாடல் மாசடைவினை தடுப்பதற்காக அதிகாரசபையினால் செய்யப்பட்டிருந்த சகல செலவினத்தையும் குறித்த கப்பல் கம்பனியிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், அது தொடர்பில் செய்யப்பட்டிருந்த ரூபா 11.55 மில்லியன் செலவினம் 2014 ஆம் ஆண்டிலேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையில் 2009 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்த ஆய்வுகூடத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் ரூபா 31.16 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இது வரை ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆராய்ச்சிகள் தொடர்பான அறிக்கையினை பிரசுரிப்பதற்கு அல்லது அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கடல்சார் சுற்றாடல் மாசடைவதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கப்பல்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீரின் ஊடாக அபாயகரமான ஆக்கிரமிப்பு சீவராசிகள் இலங்கையின் கடற் பரப்புக்குள் நுழைதலை முகாமைத்துவம் செய்தல் செயற்திட்டத்திற்கு 2013 ஆம் அண்டில் ரூபா 5.58 மில்லியன் தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 4.46 மில்லியன் தொகையுமாக ரூபா 10.04 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் மாத இறுதி வரை செயற்திட்டத்தின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

# வெளி விவகாரங்கள்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 14 உயர்ஸ்தானிகர் 37 தூதரக அலுவலகங்கள் 11 கவுன்சிலர் அலுவலகங்கள் உட்பட வெளிநாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்கள் எண்ணிக்கை 67 ஆக இருந்தது.

2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 10,063.39 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 9,769.53 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன. இதில் தூதரகங்களினால் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 7,966.34 மில்லியன் ஆக இருந்ததுடன் அது மொத்த செலவினத்தில் 82 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. தூதுவர் செலவினங்களில் லண்டனில் அமைந்துள்ள இலங்கை தூதுவர்களுக்காக ரூபா 426 மில்லியனும் ஜெனிவாவில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்திற்காக இலங்கை மத்திய வங்கிக்கு 2014 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 26.67 மில்லியனாக இருந்தது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நடவடிக்கைகளின் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான நலிவுகள் சில

- வெளிநாட்டு சேவை முடிவடைந்து மீண்டும் இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களின் பிரயாணப் பொதிகளை துறைமுகத்தில் விடுவிப்பதற்காக எப்போதும் தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட தாமதக் கட்டணம் ரூபா 3.73 மில்லியன் ஆக இருந்ததுடன், பிரயாணப் பொதிகளை விடுவிப்பதற்காக மொத்தக் கொடுப்பனவான ரூபா 12.78 மில்லியன் ஆல் 29 சதவீதமொன்றாகும்.
- விற்பனை விலை ரூபா 35.9 மில்லியனான இரண்டு ஆடம்பர பேருந்துகளை குத்தகை முறைமையின் கீழ் ரூபா 55 மில்லியன் தொகைக்கு 60 தவணைகளில் கொடுப்பனவு செய்வதற்கு 2013 நவம்பர் மாதத்தின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், இப்பேருந்துகள் மேவுகை ஒன்று இல்லாமல் அமைச்சின் வாகனத் தரிப்பிடத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.
- 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 87 மில்லியனான பழைய கட்டுநிதி மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.
- தீர்வு செய்யப்படாத முற்பணங்கள் மற்றும் தூதரக பண மீதி உட்பட அமைச்சில் இருக்கவேண்டிய கட்டுநிதி மீதி மற்றும் புத்தகங்களில் காணப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 75 மில்லியன் வேறுபாடு சீராக்கப்படாதிருந்தன.
- 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினதும் தூதுவர் அலுவலகங்களில் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 365 மில்லியனாக இருந்ததுடன் தூதரகங்களுக்குரிய 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீர்க்கப்படாத ரூபா 91 மில்லியன் முற்பண மீதிகளும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
- அவுஸ்திரேலியா கண்பராவில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குச் சொந்தமான 2,589,000 அவுஸ்ரேலியா டொலர் பெறுமதியான 02 கட்டிடங்கள் 01 முதல் 06 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டன.

# வெளிநாட்டு வேலை வாய்ப்புகள்

2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உழைப்புச் சந்தை வெளிநாடு சென்ற மொத்த உழைப்புகளின் எண்ணிக்கை 300,413 இற்கு அண்மித்திருந்ததுடன் இதற்காக இலங்கை ரூபா 916,344 மில்லியன் அனுப்புகை கிடைத்ததாக மத்திய வங்கி அறிக்கையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொழிற்துறைக்கு முன்னோடி நிறுவனமாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இருந்த போதிலும் பணியகத்தின் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட பணியகத்தின் நோக்கங்களுக்கு முரணாக கருத்தில் கொள்ளக் கூடிய குறைபாடுகள் பின்வருமாறு.

- குடியகல்வோரின் 252 முறைப்பாடுகள் / பிரச்சினைகள் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முகவர் நிறுவனத்தினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அலுவலகத்தில் வைத்திருக்கப்பட்டிருந்த ரூபா 12.45 மில்லியன் தொகை குறிப்பிட்ட தரப்பினருக்கு செலுத்தாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

- குடிபெயர்ந்து சென்ற தொழிலாளர்களுக்கு சேமலாப நிதிய முறைமையொன்றை அலுவலகத்தினால் 1989 முதல் 1996 ஆண்டு வரையான காலப்பகுதியில் தாபித்து பேணப்பட்டுச் சென்றிருந்ததுடன் பங்களிப்பாக அவர்களால் செலுத்தப்பட்ட பணத்தில் 60 சதவீதம் குறித்த தொழிலர்களால் சேமலாப நிதிய பொறுப்பு நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 6.11 மில்லியன் ஆக தொழிலாளர்களுக்கு விடுவிக்கப்படாமல் பணியகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- ஈராக் குவைட் நாட்டை ஆக்கிரமித்த போது அங்கு தொழில் புரிந்து இலங்கையருக்கு ஏற்பட்ட நாட்டவர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த பணத்திலிருந்து ரூபா 2,975.5 மில்லியன் டொலர் அந்த ஆட்களுக்கு செலுத்தாமல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணியகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- குடிபெயர்ந்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்ப்பதற்கு நீண்ட தாமதம் இடம்பெற்றிருந்தமை

  - 24 மாதங்களை விஞ்சிய காப்புறுதி இழப்பீடு ரூபா 3.45 மில்லியன்
  - குடிபெயர்வோரிடமிருந்து ரூபா 50,000 வீதம் அறவிடப்பட்டு மீளச் செலுத்தப்பட்ட வைப்புக்கள் ரூபா 18.35 மில்லியன்
  - ஓராண்டினை விஞ்சிய இழப்பீடு ரூபா 2.06 மில்லியன்

- ரூபா 95 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான காணியொன்று 99 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக பணியகத்தினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 20 மில்லியன் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொடுக்கல் வாங்கல்களை இணக்கப்படுத்தி காணியைப் பொறுப்பேற்று உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 727.56 மில்லியன் ஆக இருந்ததுடன் குடியகல்வோரின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா 232.97 மில்லியன் தொகை அதாவது 32 சதவீதம்

செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய 68 சதவீதமான ரூபா 494.58 மில்லியன் தொகை சம்பளம் மற்றும் தாபன செலவினங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தியது.

- பணியகத்தை தாபிக்கும் சட்டத்திற்கு முரணாக நோக்கத்திற்கு உட்படாத செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இசை சார்ந்த நிகழ்ச்சித்திட்டமொன்றுக்காக செலவிடப்பட்டிருந்த மொத்தச் செலவினம் ரூபா 134.48 மில்லியன் ஆகும். நோக்கத்திற்குரிய செயற்திட்டம் கைவிடப்பட்டமை காரணமாக அதற்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது.

- சந்தை விலையை அடிப்படையாகக் கொண்ட முறைமையே பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைக்கு புறம்பாக கொரியா தங்குதிட பயிலுனர்களுக்கு உணவு பானங்களை வழங்கியமைக்காக ரூபா 38.31 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததது. 28 கொரியா வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் 1,244 பயிலுனர்களுக்கு ரூபா 9.53 மில்லியன் தொகை உணவு வழங்கலுக்கான கட்டணம் ஒப்பந்த உடன்படிக்கையொன்றோ அல்லது கொள்வனவு குழுவினதோ அங்கீகாரமொன்று இல்லாமல் செலுத்தப்பட்டிருந்தது.

- பணியகத்தின் துணைக்கம்பனிக்கு 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 20 மில்லியன் கடன் தொகை அறவிடப்பட வேண்டுமெனவும் கம்பனிக்கு கடன் வழங்கல் தேவையில்லை என பொது முயற்சிகள் குழுவினால் 2012 ஆகஸ்ட் 14 இல் இடம்பெற்ற கூட்டத்தின் போது கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது மீண்டுமொரு முறை ரூபா 20 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. கம்பனியின் முதலீட்டிற்காக 2009 ஆம் ஆண்டிற்காக பங்குலாபம் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் அதன் பின்னர் 2014 ஆண்டிற்காக ரூபா 3.5 மில்லியனாக மீள கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

# மீன்பிடி மற்றும் கால்நடை வளம்

## மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

இலங்கையிலுள்ள பொது மக்களின் போசாக்கு மட்டத்தினை உயர்த்தவதில் மீன்பிடித்துறை பிரதான இடத்தை பிடித்துள்ளதுடன் மீன்பிடிக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிற்குரிய பொறுப்பு மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக மீன்பிடித் துறையினை முகாமைத்தவம் செய்து நீரியல் வளங்களை பயன்படுத்துதல் அமைச்சின் தூர நோக்காக உள்ளதுடன் மீன்பிடி, நீரியல் வளங்கள் அபிவிருத்தி திணைக்களம் (மீன்பிடி வளங்களின் முகாமைத்துவம்), தேசிய நீரியல்வாழ் அபிவிருத்தி அதிகாரசபை (நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி), இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் (துறைமுகங்கள், நங்கூரமிடல்கள் மற்றும் தரிப்பிட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி), தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர் நிலையம் (விஞ்ஞான ரீதியான ஆய்வுகள்), இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் (சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்), வரையறுத்த சீனோர் மன்றம் (உள்ளீடுகளை வழங்குதல்) மற்றும் பேலியகொட மத்திய மீன் சந்தைத் தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு என்பன இக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான எதிர்பார்ப்புடன் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் தொழிற்பட்டு வருகின்றன.

மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கும் மீன்பிடி, நீரியல் வளங்கள் அபிவிருத்தி திணைக்களம் உள்ளிட்ட அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களிற்கும் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 9,416 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்த போதிலும், ரூபா 8,069 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,347 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பில் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

### இரண்டு தாய்ப் படகுகளை கொள்வனவு செய்தல்

ரூபா 326.01 மில்லியன் கிரயத்தில் 02 தாய்ப் படகுகளை கொள்வனவு செய்வதற்காக அமைச்சு 2007 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வழங்குனர் ஒருவருடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டு 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை ரூபா 113.55 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2006 இலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை இச்செயற்திட்டத்திற்காக வருடந்தோரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாடுகளிலிருந்து ரூபா 541.02 மில்லியன் தொகை ஒவ்வோர் ஆண்டிலும் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் நிதிகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தத் தவறியமையால் கிடைக்கக் கூடியதாகவுள்ள வளங்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் இது தொடர்பில் கடுமையான மேற்பார்வையினை மேற்கொள்ள வேண்டுமெனவும் அமைச்சின் செயலாளர் 2013 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தினால் விமர்சிக்கப்பட்டிருந்தார். இருப்பினும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 08 ஆண்டுகள் முடிவடைந்துள்ள போதிலும், தாய்க் கப்பல் கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக அமைச்சு இச்செயற்திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்கு தவறியிருந்தது.

### திக்ஓவிட மீன்பிடி துறைமுக நிர்மாணச் செயற்திட்டம்

இச்செயற்திட்டம் வெளிநாட்டு உதவியினைப் பயன்படுத்தி அமைச்சினால் 2009 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2011 இல் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் மேலும் விரிவுபடுத்தப்பட்டு 2011 முதல் ரூபா 792 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியில் உள்ளூர் நிதிகளைப் பயன்படுத்தி நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இத்துறைமுகத்தின் கப்பல்களை திருத்தும் நிலையமொன்றாக சீனோர் மன்றத்தின் கீழுள்ள மட்டக்குளிய படகுகள் தரிப்பிடத்தை மேம்படுத்தும் நோக்குடன் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 180 மில்லியன் தொகை செயற்திட்ட நிதிகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. சகாய விலைகளில் மீனவர்களின் படகுகளையும் கப்பல்களையும் திருத்துவதற்கு உடன்பட்டிருந்தமையால் அந் நோக்கத்திற்காக திட்டமொன்றைத் தயாரிக்குமாறு பொது கணக்குகள் குழு 2013 சனவரி 13 ஆந் திகதி பணிப்புரை வழங்கயிருந்தது. இருப்பினும், அவ்வாறான திட்டம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்படாதிருந்ததுடன் சீனோர் மன்றம் வர்த்தக ரீதியில் கப்பல்களை உற்பத்தி செய்திருந்தது. அதன் விளைவாக மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக திறைசேரியால் லெவிடப்பட்டிருந்த நிதிகளின் பலன் மீன்படி சமூகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

மேலும், 2013 ஆம் ஆண்டில் படகுகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த, செயற்திட்டத்துடன் தொடர்பற்றதாக காணப்பட்ட கணனி மென்பாக அனுமதிப்பத்திரத்தை கொள்வனவு செய்வதற்காக கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை காரணமாக 2014 ஆம் ஆண்டில் ரூபா 9.66 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2018 சனவரி 17 ஆந் திகதியன்று காலாவதியாகும் இந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 ஆண்டுகளும் 08 மாதங்களும் கடந்திருந்த போதிலும், அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## மீன்பிடி துறைமுகம் மற்றும் நங்கூரமிடல் இறங்குதுறைகள் அபிவிருத்திச் செயற்திட்டம்

06 மீன்பிடி துறைமுகங்களையும் நங்கூரமிடல் இறங்குதுறைகளையும் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ரூபா 2,000 மில்லியன் கிரயத்தில் 2013 ஆம் ஆண்டில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் மேலும் 08 மீன்பிடி துறைமுகங்களும் நங்கூரமிடல் இறங்குதுறைகளும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன். கிரயமானது ரூபா 5,789 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

- மேலதிக 08 மீன்பிடி துறைமுகங்களையும் நங்கூரமிடல் இறங்குதுறைகளையும் நிர்மாணிப்பதற்காக திறைசேரியிடமிருந்தும் அமைச்சரவையிடமிருந்தும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் கரையோரப் பாதுகாப்பு கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் என்பற்றிமிருந்தும் இந்நோக்கத்திற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

- கொள்வனவு வழகாட்டல்கள் 2.14.1 இன் பிரகாரம் அமைச்சரவைக் கொள்வனவுச் சபையின் ஊடாக செயற்திட்டத்தின் கீழான 04 நிர்மாண நடவடிக்கைகளின் கொள்வனவுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக கிரயங்கள் துண்டமாக்கப்பட்டு அமைச்சு கொள்வனவு சபையினூடாக அவை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- செயற்திட்டச் செயற்பாடுகள் நடைமுறையில் துண்டமாக்கப்பட முடியாத போதிலும், செயற்திட்டத்தின் சகல துண்டங்களும் ஒப்பந்தத்தினை கையளிக்கையில் தனியொரு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு துண்டத்திற்குமாக கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபைகளிற்கான படிகளாக ரூபா 1.01 மில்லியன் மொத்தமாதோர் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- இச்செயற்திட்டத்தின் கீழுள்ள 05 செயற்திட்டச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கும் அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக ரூபா 9.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை சிக்கனமற்றதாகும் என்பது அவதானிக்கப்பட்டதுடன் அடிக்கல் நாட்டப்பட்ட 03 செயற்திட்டச் செயற்பாடுகள் 2015 யூலை 15 வரை தொடங்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் கேள்விக்குரியதாகும்.

- செயற்திட்ட செயற்பாட்டு அமுலாக்கல் பிரிவிற்கு 18 உத்தியோகத்தர்கள் கொண்ட பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க செயற்திட்டத்தினால் 29 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். மேலும், அங்கீகாரமின்றி சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த 11 உத்தியோகத்தர்களிற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2.48 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## வாழ்வாதார அபிவிருத்திக்காக சுயதொழில் உபகரணங்களை விநியோகித்தல்

- மீன்பிடி சமூகத்தின் வாழிவாதார அபிவிருத்திக்கான சுயதொழில்களான தையல் கைத்தொழில், உணவு தயாரித்தல், வாசனைத்திரவிய உற்பத்தி, கால்நடை வளர்ப்பு மற்றும் பூச் செய்கை போன்ற மின்பிடியுடன் தொடர்புபடாத கைத்தொழில்களிற்கு தேவைப்படுகின்ற ரூபா 10.5 மில்லியன் பெறுமதியான கருவிகளை அமைச்சு கொள்வனவு செய்திருந்ததுடன் இப்பொருட்கள் உயர் விலைகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1.34 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

- நீர்கொழும்பு, மாவட்ட மீன்பிடி அலுவலகத்தினூடாக இப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டு அந்த அலுவலகத்திற்கு அவை கையிளக்கப்பட்டிருந்த போதிலும், பெண்களுக்கான 121 தையல் இயந்திரங்கள், 53 சைக்கிள்கள் மற்றும் 120 பாடசாலை உபகரணத் தொகுதிகள் பொறுப்பேற்கப்பட்ட அல்லது பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை.

## தவறான கொடுப்பனவுகள்

உண்மையில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்களைக் காட்டிலும் கூடுதலான உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தாக குறிப்பிட்டு பேலியகொட மத்திய மீன்சந்தை கட்டித்தொகுதிக்கு பாதுகாப்பு வழங்கிய தனியார் பாதுகாப்புச் சேவை கம்பனியொன்றால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக சந்தை தொகுதியின் முகாமைத்துவ நம்பிக்கைப்பொறுப்பு பாதுகாப்புச் சேவைக் கட்டணமாகவும் பெறுமதிசேர் வரியாகவும் முறையே ரூபா 15.39 மில்லியன் மற்றும் ரூபா 1.88 மில்லியன் தவறாக செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன் பாதுகாப்புச் சேவைக் கம்பனிக்கு 2011, 2012 மற்றும் 2013 நவம்பர் வரை தேசத்தை கட்டியெழுப்பும் வரியாக ரூபா 307,999 செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு தவறுதலாகச் செலுத்தப்பட்ட தொகை அக் கம்பனிக்குச் செலுத்திய முழுத் தொகையில் 45 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது.

## இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனம்

மீன்பிடி துறைமுகங்களை நிர்மாணித்து பராமரித்துச்செல்லல், மீன்பிடி கப்பல்களை திருத்துதல் மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல், குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகளை வழங்குதல், பணிக்கட்டிகளை வழங்குதல் மற்றும் மீன்பிடித் துறைமுகங்களையும் நங்கூரமிடல் இறங்குதுறைகளையும் அபிவிருத்தி செய்தல் ஆகியன கூட்டுத்தாபனத்தின் பிரதான தொழிற்பாடுகளாகும். கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாகவுள்ள 20 மீன்பிடி துறைமுகங்களில் 07 துறைமுகங்களில் கப்பல் திருத்தும் வசதிகளும், 04 துறைமுகங்களில் எரிபொருள் வழங்கும் வசதிகளும் 06 துறைமுகங்களில் பணிக்கட்டி மற்றும் களிரூட்டல் களஞ்சிய வசதிகளும் காணப்படவில்லை. மேலும் 20 மீன்பிடி துறைமுகங்களில் 12 துறைமுகங்கள் நட்டத்தில் நடாத்திச் செல்லப்படுவதுடன் 2010 முதல் 2014 ஆம் ஆண்டுவரை ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 323.51 மில்லியன் ஆக காணப்பட்டது.

## இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கூடிய பங்களிப்பை வழங்குதல், மீன்களை சந்தைப்படுத்தி செயன்முறைப்படுத்தல், உயர்தரமுள்ள மீன்களை விற்பனை செய்தல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் கூட்டுத்தாபனத்தின் இலட்சிய நோக்கங்களாகும். இருப்பினும், 2015 ஆகஸ்ட் 31 அளவில் காணப்படக்கூடியதாகவிருந்த 150 மீன்விற்பனை நிலையங்களில் 49 நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

## தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர் நிலையம்

வலயத்தில் நீரியல் வளங்களை பாதுகாத்து, முகாமைத்துவம் செய்து அபிவிருத்தி செய்வதில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளிற்கான முன்னனி நிறுவனமாக உருவாதல் முகவர் நிலையத்தின் தூரநோக்காக உள்ளதுடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியான அறிவினையும் வளங்களையும் பயன்படுத்துகின்ற நீரியல் வளங்கள் துறையிலுள்ள தேசிய அபிவிருத்திச் சிக்கல்களிற்கு புத்தாக்க தீர்வுகளை வழங்குதல் நிறுவனத்தின் இலட்சிய நோக்காகவுள்ளது. இருப்பினும், 2011 இல் ரூபா 15.69 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கப்பல் 2015 ஆகஸ்ட் 31 வரையிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த நோக்கத்திற்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்த பதவியணியினருக்கு 2011 முதல் 2014 திசெம்பர் 31 வரையான காலத்திற்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 7.04 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முகவர் நிலையத்தின் அதிகாரச்சட்டத்திலுள்ள குறிக்கோள்களிலிருந்து விலகிச் செயற்பட்டு 2013 இல் ரூபா 152.24 மில்லியன் கிரயத்தில் பேருவல இல் மீன் சந்தையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அக் கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## கால்நடைகள் மற்றும் கிராமிய சமூதாய அபிவிருத்தி அமைச்சு

கால்நடை கைத்தொழில் அபிவிருத்திக்காக கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்கி அமுல்படுத்தல், பால் உற்பத்தியும் விநியோகமும், மிருக மருத்துவ சேவைகளையும் ஆராய்ச்சிகளையும் திட்டமிட்டு அமுல்படுத்தல், நோய்கள் மற்றும் மிருக அழிவுகளிலிருந்து மிருகங்களை பாதுகாத்தல், மிருகங்கள் அதிகாரச்சட்டம், மிருக நோய்கள்

அதிகாரச்சட்டம் மற்றும் மிருக உணவுகள் அதிகாரச்சட்டம் போன்றவற்றை கண்காணித்து அமுல்படுத்தல் மற்றும் கிராமியச் சமூகத்தின் சமூக பொருளாதார அந்தஸ்த்தினை முன்னேற்றுதல் போன்றன அமைச்சின பிரதான தொழிற்பாடுகளாகும். கால்நடை அபிவிருத்திக்கு தேவைப்படுகின்ற தொழில்நுட்ப நிபுணத்துவ மற்றும் ஆதாரச் சேவைகள் மிருக உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்படுவதுடன் மில்கோ தனியார் கம்பனி, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை மற்றும் மகாவலி கல்நடை வளங்கள் அபிவிருத்திக் கம்பனி ஆகியன இந்த நோக்கங்களை அடைவதற்கு உதவுகின்ற அமைச்சின் கீழ் தொழிற்பட்டு வரும் நிறுவனங்களாகும்.

2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்கும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கும் ரூபா 5,789 நிதி ஏற்பாடு கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 5,438 மில்லியன் செலவிடப்பட்டு ரூபா 351 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

### கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூதாய அபிவிருத்தி அமைச்சு

கால்நடை அபிவிருத்திக்காக தேவைப்பட்ட 07 செயற்திட்டங்களை அமுல்படுத்தும் நோக்குடன் கால்நடை மற்றும் கிராமிய சமூதாய அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 1,441.20 மில்லியன் ஏற்பாடு மீளாய்வாண்டின் மூல மதிப்பீட்டில் செய்யப்பட்டிருந்தது. இச் செயற்திட்டங்களிற்கான செயலாற்றல் அறிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால், அதன்மீதான செயன்முன்னேற்றங்களை பரீட்சிக்க முடியவில்லை. மேலும், 2014 இல் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 3,478 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், அப் பணத்தினை செலவிடக்கூடிய வழிமுறைகளைக் காட்டுகின்ற விதத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

### கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

சிப்பிக்குளம் கால்நடை கட்டுப்பாட்டு பயிற்சி நிலையத்தின் குடிநீர் தேவைப்பாட்டினை நிவர்த்தி செய்வதற்காக 2012/2013 ஆம் ஆண்டில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ரூபா 1.87 மில்லியன் கிரயத்தில் நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை தாபித்திருந்தது. எவ்வாறாயினும் அந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நீர் தேவையினை பூர்த்திசெய்து கொள்ள முடியாதிருந்தமையால் மாதாந்தம் ரூபா 15,000 இனை செலவிட்டு நீரை பெற்றுக்கொள்வதற்கு 2015 மார்ச் இலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்திற்காக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ரூபா 29,000 செலவிடப்பட்டிருந்தது. குடிநீர் தேவையினை குறித்த நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2015 யூன் 10 ஆந் திகதி வரை பூர்த்திசெய்துகொள்ள முடிந்திருக்கவில்லை.

### தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபை

- 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு என்பவற்றின் படி பங்களிப்புகளை கணிப்பிடுகையில் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளங்கள் மாத்திரம் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தன.

- வெலாட் பண்ணை பசுமாட்டுச் செயற்திட்டம் தொடர்பில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய வட்டியாக நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 7.11 மில்லியன் மற்றும் ரூபா 20.43 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிற்காக வட்டிக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும இக்கடனை திருப்பிச் செலுத்துவதற்கான திட்டமொன்றைத் தயாரித்துக்கொள்வதற்கு சபை தவறியிருந்ததுடன், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2012 நவம்பர் 06 ஆந் திகதிய DE/AUS/06 ஆம் இலக்க கடிதத்தின் படி 2013 மார்ச் 08 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அத்திகதியிலிருந்து கடனை திருப்பிச் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட சுய மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூபா 12 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

- மகாவலி பண்ணை விலங்கு அபிவிருத்திக் கம்பனிக்கும் அமைச்சுக்கும் கோழிக் குஞ்சுகள் வழங்கியமை தொடர்பில் முறையே 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 9.45 மில்லியன்

தொகையும் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 1.51 மில்லியன் தொகையும் இது வரை சபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

- கந்தளாய் சீனிக் கம்பனிக்குச் சொந்தமான கரும்புப் பயிர்ச்செய்கை நிலத்தில் ஏறத்தாழ 1,000 ஏக்கர்கள் பரீட்சார்த்த செயற்திட்டமாக சோளத்தினை பயிரிடுவதற்காக சபைக்குத் தற்காலிகமாக வழங்குவதற்கும் அதற்காக சுழற்சி நிதியமொன்றை உருவாக்குவதற்கும் காணியில் கரும்புப் பயிர்ச்செய்கைக்காக பொருத்தமான முயற்சியாளர் ஒருவர் தெரிவுசெய்யப்படின் சுழற்சி நிதியத்தில் எஞ்சியுள்ள தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கும் உட்பட்டு 2007 யூன் 28 ஆந் திகதி அமைச்சரவையினால் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. சுழற்சி நிதியத்திற்காக ரூபா 37.5 மில்லியன் தொகை கிழக்கின் வசந்தத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இச் செயற்திட்டம் தோல்வியடைந்தமையால் காணி 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி கம்பனிக்கு மீள ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், சுழற்சி நிதியத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 13.29 மில்லியன் தொகையினை 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி திறைசேரிக்குச் செலுத்தாது சபையினால் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

- செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருந்த 27 பண்ணைகளின் 06 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய 61 செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் பூச்சியமாக இருந்ததுடன் 19 பண்ணைகளின் 40 செயற்பாடுகளின் இலக்குகளின் பௌதீக அடைவு 50 சதவீதத்திற்கும் குறைவாக காணப்பட்டது. மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 31 பண்ணைகளின் 293 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்தமையால் குறித்த செயற்பாடுகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதனை பரீட்சிக்க முடியவில்லை.

- ரிதீயகம பண்ணையின் 150 ஏக்கர்கள் 2001 ஆம் ஆண்டில் 98 நபர்களால் அனுமதியின்றி பயிர்ச்செய்கை நடவடிக்கைக்காக 2001 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அவர்களை பண்ணையிலிருந்து அகற்றுவதற்கு சபை தவறியிருந்தது. அவர்கள் சபையின் பண்ணைகளில் குடியிருந்து வருகின்ற சபையின் 70 உத்தியோகத்தர்களோ அல்லது ஊழியர்களோ அல்லர். அத்துடன் குடியிருப்பதற்கு பொருத்தமான 145 வீடுகளில் எவரும் வசித்துவராதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மேலும் 110 வீடுகள் குடியிருப்பதற்கு பொருத்தமற்றவையாக காணப்பட்டன.

- பால் விநியோக செயற்திட்டத்தின் கீழ் பாலை விற்பனை செய்வதற்காக தலைமை அலுவலகத்தினால் 69 விற்பனை நிலையங்கள் நடாத்தி வரப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை தொழிற்படும் நிலையில் காணப்பட்ட விற்பளை நிலையங்களின் எண்ணிக்கை 53 மாத்திரமேயாகும். அந்த 69 விற்பனை நிலையங்களில் 25 விற்பனை நிலையங்கள் ரூபா 1.83 மில்லியன் நட்டத்தினையும் 44 விற்பனை நிலையங்கள் ரூபா 17.06 மில்லியன் இலாபத்தினையும் ஈட்டியிருந்தன. மேலும், சபைக்குச் சொந்தமான 17 பண்ணைகளிலிருந்து ஆண்டின் போது ரூபா 152.39 மில்லியன் தேறிய நட்டமொன்று பெறப்பட்டிருந்ததுடன், அவற்றில் 07 பண்ணைகள் 2008 ஆம் ஆண்டு முதல் நட்டமீட்டி வந்திருந்தன. இருப்பினும், அந்த பண்ணைகளை இலாமீட்டும் நிலைக்கு மாற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

# சுகாதார சேவைகள்

சுகாதார துறை தொடர்பாக கொள்கைகள் வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், சுகாதார சேவைகள் வழங்கல் தொடர்பான நியமங்களையும் சட்டங்கள் விதிகளையும் வழங்கல், மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்இ முகாமை செய்தலஇ திட்டமிடல் முறைமைகளை அபிவிருத்தி செய்தல், வளங்களை விநியோகித்தல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் என்பன முக்கிய செயற்பாடுகளாகும்.

நோயாளர் பராமரிப்பு சேவைக்காக சுகாதார அமைச்சிற்கு சொந்தமாக 47 வைத்தியசாலைகளும் மாகாண சபைகளுக்கு சொந்தமாக 554 வைத்தியசாலைகளும் தனியார் துறைக்கு சொந்தமாக 210 வைத்தியசாலைகளுமாக இலங்கை முழுதும் உள்ள வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 811 ஆக இருந்ததுடன் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலர்கள் 341 ஆகும். 2014 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தால் சுகாதார துறைக்காக ரூபா138,403 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு செலவிடப்பட்ட ரூபா 119,530 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 18,873 மில்லியன் அல்லது 15 வீதத்தால் அதிகரித்திருந்தது.

மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளாக கடந்த 05 ஆண்டுகளில் முறையே ரூபா87,329 மில்லியன் மற்றும் ரூபா 432,655 மில்லியன் என ரூபா 519,904 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 3,573 ஆக இருந்த ஒரு நோயாளிக்கான சுகாதாரச் செலவு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 6,694 வரை நூற்றுக்கு 87 வீதத்தால் அதிகரித்திருந்தது. சுகாதாரத் துறை தொடர்பாக தனியார் வைத்தியசாலைகளால் அளிக்கப்பட்ட பங்களிப்பு 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டின் போது தனியார் வைத்தியசாலைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. அதே போன்று அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கையும் படுக்கைகளின் எண்ணிக்கையும் இதே போல் சுகாதார துறையில் சகல தொழிற்படைகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருந்தது. சுகாதார அமைச்சின் பிரதான அலுவலகத்தில் சம்பளம் பெறும் வைத்தியர்களின் எண்ணிக்கை 2,845 ஆகும். இதில் 2,638 வைத்தியர்கள் பட்டப்பின் படிப்பு பயிலுனர்கள் வைத்திய அலுவலர்களாக இருந்ததுடன் 116 வைத்தியர்கள் அமைச்சின் நிருவாக துறையில் பதவி வகித்தனர்.

## கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் நடவடிக்கைகள்

மருத்துவ வழங்கல் பிரிவில் பெறப்பட்ட சகல மருந்துப் பொருட்களும் கள்ஞசியப்படுத்தப்பட்டு விநியோகித்தலுக்காக கொழும்பு களஞ்சியத் தொகுதி வலையமைப்பும் இணைப்புகளுமாக மாவட்ட மட்டத்தில் 26 களஞ்சியங்கள் இருந்தன. இதற்கு மேலதிகமாக அங்கொடையில் 03 களஞ்சியங்களும் திகனையில் ஒரு களஞ்சியமும் மருத்துவ வழங்கள் பிரிவு வசம் இருந்தன. மாகாண சபைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வைத்தியசாலைகள் தொடர்பாக தேவையான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் இவ்வாறான மாவட்ட மட்ட மருத்துவ வழங்கல் பிரிவுகள் மூலம் வழங்கப்பட்டன. தேவையான இடவசதிகள் இன்மையால் 2013 ஆம் ஆண்டின் போது வெலிசறை இருதய நோய் வைத்தியசாலை வளாகத்தில் ரூபா 199 மில்லியன் செலவில் மருந்துக் களஞ்சியமொன்று நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது கூட நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்கு வாடகையடிப்படையில் தனிப்பட்ட கட்டிடங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக வருடாந்தச் செலவினம் ரூபா 9 மில்லியனாக இருந்தது.

## மருந்து வகைகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் தரப்பரிசீலனையில் நிராகரிக்கப்பட்ட மருந்து வகைகள்

மீளாய்வாண்டின் போது அரச மருந்து கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட மருந்துகளினதும் சத்திரசிகிச்சை உபகரணங்களினதும் எண்ணிக்கை 3,537 வகைகளாகவும் பெறுமதி ரூபா 17,386 மில்லியனுமாகும். இதில் ரூபா 218 மில்லியன் பெறுமதியான 48 வகையான மருந்து மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களில் 10 மில்லியன் தரமற்றவை என பாவனையிலிருந்து அகற்றிவிட தீர்மானிக்கப்பட்டிருந்தும் அதனைப்பற்றி தெரியப்படுத்த முன்னர் 9 மில்லியன் எண்ணிக்கையானவை (ரூபா 186 மில்லியன் பெறுமதியானவை) விநியோகிக்கப்பட்டிருந்ததாக தெரிந்தது. கொள்வனவு செய்யப்பட்டு தரமற்றதான பொருட்களில் இது நூற்றுக்கு 90 வீதமானதும். வழங்குனர்களுக்கு பணம் வழங்கப்பட்டும்இ உபயோகிக்கப்பட்டுமிருந்ததால் அவ்வாறான தரமற்ற பொருட்களுக்காக கொள்வனவு நிபந்தனைகளின் கீழ் பெறுமதிளை அறவிட நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் வேண்டுவரை

பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இருப்பு தொடர்பாக 210 மில்லியன் தொகையை வழங்குநர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டினுள் மருந்துகளின் பாவனைக்காலம் முடிவுற்ற காரணத்தால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மருந்துகளும் சத்திரசிகிச்சைப் பொருட்களும் 45 வகையான ரூபா 218 மில்லியன் பெறுமதியானவையாகும்.

## மருந்துகளை பிரதேச மட்டத்தில் கொள்வனவு செய்கையில் ஏற்பட்ட மேலதிக செலவினம்

மருத்துவ வழங்கல்களை தேசிய ரீதியில் முக்கியமாக வழங்குவது அரச மருந்து கூட்டுத்தாபனமாக இருப்பதுடன் ஒரு வருடத்திற்கு முன்னர் கட்டளையிடுவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன. அவ்வாறாயினும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் மருந்துகள் கிடைக்கப்பெறாமையால் அமைச்சிற்கு பிராந்தியங்களில் அவசர கொள்வனவுகள் மேற்கொள்வதற்கு நேர்ந்தது. இக்காரணத்தால் கேள்விநடை முறையிலிருந்து விலகியதால் ஏற்பட்ட மேலதிக கிரயம் 2007 ஆம் ஆண்டில் இருந்து 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 2,013 மில்லியன் ஆகும். 2014 ஆம் ஆண்டில் கிரயம் கணக்கிடப்படாதிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டு தொடர்பாக மட்டும் ரூபா 174 மில்லியன் மேலதிக செலவு செய்யப்பட்டிருந்தது.

## மருத்துவ உபகரணங்களை வழங்குதல் - உயிரியல் விஞ்ஞான பொறியியல் சேவைகள் பிரிவு

மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தலுக்காக மீளாய்வாண்டின் போது இப்பிரிவின் கீழ் ரூபா 2,646 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுக்கடன் நன்கொடையின் கீழும் வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் 71 வகையான உபகரணங்கள் 3,059 அலகுகள் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தும் ஆண்டினுள் அவற்றுள் எவையும் கொள்வனவு செய்யப்படாமல் 2011, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட உபகரணங்களும் வேறு உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் கொள்வனவு செய்யப்பட்ட இந்த உபகரணங்கள் வைத்தியசாலைகளில் நிறுவுவதற்கு பல சந்தர்ப்பங்களில் தாமதம் ஏற்பட்டுஇ இதனால் உத்தரவாத காலம் கடந்தும் இருந்தது.

## வாகனப் பயன்பாடு

மோட்டார் வாகனத் திணைக்களத் தரவுகளின்படி 2014 ஒக்டோபர் 19 ஆம் திகதியில் சுகாதார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த வாகனங்களின் எண்ணிக்கை 2,705 ஆக இருந்ததுடன் அவற்றுள் 971 வாகனங்களுக்கு நடந்தவை பற்றி தகவல் தர அமைச்சினால் முடியாதிருந்தது. மோட்டார் வாகன பதிவேடு நாளதுவரை பேணப்படாமை மேற்படி நிலைக்குக் காரணமாகும். ஏலம் விடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 02 அரச வாகனங்கள் (சேவையாற்றக் கூடிய நல்ல நிலையிலுள்ளவை) ஏலம் விடாமல் இரண்டு அரச உத்தியோகஸ்தர்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## வெளிநாட்டு நிதிகளை உபயோகித்தல்

மீளாய்வாண்டின் போது தேறிய வெளிநாட்டு நிதிகளின் ஒதுக்கீடு ரூபா 11,696 மில்லியனாக இருந்ததுடன் செலவு ரூபா 9,860 மில்லியனாக இருந்தது. வெளிநாட்டு நிதிகளை செலவிடல் நூற்று வீதத்தின் படி வெளிநாட்டு கடனைச் செலவிடல் நூற்றுக்கு 96 வீதத்திற்கு மேலாக இருந்த போது வெளிநாட்டு நன்கொடைகளை செலவிடல் நூற்றுக்கு 35 வீதமாக இருந்தமை நாட்டிற்கு உகந்ததாக இல்லை என அவதானிக்கப்பட்டதுடன் மீள செலுத்தப்படாத வெளிநாட்டு நன்கொடை நிதிகள் கூடுமானவரை அதிகமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமைஇ மற்றும் தேவையானபடி வேலைத்திட்டங்களை வினைத்திறனுடன் தயாரித்து பயனுள்ள முறையில் பயன்படுத்தாமை என்பன முக்கியமாக காணப்பட்டன.

## கட்டிட நிர்மாண ஒப்பந்தங்கள்

நோயாளர் பராமரிப்பிற்காக வைத்தியசாலைகள் தொடர்பான 38 பல்வேறு கட்டிடங்கள் நிர்மாணித்தல் செயற்றிட்டங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு நிதியில் ரூபா 1,610 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் நிதிகளைப் பயன்படுத்தாமல் விட்ட நிர்மாண செயற்றிட்டங்கள் 02 ஆக இருந்ததுடன்இ பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்ட செயற்றிட்டங்கள் 02 ஆகும். (கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை மிலேனியம் விடுதித் தொகுதிஇ காலி மகமோதரி மகப்பேற்று வைத்தியசாலை நிர்மாணம்). ஒதுக்கப்பட்ட தொகையில் 50 வீதத்திற்கும் குறைவான நிதிசார் முன்னேற்றம் காணப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 15 ஆகும். முன்னேற்றக் குறைவிற்கான காரணமாகஇ சம்மந்தப்பட்ட

வைத்தியசாலைகளால் கோரிக்கைகள் அனுப்பப்படாமைஇ கொள்வனவு நடைமுறையை முடிவுறுத்தாமைஇ வேலைகளை இடைநடுவில் நிறுத்தியமை மற்றும் ஒப்பந்த நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும்இ கொடுப்பனவு செய்வதற்காக செலவுறுதிச் சீட்டு அனுப்பியிருந்தும் நிதி இல்லாமை ஆகியன தெரிவிக்கப்பட்டன. மேலும் குருணாகல போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதித் தொகுதி நிர்மாண ஒப்பந்தத்தில் மொத்த கிரய மதிப்பீடு ரூபா 1,291 மில்லியனாக இருந்ததுடன் 2007 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு தொடங்கியிருந்த இந்த ஒப்பந்தம் 2013 பெப்ரவரி 10 இல் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகும். 03 கட்டங்களில் செய்யப்பட வேண்டிய இந்த ஒப்பந்தம் 08 வருடங்களுக்கு மேற்பட்டிருந்தும் 02 கட்டங்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. செலவிடப்பட்ட தொகை ரூபா 39 மில்லியனாகும்.

## ஒருங்கிணைப்புக்களில் குறைபாடுகள் காரணமாக தேவையற்ற தாமதங்கள் ஏற்படல்

சுகாதார அமைச்சினுள் சகல கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு 90 பிரிவுகள் மட்டுமே உள்ளதுடன்இ அவற்றின் ஒவ்வொன்றினுமிடையே உள்ள இடைத்தொடர்பு மிகவும் பலவீனமான மட்டத்தில் இருந்தது. பிரிவுகளிடையேயும், உத்தியோகத்தர்கள் இடையேயும் வேலைகளைப் பகிர்தல் மிகவும் முறையற்ற விதத்தில் இருந்தது. விசேடமாக, தற்போது உயர்மட்ட பதவி வகிப்பவர்களுக்கு அதிகமான வேலை வழங்கப்பட்டிருந்தும் அவ்வாறான வேலைகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் முடிப்பதற்கு கோவைகள் மேசையில் குவிந்திருந்ததுடன் அமைச்சின் நிர்வாக கடமைகளில் நீடித்த தாமதமும் அவதானிக்கப்பட்டது. சில சமயங்களில் ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு ஒரு கடிதத்தை கையளிக்க மாதக்கணக்குகள் எடுத்தன. அதிகாரங்களை முறைப்படி கையளிக்காமைஇ கண்காணிப்பு இன்மை என்பன இக்குறைபாட்டிற்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

## இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம்

2014 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் மொத்த புரள்வான ரூபா 22,134 மில்லியனை 2013 ஆம் ஆண்டின் புரள்வான ரூபா 21,135 மில்லியனுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 4.7 வீதமான ரூபா 999 மில்லியனால் அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது 07 புதிய அதிகாரம் பெற்ற மருந்துசாலைகளும், 03 புதிய அரச மருந்துசாலைகளும் நிறுவப்பட்டிருந்ததுடன் 04 புதிய வழங்குனர்களுடன் இம் மருந்துசாலைகளும் சேர்த்து ஆண்டு முடிவின் போது 31 அரச மருந்து சாலைகளும் (ஆண்டு மத்தியில் மூடப்பட்ட 02 மருந்துசாலைகளைத் தவிர்த்து) 195 பிரதிநிதி மருந்துசாலைகளும் 54 விநியோகத்தர்களும் 10 உத்தரவு பெற்ற வியாபாரிகளும் திறந்த சந்தையில் செயற்பட்டனர்.

- தரம் குறைதல், காலம் கடத்தல் போன்ற காரணங்களின் மத்தியில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்கு கொண்டுவரப்பட்ட ரூபா 20 மில்லியன் மருந்துகளும் மருத்துவ வழங்கள் பிரிவிற்கு விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட ரூபா 42 மில்லியன் மருந்துகளும் உள்ளடங்கலாக ரூபா 62 மில்லியனான பொருளிருப்பு நட்டம் கூட்டுத்தாபனத்திற்கு மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்தது.

- கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட வங்கி மேலதிகப்பற்று வட்டிச் செலவில் மருத்துவ வழங்கல் பிரிவில் கொள்வனவு வகையால் செய்யப்பட்ட மேலதிகப்பற்று வட்டி 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை பொதுத் திறைச்சேரி மூலம் மீளளிக்கப்பட்டிருந்தது..அதன்படி 2012 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 316 மில்லியனும் 2013 இன் போது 510 மில்லியனும் 2014 இல் ரூபா 179 மில்லியனுமாக வங்கி மேலதிகப்பற்று வட்டிச் செலவு பொதுத்திறைச்சேரியால் செய்யப்பட்டிருந்தது.

- மருத்துவ வழங்கல் பிரிவு மீளாய்வாண்டிற்கு கட்டளையிட்ட 610 மருந்து வகைகளில் 103 மருந்து வகைகளுக்குரிய 332.02 மில்லியன் அலகுகளை மீளாய்வாண்டின் போது வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தால் இயலாதிருந்தது. அதில் எந்த ஓர் அலகையும் வழங்க முடியாத 38 மருந்து வகைகளுக்குரிய அலகுகளின் எண்ணிக்கை 38.96 மில்லியனாகும்.

- மீளாய்வாண்டினுள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மூன்று மருந்துசாலைகளும்இ வருட நடுப்பகுதியில் மூடப்பட்ட 02 மருந்துசாலைகளும் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தில் 33 மருந்துசாலைகள் செயற்பட்டதுடன், 23 மருந்துச்சாலைகளில் ரூபா 41.95 மில்லியன் நட்டம் ஏற்பட்டும் 10 மருந்துசாலைகளில் ரூபா 113.88 மில்லியன் இலாபமீட்டப்பட்டுமிருந்தது. இதன்படி சகல மருந்துசாலைகளினதும் தொழிற்பாடு மூலம் ரூபா 71.93 மில்லியன் தேறிய இலாபமீட்டப்பட்டுமிருந்ததுடன் அதனை கடந்த ஆண்டு அடையப்பெற்ற ரூபா 90.29 மில்லியன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 20.3 வீதமான ரூபா 18.36 மில்லியன் குறைவானதாகவும் இருந்தது.

## இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு இலாபம் ரூபா 225 மில்லியனாக இருந்ததுடன், அதனை 2013 ஆம் ஆண்டின் செயற்பாட்டு இலாபமான ரூபா 304 மில்லியனுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 26 வீதமான ரூபா 79 மில்லியன் வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருமானம் ரூபா 1,712.1 மில்லியனாக இருந்ததுடன், அதனைக் கடந்த ஆண்டின் முழு விற்பனை வருமானமான ரூபா 1,941.1 மில்லியனுடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 11.8 வீதமான ரூபா 229 மில்லியனால் குறைவடைந்திருந்தது. மேலும்இ முழு விற்பனை வருமானத்தில் ரூபா 1,099.5 மில்லியன் பெறுமதியான மருந்துகள் சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு விற்கப்பட்டிருந்ததுடன் இது முழு விற்பனையில் நூற்றுக்கு 64.2 வீதமாக இருந்தது. எப்படியிருப்பினும், மீளாய்வாண்டினுள் சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு செய்யப்பட்ட விற்பனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 312.6 மில்லியனால் அல்லது 22.1 வீதத்தால் குறைவடைந்திருந்தது.

உற்பத்தி செய்யப்பட்ட 38 மருந்து வகைகளின் 1909.2 மில்லியன் அலகுகளில் 1,303.8 மில்லியன் அலகுகள் அதாவது 68.3 வீதமானவை 8 மருந்து வகைகள்ளும் முழு உற்பத்தியான 605.4 மில்லியன் அலகுகள் அதாவது 31.7 வீதமானவை 30 மருந்து வகைகள்ளும் அடங்கியிருந்தன.

## சுகாதார அபிவிருத்தி நிதியம்

1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் படி நிதியத்திற்குரிய பணம் சுகாதார சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் அபிவிருத்தி மற்றும் நிலைத்திருத்தல், சுகாதாரத் துறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ந்திருத்தல் மற்றும் அவை தொடர்பான ஆட்களின் கல்வி மற்றும் அறிவினை மேம்படுத்தல், நோய்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது சுகாதார பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பான ஏதாவது முன்மொழிவுகளுக்கு நிதி வழங்குதல், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியமான மருந்துகள் கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவேண்டும் எனக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சுகாதாரத் துறையின் மேம்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டிய இந்த நிதியத்தின் பணம், அதற்காக பயன்படுத்தாமல் தொடர்ச்சியாக முதலீடு செய்துகொண்டிருப்பது கணக்காய்வு பரிசீலனைகளின் போது அறியப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் இறுதியில் இந்நிதியத்தின் மீதி ரூபா 205.4 மில்லியனாகும்.

## ஆயுர்வேதத் திணைக்களம்

ஆயுர்வேதத் திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான தேறிய ஒதுக்கீடு ரூபா 1,347.51 மில்லியனாக இருந்ததுடன், செலவினம் 1,179.12 மில்லியனாக இருந்தது. இதன்படி சேமிப்பு ரூபா 163.38 மில்லியன் அல்லது நூற்றுக்கு 12.49 வீதமாகும்.

ஆராய்ச்சி மருந்துத் தோட்டங்கள் நடத்துவதும் பிரசித்தப்படுத்துவதும் அமைச்சினதும் திணைக்களத்தினதும் தொழிற்பாடாயிருப்பினும் அமைச்சின் கீழ் உள்ள 02 தோட்டங்களும் (வெதகம மருந்துத்தோட்டம் 44 ஏக்கர், மெதிரிகிரிய மருந்துத் தோட்டம் 25 ஏக்கர்) மற்றும் திணைக்களத்தின் கீழ் உள்ள 05 மருந்துத் தோட்டங்களும் (நீலவெம்ம 25 ஏக்கர், மதவாச்சி தங்கொல்ல 50 ஏக்கர், பதவிய மருந்துத் தோட்டம் 25 ஏக்கர், கிவலிகந்துற 100 ஏக்கர், பீல்ல அம்பன் பொல 69 ஏக்கர்) காடு அடர்ந்து இருந்ததுடன், பராமரிப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை. மருந்துத் தோட்டங்களினால் அதிகளவு மூலப் பொருட்கள் கிடைக்கப்பெறாமையால் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் ஆயுர்வேதத் திணைக்களம் என்பன மூல மருந்துகளை வெளி நிறுவனங்களில் கொள்வனவு செய்திருந்தன.

வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றப்பட்ட மருத்துவ அதிகாரிக்கு வென்னப்புவ பிரதேச சபையால் சம்பளம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆயுர்வேதத் திணைக்களத்தாலும் 15 மாதக் காலப் பகுதிக்கு ரூபா 548,376 மொத்த சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது. இத்தொகை மீளாய்வாண்டின் இறுதிவரைகூட அறவிடப்பட்டிருநக்காததுடன் முறையற்ற விதத்தில் சம்பளம் வழங்கியமை தொடர்பாக அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்களிடம் காரணம் கேட்கப்பட்டிருக்கவுமில்லை.

## ஆயுர்வேத மருந்துவ மன்றம்

1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பகுதியின் 11 (1) (உ) பிரிவின் படி பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்கள் மத்தியில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 3 பேர் சபையின் மன்றத்தில் உள்ளடக்கப்பட முடியுமாயினும், மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் எவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

2005 யூலை 05 ஆம் திகதியின் 14/13/08(3) இலக்க ஆயுர்வேத மருத்துவசாலை பத்திரத்தின் படி 2006 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் செயற்படத்தக்கவாறு 05 வருடங்களுக்கு ஒரு முறை பதிவு செய்யப்பெற்ற மருத்துவர்கள் தமது பதிவை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். மேலும் அதற்காக பதிவுக்கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தும், மீளாய்வாண்டின் இறுதி வரை பதிவுசெய்யப் பெற்ற ஆயுர்வேத மருத்துவர்களில் ஒருவர் மட்டுமே பதிவுக் கட்டணம் செலுத்திப் புதுப்பித்திருந்தார்.

மருத்துவசபையில் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதிவரை பதிவு செய்த மொத்த மருத்துவர்களின் எண்ணிக்கை 24,049 ஆக இருந்ததுடன், அதில் இதுவரை காலஞ்சென்றவர்களின் எண்ணிக்கை 3,001 ஆக இருந்தது. பதிவுசெய்யப்பெற்ற மருத்துவர்கள் 2,545 பேர் மீளாய்வாண்டின் இறுதிவரை கூட புதுப்பித்திருக்கவில்லை.

## ஹோமியோபதி மருத்துவ சபை

2011 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை (2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை) மருத்துவ சபை இல்லை என்பதுடன் இடைக்கால நிருவாக சபை மூலம் சபையின் பணிகள் நடைபெறுகின்றன. இவ்வாறு செயலற்றிருப்பது சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கங்களை அடைவதற்கு தடையாயிருந்தது

# முதலீட்டு ஊக்குவிப்புத் துறை

இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு விடயத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் முதலீட்டுச் சபையும் இணைந்து பிரதான பாத்திரமேற்று செயற்படுகின்றன. இலங்கையில் கைத்தொழில் ஊக்குவிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நோக்கத்திற்காக 1978 முதல் அரசாங்க முதற்தர முகவராக முதலீட்டுச் சபை கூட்டிணைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்கப்படுத்தி மேம்படுத்தல், அந்நியச் செலாவணி உழைத்தல் மூலங்களை உருவாக்கி ஏற்றுமதி உழைப்புக்களை அதிகரித்தல், பொருதார அபிவிருத்தியினை துரிதப்படுத்தி இயக்குதல், புத்தாக்கங்களை ஊக்கப்படுத்தி புதிய தொழில்நுட்பங்களை இணைத்துக்கொள்ளல், புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்றன முதலீட்டுச் சபையின் பிரதான குறிக்கோள்களாக உள்ளன.

கவர்ந்தீர்க்கப்பட்ட மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 1,391.10 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ரூபா 1,616.26 மில்லியன் வரை 16 இனால் அதிகரித்திருந்தது. உட்கட்டமைப்பும் சேவைத் துறைகளும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் மிக முக்கியமான துறைகளாக உள்ளதுடன் 2014 இல் முதலீட்டுச் சபை செயற்திட்டங்களினுடாக கவர்ந்தீர்க்கப்பட்ட மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் இது 77 சதவீதத்தை பிரநிதித்தவப்படுத்தியிருந்தது. இருப்பினும், விவசாய மற்றும் உற்பத்தித் துறைகளில் கவர்ந்தீர்க்கப்பட்ட முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகைளில் மீளாய்வாண்டில் முறையே 32 சதவீதம் மற்றும் 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகளிலிருந்தான ஏற்றுமதி உழைப்புக்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 15 சதவீதம் மற்றும் 5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகளினால் செய்யப்பட்டிருந்த இறக்குமதிக் கிரயங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 2 சதவீத்தினாலும் 15 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன.

செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்ட அங்கீகாரங்கள் 2009 இன் 384 இலிருந்து 2014 இல் 181 ஆக 53 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டின் 176 செயற்திட்டங்களுடன் ஒப்பிடுகையில் அது 3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த செயற்திட்டங்கள் 2009 இல் காணப்பட்ட 134 இலிருந்து 2014 இல் 87 ஆக குறைவடைந்திருந்தது. இரத்துச் செய்யப்பட்ட, மூடப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் 87 செயற்திட்டங்கள் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த போதிலும், 125 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டு, மூடப்பட்டு அல்லது தடைசெய்யப்படடிருந்தன.

## ஏற்றுமதி பதணிடல் வலயங்களின் செயற்பாடுகள்

12 ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்களினூடாக முதலீட்டாளர்களிற்கு முதலீட்டுச் சபை வசதிகளை வழங்குகின்றது. இருப்பினும், வதுபிடிவல, கொக்கல மற்றும் மல்வத்த ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயங்கள் அதிக நிர்வாகக் கிரயம் மற்றும் வருமான ஈட்டலுக்கான காணிகளின் குறைப்பாவனை என்பன காரணமாக 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கிவருகின்றன. 2014 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மேற்படி மூன்று வலயங்களினதும் திரட்டிய நட்டம் 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 47.76 மில்லியன் நட்டத்தினையும் உள்ளடக்கி ரூபா 250.65 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

### சொத்துக்களின் குறைப் பாவனை

2003 சனவரி 08 ஆந் திகதி ரூபா 97.94 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 122 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்ட மலிதுவகந்த தோட்டக் காணி 2014 மே இறுதி வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் காணியின் புத்தகப் பெறுமதி ரூபா 100.8 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

## முதலீட்டு ஊக்குவிப்புச் செயற்பாடுகள்

முதலீட்டுச் சபையின் 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,802.69 மில்லியன் மொத்தச் செலவினத்தில் 2 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 67.47 மில்லியன் மாத்திரம் முதலீட்டு ஊக்குவிப்புச் செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருந்தது. முதலீட்டு ஊக்குவிப்புச் செலவினத்தில் ரூபா 34.63 மில்லியன் அல்லது 51 சதவீதத் தொகை அணிசேரா நாடுகளின் தலைவர்களின் சந்திப்பு மாநாட்டிற்கு இணையாக

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற கண்க்லோ-2014 கண்காட்சிக்காகவும் வடக்கு மற்றும் கிழக்கு மகாணங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான 9.5 நிமிட குறுந் திரைப்படத்தினை தயாரிப்பதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. இச்செலவினம் முதலீட்டு மேம்பாட்டுடன் தொடர்பற்றதாக உள்ளமையால் செலவினத்தின் நோக்கம் கேள்விக்குறியாக உள்ளது.

சூரியவெவ சர்வதேச கிரிக்கற் மைதானத்திற்கு நுழைவு வீதியொன்றை நிர்மாணித்தமையால் தமது வீடுகளை இழந்த மக்களிற்காக வெலிவெவ கிராம சேவகர் பிரிவில் 72 ஹெக்டயார் காணியில் ரூபா 100 மில்லியன் செலவில் 15 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இக் காணியின் உரிமைத்துவம் 2015 மே மாதம் வரை முதலீட்டுச் சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்காக முதலீட்டுச் சபைக்குள்ள கடப்பாடு அரசியல் அதிகாரத் தரப்பால் பரிந்துரைக்கப்பட்ட ஆட்களிற்கு ஐந்து வீடகள் கையளிக்கப்பட்டிருந்தமை போன்றன கேள்விக்குறியாக உள்ளன.

# நீர்ப்பாசனத் துறை

நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நீர் வளங்கள் சபை, இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் பொறியியல் செயற்பாடுகளுக்கான மத்திய மதியுரை பணியகம் ஆகிய 03 நியதிச்சட்ட நிறுவகங்கள் அமைச்சிற்குரியவையானதுடன் நீர்ப்பாசனம், ஆறுகள், நீர் முகாமைத்துவ விடயப்பரப்புக்ளும் அமைச்சின் கீழும் கொண்டுவரப்பட்டுள்ள திணைக்களங்கள், நீர்ப்பாசன நிறுவனங்களின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்து அமுல்படுத்தல், நீர்ப்பாசன திட்டங்கள், நீர் வழங்கல் மற்றும் வெள்ளப் பாதுகாப்பு திட்டங்கள், கழிவு நீர் அகற்றல் திட்டங்கள் போன்றவற்றை மேம்படுத்தல், நிர்மாணித்தல், செயற்படுத்தல், பேணுதல், மீள அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், ஆறுகள், ஓடைகள், மற்றும் ஏனைய நீர் மூலங்கள் மாசடைவதனைத் தடுத்தல், மழை நீரை சேகரித்தல், பொறியியல் ஆலோசனைச் சேவைகளும் நிர்மாணங்களும், நீர்ப்பாசன கட்டளைச் சட்டம், இலங்கை மகாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டம், நீர் வழங்கள் சபை அதிகாரச்சட்டம், மற்றும் ஏனைய அதிகாரச்சட்டத்தின் விடயத்திற்கு உட்படுத்தப்பட்டிராத ஆனால் தற்போது காணப்படுகின்ற விடயப்பரப்பிற்குரிய சகல சட்டங்களையும் அமுல்படுத்தல், ஏனைய தொடர்புடைய அமைச்சுக்களுடன் சம்பந்தப்பட்ட விசேட செயற்திட்டங்களிற்கு நடவடிக்கைகள் அமைச்சின் பிரதான செயற்பாடுகளாகும். அமைச்சு, அமைச்சு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்திற்காக மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 50,120 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 44,942 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டிற்குரிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றன.

- அமைச்சின் விடயப் பரப்பில் உள்ளடங்காத அரச நிறுவனங்களுக்கான சீனா அரசினால் முன்னிணைக்கப்பட்ட கட்டிடங்களை இறக்குமதி செய்வதற்கு 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,765.51 மில்லியன் தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 3,765.43 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததெனினும், 2015 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையில் பொருத்தப்பட்டு அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை திருப்திகரமாக பொருத்தப்பட்டதாக நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்பாட்டிற்காக 2014 செப்தெம்பர் 31 வரை மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூபா 8,576.59 மில்லியன் என அவதானிக்கப்பட்டது.

- பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன உத்தேச நடைமுறைகளில் அவசர உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைத்தலிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 12.84 மில்லியன் தொகை அமைச்சினால் சிறிய நீர்க் கட்டமைப்புக்களை நிறுவுவதற்கும் கட்டிடங்களை மீள்திருத்துவதற்காகவும் மகாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியொன்றிற்கு 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இக் கம்பனிக்கு இவ்வாறானதொரு செயற்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு கேள்வி மனு வழிமுறைகளுக்கு புறம்பாக அப் பணிகள் ஒப்படைக்கப்பட்டமையும் மொரகஹந்த, ராஜாங்கனை, திராவிய ஆகிய விவசாயப் பண்ணைகளில் சிறிய நீர் கட்டமைப்பினை நிறுவுவதற்காக அந்த நிதி ஈடுபடுத்தப்பட்டமையும் சர்ச்சைக்குரியதாகும்.

- 2013 மே மாதத்தில் கலைக்கப்பட்ட வீணான சொத்துக்கள் செல்வச் சொத்துக்களை வலுப்படுத்தல் செயற்திட்டத்தின் (PEACE) இரு கணக்காய்வாளர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்படாதிருக்கும் போது மற்றும் குறித்த செயற்திட்டம் சுழற்சியில் இல்லாத போது அமைச்சிற்கு சாத்தியவள ஆய்விற்கென ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்தி ரூபா 630,000 தொகையான சம்பளம் செலுத்தியமை சர்ச்சைக்குரிய கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது.

- வட மாகாணத்தின் கால்வாய் / மொரகஹவந்த / களு கங்கை ஆற்றுப்படுகை அபிவிருத்தி பணிகள் ஆகிய செயற்திட்டங்களின் சாத்தியவள ஆய்விற்காக 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 11.14 மில்லியன் தொகையானது வடமேற்கு மாகாண கால்வாய் செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்விற்காக பயன்படுத்தப்பட்டு அரச செலவினங்கள் தவறுதலாக மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களின் செலவினங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மகாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியால் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இவ் ஒப்பந்த கையளிப்பானது கேள்வி மனு வழிமுறைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- பிரதான மற்றும் மத்திய உத்தேச முறைமைகளை சீர்த்திருத்துவதற்காக அமைச்சிற்கு 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 6.91 மில்லியன் தொகையானது நீர் வழங்கள்

சபையினால் குழாய் கிணறுகளை நிர்மாணித்தல், மீள்திருத்தல் மற்றும் தேசத்திற்கு மகுடம் ஆகியவற்றின் செலவுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

- 1999 ஒக்தோபர் 13 ஆம் திகதிய 1101/9 ஆம் இலக்க சாரதிகள் சேவை நியதிச்சட்டக் கோவையின் 7.2 பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததெனினும், அமைச்சின் செயலாளரினால் 75 சாரதிகள் திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் மேற்குறித்த சாரதிகள் சேவை நியதிச்சட்டத்தின் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வாறானதொரு ஆட்சேர்ப்பானது விண்ணப்பம் கோரல் அரச வர்த்தமானி மூலம் அல்லது திறந்த அறிவித்தலொன்றின் மூலம் அல்லது வேறு பொருத்தமானதொரு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக எந்தவொரு விண்ணப்பத்தாரருக்கும் விண்ணப்பிப்பதற்கு உள்ள சந்தர்ப்பத்தை இழக்க செய்து குறித்த அறிவித்தல் நீர்ப்பாசன திணைக்களத்தின் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்துமாறு செயலாளரால் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் அடிப்படையில் இவ் ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இவ் ஆட்சேர்ப்பு அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் அங்கீகரித்த பொருத்தமான முறையொன்றாக அவதானிக்கப்படவில்லை.

- நீர்ப்பாசன திணைக்களத்தின் அபிவிருத்திப் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 55 மில்லியன் தொகையான மொத்த நிதியேற்பாடும் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அமுல்படுத்த முடியாத செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு மேற்கொண்டு அவற்றை வேறு செயற்திட்டங்களுக்கு மாற்றுதல் சர்ச்சைக்குரிய விடயமாகவிருந்தது.

# வெகுசன ஊடகம்

வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு, நாட்டினுடைய பொது வெகுசன ஊடகத்துறை நிறுவனங்களை நேரடியாகவும், தனியார் வெகுசன ஊடகத்துறை நிறுவனங்களை மறைமுகமாகவும் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்புக்களுடனும் பொதுமக்கள் - தோழமை, அபிவிருத்தி மற்றும் இலவசங்களுக்கிணங்க இனங்காணப்பட்ட இலங்கை வெகுசன ஊடகத்தை ஸ்தாபிப்பதற்காக கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை தயாரித்தல், வசதிகளை வழங்கல், அமுல்படுத்தல், மேற்பார்வை, பின்பற்றல் மற்றும் கடமைகளை பங்களித்தல் போன்றவற்றிற்காக செயற்படுகின்றது. தகவல் திணைக்களம், அரச அச்சிடல் திணைக்களம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், அரச அச்சிடல் கூட்டுத்தாபனம், பத்திரிகை மன்றம், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், செலோன் வரையறுக்கப்பட்ட அசோசியற் கூட்டுத்தாபனம், செலசின், செலோன் வரையறுக்கப்பட்ட பத்திரிகை நிறுவகம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு போன்ற பொது வெகுசன ஊடகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் அமைச்சின் நேரடிமேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றது.

இலத்திரனியல் ஊடகங்கள் மீதும் முறைப்பாடுகள் மேற்கொள்ளல், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் தொடர்பான தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதன் தொடர்புடைய முன்வரைவை தயாரித்தல், ஒலிபரப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தினை தேர்ந்தெடுத்தல், இலங்கையை டிஜிற்றல் தொழில்நுட்பத்திலிருந்து அனலொக் தொழில்நுட்பத்திற்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல், பொதுநிதியானது ஒழுங்கின்மையாக தனியார் தரப்பினருக்கு வெளிப்பாய்ச்சுதலை தவிர்ப்பதற்காக தனியார் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசை உரிமையாளர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக முறைமையொன்றையும் உரிமை சாட்டுதல் முறைமைறொன்றையையும் தயாரித்தல், தயாரித்தல், மின்வட செய்மதி மற்றும் இணையத்தை அடிப்படையாக கொண்டு ரூபவாஹினி நிறுவனங்களோடு தொடர்புடைய புதிய கொள்கைகளை முறைப்படுத்தல், இறக்குமதி செய்யப்பட்ட ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக சாட்டுதல் செய்த வருமானங்களிற்காக காலதாமதமில்லாமல் ஒரு நிதியமொன்றை ஸ்தாபித்தல், தேசிய ஊடகக் கொள்கையொன்றை முறைப்படுத்தலும் ரூபவாஹினி விளம்பரங்களை கட்டுப்படுத்தல் போன்றவற்றால் இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டத்தை திருத்தியமைத்தலிற்காக துறைகளின் மீது அமைச்சின் கவனத்தை செலுத்துவதன் மூலம் பொதுக்கணக்குகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவால் கட்டளைகளை வழங்கப்பட்ட போதிலும் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அமைச்சானது தவறியிருந்தது. இருப்பினும், மின்வட செய்மதி மற்றும் இணையத்தை அடிப்படையாக கொண்ட நிறுவனங்களின் மீது புதிய கொள்கையை முறைப்படுத்தாமல் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக ரூபவாஹினி அலைவரிசையை பேணுவதற்கான உரிமையை 2014 நவம்பரில் வழங்கியிருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட தொலைநாடகங்கள், வர்த்தக நிகழ்ச்சிகள் திரைப்படங்கள் மற்றும் குழந்தைகளிற்காக நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஒளிபரப்புவதற்கு அனுமதி பெறுவதற்காக 2014 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சபை ஆய்விற்காக விஞ்ஞானம் உளவியல் மற்றும் சட்ட பிரிவில் திறைமையுள்ள வளமிக்க மனிதர்கள் கிடைக்காதிருந்ததுடன் குழந்தைகளிற்கான திரைப்படங்கள் மற்றும் கேலிச்சித்திரங்களை ஒளிப்பரப்புவதற்கு அனுமதியை பெற்றுக்கொள்ளும் போது சமூக பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்புடன் எதிர்காலசந்ததியை கருத்திற்கொள்ளவில்லை.

இறக்குமதி செய்யப்பட்ட வர்த்தக விளம்பரங்களை வரிசெலுத்தாமல் ஒளிபரப்பு செய்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் பிரகாரம் 06 அண்ணளவான விளம்பரங்களிலிருந்து ரூபா 3 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

அமைச்சின் கீழுள்ள ரன்மினிரெனா தொலை சினிமா கிராமத்தில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து 2014 இல் ரூபா 52 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. இதில் இந்தியன் திரைப்பட கூட்டுத்தாபனத்திற்கு இலவச வசதிகளை வழங்குவதற்காக ரூபா 47 மில்லியன் நட்டம் ஏற்பட்டது.

## அரசாங்க தகவல் திணைக்களம்

அரசாங்க தகவல் திணைக்களம், சரியான தகவல்களிற்காக பொதுமக்களின் உரிமையை தீர்மானிக்கும் பார்வையுடன் 1941 யூலை 31 இல் இலங்கை அரசியமைப்பால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தை நிர்மாணம் செய்தலிற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 8.6 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் திணைக்களத்தின் ஊடக சமூகத்திலுள்ள மதுபான கடையின் பராமரிப்பிற்கான ரூபா 4.65 மில்லியன் கூட்டுமொத்த தொகையான அறவீட்டினை 2014 பெப்ரவரியிலிருந்து சட்டமா அதிபரினூடாக செயலாற்றும் வெளிநபரிற்காக சாட்டுதல் செய்வதற்கோ 2014 ஆம் ஆண்டிலும் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குமோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

திணைக்களத்தில் ஆராய்ச்சி பிரிவு இருக்கின்ற வேளையில், 02 ஆய்விற்காக ஒரு வெளிநிறுவனத்திற்கு 2014 இல் ரூபா 3.38 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மீது பெறப்பட்ட பெறுபேறானது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

08 தேசிய அலைவரிசைகள், 06 பிராந்திய சேவைகள் மற்றும் 02 சமூக ஒலிபரப்பு சேவைகள் மற்றும் 07 எவ்எம் நிலைமாற்றல் நிலையங்கள், 01 ஊடக அலை நிலைமாற்றல் நிலையம் மற்றும் 01 குறுகிய அலை நிலைமாற்றல் நிலையம் போன்றன இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சேவை வலையில் காணப்பட்ட அதே நேரம் இது 06 தேசிய அலைவரிசையாகவும் 01 சமூக ஒலிபரப்பு சேவையாகவும் 2014 இல் உள்ளவாறு குறைக்கப்பட்டிருந்தது. 2012 இல் ஜேர்மனி அரசாங்கத்திற்கு சொந்தமான டொய்ஸ்செல் றிலேய் நிலையத்தை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்தது.

இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டத்தை திருத்தியமைத்தல கூட்டுத்தாபனத்தின் நிலைமாற்றல் முறைமையானது பொதுவாக திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்தமை, கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படாமை, குழு வேலை முன்னேற்றம் செய்யப்படாமை, தற்போதுள்ள ஊழியர்கள் வேண்டப்பட்டதை விட எஞ்சியிருந்தமை, ஊழியர்களின் திறன்களை மதிப்பீட்டு கடமைகளை கையளிக்காமை, தொழில்நுட்ப உபகரணங்களுக்காக பாரிய தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதும் கூட்டுத்தாபத்தின் குறைபகடுகளால் முறையான முகாமைத்துவம் மேற்கொள்ளப்படாமை மற்றும் இந்த உபகரணங்களை பயன்படுத்துவதற்காக தெளிவான பயிற்சி நடாத்தப்படாமை போன்றவற்றால் கூட்டுத்தாபனத்திற்கு தொடர்ச்சியான நட்டம்

ஏற்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட நட்டங்களுக்காக திறைசேரியால் கூட்டுத்தாபனத்திற்கு இறுதி ஆண்டுகளின் போது ரூபா 1,317 மில்லியன் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையின் தொடர்ச்சியான பின்னடைவானது நிலைத்திருந்தமையால் 2014 இல் இறுதியிலுள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் வங்கி மேலதிகப்பற்று தொகையானது ரூபா 36.7 மில்லியனாக இருந்ததுடன் இதற்கான ஆண்டின்போது 5.7 மில்லியன் தொகையான வட்டி ஆண்டின்போது செலுத்தப்பட்டிருந்தது.

கூட்டுத்தாபனத்தால் உடைமையாக்கப்பட்ட காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணம் செய்யப்பட்டதுடன் காணி சீர்த்திருத்தல் ஆணைக்குழுவினூடாக பங்கெடுத்து செலவழிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய சொத்துக்கள் பயன்பாடற்றும் மற்றும் குறைபயன்பாட்டு நிலையிலும் பேணப்பட்டிருந்ததுடன் சில காணிகளை கூட்டுத்தாபனம் இழந்திருந்ததுடன் உரிமையானது ஏனைய தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

உதாரணமாக வீரகற்றியா நிலைமாற்றல் நிலையத்தின் கட்டிடங்கள் மற்றும் 30 ஏக்கர்கள் பரப்பளவுள்ள காணிகள் மரைன் பல்கலைக்கழகத்தின் இளைஞர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. டியகம இல் அமைந்துள்ள 159 ஏக்கர்கள் காணியில் 19 ஏக்கர்களை மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கும் 25 ஏக்கர்களை விளையாட்டரங்கத்திற்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதியாகவுள்ள 105 ஏக்கர்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

கூட்டுத்தாபனம் 2013 ஆம் ஆண்டில் ரூபா 36 மில்லியன் இலாபத்தை உழைத்திருந்தாலும் 2014 ஆம் ஆண்டில் 175 மில்லியன் நட்டமாக மாற்றப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனம் ஜனாதிபதி தேர்தலின் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ஒரு வேட்பாளருக்கு 34.7 மில்லியனான இலவச ஒலிபரப்பு நேரத்தை வழங்கியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தின் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிதிட்டங்களுக்காக 2.2 மில்லியனான ஒலிபரப்பு நேரத்தை கொடுத்திருந்தது. மேலும் கூட்டுத்தாபனமானது ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய ரூபா 5.2 மில்லியன் பெறுமதியான விளம்பரங்களை விளம்பரப்படுத்துவதற்கு தவறியிருந்தது. இதில், விளம்பரங்களுக்காக ரூபா 10,000,000 பெறுமதியான காசு பெறப்படுகின்ற போது அதே காசு ஒலிபரப்பு நேரம் வழங்கப்படாமையால் மீள செலுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் திசெம்பரில் கொள்வனவு நடைமுறைகளுக்கு முரணாகவும் மற்றும் அவசர அத்தியாவசியதன்மை குறிப்பிட்டு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் உடன்படிக்கையை பெறுவதற்கு அமைச்சரவையால் வழங்கப்பட்ட கட்டளைகளை உதாசீனப்படுத்தி எழுத்துமூல உடன்படிக்கையை மேற்கொள்ளாமல் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக வெளிநாடுகளிலுள்ள ஜாதிக ரூபவாஹினியின் ஒளிபரப்பிற்காக தனியார் அமைப்பிற்கு ரூபா 3.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

கூட்டுத்தாபனத்திற்கு பாதகமான நிபந்தனைகளுடனான உடன்படிக்கையின் பேரில் எதிர்கால தொழில்நுட்ப மாற்றங்களிற்கு பொருத்தமில்லாத இரண்டு பயன்படுத்திய நிலைமாற்றல் கருவிகள் ரூபா 16.93 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

# சட்டமும் ஒழுங்கும்

பொதுமக்களின் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானத்தைப் பேணுவதற்கு தேவையான கொள்கைகள், வழிவகைகளை ஏற்படுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பிடல் என்பன இந்த அமைச்சின் செயற்பாடுகள் என இனங் காணப்பட்டுள்ளன. இலங்கை பொலிஸ் மற்றும் விசேட செயலணிப் பிரிவு என்பன சட்டம் மற்றும் அமைதிக்கான துறையின் கீழ் செயற்படும் நிறுவனங்களாக உள்ளதுடன் அந்த நிறுவனங்களுக்காக நியமங்களுடனான வழிகாட்டல்கள், அந்த நிறுவனங்கள் உயர் நிலையில் செயற்படச் செய்யும் வகையில் தேவையான நவீன தொழில்நுட்ப, பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குதல், வினைத் திறனுடனான மேற்பார்வை மற்றும் செயலாற்றல் மதிப்பீடு என்பன அமைச்சின் செயற்பாட்டு விடயங்களுக்குரியவையாகும்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 01 தொடக்கம் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாக இருந்த ரூபா 6.30 மில்லியன் மீதிகளை அறவிட அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டினுள் பொலிஸ் விசேட செயலணிப்பிரிவிற்கு சொந்தமான 15 வாகனங்களுக்கு நேர்ந்த விபத்துக்களால் இடம்பெற்ற நட்டம் ரூபா 3.9 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த நட்டத்தை அறவிட அல்லது புத்தகங்களில் இருந்து நீக்கிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 01 தொடக்கம் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு நிலுவையாக உள்ள மொத்தம் ரூபா 133.39 மில்லியன் கடன் மீதிகளை அறவிட பொலிஸ் திணைக்களத்திற்கு இயலாதிருந்தது.

- கஞ்சா, அபின், ஹஷீஸ் மற்றும் ஹெரோயின் போன்ற சமூகத்திற்கு பாரிய பயங்கர கேடு விளைவிக்கும் போதைப்பொருட்களை சுற்றிவளைத்தல் 71,215 பொலிஸ் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்டிருந்ததுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டவாறு நூற்றுக்கு 1.2 வீதம் சுற்றிவளைப்பில் அதிகரிப்பு காட்டப்பட்டது.இது தொடர்பாக நடைபெற்ற சுற்றிவளைப்புக்கள் மிகவும் முறையாகவும் வினைத்திறனுடனும் நடத்தவேண்டிதன் அவசியத்தை சமூகத்தின் நல்ல நிலை சுட்டிக்காட்டுகின்றது.

- கொள்வனவு மற்றும் களஞ்சிய செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள் கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டன.

- நி.பி.571க்கு முரணாக ரூபா 66 மில்லியன் தொடர்பான 218 வைப்புகள் மற்றும் ஓய்வூதிய கருமங்களுக்காக கிடைத்த ரூபா 2.8 மில்லியன் தொகை 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களிலிருந்து பொலிஸ் திணைக்கள வைப்புக் கணக்குகளில் இருந்தன.

- 2011 ஆம் ஆண்டில் 18 மாதங்களுள் முடிவுறுத்தல் செய்யப்பட்ட ரூபா 354 மில்லியன் பெறுமதியான 2 நிர்மாண செயற்றிட்டங்களின் நிதிசார் செயற்பாடு 2014 டிசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 184 மில்லியனாக இருந்தது.

# துறைமுக மற்றும் கப்பல் செயற்பாடுகள்

## துறைமுக சேவைகள்

இலங்கை துறைமுக அதிகாரசபையால் நிருவகிக்கப்படுகின்ற பிரதான துறைமுகமாக கொழும்புத் துறைமுகம், கொழும்பு தெற்கு புதிய துறைமுகம், காலித் துறைமுகம், அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகம் என்பவற்றினைக் காண்பிக்க முடியும். இதற்கு மேலதிகமாக துறைமுகமொன்றாக நிர்மாணிக்கப்பட்டிருந்தும் கையாளல் நடவடிக்கைகள் இன்றிய ஒலுவில் துறைமுகம் மற்றும் கப்பல் கையாளல் நடவடிக்கைகளைச் செய்கின்ற காங்கேசன்துறை கப்பல் இறங்குதுறை என்பவற்றிலும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

2014 ஆம் ஆண்டின் போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் கையாளல் நடவடிக்கைகளின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான வேறுபாடுகள்

- 2014 ஆம் ஆண்டின் போது மொத்தத் தேறிய வருமானம் ரூபா 41,088 மில்லியனாக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 7,302 மில்லியனால் அதிகரித்திருந்தது. அது முன்னைய ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடும் போது 21.61 சதவீத அதிகரிப்பாகும்.

- 2014 ஆம் ஆண்டின் மொத்தச் செலவினம் ரூபா 33,139 மில்லியாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் ரூபா 978 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அது 3.04 சதவீத குறைவாகும்.

- 2014 ஆம் ஆண்டின் வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 7,947 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டு இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 6,322 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதனை முன்னைய ஆண்டின் வரிக்குப் பிந்திய இலாபத்துடன் ஒப்பிடும் போது 389 சதவீதத்தினால் வரிக்குப் பிந்திய இலாபத்தில் அதிகரிப்பொன்றைக் காண்பித்ததுடன் அதற்கு வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின் சீராக்கத்தில் ஏற்பட்ட இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 4,077 மில்லியனால் அதிகரித்திருந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

- 2014 ஆம் ஆண்டின்போது இலங்கைக்கு வருகை தந்த மொத்தக் கப்பல்களின் எண்ணிக்கை 5,072 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கப்பல்களின் வருகையின் எண்ணிக்கையில் 5.68 சதவீத அதிகரிப்பாகும்.

- 2014 ஆம் ஆண்டின் போது கையாளப்பட்ட 20 அடி கொள்கலன் அலகுகளின் எண்ணிக்கை ஆயிரங்களில் 2,559 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2.3 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும் பாரம்பரிய கப்பல் சரக்கு கையாளல் 2014 ஆம் ஆண்டின் போது மெட்ரிக் தொன் ஆயிரங்களில் 6,339 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டின் கையாளல்களுடன் ஒப்பிடும் போது 11 - 91 சதவீத அதிகரிப்பாகும்.

திருகோணமலைத் துறைமுகம் 07 வருட காலங்களில் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 2,073 மில்லியனாக இருந்தது.

## கொழும்பு தெற்கு துறைமுகம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் கொழும்புத் துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டமாக கொழும்பு தெற்கு துறைமுகத்தில் நீர் பிரித்தல், கப்பல் நுழையும் வழி மற்றும் துறைமுக தடாகத்தை ஆழமாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 42,055 மில்லியனாக இருந்தது. (உள்நாடு ரூபா 9,876 மில்லியன், வெளிநாடு ரூபா 32,179 மில்லியன்)

எவ்வாறாயினும் கப்பல் இறங்குதுறையை நிர்மாணித்தல் மற்றும் கிரேன் பாரந்தூக்கிகளை பொருத்தி கையாளல் நடவடிக்கைகளைச் செய்து 35 வருடங்களில் மீளக் கையளிக்கும் அடிப்படையில் (BOT)

சீனக் கம்பனியின் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட கொழும்பு சர்வதேச கொள்கலன் இங்குதுறைக் கம்பனி என்ற பெயரில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனியுடன் இலங்கை துறைமுக அதிகாரசபை செய்துகொண்ட உடன்படிக்கையின் படி அந்தக் கம்பனியின் பங்கு மூலதனத்தில் 15 சதவீத பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கும் அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2,860 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் இலாபப் பங்காக எப்பணமும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை.

இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்கு துறைக் கம்பனிக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி கொள்கலன்களுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு இறையில் வாடகை மாத்திரமே கிடைக்கும். கொள்கலன்களுக்காகக் கிடைக்கின்ற இறையில் வாடகை கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டத்திற்கு பெறப்பட்ட கடனுக்கான வட்டி செலுத்துவதற்கும் போதியளவில் பங்களிக்காதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே இலங்கையின் துறைமுகங்களுக்கிடையே பாரியளவில் கப்பல் வருகை தரக்கூடிய ஆழமான தடாகம் நிர்மாணிக்கப்பட்டு 35 வருடகாலத்திற்கு கையாளப்பட்டு கையளிப்பதற்காக சீனக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டமையால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் இறங்குதுறைக்கு கப்பல்களைக் கொண்டுவருவதற்கு அதிக போட்டிக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டிருந்தது.

## அம்பாந்தோட்டை துறைமுகம்

2008 பெப்ரவரி 15 ஆந் திகதி அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாண செயற்திட்டத்தின் முதலாவது கட்ட நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலாவது கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 53,272 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் துறைமுகத்தில் கிரேன் பாரந்தூக்கிகள் பொருத்தப்படாமையினால் கொள்கலன் கையாளல்களைச் செய்ய முடியாதிருந்தமையால் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருகின்ற கப்பல்களின் அளவு அனேகமாக மோட்டார் வாகனங்களைக் கொண்டுவருகின்ற கப்பல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் அமெரிக்க டொலர் 808 மில்லியன் வெளிநாட்டு கடன் பணம் ஈடுபடுத்தப்பட்டு அம்பாந்தோட்டை இரண்டாவது கட்ட துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தில் துறைமுகத்தில் கப்பல் கையாளல் உபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் கையளால் இறங்குதுறை நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 வரையில் அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் I ஆவதும் II ஆவதும் கட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 105,962 மில்லியனாக இருந்ததுடன் 2015 ஏப்ரல் 14 ஆந் திகதி அந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்குத் தேவையான நிதி சீனாவின் EXIM வங்கியில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் துறைமுக நிர்மாணத்திற்கு பெறப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் கடன் தவணை செலுத்துவத்கு போதியளவான வருமானம் உழைக்கப்படாமையால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகளில் அடையப்பட்ட நட்டம் முறையே ரூபா 11.9 மில்லியன் மற்றும் ரூபா 25.5 மில்லியனாக இருந்தன. எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டிற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கையாளல் இலாபம் தனியாக தயாரிக்கப்பட்டிராததுடன் 2014 ஆம் ஆண்டிற்காக இந்த துறைமுகத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்ட நட்டம் ரூபா 3,819 மில்லியனாக இருந்தது.

## ஒலுவில் துறைமுக நிர்மாண செயற்திட்டம்

டென்மார்க் அரசாங்கத்தின் DANIDA முகவரிடமிருந்து கடன் பணம் பெறப்பட்டு ஒலுவில் துறைமுக நிர்மாணம் 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் யூரோ 38.96 மில்லியன் (இலங்கை பணத்தில் ரூபா 6,780 மில்லியன்) தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபை ரூபா 444 மில்லியன் செலவிட்டிருந்தது. அதன்படி ஒலுவில் கப்பல் மற்றும் மீன்பிடி துறைமுகங்கள் வெவ்வேறாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒலுவில் துறைமுகம் மிகவும் குறைந்த ஆழம் அதாவது 8 மீற்றர் மாத்திரம் ஆழமமான துறைமுகமானமையால் மிகச் சிறிய கப்பல்களே வருகை தர முடியும் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், ஒலுவில் துறைமுகத்திற்காக நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் எதிர்வரும் 10 வருடங்களில் மீளச் செலுத்த வேண்டியமையையும் அந்த துறைமுகத்தில் குறைந்த வருமானத்தில் துறைமுக கையாளல் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக பாரியளவிலான செலவினத்தைச் செய்வதற்கு ஏற்பட்டமையினையும் கருத்தில் கொள்ளும் போது பெறப்பட்ட வெளிநாட்டுக்

கடனுக்காக தவணைப் பணம் மீளச் செலுத்தும் போது துறைமுக அதிகாரசபைக்கு நிதிக் கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க முடியாது என்பதைப் புறந்தள்ள முடியாதிருந்தது. எவ்வாறாயினும் ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்பட்டதன் பின்னர் எவ்வித கப்பலும் இந்த துறைமுகத்திற்கு வருகை தராதிருந்ததுடன் தற்போது ஒலுவில் துறைமுகத்தில் மணல் குவிந்துள்ளமையால் மீளத் திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## கப்பல் நடவடிக்கைகள்

### வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

1983 ஆம் ஆண்டு வரையில் 17 கப்பல்களுக்குச் சொந்தமாக இருந்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டு வரையில் ஒரு கப்பலேனும் உரித்தின்றி தமது கையாளல் நடவடிக்கைகளை பேணிச் செல்கின்றது. பிரதானமாக வாடகை அடிப்படையில் கப்பல்களைப் பெற்று போக்குவரத்து நடவடிக்கைகளை செய்கின்றமையால் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் கையால் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கிருந்த தேவை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 2011 ஆம் அண்டில் காணப்பட்ட ஒரேயொரு கப்பலும் தனியாார் கம்பனிக்கு வாடகை வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலும் வாடகைக்குப் பெற்ற தனியார் கம்பனி வாடகைக் கட்டணத்தைச் செலுத்தாதிருந்ததுடன் அதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடவேண்டியிருந்த பணம் அரூபா 87.6 மில்லியன் ஆகும். அவ்வாறே வாடகைக்குப் பெற்ற கம்பனி கென்யாவின் துறைமுகமொன்றில் கப்பலை நிறுத்தி வைத்து அந்தத் துறைமுகத்தின் கப்பல் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்களைச் செலுத்தாமையினால் கப்பல் கென்யா அரசாங்கத்தின் நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கென்யாவிலிருந்து கப்பலை விடுவித்துக் கொள்வதற்கு துறைமுகக் கட்டணம், சட்டக் கட்டணம் மற்றும் கப்பல் பதவியணியினருக்கான சம்பளம், படிகள் செலுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 57.42 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அத்தொகையினையும் வாடகைக்குப் பெற்ற கம்பனி செலுத்தியிருக்கவில்லை.

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான வரையறுக்கப்பட்ட சிலோன் சிப்பிங் லைன் கம்பனி 1992 ஆம் ஆண்டின் போது மக்கள் மயப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது கம்பனியின் பங்கு மூலதனத்தில் 51 சதவீதம் சீ என்ட் ஏ கன்சல்டன் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் பங்கு மூலதனத்தில் 39 சதவீத்தை வரையறுத்த கப்பல் கூட்டுத்தாபனம் சேமித்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வரையறுத்த இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் ரூபா 255 மில்லியன் தொகையை துணை மற்றும் அண்மித்த கம்பனிகளில் முதலீடு செய்திருந்த போதிலும் அந்தக் கம்பனிகளிலிருந்து பங்கு முதலீட்டில் கிடைத்த பங்கிலாப வருமானம் ரூபா 300,000 ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

# வீதிகளின் நிர்மாணங்கள் மற்றும் புனரமைப்பு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி பாதுகாப்பு நிதியம், மகநெகும மதிரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் கம்பனி, மகநெகும இமல்ஷன் உற்பத்திக் தனியார் கம்பனி, மகநெகும வீதி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரணக் கம்பனி, வியாபார கப்பல் செயலகம், இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பன 2014 ஆம் ஆண்டில் இந்த அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் அமைச்சின் மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபா 361.6 மில்லியனும் மீண்டுவரும் செலவினத்திற்காக ரூபா 143,903.76 மில்லியனுமாக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 91,605 மில்லியன் வெளிநாட்டுக் கடனாக இருந்ததுடன், ரூபா 1,994 மில்லியன் வெளிநாட்டு மானியங்களும் ரூபா 52,282.66 தொகை உள்நாட்டுச் செயற்திட்டங்களுக்காக ஈடுபடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. கணக்கின் பிரகாரம் ஆண்டின் போது ரூபா 361.39 மீண்டெழும் செலவினமாகவும் ரூபா 132,942 மூலதனச் செலவினமாகவும் செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் 88,097 வெளிநாட்டுக் கடன் மற்றும் மானியங்களாக கிடைக்கப்பெற்றிருந்தது. இவ்வருடத்தினுள் மொத்த பதவியணியினர் 396 ஆக இருந்தனர். 2014 ஆம் ஆண்டில் அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் கடன் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 37 ஆக இருந்தது. அதற்காக ஆண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கடன் ரூபா 93,599 மில்லியன் மற்றும் அனைத்து செயற்திட்டங்களுக்காகவும் செலவிடப்பட்ட வெளிநாட்டுக் கடனின் அளவு ரூபா 88,098 ஆக இருந்தது. மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட வெளிநாட்டுச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 06 ஆக அறிக்கையிடப்பட்டிருந்தது.

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்குகளின் கணக்காய்வின் போது அமைச்சு மற்றும் அதன் கீழான ஏனைய நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட முக்கியமான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு தனது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது 54 செலவின விடயங்களுக்காக தேறிய ஏற்பாட்டை மிகைத்து ரூபா 53.5 மில்லியன் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இது அவ்வமைச்சின் 2014 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதிஏற்பாட்டின் 37 சதவீதத்தை கொண்டிருந்ததுடன், 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாட்டில் ரூபா 378.6 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரைக்கு முரணாக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் இல்லாமல் உள்ள ஏற்பாடுகளுக்கமைய வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகையில் ரூபா 7.86 பில்லியன் தொகை துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் 79 உயர்மட்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்களும் பொறியியலாளர் சேவையில் 651 உத்தியோகத்தர்களும் தொழில்நுட்ப சேவையில் 886 உத்தியோகத்தர்களும் உட்பட

மொத்தப் பதவியணியினர் 5,964 ஐக் கொண்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிகாரசபையின் பற்றாக்குறை ரூபா 4,962.6 மில்லியன் ஆக இருந்ததுடன், வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக திறைசேரியால் ரூபா 21,432.6 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் அதிவேக நெடுஞ்சாலை மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,156.4 மில்லியனாக இருந்தது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கம்பனிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இணைந்த கம்பனியான மகநெகும இமல்ஷன் நிர்மாணக் தனியார் கம்பனி, மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் கம்பனி, அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் கட்டளையின் கீழ் செயற்படுத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களின் மூலம் அதிவேக நெடுஞ்சாலை வீதிகள், பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் நிர்மாணித்தல், அவற்றை புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டின் அவதானிக்கப்பட்ட முக்கியமான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- மீளாய்வாண்டிற்காக அதிகாரசபை கணக்காய்விற்காக 1 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அதிகாரசபையினால் வெவ்வேறு தரப்பினரிடமிருந்து அறவிடப்படப்படாதிருந்த ரூபா 3,014.91 ஆன கடன்பட்டோர் மீதிகளையும் அதிகாரசபையால் 1 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் செலுத்தப்படாத ரூபா 1,492.38 மில்லியன் ஆன கடன்கொடுத்தோர் மீதிகளையும் மீளாய்வாண்டினுள் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காணப்படும் 1434 கி.மீ. ஆன 64 வீதிகளைப் புனரமைப்பதற்கு உள்நாட்டு வங்கிகள் மூலம் ரூபா 151.77 ஆன கடன் தொகை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 64 வீதிகளைப் புனரமைப்பதற்காக ரூபா 137.52 பில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 07 உள்நாட்டு வங்கிகள் மூலம் அவ்வீதிகளைப் புனரமைப்பதற்காக பணமாகப் பெற்றுக்கொண்ட கடன் தொகை ரூபா 108.25 மில்லியனாக இருந்தது. தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலை அடிப்படையில் இவ் ஒப்பந்தங்கள் நேரடியாக வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகளுக்கு மேற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இவ்வாறு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இடையே 54 வீதிகளுக்காக அமைச்சின் தொழில்நுட்ப குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ரூபா 146.55 பில்லியனான ஒப்பந்த பெறுமதி அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவால் 9.24 பில்லியன் பெறுமதியால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மேற்படி அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை ரூபா 55.37 பில்லினாக இருந்ததுடன், மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வழங்கப்பட்ட 64 வீதி ஒப்பந்தங்களின் கீழ் 28 வீதிகளைப் புனரமைப்பதற்காக 28 பில்லியன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெற்றுக்கொள்ளப்பட்டு அப்பணத்தை வீதிகள் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையினாலும் அமைச்சினாலும் செலவிடப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சரவையினதும் திறைசேரியினதும் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டில் 141 வீதிகளை விரிவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்குமாக ரூபா 16,238 மில்லியன் ஏற்பாட்டை அதற்காக செலவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 33 வீதிகளுக்காக ஏற்பாடு செய்யப்படாதிருந்த போதிலும், ரூபா 2,757 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் அதிகாரசபைக்கு உரித்தில்லாத 900 (Non RDA) வீதிகளை விரிவுபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமாக ரூபா 38,519 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ரூபா 5,319 மில்லியன் செலவு செய்து அதிகாரசபைக்குரிய 61 வீதிகளும் ரூபா 16,503 மில்லியன் செலவு செய்து அதிகாரசபைக்கு உரித்தில்லாத 234 வீதிகளின் விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றின் செயன்முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

- 2006-2014 ஆம் ஆண்டினுள் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 5,891.05 மில்லியன் பெறுமதியான மதிப்பிடப்பட்ட ஒப்பந்த வேலை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியல் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அதிகாரசபையின் 50 வீதி புனரமைப்பு செயற்திட்டங்களுக்காக ரூபா 705.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரரின் தாமதம், பலவீனமான செயலாற்றல், நிதியம் பற்றாக்குறையாக இருந்தமை மற்றும் அதிகாரசபைக்கு உரித்தில்லாத வீதிகளாக இருந்ததன் காரணமாக அச்செயற்திட்டங்களின் வேலை இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2014 ஆம் ஆண்டின் பராமரிப்பு வேலைத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த 186 வீதிகளைப் பராமரிப்பதற்காக ரூபா 493.83 மில்லியன் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாதிருந்த அதிகாரசபைக்கு உரித்தில்லாத 281 வீதிகளின் (Non RDA) வீதிப் பராமரிப்பிற்காக ரூபா 1,248.14 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2004 முதல் 2007 வரையான காலப்பகுதியில் மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள், பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் என்பவற்றிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 63.27 மில்லியன் மகநெகும கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களுக்காக 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 488.86 மில்லியன் தொகையான வாகனத்திற்குரிய வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மகநெகும கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள எனினும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 20 வாகனங்கள் அதிகாரசபைக்கு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- பட்டியல் மற்றும் செய்யப்பட்ட வேலைகளுக்கு அளவீடுகளை சமர்ப்பித்ததன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 55 சந்தர்ப்பங்களில் பட்டியல் மற்றும் செய்யப்பட்ட வேலைகளுக்கு அளவீடுகளைப் பரீட்சிக்காமல் மகநெகும கம்பனிக்கு ரூபா 6,126.37 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்தது.

## பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு – செயற்திட்டங்கள் (வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் அடிப்படையில்)

- மீளாய்வாண்டில் 06 செயற்திட்டங்களுக்குரிய கையேற்கப்பட்ட 1,165.4 ஏக்கர் ஹெடேயர் அளவிலான காணிக்காக இழப்பீடாக ரூபா 10,068.30 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பாக தாமதம் காரணமாக ரூபா 1384.97 மில்லியன் வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- அதிவேக நெடுஞ்சாலை மற்றும் ஏனைய பிரதான வீதிகளை நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியங்களை ஈடுபடுத்தி தாபிக்கப்பட்ட 10 செயற்திட்டங்களின் ஆரம்ப ஒப்பந்தக் கிரயத்திற்கு மேலதிகமாக நியமிக்கப்பட்ட நடைமுறைகளுக்குப் புறம்பாக 166 விலகல் கட்டளை மூலம் ரூபா 4,953.83 மில்லியன் மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்டிருந்தது.

- வெளிச்சுற்று வீதி செயற்திட்டம் 2 இன் மீளாய்வாண்டில் பயன்படுத்துகைக்காக கடன் வழங்கப்படும் நிறுவகத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவு குறிப்பிட்ட காலப்பகுதியில் பயன்படுத்தப்படாமையால் அக்கடனை வழங்கிய நிறுவனத்தினால் ரூபா 803.94 மில்லியன் ஈடுபாட்டுக் கட்டணம் (Commitment Charges) அறவிடப்பட்டிருந்தது.

- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன் மூலம் வீதி நிர்மாணத்திற்காக உருவாக்கப்பட்ட 03 செயற்திட்டங்களினால் அச்செயற்திட்டங்களுக்குரிய நோக்கத்திலிருந்து விலகிய நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 161.33 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன்,

அவ்வாறான 10 செயற்திட்டங்களினால் அச்செயற்திட்ட நிதியிலிருந்து ரூபா 1,542 மில்லியன் சிக்கனமற்ற நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தன.

- கொழும்பு சுற்றுவட்ட வீதி I ஆம் செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் தரத்தை ஒப்பந்தக்காரராலேயே பாதுகாக்க வேண்டுமென்ற ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு முறைப்படி ஒப்பந்தக்காரரால் நிறைவேற்றப்படாமையால் செயற்திட்டத்தினால் நிர்மாணங்களின் தரத்தைப் பாதுகாப்பதற்காக ரூபா 7.22 மில்லியன் மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்டிருந்தது.

- 05 செயற்திட்டங்களுக்குரிய செலுத்த வேண்டிய பட்டியல்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யாமையால் அதற்காக ரூபா 204.09 மில்லியன் தாமதக் கட்டணமாக செலுத்த வேண்டியேற்பட்டது.

- அமைச்சின் கீழ் சகல வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு பதவியணியினரைச் சேர்த்தல் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சம்பளக் கொடுப்பனவின் போது சுற்றறிக்கைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் கூடுதலான படிகள் மற்றும் சம்பளங்கள் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன.

- மீளாய்வாண்டினுள் கேள்வி நடைமுறைகளிலிருந்து விலகி 02 செயற்திட்டங்களுக்கு ரூபா 46,925.40 மில்லியனான நிர்மாணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் செயற்திட்டமொன்று ரூபா 119.26 மில்லியன் செலவு செய்து ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகளுக்காக 11 மதியுரையாளர்கள் கேள்வி நடைமுறைக்குப் புறம்பாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- கடுவெலயிலிருந்து கடவத்த (8 கி.மீ) (II ஆம் கட்டம்) வரை வீதியின் நிர்மாண நடவடிக்கைகளுக்குரிய ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 62.041 மில்லியன் ஆன கேள்வி, ரூபா 31.334 மில்லியனான பொறியியல் மதிப்பீட்டை மிகைத்து இருந்தமையால் இந்த ஒப்பந்த வழங்கல் செல்லுபடியற்றதாக்குவதற்கு 2010 ஒக்தோபர் 06 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பின்னர் அக்கேள்வி ரூபா 44.88 பில்லியன் வரை குறைக்கப்பட்டு 2011 நவம்பர் 23 ஆம் திகதி அந்த ஒப்பந்தக்காரருக்கே வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பொறியியலாளர் மதிப்படோ அல்லது விலை குறைக்கப்பட்ட கேள்விக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை விபரங்கள் மேற்பார்வை நடவடிக்கைகள் தொடர்பான மதியுரை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்படாதிருந்தும் மாற்றப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி அமைச்சரவையால் 2011 பெப்ரவரி 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தத.

- வீதிகளுடன் அண்மித்த உதவிச் செயற்திட்டங்களின் கீழ் வீதி விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தல் செய்யப்படும் வீதிகளில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குரிய நீர்க்குழாய் முறைமைகள் மீள்த் தாபிப்பதற்காக 2 வருடங்களுக்கு முன்னர் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 84 மில்லியன் பெறுமதியான பாவனைக்காக எடுக்கப்படாத நீர்க் குழாய்கள் மற்றும் உபபாகங்கள் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், தேசயி பெருந்தெருக்களுடன் அண்மித்த செயற்திட்டத்தின் மூலம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உரிய நீர்க்குழாய் முறைய மீள் நிர்மாணிப்பதற்காக ரூபா 74.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இம்மூலதனச் செலவினம் செயற்திட்டத்தின் விடயப் பரப்பிற்குள் எடுக்கப்படாத செலவினமொன்றாக இருந்ததுடன், குறித்த நிறுவனங்களால் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# கைத்தொழில் மற்றும் தொழிற் கல்வி

உலகளாவிய ரீதியில் மாறிவரும் சமூக பொருளாதார மற்றும் தொழில் நுட்ப தேவைப்பாடுகளின் சவால்களை எதிர்கொள்வதற்கு, பண்புள்ள தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி மூலம் மிகவும் உயரிய வாழ்வாதாரமொன்றினை நோக்கி நிபுணத்துவம் மற்றும் செயற்திறனுடைய மானுட சக்தியினை உருவாக்குவதற்காக தொழில்ரீதியான கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் செயற்திட்டங்களுக்கான வழிகாட்டல், மேற்பார்வை மற்றும் இணைப்புச் செய்தல் தேவைப்பாடுகளை இனங்காணல் மற்றும் அத் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான முழுநேர மற்றும் பகுதிநேர நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல், அந் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான மதியுரை வளங்களை தயாரித்தல் மற்றும் அவற்றை அமுல்படுத்தல் கல்வியினை விளைவுடையதும் செயற்திறனுடையதுமாக நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிரியர் நிர்வாகத்தினர் மற்றும் முகாமையாளர்கள் உள்ளடக்களான பதவியணியினை அபிவிருத்தி செய்தலையும் நோக்காகக் கொண்டு கைத்தொழில் மற்றும் தொழில் கல்வி நிறுவகம் தாபிக்கப்பட்டுள்ளது.

## தொழிற் கல்வி பயிற்சியளித்தல் திணைக்களம்

2014 ஆம் ஆண்டிற்காக தொழிற் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடானது ரூபா 1,543 மில்லியனானதுடன், உள்ளவாறான செலவினமானது ரூபா 1,500 ஆனமையால் ரூபா 42.5 மில்லியனான சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் திணைக்களத்தின் கீழ் 09 தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் 30 கைத்தொழில் கல்லூரிகள் காணப்படுவதுடன் 2014 ஆம் ஆண்டில் 85 பாடநெறிகள் பூர்த்தி செய்திருக்க வேண்டியிருந்தது. நடாத்தப்பட்ட 679 பாடநெறிகளில் 2014 ஆம் ஆண்டினுள் 341 பாடநெறிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## தொழில் பயிற்சி அதிகாரசபை

தொழில் பயிற்சி மற்றும் கல்வித் துறையில் நவீன முறையில் மற்றும் தொழில்நுட்பம் மூலம் மக்களின் நிபுணத்துவத்தினை அபிவிருத்தி செய்து உலகளாவிய மனிதவள தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வதன் பொருட்டு செயற்படும் தொழில் பயிற்சி அதிகாரசபைக்குரிய ரூபா 1,703.75 மில்லியன் பெறுமதியான காணிகளின் உரித்தானது உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. நடமாடும் தொலைபேசி இணைப்பினை பெற்றிராத 477 ஊழியர்களுக்கு அவ் வசதியினை வழங்கி மீளாய்வாண்டினுள் ரூபா 3.78 மில்லியன் தொகையும் முன்னைய ஆண்டில் ரூபா 3.22 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அதிகாரசபைக்கு சொந்தமான கெப் வண்டியொன்று 2003 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் ரூபா 556,000 தொகையான நட்டத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 20(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் பயிற்சி அபிவிருத்தி நிதியமொன்றினை தாபிப்பதற்கு இயலுமாயிருந்ததெனினும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளுக்கு முரணாக பயிலுநர் ஒருவரிடம் ரூபா 500 வீதம் அறவிட்டு காப்புறுதி நிதியமொன்றுக்காக மீளாய்வாண்டில் ரூபா 12.34 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தெனினும் அந்த பணம் அந்த நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் அமைச்சரவையின் அங்கீகாரமின்றியும்

தனியாார் கம்பனியொன்று முறையற்ற விதத்தில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2013 திசெம்பர் 18 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்தது.

திறன் விருத்தி செயற்திட்டம் மூலம் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு ரூபா 97.75 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள், பாடநெறிகளை பூர்த்தி செய்யும் நோக்கில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் உபகரணங்களை வழங்குவதற்கு திட்டமொன்றில்லாமல் மத்திய நிலையங்களுக்கு உபகரணங்களை வழங்குதல், தேவையான அளவினை விட பாரிய அளவிலான உபகரணங்களை வழங்குதல், அவ் உபகரணங்களை வேறுபடுத்தி இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்காமை, மீள்திருத்தம் செய்யக்கூடிய நிலையிலுள்ள உபகரணங்களை அகற்றி புதிதாக வழங்குதல், சிறந்த நிலையிலுள்ள உபகரணங்கள் இருக்குமிடத்து மீண்டும் உபகரணங்களை வழங்குதல், களஞ்சியத்திலிருந்து விடுவிக்கப்பட்ட உபகரணங்கள் குறித்த மத்திய நிலையங்களுக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிராமை, உபகரணங்களை விடுவித்தல் தொடர்பில் இருப்பு அட்டைகளில் பதிவு செய்யாமை மற்றும் இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாமை, பயிற்சி உபகரணங்களில் அநேகமான உபகரணங்கள் பாவனைக்குட்படுத்தப்படாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை

தொழிற்துறையின் தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான முறையில் இளைஞர் யுவதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபை செயற்படுகின்றது. எவ்வாறெனினும், அதிகாரசபையின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பிலான உயரிய பொறுப்பு வாய்ந்த பணிப்பாளர் (நிதி) பதவிக்காக நிதி மோசடியொன்று தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு பணி நிறுத்தத்திற்குட்பட்ட நபரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். மேலும் இவ் உத்தியோகத்தர் நன்னடத்தை காலப்பகுதியில் இருக்கும் போது இரு சந்தர்ப்பங்களில் வெளிநாடு செல்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்காக ரூபா 921,102 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

நடமாடும் தொலைபேசி இணைப்பு பெற்றிராத 410 ஊழியர்களுக்கு அவ் வசதியினை பெற்றுக் கொடுப்பதற்கு மீளாய்வாண்டினுள் ரூபா 4.92 மில்லியன் தொகையும் முன்னைய ஆண்டுகளில் ரூபா 2.78 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அங்கீகாரமின்றி ரூபா 2.7 மில்லியன் தொகை நன்கொடை மற்றும் வெகுமதிகளாக வழங்கப்பட்டிருந்தது. திறன் விருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1.46 மில்லியன் தொகையான பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிராததுடன் ரூபா 8.89 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் காணாமற்போயிருந்தன. அவ்வாறே அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக கேள்வி கோரலொன்று இல்லாமல் 07 சந்தர்ப்பங்களில் ரூபா 44.81 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு

சவால்கள் நிறைந்த உலக வியாபாரத் தேவைகள் மற்றும் சமூக பொருளாதார நோக்கங்களை அடையும் செயற்திறனான வினைதிறனுடைய குணநலன்களைக் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி முறைமையொன்றினை நிறுவி நடாத்திச் செல்வதற்கு செயற்படும் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு 03 அரச துறை நிறுவனங்களுக்கும் 06 தனியார் துறை நிறுவனங்களுக்கும் மற்றும் பாதிப்பிற்குள்ளாகிய இளைஞர் யுவதிகளுக்காக பாடநெறிகளை நடாத்திச் செல்லும் நிறுவனமொன்றிற்கு மீளாய்வாண்டில் ரூபா 4.34 மில்லியன் தொகை நிதியுதவியாக வழங்கப்பட்டிருந்ததெனினும், அந்

நிறுவனங்களின் ஒப்பந்தங்களின் பிரகாரம் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழினை வழங்குவதற்குரியவாறு பாடநெறிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. கைத்தொழில் மற்றும் தொழில் கல்வி பயிற்சியளிக்கும் பிரிவு தொடர்பில் மேற்கொள்ளப்படும் 02 ஆய்வுகளுக்காக ரூபா 3,301,708 செலுத்தப்பட்டிருந்ததெனினும் மீளாய்வாண்டில் அவை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

### தொழிற் தகைமைகள் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

2008 இல் 31 ஆம் இலக்க பாராளமன்ற அதிகாரச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட தொழிற் தகைமைகள் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மூலம் இடை நிலை தொழில்களுக்காக கைத்தொழில் மற்றும் தொழில் கல்வி வழங்கப்பட்டுள்ளவர்களுக்கு உயர் கல்வித் தகைமைகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தற்போது தேசிய தொழில் தகைமை ((NVQ) கட்டமைப்பின் ஏழாவது நிலை, அதாவது தொழில்நுட்ப பட்டம் பல்கலைக்கழகம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாடுபூராகவும் வியாபித்துள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களில் அல்லது ஏனைய தொழில் தகைமை பாடநெறிகளை நடாத்தும் நிறுவனங்களில் NVQ நிலையில் 5 அல்லது 6 சித்தியடைந்தவர்கள் மற்றும் இடைநிலை கைத்தொழில் கலைஞர்களை உருவாக்கும் NVQ அல்லாத பாடநெறிகளை பின்தொடர்ந்த டிப்ளோமாதாரர்கள் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி விண்ணப்பத்தாரர்களாக இணைத்துக்கொள்ள தகைமை பெறுகின்றனர். தொழில் தகைமை தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தின் 2010/2013 கல்வியாண்டிற்காக இணைத்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 222 ஆகும். இம் மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா 2014 திசெம்பர் 22 ஆம் திகதி நடாத்தப்பட்டது. இதன் போது பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 43 சதவீதமாகும்.

2013 ஆகஸ்ட் 02 திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின், வியாபார மற்றும் முதலீட்டு சுற்றறிக்கையின் 01/2013 ஆம் 01.02 (III) பிரிவின் பிரகாரம், தகைமை பெறும் பதவியொன்றிற்கு அல்லது சிரேஷ்ட நிலை வேதன முறைமைக்கு பிரத்தியேகமாகும் வகையின் அல்லது மிகைப்பணி அடிப்படையில் நியமிக்கப்பட்ட வேதனமொன்று வழங்கப்பட்டுள்ள அல்லது உத்தியோகத்தர்களுக்கு சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்திற்காக உரித்து இல்லாமை குறிப்பிடப்பட்டிருந்ததெனினும் வைத்திருப்பவருக்கு பிரத்தியேகமாகும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ள 08 சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்காக சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சின் செயலாளர் முறையற்ற விதத்தில் செயற்பட்டிருந்தார். அவ்வாறே அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வழங்கப்பட்ட சலுகை அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களுக்காக அரசினால் வழங்கப்பட்ட ரூபா 32.93 மில்லியன் தொகையான வரி விலக்களிப்பு கொடுப்பனவினை மீள அரசிற்கு பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# அனர்த்த முகாமைத்துவம்

இலங்கையில் இயற்கை மற்றும் மானிட செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை செயற்திறனாக தவிர்ப்பதற்கும் குறைப்பதினூடாக முறையான மற்றும் அபிமானத்திற்குரிய மனித வாழ்க்கைக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இச்செயற்பாட்டிற்காக அமைச்சின் கீழ் தேசிய அனர்த்த நிவாரன சேவைகள் முகாமைத்துவ நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம், போன்ற நிறுவனங்கள் செயற்படுகின்றன. 2014 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டினூடாக மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 836 மில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,894 மில்லியனுமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த நிறுவகங்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களின் பொழிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- அமைச்சில் காணப்படும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு, 1993 செப்தெம்பர் 29 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருந்ததுடன், அது நாட்டில் இயற்கை அனர்த்த வலயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்கள் தொடர்பாக கட்டளை வழங்கும் முறையான அதிகாரத்தைக் கொண்டுள்ள நிறுவனமொன்றாக பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் மூலம் தாபிப்பதற்கு போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இடருடன் கூடிய வலயங்களில் செய்யப்படுகின்ற நிர்மாணங்கள் தொடர்பான அமைப்புக்களினால் வழங்கப்படுகின்ற கட்டளைகளின் செல்லுபடித் தன்மை சர்சைக்குரியதாக இருந்தது.

- 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை வினைத்திறனாக செயற்படுத்துவதற்காக அமைச்சிற்குள்ள அதிகாரங்களை முறைப்படுத்தும் நோக்கில் இந்த அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. உரிய திருத்தங்களுக்கான சட்ட வரைவுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2014 யூன் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த திருத்திய வரைவு அதிகாரச்சட்டம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெறவில்லை.
- அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 72.47 மில்லியன் பெறுமதியான உபகரணங்களுடன் கூடிய தகவல் தொடர்பாடல் நிலையமொன்று பாதுக்க பிரதேசத்தில் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிலையம் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆகஸ்ட் 31 வரை செயற்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- சமர்ப்பிக்கப்படுகின்ற வானிலை எதிர்வுகூறல் தொடர்பான சரியானதன்மை தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் அவ்வப்போது விமர்சனத்திற்குட்பட்டிருந்த போதிலும், 2008 ஆம் ஆண்டின் போது உலக வானிலை நிலையத்தின் மதியுரையின் பேரில் ரூபா 360 மில்லியன் செலவு செய்து தெனியாய நகரில் தாபிக்கப்பட்டிருந்த டொப்ளர் ரேடார் முறைமையை 2015 ஆகஸ்ட் 31 வரை யிலும் திணைக்களத்தினால் வானிலை தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு 2014 ஆண்டின் போது இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் 139 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 60.15 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 வீடுகளின் நடவடிக்கைகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

# பொருளாதார அபிவிருத்தி

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதான செயற்பாடான வறுமையை நீக்குதல், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிராமிய மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல், ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 85,879 மில்லியன் தொகையான தேறிய நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 85,705 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

- நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் அமைச்சின் 01 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்தில் ரூபா 29 மில்லியன் தொகையான மூலதன நிதிஏற்பாடு சேமிப்பு இலக்கம் 02 நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதனச் செலவினத்திற்காக மாற்றப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டு உதவிப்பண விபரம் மற்றும் நேரடி வெளிநாட்டுதவிப் பண விபரத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 2,620 மில்லியன் ஒன்றிணைந்த நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கமநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறே திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தில் மீண்டெழும் நிதி ஏற்பாடு ரூபா 9 மில்லியன் மூலதனத் தன்மையிலான சொத்துக்களை கைப்பற்றுவதற்காக செலவிடப்பட்டிருந்தது.

- அபிவிருத்தி செயற்திட்டத் திட்டத்திற்காக அமைச்சினால் மாவட்டச் செயலகங்களுக்கும் ஏனைய அமைச்சுக்களுக்கும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 11 பிரதேச செயலாகங்களினால் ரூபா 247 மில்லியன் பெறுமதியான 9,548 காசோலைகள் வரையப்பட்டிருந்தும் அக்காசோலைகள் உரியவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அந்தப் பெறுமதி ஆண்டிற்குரிய கொடுப்பனவாக அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

- அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற கிராமிய பாலம் செயற்திட்டம் மற்றும் பிரச்சினைகளால் பாதிப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களின் அவசர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டிற்குரிய திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அரச கடன் முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் முறையே ரூபா 14 மில்லியன் மற்றும் ரூபா 24 மில்லியன் 2014 ஆம் ஆண்டில் அமைச்சின் செலவினத் தலைப்பில் எஞ்சிய நிதி ஏற்பாடு காணப்படாமையினால் எனக் குறிப்பிட்டு 2014 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது கிராமிய பால செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டில் ரூபா 119 மில்லியன் மற்றும் பிரச்சினைகளால் சேதத்திற்குட்பட்ட பிரதேசங்களில் அவசர அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டில் ரூபா 380 மில்லியன் வீரமன் நடைமுறையின் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

- அமைச்சின் கீழுள்ள மூன்று செயற்திட்டங்களுக்கு மாத்திரம் உரியதாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது கடமைகளை மேவுகைசெய்யும் அடிப்படையில் செயற்திட்டக் கடமைகளைச் செய்கின்ற உத்தியோகத்தரினால் உத்தியோகத்தரொருவருக்கு ஒரு தடவை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு உரித்தாகக் காணப்படுகின்ற 5 சதவீதம் மற்றும் 15 சதவீதம் படியான விஷேட படிகள் உள்ளபடியான பதவிக்குரிய சம்பளத்துடனும் செயற்திட்ட படிகளும் ஆக இரண்டு

சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மூன்று செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட படிகள் ரூபா 3 மில்லியனாகும்.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து நுவரெலிய மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவிற்கு நியமிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு அந்தப் பிரிவில் சேவையாற்றாத பொதுமக்கள் பிரதிநிதிக்கு சேவையை வழங்கி 2010 – 2014 காலப்பகுதியில் ரூபா 1 மில்லியன் சம்பளமாக மாவட்ட செயலகத்திலிருந்து பெறப்பட்டிருந்தது.

- வெளிநாட்டு உதவிச் செயற்திட்டமான கிராமிய பால செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 210 பாலங்களை திறந்துவைப்பதற்கும் 1,000 புதிய பாலங்களைக் கட்டியெழுப்பும் வேலைகள் ஆரம்பிப்பது தொடர்பாகவும் 09 உள்ளூர் பத்திரிகைகளில் முழுமையான பக்கமொன்றில் அறிவித்தலை பிரசுரிப்பதற்காக ரூபா 3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தேர்தல்கள் ஆணையாளரின் ஆலோசனைகளுக்கு முரணாக முன்னாள் சனாதிபதி வேட்பாளரின் நிரற்படமொன்றை உள்ளடக்கி இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் செயல்முன்னேற்ற அறிகையின்படி இந்த 210 பாலங்களில் அனேகமான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 1000 பாலங்களுக்கு ஆரம்ப உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

- தேர்தல் ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக 8 சந்தர்ப்பங்களின் போது சனாதிபதி தேர்தல் வேட்பாளரின் மேம்பாட்டிற்குரிய காரணமாகவுள்ள செயற்பாடுகளுக்காக திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தால் ரூபா 3 பில்லியன் பெறுமதியான பல்வேறு பொருள் வகைகளைப் பகிர்ந்தளித்தல், உதவிமானியக் கடன், உதவிகளை வழங்குதல் மற்றும் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தை தாபித்தல்

- 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2014 சனவரி 03 ஆந் திகதி 1843/4 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் 2014 சனவரி 03 ஆந் திகதி முதல் அமுல்படுத்தும் வகையில் சமூர்த்தி அதிகாரசபை, தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபை என்ற மூன்று நிறுவனங்களும் ஒன்றிணைக்கப்பட்டு திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் உருவாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2013 ஆம் ஆண்டிற்குரிய அந்த மூன்று அதிகாரசபை சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் பின்னர் எவ்வித நிதிக்கூற்றுக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரி கணனி அச்சிடல்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக அந்த ஒவ்வொரு நிறுவனங்களினதும் செலவினங்கள் முறையே ரூபா 9,501 மில்லியன், ரூபா 134 மில்லியன் மற்றும் ரூபா 45 மில்லியன் ஆக இருந்தன.

- திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்படும் போது ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி முறையே ரூபா 24,232 மில்லியன், ரூபா 283 மில்லியன் மற்றும் ரூபா 65 மில்லியனாக ரூபா 24,582 மில்லியன் கூட்டுத்தொகையாக இருந்ததுடன் 2014 சனவரி 03 ஆந் திகதியில் உள்ளவாறு புதிய திணைக்களத்திற்கு இந்த சொத்துக்களை கையளிக்கும் நிலைமை கணக்காய்விற்கு அறிக்கையிடப்படாதிருந்ததுடன் சொத்துப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

- திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பிக்கும் போது ஒன்றிணைக்கப்பட்ட மூன்று நிறுவனங்களிலும் சேவையில் நியமிக்கப்பட்டதிலிருந்து சுய விருப்பத்தால் சேவையிலிருந்து விலகிய 1237 உத்தியோகத்தர்களுக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இழப்பீடு மற்றும் பணிக்காடைப் பணமாக ரூபா 1,328 மில்லியன் தொகை அந்த மாவட்டங்களில் திவிநெகும சமூக அடிப்படை வங்கிக் சங்கங்களின் நிதியம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 மே வரையிலும் அப்பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்தக்

கொடுப்பனவுகளுக்காக திவிநெகும சமூக அடிப்படை வங்கிச் சங்கங்களின் நிலையான வைப்புக்கள் பயன்படுத்தப்பட்டமையால் இந்த வங்கிகளுக்கு வட்டிப் பணம் இழக்கப்பட்டிருந்தமையும் ஏற்பட்டிருந்தது.

- திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் விடயப் பரப்பிற்குரித்தல்லாத வரட்சியினால் பாதிப்பிற்கு உள்ளான மக்களுக்கு நீர் கொள்ககலன்களை வழங்குவதற்காக ரூபா 106 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

  - செலவிடப்பட்ட தொகையில் ரூபா 56 மில்லியன் தொகை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ‘‘காணியும் காணி அபிவிருத்தியும்’’ இற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் அமைச்சினது அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது.

  - ரூபா 90 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியில் இந்தக் கொள்வனவுகளுக்காக கொள்வனவு முன்மொழிவுகள் அமைச்சரவை கொள்வனவுக் குழுவிற்கு சமர்ப்பிக்காது உரிய அங்கீகாரம் திணைக்கள கொள்வனவுக் குழுவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

  - கணக்காய்விற்குக் கிடைக்கிப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 224,694 நீர்ப்பாத்திரங்களுக்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 105 மில்லியனாக இருந்ததுடன் அதில் அண்ணளவாக ரூபா 13 மில்லியன் தொகையான 25,894 நீர்ப்பாத்திரங்கள் குறிப்பிட்ட மாவட்டங்களுக்குக் கிடைத்தமையை உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பகிர்ந்தளிக்கப்பட்ட நீர்ப் பாத்திரங்கள் உரிய மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்காக கூறுவிலை கோரப்படாமல் இரண்டு போக்குவரத்து நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த நிறுவனங்களுக்கு ரூபா 1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- நாட்டின் சகல முச்சக்கரவண்டி சாரதிகளுக்காக ஆயுட்காப்புறுதி மற்றும் ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கு 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 2 மில்லியன் செலவிடப்பட்டு 1 மில்லியன் மாதிரிப் படிவங்கள் நாட்டின் சகல மாவட்டங்களுக்கும் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தால் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் முறை தொடர்பாக எவ்வித முறைமையொன்றும் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை மாவட்ட அலுவலகங்களிலிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப் படாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சகல செலவினங்களும் பயனற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது.

- சமூர்த்தி நலனாளிகளின் மானியப் பணத்தை அதிகரித்தல் மற்றும் மேலும் மானிய உதவிகளை வழங்கக்கூடிய குடும்பங்களை கண்டறிவதற்கான மெய்மையாய்விற்குரிய 2 மில்லியன் மாதிரிப் படிவங்களை அச்சிடுவதற்காக 2014 திசெம்பர் மாதத்தின் போது திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தால் ரூபா 8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த மெய்மையாய்வின் மூலம் இனங்காணப்பட்ட புதிய நலனாளிகள் தொடர்பான விபரமான தகவல்கள் 2015 மே வரையிலும் திணைக்களம் சேகரிக்காதிருந்ததுடன் அது வரையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது.

  - இந்த நிகழ்ச்சித்திட்டம் 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பாதீட்டின் மூலும் குறித்த நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மாதிரிப்படிவங்களை

அச்சிடுவதற்காக கொள்வனவு ஆவணங்களை விநியோகித்தல் உள்ளடங்களாக கொள்வனவிற்குரிய சகல நடவடிக்கைகளும் ஒரு நாளில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

- ரூபா 907,680 கிரயமான 312,993 மாதிரிப் படிவங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பயன்பாடற்றுக் காணப்பட்டதுடன் மாவட்ட அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட மாதிரிப் படிவங்கள் பயன்படுத்தப்படாது மீளவும் திணைக்களத்தின் களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

- திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தால் 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட விளம்பர நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

  - பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமிய பால செயற்திட்டத்தின் கீழ் ''1210 கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்'' இற்காக தயாரிக்கப்பட்ட இரண்டு தொலைக்காட்சி விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 5 மில்லியன் அமைச்சுச் செயலாளரின் ஆலோசனையின் படி உரிய ஊடக நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

  - பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாக பிழையாகக் குறிப்பிடப்பட்டு திணைக்கள கொள்வனவுக் குழுவின் உரிய அங்கீகாரமின்றி 30 வினாடிகள் தொலைக்காட்சியில் 3 சிறு அறிவித்தல்களுக்காக உற்பத்தி நிறுவனத்திற்கு ரூபா 707,625 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் 2015 மே வரையிலும் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

  - பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேவையின் அடிப்படையில் முன்னாள் சனாதிபதியவர்களின் புகைப்படத்துடன் 7 பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களுக்காக ரூபா 36 மில்லியன் தொகையைத் தீர்ப்பனவு செய்வதற்காக திணைக்களம் கடப்பாடொன்றை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

- 2014 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத திவிநெகும உதவி பெறுபவர்களின் வீடுகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தப்பட்ட ''இசுறுமத் நிவஹனக்'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திவிநெகும சமூக அடிப்படை வங்கிச் சங்கங்களின் நிதியத்தைப் பயன்படுத்தி உதவி பெறுபவர்களின் 1,197,111 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூபா 2,500 வீதம் ரூபா 2,992 மில்லியன் தொகை 2014 திசெம்பர் மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது. குறித்த நலனாளிகளின் எண்ணிக்கைக்கு மாத்திரம் உரித்தாகும் வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் அறிவிப்பதற்காக விளம்பர அறிவித்தலுக்காக ரூபா 997,476 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேதிகமாக தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக ஒரு சனாதிபதி வேட்பாளரின் புகைப்படத்தை உள்ளடக்கி அறிவித்தல்கள் அச்சிட்டு ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2015 மார்ச் வரையிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் ரூபா 3 பில்லியனுக்குக் கிட்டிய தொகை செலவிடப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டம் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது.

- சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் 1996 திசெம்பர் 06 ஆந் திகதிய 96/3 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி சமுர்த்தி நலனாளிகளின் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு நலனாளிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற உதவி மானியங்களை வெளிப்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பு நிதியத்தை உருவாக்கி நம்பிக்கைப் பொறுப்பு சபையின் கட்டுப்பாட்டின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாக நடாத்தப்பட்டுக் கொண்டிருப்பதுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி

வரையிலும் நிதியத்தில் ரூபா 7,586 மில்லியன் மீதியொன்று காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளவாறு காணப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 6,795 மில்லியன் ஆகும். இந்த நிதியத்தை அரசாங்க கணக்காய்வில் வெளிப்படுத்துவதில் பொருத்தப்பாடு காணப்படுகின்றமையால் நிதியத்தைக் கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதியச்சட்ட உரித்தொன்று கிடைக்கும் வகையில் பாராளுமான்றத்தால் கட்டளை வழங்குவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2004 மே 14 மற்றும் 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய அமைச்சின் செயலாளருக்கும் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவின் கட்டளையின் படியும், நிதியத்திற்கான அதிகாரச்சட்டமொன்று இன்மையினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்வு செய்யும் இயலுமை இல்லாமையினால் அதிகாரச்சட்டமொன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த நிதியம் நியதிச்சட்ட நிதியமாக உள்ளாக்குவதற்கு இது வரையிலும் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 1,704 திவிநெகும சமூக அடிப்படை வங்கிகளை நாடு முழுவதும் தாபிக்கப்பட்டிருந்ததுடன் திவிநெகும உதவி பெறுபவர்களுக்காக அரசாங்கத்திலிருந்து வழங்கப்படுகின்ற மானியங்கள், நலனாளிகளின் பெயரில் காணப்படுகின்ற சேமிப்புக் கணக்குகளின் ஊடாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக குறைந்த வருமாமனம் பெறுபவர்களின் அவசர நிதித் தேவைகளை நிறைவேற்றுதல் இந்த வங்கிகளின் பிரதான பணியாக இருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த வங்கிக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ஒட்டுமொத்த வைப்பு வருமானம் ரூபா 48,042 மில்லியன் தொகையும், ரூபா 48,405 மில்லியன் தொகையான முதலீட்டையும் உள்ளடக்கிய மொத்தச் சொத்துக்களின் அளவு ரூபா 83,200 மில்லியனாக இருந்தது. சகல சமூக அடிப்படை வங்கி நடவடிக்கைகளின் செயற்பாடுகள் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற சமூக அடிப்படை வங்கிப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த சமூக அடிப்படை வங்கி, சமூக அடிப்படை வங்கிச் சங்கம் மற்றும் சமூக அடிப்படை வங்கிப் பிரிவின் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலைமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அறிக்கை அல்லது கணக்கின் ஊடாக பொதுத்திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

- உள்ளூராட்சி மன்றங்களின் கோரிக்கையின்றி திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் விடயப்பரப்பிற்கு உரித்தற்ற செயற்பாடுகளுக்காக 58 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக கொடிக்கம்பங்களுக்காக பயன்படுத்தும் அடிப்படையில் ரூபா 36 மில்லியன் கிரயமான 32,976 கல்வனய்ஸ் குழாய்கள் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தால் 2014 திசெம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதில் 28,310 குழாய் இருப்புக்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 17 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 5,398 குழாய்கள் திணைக்களத்தின் அனுமதியின்றி ஏனைய 30 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் 33 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 9,195 குழாய்கள் அந்த நிறுவனங்களின் தலைவர், உப தலைவர் அல்லது உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 11 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 2,734 குழாய்கள் திணைக்களத்தின் அனுமதியின்றி வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

- திவிநெகும அபிவித்தித் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக திவிநெகும நலன்பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 5,000,000 திவிநெகும பஞ்சாங்க கலண்டர்கள் அச்சிடுவதற்காக 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 29 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

  - முற்திட்டமிடலின்றி 12 நாட்களான மிகவும் குறுகிய காலத்தால் 04 சந்தர்ப்பங்களின் போது கலண்டர்களின் அளவில் ஒரு பகுதி அச்சிடப்பட்டமையினால் முழுமையான இருப்பும் ஒரே தடவையில் கட்டளையிடுவதால் அரசாங்கத்திற்கு கிடைக்ககூடியதாக இருந்த விலை நலன் இழக்கப்பட்டிருந்தது.

  - 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் திவிநெகும உதவிபெறும் நலனாளிகள் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 1,479,811 ஆக இருந்த போதிலும் 5,000,000

கலண்டர்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அது நலன்பெறும் குடும்பங்களின் அளவினைவிட 338 சதவீத அதிகரிப்பாகும்.

- கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு இணங்காத வகையில் ரூபா 29 மில்லியன் பெறுமதியான மேற்கூறப்பட்ட கொள்வனவு செயற்பாடுகள் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக சனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு வேட்பாளரின் புகைப்படத்துடன் உரிய கலண்டர்கள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

# விளையாட்டுக்கள்

2014 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுத் துறை அமைச்சிற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு மற்றும் பிரதான விளையாட்டு சங்கங்களின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் முறைகேடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

## விளையாட்டுத்துறை அமைச்சு

விளையாட்டு சமூகங்களிடையே பகிர்ந்தளிப்பதற்கென குறிப்பிடப்பட்டு ரூபா 39 மில்லியன் பெறுமதியான சுண்டாட்டப் பலகைகள் மற்றும் 14,000 தாம் பலகைகள் கட்டளையிடப்பட்டு கையேற்கப்பட்டதாக அறிக்கைகளில் களஞ்சியப் பொறுப்பாளர் கையொப்பமிட்டிருந்த போதிலும் அந்த சுண்டாட்டப் பலகைகள் மற்றம் தாம் பலகைகளை அமைச்சிற்கு கிடைத்திருக்காததுடன் விளையாட்டு சமூகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டும் இருக்கவில்லை.

## விளையாட்டுத்துறை நிதியம்

அலரி மாளிகையில் இடம் பெற்ற 2,500 விளையாட்டு உபகரண தொகுதிகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டமொன்றிற்கு பங்குபற்றிய விளையாட்டு சமூகங்களின் அங்கத்தவர்களின் பிரயாண வசதிகளுக்காக ரூபா 1,617,000 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 10 விளையாட்டு உபகரணத் தொகுதிகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

### விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

- XL ஆவது தேசிய விளையாட்டு போட்டிகளின் செயற்பாட்டுச் சபைக்கு விடுதி வசதிகளை வழங்கும் பொருட்டும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு பகிர்ந்தளிக்கும் பொருட்டு 3,500 பயணப் பொதிகள் மற்றும் ரீ – சேட்டுக்கள் வீதம் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 21 மில்லியன் தொகை கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் செலவிடப்பட்டிருந்தது.

- கொள்வனவு குழுக்கள், தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு என்பவற்றை நியமிக்காமலும் கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்படாமலும், பிரதிப் பணிப்பாளரின் (விளையாட்டுத்துறை) மற்றும் கரப்பந்தாட்ட பயிற்சியாளரொருவரின் பரிந்துரையின் அடிப்படையில் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தினால் ரூபா 13.81 மில்லியன் தொகையான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை

- ரூபா 126.8 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுகததாச விளையாட்டுத் தொகுதியின் ஓடு பாதையின் தார் தட்டுக்கள், நியமமொன்றில்லாமல் நிர்மாணித்தமை மற்றும் மழைக் காலத்தில் நிர்மாணித்தமை போன்ற காரணங்களால் கழன்று சென்றிருந்தது.

- 2009 ஆம் ஆண்டு முதல் காசாளரின் கடமை மேவுகைக்காக இணைப்புப் செய்யப்பட்ட பாதுகாப்பு அதிகாரியொருவரால் நாளாந்த காசுப் பெறுவனவுகளை, வங்கிப்படுத்தும் போது ரூபா 800,000 தொகையான பணம் முறைகேடொன்று இடம்பெற்றிருந்தது.

- விளையாட்டுத்துறை ஹோட்டலொன்றின் 42 அறைகளில் 15,330 நாளாந்த அறை நாட்களுக்குரிய வசதிகள் காணப்படும் போது, அவற்றுள் பயன்படுத்தப்பட்டிருந்தது 4,157 அறைத் தினங்கள் அல்லது 27 சதவீதத் மாத்திரமே ஆகும். மேலும், 3 ஹோட்டல் அறைகள் ஒரு வருட காலமாக மூடப்பட்டிருந்ததுடன் 800 சதுர அடிகள் அளவான கீழ் தளத்தில் தாபிக்கப்பட்டுள்ள குளிர்பானச் சாலை 8 வருட காலமாக மூடப்பட்டிருந்தது.

**இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம்**

- இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் முகாமைத்துவ சபையின் முன்னாள் தலைவரினால், சம்மேளத்திற்கு கிடைத்திருந்த அன்பளிப்புக்களில் ஐ.அ.டொலர் 100,000 யூரோ 40,000 மற்றும் ரூபா 5 மில்லியன் தொகையான பணம் மோசடியான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.
- முன்னால் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் 2008 யூன் 06 ஆம் திகதி சம்மேளனத்தில் வங்கிக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டிருந்த 30,000 ஐ.அ.டொலர்களில் 12,533 ஐ.அ.டொலர்கள் 2015 சனவரி 19 ஆந் திகதி வரையிலும் சம்மேளனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

- மேலும், நிறைவேற்று குழுவின் அங்கீகாரமின்றி சம்மேளனத்தின் வங்கிக் கணக்குகளில் போதியளவான நிதியங்கள் காணப்படுகையில், சம்மேளனத்தின் முன்னாள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் 2008 யூன் 20 ஆம் திகதி முன்னாள் முகாமைத்தவ குழுவின் தலைவரிடம் பெற்றுக்கொண்ட ரூபா 6,000,000 தொகையான கடனை தீர்ப்பதற்காக 60,000 ஐ.அ.டொலர்கள் சம்மேளனத்தின் வங்கிக் கணக்கிலிருந்து முன்னால் முகாமைத்துவ குழுவின் தலைவரின் தனியார் கணக்கிற்கு போலியான வங்கிக் கட்டளையொன்றின் மூலம் மாற்றப்பட்டிருந்தது.

**இலங்கை கிரிக்கற் நிறுவகம்**

- இலங்கை கிரிக்கற் நிறுவகம் கடந்த பல வருடங்களில் பாரியளவிளான செயற்பாட்டு நட்டமொன்றை பதிவு செய்திருந்தமை, 2014 ஆம் ஆண்டில் ரூபா 392.7 மில்லியன் தேறிய செயற்பாட்டு நட்டம் பதிவு செய்யப்பட்டிருந்தமை மற்றும் ரூபா 4,303.5 மில்லியன் பெறுமதியான பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதியளவான திரவச் சொத்துக்கள் இல்லாதிருந்த போது 2013 ஆம் ஆண்டில் சம்பள அதிகரிப்பிற்காக ரூபா 26.7 மில்லியன் அவசர தேவையொன்றாக கருதி பாதீட்டு மூலமான நிதியேற்பாடு இல்லாமல் 11 வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 57.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டில் இலங்கை துடுப்பாட்ட நிறுவகத்தினால் 13 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 04 டெஸ்ட் போட்டிகளுக்காக நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் இன்றி ரூபா 45 மில்லியன் பெறுமதியான 46,742 நுழைவுச் சீட்டுக்கள் இலவசமாக வழங்கப்பட்டிருந்தது.

- ஸ்ரீ லங்கா பிரீமியர் லீக் (எஸ்எஸ்பிஎல்) – 2012 இற்காக தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா 11.4 மில்லியன் தொகையானது நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரத்துடன் அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

# சுற்றுலாத்துறை

இலங்கையில் செயற்படுத்தப்படும் 2011 – 2016 ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் சுற்றுலா தொழிற்துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்ததுடன், யூஎஸ்டொலர் 2.75 பில்லியன் மேற்பட்ட வருமானமொன்றையும் 500,000 இற்கு மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்பை ஏற்படுத்துதல் சுற்றுலாக் கைத்தொழிலின் 2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்காக குறிப்பிடப்பட்டிருந்தன.

உள்நாட்டு பிரச்சினை நிலைமை முடிவுற்றதன் பின்னர் ஏற்பட்ட அதிகரித்த போக்கினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதன் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது சுற்றுலா கைத்தொழில் சிறப்பான செயற்பாட்டை காண்பித்ததுடன், 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகை வருடாந்த இலக்கை விஞ்சியிருந்தது. சுற்றுலா தொழிற்துறைக்கான கவர்ச்சி அரசதுறை மற்றும் தனியார் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

முன்னைய ஆண்டைப் போன்றே 2014 ஆம் ஆண்டின் போதும் பிரதான வலயங்கள் அனைத்திலும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் கிழக்கு ஆசியாவிலிருந்து 53.2 சதவீதத்தினாலும், கிழக்கு ஐரோப்பாவிலிருந்து 22.6 சதவீதமும் மேற்கு ஐரோப்பாவிலிருந்து 13.8 சதவீதமும் தென் ஆசியாவிலிருந்து 13.4 சதவீதமாக பொருண்மையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நாடு என்ற ரீதியில் முன்னைய ஆண்டில் இந்தியாவிலிருந்தே கூடுதலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். அந்த அளவு 242,734 ஆகும். அதற்கு அடுத்ததாக ஐக்கிய இராச்சியத்திலிருந்தே கூடுதலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர். அந்த அளவு 144,168 என அறிக்கையிடப்பட்டிருந்தது. இவ்வாண்டில் மக்கள் சீனக் குடியரசிலிருந்தே கவர்ச்சிகரமான அதிகரிப்பு இடம்பெற்றிருந்தது. அந்த அளவு 128,166 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன ஒப்பிடும் போது அது 136.1 சதவீதமாக இருந்தன.

சுற்றுலா கைத்தொழில்துறையிலிருந்து கூடிய வெளிநாட்டு நாணயமாற்று உழைப்பு எதிர்பார்க்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டின் போது இக்கைத்தொழில் துறையிலிருந்து யூஎஸ்டொலர் 2,431 மில்லியன் உழைக்கப்பட்டிருந்தது. அந்த அளவினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 41.7 சதவீதமான தெளிவான அதிகரிப்பொன்றாக இருந்தது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துடன், சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி நாளாந்த செலவினம் மற்றும் சுற்றுலாப் பயணி இலங்கையில் தங்கியிருக்கும் சராசரி நாட்களின் எண்ணிக்கை அதிகரித்தல் சுற்றுலா உழைப்பு அதிகரிப்பதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி நாளாந்த செலவினம் யூஎஸ்டொலர் 160.8 ஆக இருந்ததுடன், அந்த அளவு 2013 ஆம் ஆண்டின் போது யூஎஸ்டொலர் 156.5 ஆக இருந்தன. அவ்வாறே சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் தங்கியிருக்கு சராசரி நாட்களின் எண்ணிக்கை 2014 இல் 9.9 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது 8.6 நாட்களாக இருந்தன. எனினும் சுற்றுலா தொழில்துறை தொடர்பாக எம்மோடு அண்மித்து போட்டியிடும் நாடான மாலைதீவில் சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி நாளாந்த செலவினம் யூஎஸ்டொலர் 2,208 ஆக இருந்ததுடன், அந்த அளவு இலங்கையில் 1592 அமெரிக்க டொலர்கள் ஆகும். இந்த எண்ணிக்கைகளை ஒப்பிடும் போது எமது நாட்டில் சுற்றுலாப் பயணிகளால் செய்யப்படுகின்ற செலவினம் யூஎஸ்டொலர் 1,592 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கைகளை ஒப்பிடும் போது எமது நாட்டினுள் சுற்றுலாப் பயணிகள் செய்யப்படும் செலவினங்களின் செயற்திறன் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

இலங்கை உலகின் சிறந்த பிரயாணமொன்றாக சீனாவின் “Travel & Leisure” என்ற சஞ்சிகையில் அறிமுகப்படுத்தியிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் போது சுற்றுலா செல்வதற்கு உலகிலேயே திருப்திகரமான 10 நாடுகளில் இலங்கையும் ஒன்றென இலங்கையின் “Forbes” என்ற சஞ்சிகை

பெயரிட்டிருந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேம்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டினுள் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் ரூபா 1,950 மில்லியன் அளவிலான பணத்தை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்படி வெளி சூழல் காரணிகளால் சுற்றுலாத் தொழில்துறைக்கு கிடைக்கப்பெற்றுள்ள நல்ல சந்தர்ப்பங்களில் ஆகக்கூடிய பயனைப் பெற்றுக்கொள்வதற்காக பணியகத்தின் மூலம் தந்திரோபாயங்களை பின்பற்றியிருக்காமை அதன் செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்துவதின் செயன்முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது கண்டறியப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,837 மில்லியன்னான நிதி, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை மாநாட்டுப் பணியகம் ஆகிய 04 நிறுவனங்களுக்காக 14 சதவீதம், 70 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 4 சதவீதம் என்ற ரீதியில் நிதியளிக்கப்பட்டிருந்தன. எனினும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் மூலம் இந்த 04 நிறுவனங்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளில் இலங்கை சுற்றுலா அதிகாரசபையில் பதிவுசெய்யாமல் சுற்றுலாவோ அல்லது சுற்றுலா சேவைகளில் ஈடுபட்டிருக்கும் ஆளொருவர் தவறொன்றிற்கு குற்றவாளியாக்குவதற்கு சட்டங்களை விதித்தல், சுற்றுலா மதியுரையாளர் குழுக்களை உருவாக்குதல், கலை சார்ந்த அலுவல்களுக்கு பொறுப்பான குழுக்களை தாபித்தல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் துணை கைத்தொழில் மற்றும் சேவைகளை அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல் மற்றும் அதற்கு உதவுதல் போன்றவற்றிற்காக தாபனங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பின்வரும் நிறுவனங்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

- கற்பிட்டி நுரைச்சோலை இறங்குதுறை நிர்மாணத்திற்குரிய 2016 கியுப் கருங்கல் மற்றும் 40 கியுப் குருணிக் கற்கள் என்பவற்றை பௌதீக ரீதியாக பொறுப்பேற்காமல் ரூபா 10.19 மில்லியன் தொகை வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- பெந்தோட்டை வீடமைப்பு கேந்திரத்தின் கழிவுநீர் தொகுதி முறைமை பேணிச் செல்வதற்காக உழைப்பு ஒப்பந்தம் தேசிய கொள்வனவு செயற்பாட்டினூடாக உழைப்பு ஒப்பந்தத்தைப் பெற்றக்கொள்ளாமல் ஒரு ஒப்பந்தக்காரருக்கு சில வருடங்கள் உழைப்பு ஒப்பந்தம் வழங்கப்பட்டமையால் நிறுவனத்திற்கு 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 6.89 மில்லியன் ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

- கதிர்காமம் தேசிய விடுமுறைக் கேந்திரத்தை திருத்தியமைப்பதற்குரிய ஒப்பந்தக்காரருக்கு ரூபா 11.08 மில்லியன் தொகை கூடுதலான கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- பெந்தோட்டை தேசிய விடுமுறை நிலையம் அமைந்துள்ள ஒரு ஹொட்டெல் ஒன்று செயற்பாடற்ற மானியொன்றின் மூலம் 97 மாதங்கள் மோசடியாக நீரைப் பெற்றுக் கொள்வதற்குரிய ரூபா 8.4 மில்லியன் தொகை கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- பாசிக்குடா சுற்றுலா கேந்திர காணியில் மழைநீர் இறங்கி செல்லும் வடிகாண் முறைமை குறித்த நிர்மாண அளவீட்டு அறிக்கை பௌதீக கணக்காய்வின் போது ரூபா 3.79 மில்லியன் தொகை கூடுதலான கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- கற்பிட்டி முகத்துவாரம் இறங்குதுறையின் நிர்மாணத்திற்காக டோசர் இயந்திரங்களினால் வேலை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டு போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 3.23 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

- போலியான விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தமொன்றிற்காக ஒப்பந்தக்காரரொருவருக்கு ரூபா 14.5 மில்லியன் தொகை முற்பணமாகச் செலுத்தி பின்னர் கணக்காய்வு அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 08 மாதங்களில் அத்தொகை மீள அறவிடப்பட்டிருந்தது.

- 2014 செப்தெம்பர் 23 ஆந் திகதி முதல் ஒக்தோபர் 07 வரை ரஷ்யாவில் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 12,000 ரீ சேர்ட் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு ரூபா 7.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த ரீ சேர்ட் ரஷ்யாவில் நடைபெற்ற சுற்றுலா மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2014 செப்தம்பர் 27 ஆந் திகதி உலக சுற்றலா தினத்தை கொண்டாடுவதற்கான நிகழ்ச்சிகளுக்காக ‘‘வெற்றிபெரும் ஊவா’’ ‘‘ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி’’ என அச்சிடப்பட்ட 8000 ரீ சேர்ட் உற்பத்திக்கு ரூபா 5.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- அச்சீட்டு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்ட 2 நிகழ்ச்சிகளுக்காக ரூபா 25.3 மில்லியன் தொகை உரிய ஒப்பந்தகாரருக்கு கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், உரிய நியமமொன்றில்லாமல் நிறைவேற்றப்பட்ட செயற்பாட்டிற்காக ரூபா 2.54 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது

# நகர அபிவிருத்தி

2014 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், இலங்கையின் நகர அபிவிருத்தி நிகழ்ச்சி தொடர்பன கொள்கைகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் ஈரக் காணிகளை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக நடவடிக்கைகளை நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் போன்ற பிரதான நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. மேற்படி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற நகர அலங்காரம், வயல் வரம்புகளை தயாரித்தல் மற்றும் பராமரிப்பதற்காக முப்படைகள அங்கத்தவர்களின் உழைப்பு பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் மீளாய்வாண்டில் தெளிவாக அவதானிக்க கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் இதன் காரணமாக உரிய நிறுவனங்களின் செயற்பாட்டு செலவினம் குறைவடைய வேண்டிய போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செயற்பாட்டுச் செலவினம் போதியளவில் குறைவடைந்திருக்கவில்லை.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

### நகர அபிவிருத்தி அதிகாரசபை

- நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தலில் தொடர்ச்சியான தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதிகாரசபையின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அதிகாரசபையின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மூன்று துணைக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களையும் ஒரு கம்பனியின் கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதிகாரசபையின் துணைக்கம்பனியான வோடர்ஸ் ஏஜ் ஹொட்டெல் கம்பனியின் நிர்வாகம் நீதிமன்ற கட்டளையின் பேரில் அதிகாரசபைக்கு கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதன் பிரகாரம் அதன் முதலீட்டுப் பெறுமதி ரூபா 10 என நிதிக்கூற்றுக்ககளில் காண்பிக்கப்பட்டிருந்தது. துணைக் கம்பனிகளின் மீள் பெறுமதியிடப்பட்ட பெறுமதியான ரூபா 1,791 மில்லியன் தொகை மற்றும் முன்னாள் உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 403.83 மில்லியன் தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் வேறாக காண்பிக்கப்பட்டிருந்தன.

- கொழும்பு நகரத்தில் குடிசைகளில் வாழ்பவர்களுக்கு 65,000 நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்திற்கு நிதியத்தினை வழங்கும் நோக்கில் அதிகாரசபையினால் 2010 ஒக்தோபர் மாதத்தில் ரூபா 10 பில்லியன் தொகைக்கு 10 ஆண்டுகளில் விடுவிக்கக்கூடிய தொகுதிக்கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், முதல் 03 வருட காலத்திற்கான தொகுதிக்கடன் வட்டித் தொகையை மீள் நிரப்புவதற்கு பொதுத் திறைசேரி இணங்கியிருந்தது. இத்தொகுதிக் கடன் 2015 ஒக்தோபர் மாதத்தின் போது விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக விசேட நிதியமொன்றைத் தாபிப்பதற்கோ அல்லது நிதியத்தை வழங்குவதற்கோ முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- கொழும்பின் நகரில் குறைந்த வசதிகளுடனான குடியிருப்பாளர்களுக்கு 65,000 நிரந்தர வீடுகளை வழங்கும் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் 2013 முடிவடையும் போது 20,500 வீடுகளை நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் நகரின் 150 ஏக்கர் அளவிலான நிலத்தை விடுவிப்பதற்கும் அக்காணிகளை குத்தகை அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு வழங்கி ரூபா 25 பில்லியன் அளவிலான வருமானத்தை உழைப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதிகாரசபை வழங்கிய தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 500 வீடுகள் பொதுமக்கள் உரித்திற்கு கையளிக்கப்பட்டும் 09 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டிருந்தன.

## இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

- இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனமத்தினால் செயற்படுத்தப்பட்ட வேரெஸ் கங்கை மற்றும் நீர் வழிந்தோடல் மற்றும் சுற்றாடல் அபவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக நிதியத்தை வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது தேசிய சேமிப்புபு வங்கியிலிருந்து ரூபா 14,227 மில்லியன் ஆன கடன் தொகை பெற்றுக்கொள்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக்கடன் தொகையில் ரூபா 1,600 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2013 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட கூட்டுத்தாபனத்தின் மூலதனக் கடன் விகிதம் 18.5 சதவீதத்திலிருந்து 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 62.89 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் ஏனைய செயற் திட்டங்களுக்காக பெற்றுக்கொண்ட கடன் தொகையில் ரூபா 453 மில்லியன் குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 178.1 மில்லியன் செலவு செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்த வீரகெட்டிய ஞாபகார்த்த நூதனசாலை நிர்மாணம், அநுராதபுர கும்பிச்சன்குளம் வாவி புனரமைப்பு, போலவலான கலாசார நிலைய நிர்மாணம் போன்ற செயற்திட்டங்களின் நடவடிக்கை வெள்ள அனர்த்தங்களை தவிர்த்தல், ஈரமான காணிகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி போன்றவை கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உட்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தினால் தமது உத்தியோகத்தர்களுக்கும் தரைப்படையினருக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கும் விழாவை நடாத்துவதற்கு ரூபா 18.9 மில்லியன் தொகையை சிக்கனமற்ற வகையில் செலவழித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிநாட்டுக் கம்பனியொன்றினால் 3,756,595 மீற்றர் கியுப் கடல் மணல் அல்லப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,879 மில்லியன் பெறுமதியான 2,269,563 மீற்றர் கியுப் அளவிலான கடல் மணல் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பில் காணப்பட்டன.

- 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கணிய வளங்கள் ஆய்வு, தோண்டுதல், போக்குவரத்து, தயாரித்தல் மற்றம் வியாபாரம் என்பவற்றிற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திடமிருநது செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனம் கடல் மண் அல்லுவதற்காக முறையான அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

# வர்த்தகம் மற்றும் வியாபாரம்

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் நோக்கம் இலங்கையில் சீமெந்தினை உற்பத்தி செய்து விற்பனை செய்வதாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் சீமெந்து உற்பத்தி 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் நாட்டின் தேவைப்பாட்டில் மிகவும் சிறிய அளவு மாத்திரம் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தைப் போலவே கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான இலங்கை சீமெந்து கம்பனி சென்ற இரண்டு நிறுவனங்களும் தற்போது சீமெந்தினை இறக்குமதி செய்து விற்பனை செய்து வருவதுடன் இந்த இரண்டு நிறுவனங்களும் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்று வருவதுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கூட்டுத்தாபனத்தினதும் கம்பனியினதும் திரண்ட நட்டம் முறையே ரூபா 80.97 மில்லியன் மற்றும் ரூபா 2,341.85 மில்லியன் ஆகும். 2014 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 14.49 மில்லியன் தொகையான பற்றாக்குறையைப் பெற்றிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பெற்ற பற்றாக்குறை ரூபா 424.67 மில்லியன் ஆகும். கம்பனியானது மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் நட்டம் முறையே ரூபா 1.84 மில்லியன் மற்றும் ரூபா 192.92 மில்லியன் ஆக இருந்தது. அதன்படி நிறுவனத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வது தொடர்பாக நிச்சயமற்ற நிலமை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்திற்கு பாரியளவினை காணி மற்றும் ஆதனங்களிலும் உரித்து காணப்பட்டதுடன் அவை சொத்தாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபை

2014 இல் சபையின் மொத்த விற்பனை வருமானம் ரூபா 881.03 மில்லியனாக இருந்ததுடன் அதில் கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திக்குச் செலுத்தப்பட்ட பணம் வருமானத்தில் 33 சதவீதமாக இருந்தது. நிறுவனத்தின் நிருவாக மற்றும் மூலதனச் செலவினம் விற்பனை வருமானத்தில் 64.7 சதவீதமாக இருந்தது. தேறிய இலாபம் வருமானத்தில் 1.7 சதவீத அளவாகும். சபைக்குச் சொந்தமான இது வரையிலும் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கட்டிடம் அடகு வைக்கப்பட்டு ரூபா 698 மில்லியன் கடன் பெற்றிருந்த போதும் அக்கட்டிடத்தை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்காமல் ஏனைய நீண்டகால மற்றும் குறுங்கால வாடகை அடிப்படையில் பெறப்பட்ட காணிகளில் காட்சிக் கூடங்கள் கொள்வனவு வழிகாட்டிகளுக்குப் புறம்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட ரூபா 698 மில்லியன் கடனுக்காக கடன் வட்டி செலுத்துவதற்காக ஆண்டின் போது வட்டியாக ரூபா 80 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## கம்பனிப் பதிவாளர் திணைக்களம்

2015 இன் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக பாடசாலைகளில் நூலகங்களிற்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 683,910 பெறுமதியான புத்தகங்களை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்காமல் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் புத்தகங்களை பகிர்ந்தளிப்பதற்காக எவ்வித நடவடிக்கைகளும் 2015 மார்ச் 27 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 71,110 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 44,227 ஆகும். எவ்வாறாயினும் அத்திகதியில் உள்ளவாறு ஆண்டறிக்கை சமர்ப்பித்த வரையறுத்த கம்பனிகளின் எண்ணிக்கை 14,886 ஆனமையால் ஆண்டறிக்கை சமர்ப்பிக்காத வரையறுத்த கம்பனிகளின் எண்ணிக்கை 38,906 ஆக இருந்ததுடன் அதனால் மீளாய்வாண்டிற்காக அறவிடப்படாத நிலுவை ஆண்டறிக்கை பதிவு செய்தல் வருமானம் ரூபா 221.13 மில்லியன் ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டையும் உள்ளடக்கிய மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிலுவை ஆண்டறிக்கை பதிவு செய்தல் வருமானம் ரூபா 287.29 மில்லியன் ஆக இருந்தது.

வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பதிவு செய்தல் பணிகளை கணனிமயப்படுத்தும் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் 2014 சனவரி 21 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 88.81 மில்லியன் தொகையில் கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின்படி அதன் வேலை நடவடிக்கைகள் 2014 ஒக்தோபர் 20 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இது வரையிலும் ஒப்பந்தக்காரர் அதன் வேலை நடவடிக்கைகளை இடைநடுவில் விட்டு ஒப்பந்தத்தை விட்டுச் சென்றிருந்தார். திணைக்களத்தால் ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் ஒப்பந்தம் தொடர்பான கொள்வனவுக் கோவையின் 5.4.8 (அ) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணையொன்று ஒப்பந்தக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படாது ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இது வரையும் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 13.62 மில்லியன் தொகையான பணம் விளைவற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவகம்

- 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2.1.5 ஆம் பிரிவின் படி அமைச்சரவை அல்லது பொது நிருவாக அமைச்சு அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 2.92 மில்லியன் கூட்டுத்தொகை பொறியியலாளர் படி, பாடநெறி இணைப்புப் படி, செயலாளர் படி, மற்றும் கணக்காளர் படி என மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

- அரசாங்கத்தின் நிறுவனத்திற்காக மதியுரையாளர்களைத் தெரிவு செய்தல் அரசாங்க கொள்வனவுக் கோவை மற்றும் அரசாங்கத்தின் மதியுரையாளர்களை நியமித்தல் வழிகாட்டியின்படி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாது நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அரசாங்கத்தொருவர், ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவின் மதிப்புரையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அதற்காக படியாக மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் ரூபா 1.32 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- நிறுவனத்தின் கிளையொன்றை மன்னாரில் அமைப்பதற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1.12 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இந்தக் கிளை செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் இந்தக் கிளையை பராமரிப்பதற்காக ரூபா 160,000 தொகைக்கு மேற்பட்ட செலவினம் மாதாந்தம் செலவிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அப்பணமும் விளைவற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தது.

## கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு

- அபிவிருத்திப் பிரிவு II இன் கீழ் இறப்பர் உற்பத்தி, படகு, இயந்திரம், மரம், வார்ப்பு மற்றும் வடிவமைத்தல் பிரிவுகளின் செயல்முன்னேற்றத்திற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 25 மில்லியனில் ரூபா 4.28 மில்லியனே அதாவது 7.12 சதவீதமே செலவிடப்பட்டிருந்த போதிலும் அவற்றின் போதியளவான செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

- அபிவிருத்திப் பிரிவு III இன் கீழ் தோற்பொருள் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக தனிப்பட்ட வலயமொன்றை ஏற்படுத்துவதற்கு 2006 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் 2014 இன் போது அந்த கைத்தொழில் பேட்டையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 120 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியை விடுவித்து வழங்குவதற்கு உரிய அதிகாரத்தரப்பினரால் நடவடிக்கை எடுக்காமையினால் அந்த செயற்திட்டமும் வெற்றியளித்திருக்கவில்லை.

## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

2010 ஆம் ஆண்டு வரையான கடந்த 5 வருட காலத்திலும் சதொச இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்வு அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாத நிலை காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி பாதகமான கணக்காய்வு அபிப்பிராயமொன்றை தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும் இந்தக் காரணத்தினால் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் கணக்குகளைத் தயாரிப்பதற்கு பட்டயக் கணக்காளர் கம்பனியொன்றின் உதவி பெறப்பட்டிருந்த போதிலும் தாபனத்திற்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களை 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க முடியுமாக இருந்தது.

அதன் படி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 649 மில்லியன் மற்றும் ரூபா 177 மில்லியன் நட்டம் தொடர்ச்சியாக பெறப்பட்டிருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 217 மில்லியன் மற்றும் ரூபா 159 மில்லியன் தொகையும் வாடகை வருமானம் ரூபா 186.5 மில்லியன் மற்றும் ரூபா 185.2 மில்லியன் தொகையும், அரிசி செயற்திட்டத்தில் முறையே ரூபா 37 மில்லியன் தொகையும், ரூபா 177 மில்லியன் தொகையும் முகாமைத்துவத்தின் நலிவான தீர்மானத்தின் அடிப்படையில் நிருவாகச் செலவினம் மற்றும் நிதிக் கிரயம் அதிகமாக ஏற்பட்டமையால் மேற்கூறப்பட்ட நட்டத்தன்மை தொடர்ச்சியாக ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது.

தாபனத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட திரண்ட நட்டத்தின் காரணமாக மீளாய்வாண்டின் போது உரிமை மூலதனத்தில் ரூபா 7,587 மில்லியன் தொகையான வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் விழ்ச்சி ரூபா 7,407 மில்லியனாக இருந்தது.

இறுதியாக விநியோகிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின்படி சுட்டிக்காண்பிக்கப்பட்ட தாபனம் தொடர்ச்சியாக சரிசெய்யப்படாத பிரதான குறைபாடுகளில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை, ரூபா 72 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமை, ரூபா 546 மில்லியன் தொகை

சதொச கடன்பட்டோரில் குறைத்து காண்பித்தமை, சர்ச்சைக்குரிய தன்மையிலான ரூபா 79 மில்லியன் செலவினத்தைச் செய்து தாபனத்திற்குரித்தற்ற களஞ்சியத்தில் நெல் ஆலை நிர்மாணம், ரூபா 4,725 மில்லியன் பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை, 3 வணிக வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 4,597 மில்லியன் தொகையான பிணைமுறிப் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நீண்ட காலமாக தாபனம் நடவடிக்கை எடுக்காமை, விளைவற்ற 2 முதலீடுகளுக்காக தாபனம் ரூபா 544 மில்லியன் செலவினத்தைச் செய்தமை, தாபனத்திற்குரிய ரூபா 15 மில்லியன் சொத்துக்களில் அரிசி தயாரிக்கும் 140 இயந்திரங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது செயற்பாடற்றுக் காணப்பட்டமை, ரூபா 45 மில்லியன் தொகையான செயற்திட்ட நிதி நோக்கங்களுக்கு முரணாக ஈடுபடுத்தப்பட்டமை, ரூபா 57 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக முகாமைத்துவம் செயற்திறனற்றதாக நடவடிக்கை எடுத்தமை போன்றன காரணமாக அப் பெறுமதி தாபனத்தால் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## உணவு ஆணையாளர் திணைக்களம்

உணவுத் திணைக்களத்தால் வெளி நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 66 களஞ்சியங்களிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 51.82 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை வாடகை அறவிட வேண்டியிருந்தது. அதில் 24 களஞ்சியங்கள் இது வரையில் மீள கையேற்கப்பட்டிருந்த போதிலும், அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 31.88 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை வாடகை இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## நெல் சந்தைப்படுத்தல் சபை

2006 பெப்ரவரி 08 ஆந் திகதிய அமப/06/0238/218/10 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டின் போது நெல் சந்தைப்படுத்தல் சபையின் நடவடிக்கைகள் செயற்பாடற்றதாக்கி இலங்கை கமநல உற்பத்தி விற்பனை அதிகாரசபை தோற்றுவிக்கப்பட்டு நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணிகள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2007 யூலை 25 ஆந் திகதிய அமப/07/1199/315/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டின் போது இலங்கை கமநல உற்பத்தி விற்பனை அதிகாரசபை கலைக்கப்பட்டு நெல் சந்தைப்படுத்தல் சபை மீளவும் செயற்படும் நிலைக்கு ஆக்கப்பட்டிருந்தது. அதன்படி நெல் சந்தைப்படுத்தல் சபையினால் அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, தெற்கு, வடமேல் மற்றும் வடக்கு என 07 வலயங்கள் தாபிக்கப்பட்டு 2008 இன் சிறு போகம் முதல் நெல் கொள்வனவு செய்யும் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

- சபையின் வடக்கு மற்றும் கிழக்கு என்ற 02 வலயங்கள் தவிர 05 வலயங்களுக்குரிய 235 களஞ்சியங்கள் தொடர்பாக 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நெல் இருப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் படி 2012/2013 காலப்பகுதியில் நெல் இருப்பு கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகிக்கும் போது ரூபா 578.39 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

- 2012 ஆம் ஆண்டில் பொலன்னறுவை வலயத்தில் 06 களஞ்சியங்களில் ஏற்பட்ட ரூபா 23.2 மில்லியன் பெறுமதியான நெல் கிலோ கிராம் 777,453 இருப்புப் பற்றாக்குறை தொடர்பாக அந்தக்

களஞ்சியங்களின் பொறுப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் ரூபா 873,236 தொகையான இருப்பு மெய்மையாய்வு கிரயத்தையும் உள்ளடக்கி இதன் மூலம் சபைக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 24.07 மில்லியன் ஆகும்.

- கூறுவிலை கோரப்படாமையால் நெல் விலை தீர்மானித்தலுக்காக 2013 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட மூன்று பேரை உள்ளடக்கிய குழுவின் மூலம் காணப்படுகின்ற சந்தை விலை மற்றும் நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற நெல் இருப்புக்களின் விற்பனை விலை என்பன கவனத்திற் கொள்ளப்படாது போலியான தகவல்களின் அடிப்படையில் நெல் விலை தீர்மானிக்கப்பட்டமையால் பொலன்னறுவை, அநுராதபுரம் மற்றும் தெற்கு வலயங்களில் நெல் இருப்பு விற்பனையால் சபைக்கு ரூபா 54.86 மில்லியன் தொகை நட்டம் ஏற்பட்டிருந்தது.

- நெல் கொள்வனவு தொடர்பாக சபையினால் வழங்கப்பட்ட 2013 யூலை 24 ஆந் திகதிய PMB/2013/Y/AGR/CR ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(அ) நெல் கொள்வனவு செய்யும் போது அவை அங்கீகரிக்கப்பட்ட நியமங்களையுடையதாக இருக்க வேண்டியமையும் அதன் இடர் அளவு ஆகக் கூடியது 9 சதவீதமாக இருக்க வேண்டியமையும் (பரணைட்டின் படி) சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை அளவிடுவதற்கு குறித்த முறைமையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நெல் இருப்பு அடுக்கைத் தயாரிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் உரிய பத்திரத்தின் இலக்கம் சகல உறைப் பைகளிலும் அழியாத மையினால் குறிப்பிடப்பட வேண்டியமை இந்த சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் எந்தக் களஞ்சியத்திலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கையேற்கப்பட்ட நெல் இருப்புக்களை விநியோகிக்கக் கூடிய வகையில் நெல் வகைகளின் பிரகாரம் வெவ்வேறாக அடுக்கு வரிசைகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சில களஞ்சியங்களில் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி கொள்வனவு செய்யப்பட்ட சகல நெல் பைகளுக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறை கிலோகிராம் 50 கிராம் 250 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கிலோகிராம் 40 முதல் 69 வரையான நிறையுடைய நெற் பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(உ) சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி ஒரு விவசாயியிடமிருந்து கொள்வனவு செய்யக்கூடிய ஆகக்கூடிய நெல் அளவு 2012/2013 பெரும்போகத்தின் போது கிலோகிராம் 2,000 ஆக இருந்த போதிலும் சில சந்தர்ப்பங்களின் போது முறையான எழுத்துமூல ஆலோசனைகளின்றி நெல் கிலோகிராம் 5,000 வரை கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஊ) சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் ஈரப்பதன் 14 சதவீத உச்ச வீதத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் தெற்கு

வலயத்தில் யோதகண்டி களஞ்சியத்தில் வெள்ளை நாடு நெல்லின் ஈரப்பதன் 15.5 சதவீதம் முதல் 17.9 சதவீதம் வரையாக இருந்ததுடன் வீரக்கெட்டிய களஞ்சியத்தில் சிவப்பு நாடு நெல்லின் ஈரப்பதன் 14.6 சதவீதம் முதல் 16.8 சதவீதம் வரையும் சிறிய நாடு நெல்லின் ஈரப்பதன் 14 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையும் இருந்தன.

- சபைக்குச் சொந்தமான ஆனமடுவ, கலேவல, வராவெவ மற்றும் நிக்கவெரட்டி போன்ற களஞ்சியத் தொகுதிகளில் 08 நெல் களஞ்சியங்கள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 05 களஞ்சியங்கள் வருடாந்த வாடகை அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தன.

- சோமாலியா அரசாங்கத்திற்கு உதவி அடிப்படையில் அனுப்புவதற்காக தேவையான அரிசியைப் பெற்றுக்கொள்வதற்கு நெல் ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நெல் இருப்புக்காக ரூபா 54.38 மில்லியன் பெறுமதியான நெல் இருப்புக்குரிய அரிசி கிலோகிராம் 1,281,937 சபைக்கு 2015 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

- 2013 ஆம் ஆண்டில் அதிமேதகு சனாதிபதியால் அரிசி ஏற்றுமதி செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய வரிசை அமைச்சின் செயலாளரினால் நெல் சந்தைப்படுததல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது அரிசி மெட்ரிக் தொன் 15,000 ஐக்கிய அரபு எமிரேட் அரசாங்கத்திற்கு ஏற்றுமதி செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியம் மூலம் நாடு நெல் கிலோகிராம் 12,019,045 அரிசி ஆலைகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நெல் இருப்பைக் கொள்வனவு செய்வதற்கும் ஏனைய செலவினங்களுக்காகவும் ரூபா 469.34 மில்லியன் சபையினால் செலவிடப்பட்டிருந்ததுடன் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக நெல்லை வழங்கியதற்காக சபைக்கு ரூபா 169.48 மில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது. அதன்படி இந்த இருப்பை வழங்கியமையினால் சபைக்கு ரூபா 299.98 மில்லியன் தொகையான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- நெல் சந்தைப்படுத்தல் சபை 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட 09 ஒப்பந்தங்களுக்காக ரூபா 65.48 மில்லியன் தொகையைச் செலவிட்டிருந்ததுடன் இந்த சகல ஒப்பந்தங்களும் அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு கையளிக்கப்பட்டு தனியார் ஒப்பந்தமொன்றின் ஊடாக அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உரிய கொடுப்பனவுகள் CWE நிர்மாண தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

- மேற்கூறப்பட்ட ஒப்பந்தங்களில் ஏற்படுகின்ற அளவு வேறுபாடுகள் மற்றும் மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு மதிப்பீட்டின் அவசியத் தேவைக்காக ஒதுக்கீடுகள் செய்யாதிருந்த போதிலும் 02 ஒப்பந்தங்களுக்காக செய்யப்பட்ட மேலதிக வேலைக்காக ரூபா 3.42 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த மேலதிக வேலையைச் செய்வதற்கு முன்னர் நெல் சந்தைப்படுத்தல் சபை இந்த ஒப்பந்தத்தின் மேற்பார்வைக்காக நியமித்த மதியுரையாளரின் சிபாரிசும் கேள்விச் சபையிலிருந்து அதற்கான அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

- 2003 யூன் 02 ஆந் திகதிய பீஎட 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம், நிதி ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 மற்றும் 2014 ஆம்

ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2011 இன் கணக்காய்வு அறிக்கையின்படி 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்கீட்டுக் குறைபாடுகளில் சில கீழே தரப்படுகின்றது.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 05, 16 மற்றும் 18 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.

(ஆ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 277.91 மில்லியன் மற்றும் ரூபா 166.99 மில்லியன் தொகைகள் இனங்காணப்படாமல் தொங்கல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டமை.

(இ) கடன் வட்டி செலுத்துவதற்காகவும் நெல் குத்தும் கூலி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களைச் செலுத்துவதற்காகவும் திறைசேரியிலிருந்து கிடைத்த பணத்தில் உரிய கட்டணங்கள் தீர்க்கப்பட்டு எஞ்சிய ரூபா 57.6 மில்லியன் தொகை வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டமை.

(ஈ) வருமானக்கூற்றில் அரிசி விற்பனைக் கிரயம் பிழையாக கணிப்பிடப்பட்டமையினால் விற்பனைக் கிரயம் ரூபா 601.55 மில்லியன் இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை.

(உ) நீண்ட காலம் முதல் முன்கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் மீதியின் அடிப்படையில் போதியளவில் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடனுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படாமை.

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

2014 ஆம் ஆண்டிற்காக ஒன்றிணைந்த விவசாய மாதிரிகள், விவசாய வலயம் மற்றும் கமநலம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம், ஏற்றுமதி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் என இனங்காணப்பட்டு ரூபா 518 மில்லியனான வருடாந்த அரசாங்கத்தின் மானியங்களிலிருந்து 58 சதவீதத்தில் அதாவது ரூபா 300.28 மில்லியன் தொகையான ஏற்றுமதி அபிவிருத்திச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் தொடர்பாக மதிப்பிடல் மற்றும் மீளாய்விற்காக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்வதற்காக ஒழுங்கு விதிகள் முறையாகத் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஏற்றுமதி அபிவிருத்தி நடவடிக்கை மற்றும் அதன் செயற்திறன், வினைத்திறன்களை மதிப்பிடல் மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பான முக்கியத்துவம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சில நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் திறன் அபிவிருத்தி செயற்திட்டம் என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 16.3 மில்லியன் ஆகும். 2014 ஏப்ரல் 22 ஆந் திகதி மன்னார் மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 845,000 தொகையான முற்பணம் மாவட்டச் செயலாளரினால் தனியார் சாரதி பயிற்சி நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டமையால் தேசிய இளைஞர் சேவை மன்றம் தொடர்புபடுத்தப்பட்டு பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி

எத்தகையது, தனியார் சாரதி பயிற்சி நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்ட ஏற்றுமதி துறைகள் தொடர்பான பயிற்சிகள் எத்தகையது என கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

- ஏற்றுமதிச் சந்தைக்கு மிளகாய் வழங்கும் நோக்காகக்கொண்டு வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மிளகாய் பயிர்ச்செய்கை செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு ரூபா 15 மில்லியன் தொகையை பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. அத்தொகையை விஞ்சி ரூபா 22.72 மில்லியன் செலவில் 50 ஏக்கர்களில் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மிளகாய்ப் பயிர்ச்செய்கை செயற்திட்டத்தில் விவசாயிகள் 2 தடவைகளில் விளைச்சலைப் பெற்றபோதும், இதுவரை ஏற்றுமதிச் சந்தைக்கு எவ்வித ஏற்றுமதியொன்றும் மேற்கொள்ளப்பட்டிராதமையும் அவதானிக்கப்பட்டது. சபை ஏற்றுமதி மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக சபையின் நோக்கங்களுக்கு முரணாக கமநல நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 30 கம்பனிகளில் முன்னுரிமைப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 105.06 மில்லியன் தொகையான முதலீட்டிற்காக 1997 - 2014 காலப்பகுதியிலும் 31 கம்பனிகளின் சாதாரண பங்குகளில் ரூபா 43.49 மில்லியன் கூட்டுத்தொகையான முதலீட்டிற்காக 2001 - 2014 காலப்பகுதியிலும் உரிய பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை. மீளாய்வாண்டில் கலைக்கப்பட்ட 3 கம்பனிகளின் சாதாரண பங்குகளில் முதலீட்டுப் பெறுமதியான ரூபா 17.31 மில்லியன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் மீள பதிவுசெய்யாமையின் அடிப்படையில் கம்பனியின் பதிவேட்டில் பெயர் பதிவழிக்கப்பட்ட கம்பனிகளுக்கிடையே 16 கம்பனிகளின் முன்னுரிமைப் பங்குகளின் பெறுமதியான ரூபா 34.59 மில்லியன் தொகையும் 17 கம்பனிகளில் சாதாரண பங்ககுளின் பெறுமதியான ரூபா 5.13 மில்லியன் தொகையும் முதலீட்டைத் தேறச் செய்வதற்காக சபை முறையான நடவடிக்கைகளைப் பின்பற்றியிருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட பொது நலவாய நாடுகளின் விளையாட்டு விழாவிற்காக 2018 இல் அம்பாந்தோட்டை நகரத்திற்காக கேள்வி சமர்ப்பித்தல், இலங்கையில் விளையாட்டு மேம்படுத்தல், தேசிய மற்றும் உள்ளக தேசிய மட்டத்தில் விளையாட்டு அமைப்புக்கள் மற்றும் விளையாட்டு பயிற்சி வசதிகளில் முதலீடு போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அமைக்கப்பட்ட சீடபிள்யூஜீ அம்பாந்தோட்டை 2018 என்ற தனியார் கம்பனியின் பங்கு மூலதனத்தில் சபையால் ரூபா 8 மில்லியன் தொகை 2012 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக எவ்வித பிரதிபலனும் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. இந்த முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# நிர்மாணக் கைத்தொழில்

## நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி அமைச்சு

- இக்டாட் நிறுவனத்தின் 2014 ஆம் ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 20 மில்லியன் பற்றாக்குறையாக இருந்தது. எவ்வாறாயினும் நிறுவனத்தினால் தமது ஊழியர்களுக்கு வருடாந்த உபகாரக் கொடுப்பனவு செய்யும் நோக்கில் ரூபா 32 மில்லியனான தேறிய இலாபமாக காண்பிக்கப்படக்கூடிய வகையில் புறம்பான வருமானக் கூற்றொன்று அவ்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 நவம்பர் 21 ஆம் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 3 மில்லியன் உபகாரக் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

- வரிசை அமைச்சின் வேண்டுகோளின் பிரகாரம் தேசதத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலக குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டத்தின் விளம்பர நடவடிக்கைகளுக்காக நிறுவனம் ரூபா 1.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- 2014 ஆம் ஆண்டின் "மஹாமானி" நிகழ்ச்சித்திட்டத்தின் விளம்பர செலவினங்களுக்காக ரூபா 4.7 மில்லியன் பெறுமதியான 05 காசோலைகள் 2015 ஜனவரியில் செல்லுபடியற்றாக்கப்பட்டதுடன் செல்லுபடியற்றமைக்கான காரணங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

## மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் CECB

- 2013 ஆம் ஆண்டிற்காக பணியகத்தின் செயற்பாட்டு வருமானம் மதியுரை சேவைகள் வழங்கியமையால் உழைக்கப்பட்டிருந்த வருமானம் 14 சதவீதமாக இருந்ததுடன் எஞ்சிய வருமானம் நிர்மாணங்களிலிருந்து உழைக்கப்பட்டிருந்தது. அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணப் பயிற்சி கூட்டுத்தாபனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம் போன்ற நிர்மாண வேலைகளைப் பொறுப்பேற்கும் அரசிற்குச் சொந்தமான பல நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும் பொறியியல்சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (SEC) என்பன மாத்திரம் மதியுரை செயற்பாடுகளை பொறுப்பேற்றிருந்தன. எவ்வாறாயினும் நிர்மாண செயற்பாடுகளிலும் வியாபார புரள்வு வரி மற்றும் வேலை அளவு மிகவும் அதிகமாக இருப்பதால் பணியகம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கையளிக்கப்பட்டிருந்த கட்டளையிடல் செயற்பாடொன்றான பொறியியல் மதியுரை பணியகத்தினால் தந்திரோபாயங்களை கேந்திரமாக்கப்பட்டிருக்கவில்லை.

- வீதி நிர்மாண செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 3,601 மில்லியானான இயந்திர உபகரணங்கள் மானியமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அமைச்சினால் பணியகத்திற்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளில் ரூபா 250 மில்லியன் அதற்காக அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பணியகத்தினால் துறைசார் மதிப்பிட்டாளர் ஒருவரால் அச் சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமலும் கிடைத்த ரூபா 3,351 மில்லியன் மானியங்களை கருத்திற் கொள்ளாமல் அச் சொத்துக்கள் ரூபா 250 மில்லியன் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

- பொதுத் திறைசேரியின் முன்னங்கீகாரமில்லாமல் பணியகத்தின் பதவியணிக்கு முன்மொழிவின் அடிப்படையில் ஊக்குவிப்பு படிகளை வழங்குவதற்கு அதன் பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் அவ்வாறு செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு படிகளின் பெறுமதி ரூபா 100 மில்லியனாக இருந்தன.

- மத்திய நிர்மாண சேவைகள் தனியார் கம்பனி தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கமான போட்டி விலை கோரலின் கீழ் ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக பணியகத்தினால் பெற்றுக்கொண்ட ஒப்பந்தங்களில் 90 சதவீதம் கம்பனிக்கு உப ஒப்பந்த முறைமையின் கீழ் வழங்கப்பட்டிருந்தன. கம்பனியால் கூட்டுத்தாபனத்திற்குரிய மனித வளங்கள் பௌதீக மற்றும் ஏனைய வளங்கள் பயன்படுத்தப்பட்டு மேற்குறித்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. எடுத்துக் காட்டாக இரண்டு நிறுவனங்களாலும் அளவிட்டுப் பத்திரங்கள், மதிப்பீடுகள் மற்றும் மாதிரிகளை தயாரித்தல் என்பன ஒரே பதவியணியினரால் மேற்கொள்ளப்படுகின்றது.

- பலவீனமான ஒப்பந்த நிர்வாகம் காரணமாக மீளாய்வாண்டின் போது பணியகத்தினால் பெற்றுக்கொண்ட நிர்மாண ஒப்பந்த வேலைகளில் ரூபா 60 மில்லியனான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் SD & CC

- கூட்டுத்தாபனத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 12,474 மில்லியன் பெறுமதியான 67 நிர்மாண ஒப்பந்தங்கள் கையேற்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மை பிரச்சினைகள், சேவைநாடுகளிடமிருந்து கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமை, சீரற்ற காலநிலை நிலைமை, சேவைநாடுகளால் திட்டங்களை மாற்றுதல் மற்றும் முகாமைத்துவ வினைத்திறனின்மை போன்ற வெவ்வேறு விடயங்கள் காரணமாக அதில் அநேகமாக செயற்திட்டங்கள் 06 மாதங்கள் முதல் 82 மாதங்கள் வரையான காலப்பகுதியில் தாமதமாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது தாமதமான செயற்திட்டங்களினால் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 70.3 மில்லியனாக இருந்தது.

- தனித்தனி செயலாற்றலை மதிப்பீடு செய்யாமல் 2013 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நிர்மாண பிரிவு தெரிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப பதவியணியினருக்கு ரூபா 12.7 மில்லியன் ஊக்குவிப்பு படிகள் செலுத்தியிருந்தன.

- நிர்மாணம் பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களுக்கு கூட்டுத்தாபனத்தினால் 2012 யூன் முதல் 2014 நவம்பர் வரையான காலப்பகுதியினுள் கேகாலை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதிகள் நிர்மாண நடவடிக்கைகளுக்காக வாகன கட்டணங்களாக ரூபா 12 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அம்மேற்பார்வை நடவடிக்கைகளுக்குரிய அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படாமலும் பூரணமற்ற ஓட்டப்பதிவேடுகளை அடிப்படையாக் கொண்டும் மேற்படி செயற்பாட்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் போது ரூபா 3.2 மில்லியன் தொகையான ஏழு கடன்பட்டோர்களின் மீதிகள் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

- கூட்டுத்தாபனத்தின் கொங்கிரீட் பிரிவினதும் நிர்மாணப் பிரிவினதும் முறையே ரூபா 28 மில்லியன் மற்றும் ரூபா 36 மில்லியனான கடன் மீதிகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்தது. அதில் முறையே ரூபா 24 மில்லியனும் ரூபா 25 மில்லியனும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டதுடன் அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட ரூபா 38 மில்லியனான நானாவித கடன்பட்டோர் மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 5 மில்லியன் மற்றும் 19 மில்லியனான நிர்மாண ஒப்பந்தங்களுக்கான கொள்வனவு முற்பணங்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 04 ஆண்டுகள் மற்றும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் பேலியாகொடை அலுவலகத்திற்குரிய ரூபா 22 மில்லியனான கொள்வனவு முற்பணத்திற்காக காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

- 2013 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 149 மில்லியன் தொகையான தேறிய இலாபத்தைக் கொண்டிருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 226 மில்லியனாக இருந்தது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய இலாபத்தில் ரூபா 77 மில்லியன் தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டுப் பிரிவினதும் மதியுரை பிரிவினதும் செயற்பாட்டு இலாபம் முறையே ரூபா 216 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியனால் குறைவொன்றும் இயந்திர உபகரணப் பிரிவில் ரூபா 45 மில்லியன் செயற்பாட்டு நட்டமொன்றும் தேறிய இலாபம் குறைவடைவதற்கு பிரதான காரணங்களாக இருந்தது.

- 2011 ஆம் ஆண்டைத் தவிர ஏனைய அனைத்து ஆண்டுகளின் போதும் கூட்டுத்தாபனத்தின் வரிக்குப் பின்னர் தேறிய இலாபம் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வரிக்குப் பின்னர் தேறிய இலாபத்தில் குறைவு 40 சதவீதமாக இருந்தது.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் மதியுரை, விசேட செயற்பாட்டு மற்றும் இயந்திர உபகரணம் ஆகிய பிரிவுகளில் தேறிய இலாபம் முறையே 24 சதவீதம், 54 சதவீதம் மற்றும் 1,205 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

- நிர்மாணிப்பு மற்றும் உதிரிப்பாகப் பிரிவிற்கு உரித்தான ஏக்கல, வெலிகந்த மற்றும் இரத்மலான ஆகிய வேலைத் தளங்களின் 2012 ஆம் ஆண்டில் ரூபா 41 மில்லியன் செயற்பாட்டு இலாபம் 2013 ஆம் ஆண்டில் 7 மில்லியன் வரை 83 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

வேலைத்தளங்களின் விற்பனைக் கிரயம் தவிர ஏனைய செலவினங்களில் அதிகரிப்பு இதற்குத் தாக்கமளித்திருந்தது.

- 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்பு உதிரிப்பாகங்கள் பிரிவிற்குரிய தங்கொட்டு கற்கள் மற்றும் மர உற்பத்தி பிரிவு என்பன ரூபா 3 மில்லியன் நட்டமடைந்திருந்ததுடன், கடந்த 16 ஆண்டுகளில் 15 ஆண்டுகள் இப்பிரிவு நட்டத்தை ஈட்டியிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்திரண்ட நட்டம் ரூபா 29 மில்லியனாக இருந்தது. வேலைத்தள வருமானம் அதிகரிக்கும் சதவீதத்தை விட விற்பனைக் கிரயம் அதிகரித்தமை இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது.

- 2013 ஆம் ஆண்டின் போது இயந்திர உபகரணப் பிரிவிற்குரிய தலைமை அலுவலகம், கொலன்னாவ பிரதான களஞ்சியம் உட்பட பிரதேச செயலகங்கள் 15 வேலைத்தளங்கள் அடைந்த திரண்ட நட்டம் ரூபா 98 மில்லியனாக இருந்தது.

- மீளாய்வாண்டின் போது வங்கி பிணைப்பொறுப்பு அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கி மேலதிகப் பற்று வசதிகள் ரூபா 474 மில்லியனிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 556 மில்லியன் வரை மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் இருந்தன. அதில் ரூபா 150 மில்லியன் தற்காலிக மேலதிகப் பற்றாக (Temporary Overdraft) 30 சதவீத வட்டியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. ஆதலால் வங்கி மேலதிகப்பற்றிற்காக 2013 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்ட மொத்த மேலதிகப்பற்று வட்டி ரூபா 78 மில்லியனாக இருந்தது.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் போது சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 1,339 மில்லியன் இறக்குமதிப் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 736 மில்லியன் பெறுமதிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஓராண்டு காலம் போன்ற குறுகிய காலப்பகுதியில் 45 சதவீதத்தால் பெறுமதி குறைவடைந்தமை காரணமாக அச்சொத்துக்களின் ஆரம்ப பெறுமதியின் சாதாரனதன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

- 2008 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாடுகளில் நிர்மாணச் செயற்திட்டங்களை ஆரம்பித்து வருமானத்தை ஈட்டுவதற்கு கூட்டுத்தாபனம் ஊக்கம் எடுத்திருந்ததுடன் இதற்காக ரூபா 13 மில்லியன் தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது. எனினும் எந்தவித வெளிநாடொன்றிலும் நிர்மாணமொன்றை ஆரம்பிக்கவோ, ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கோ, எவ்வித வருமானத்தை உழைப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

- 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாண ஒப்பந்தங்களைக் குறித்த காலத்தின் போது பூர்த்தி செய்யாததன் விளைவாக வேலைத் தாமதக் கட்டணமாக ரூபா 20 மில்லியன் தொகையைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்திருந்தது.

- 2013 ஆம் ஆண்டின் இறுதித் திகதி வரையிலும் செயற்திட்டங்களின் ஒப்பந்தப் பெறுமதியை மிகைத்து கிரயத்தை ஏற்றதன் காரணமாக 34 செயற்திட்டங்களுக்காக ரூபா 187 மில்லியன் தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

- 2013 ஆம் ஆண்டின் இறுதியிலான சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் 2013 ஆம் ஆண்டிற்காக பொறியியல், உள்ளக வடிமைப்பு தொழில்நுட்பவியலாளர், அளவுத்திட்ட கணிப்பீடு போன்ற சேவை வகைகளுக்குரிய பதவிகளை வகிக்கும் ஊழியர்களுக்கு ரூபா 159 மில்லியன் படிகளாக வழங்கப்பட்டிருந்தன.

- 2013 ஆம் ஆண்டின் இறுதித் திகதியில் ரூபா 4,656 மில்லியன் தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 95 சதவீதத்திற்கு மேலான அளவு அரச நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியதாகக் காணப்பட்டதுடன், அத் தொகையில் ரூபா 1,960 மில்லியன் தொகை 03 ஆண்டுகள் பழமைவாய்ந்த மீதிகளாக காணப்பட்டன.

## அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்

- கொலன்னாவ அரச தொழிற்சாலையின் 15 ஏக்கர் அளவிலான காணியில் 01 ரூட் 16 அளவிலான பகுதியொன்று 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அனுமதியின்றி குடியிருந்ததுடன், இக்காணி தீர்வு செய்யப்பட்டு பாதுகாப்பதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2013 திசெம்பர் 31 உள்ளவாறு காணப்பட்ட கடன்பட்டோர் மீதியான ரூபா 362 மில்லியனில் 1995 முதல் 2007 ஆம் ஆண்டு வரை அரச நிறுவனங்களுக்கு பொருட்களை வழங்கி இது வரை அறவிட முடியாதிருந்த ரூபா 53 மில்லியன் தொகை எவ்வித அறவீட்டிற்கான நடவடிக்கையொன்றும் எடுக்கப்படாமல் இதுவரையில் கணக்குகளில் காணப்பட்டன.

# வீடமைப்பு

இலங்கையிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வாழ்வதற்காக வீடொன்றினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்படுத்தப்படும் ஜனசெவன வீடு மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டு முதல் கட்டுமானம், பொறியியல் சேவைகள் மற்றும் பொது வசதிகள் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

- அதிகாரசபையினால் ஜனசெவன பத்து இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க 2014 ஆம் ஆண்டினுள் நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆண்டினுள் அடையப்பட்டவை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

  (i) வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய நாடெங்கிலும் தாபிக்கப்பட்டுள்ள மாவட்ட மற்றும் நகர அலுவலகங்களின் பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் தமது கடமைகளை நிறைவேற்றும் பதவியணியினரின் பங்களிப்புடன் 2014 ஆம் ஆண்டினுள் 42,222 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் இலக்கினை அடைந்து கொள்வதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்ததெனினும் உண்மையாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 15,590 ஆகும். அதாவது இலக்கிடப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கையில் ஆண்டினுள் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் அளவானது 37 சதவீதமாகும். எனினும், மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகளில் 43 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

  (ii) மீளாய்வாண்டின் இறுதியில் ஜனசெவன உபகார வீட்டுக்கடன் வேலைத்திட்டம் நீங்கலாக ஏனைய கடன் வேலைத்திட்டங்களில் தெளிவான முன்னேற்றமொன்று அவதானிக்கப்படவில்லை.

  (iii) அரச மற்றும் தனியார் பங்களிப்பு வீட்டு செயற்திட்டத்தின் கீழ் 05 வீடமைப்பு திட்ட முறைகளில் 877 வீட்டு அலகுகளினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டிறுதியில் அவற்றில் எந்தவொரு வீட்டு அலகும் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன், வேலை ஆரம்பிக்கப்பட்ட உத்தேச வீட்டுத்திட்ட முறைமைகள் 02 ஆகும். அந்த உத்தேச முறைமைகளின் நிர்மாண முன்னேற்றம் 2 சதவீதமாகும்.

  (iv) சஹஸ்ர லங்கா வீட்டுத் திட்டத்தின் கீழ் ரூபா 75 மில்லியன் அடிப்படையில் 60 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டினுள் திட்டமிடப்பட்டு, அதில் எந்தவொரு வீட்டு அலகினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) அரசினால் 2011 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனசெவன வேலைத்திட்டத்தின் கீழ் பத்து இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக அரச துறையின் முன்னோடியான 26 மாவட்ட செயலகங்கள் மற்றும் 03 நகர அலுவலகங்களையும் உள்ளடக்கிய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையானதுடன் அதிகார சபையினால் 2014 – 2018 வரையான காலப்பகுதியிலும் அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உத்தேசிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மொத்த வீடுகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் மாத்திரமேயாகும். இவ்வாறான நிலைமையின் அடிப்படையில் ஜனசெவன வீட்டு வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை யதார்த்தமாக மாற்றுவதற்கு சிக்கலுடன் கூடிய நிலையொன்று காணப்பட்டதுடன் உத்தேசிக்கப்பட்ட இலக்குகள் / நோக்கங்களை அண்மிப்பதற்குரிய தடைகள் உரியவாறு இனங்காணப்பட்டு அதற்காக உடனடி தீர்வொன்றினை மேற்கொள்ளும் தேவைப்பாடானது முகாமைத்துவத்தினால் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- இழப்பீடு செலுத்த வேண்டிய காணிகள், காணி கையேற்பு அதிகாரச்சட்டத்தின் 38(ஆ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் உரித்து கையேற்கப்பட்டிருந்ததெனினும், சிக்கலான நிலைமையொன்றின் அடிப்படையில் குறித்த இடங்களை அதிகார சபைக்கு கையளிப்பதற்கு அதிக காலம் கடந்திருந்ததுடன், அதன் காரணமாக 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 16 மில்லியனானதுடன், அதற்காக செலுத்த வேண்டிய சென்மதி வட்டி ரூபா 48 மில்லியனாகும்.
- 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட காணி கண்காணிப்பு அறிக்கையின் பிரகாரம் 645.66 ஹெக்டேயர் பரப்பளவுள்ள காணிகள் இணங்காணப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றில் அனுமதியற்ற குடியிருப்புக்கள் 208.75 ஹெக்டெயர் பரப்பளவில் காணப்படுகின்றமை இணங்காணப்பட்டிருந்தது. அவ்வாறே வடக்கு மாகாணத்திற்குரிய ஐந்து மாவட்டங்கள் தொடர்பில் ஆய்வொன்றும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- வீடமைப்பு உத்தேசத் முறைமைகளினை நிர்மாணிப்பதற்கு முன்னர் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களால் வீட்டுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செயற்படாமல், வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில், 26 வீடமைப்பு உத்தேச முறைமைகளின் 1,986 வீடுகளுக்குரிய அனுகூலச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் வினாக் கோவை எழுப்பப்பட்டிருந்தது. மேலும், அந்த நிலமையின் அடிப்படையில் வீடமைப்பு உத்தேச திட்டங்களுக்குரிய வீடுகளை, வீட்டு உரிமையாளர்களுக்கு கையளித்து முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை தாபிப்பதற்கு இயலாதுள்ள காரணத்தால் அந்த வீடமைப்பு உத்தேச திட்டங்களுக்குரிய வீடுகளின் பராமரிப்பு மற்றும் மீள்திருத்த பணிகள் தொடர்ந்தும் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த வீடமைப்பு உத்தேச திட்டங்களின் பராமரிப்பு மற்றும் மீள்திருத்த பணிகளுக்காக மீளாய்வாண்டில் முறையே ரூபா 12 மில்லியன் மற்றும் ரூபா 771 மில்லியன் தொகையான செலவினத்தை அதிகாரசபை ஏற்க வேண்டியிருந்தது.

- மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த கடன்பட்டோர் மீதியானது ரூபா 3,880 மில்லியனால் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும், பெற வேண்டிய மீதிகளின் ரூபா 2,202 கூட்டுத்தொகையான அல்லது மொத்த கடன்பட்டோர் பெறுமதியில் 56 சதவீதமாகும். இந்த பெற வேண்டிய கடன்தொகைகளை அறவிடுவதற்காக அதிகார சபை பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருந்த போதிலும் அறவீட்டுச் சதவீதமானது மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது.

- அதிகாரசபைக்குரிய ஹோமாகம, ஜல்தர மற்றும் தியவன்னாவ பூங்காக்கள் ஆகிய வீடமைப்பு உத்தேச திட்டதின் 02 வீடுகளை அகற்றும் சாதாரண முறைமைக்கு புறம்பாக முறையற்ற விதத்தில் எதுவித உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படாமலும் எதுவித முற்பணமும் பெற்றுக்கொள்ளப்படாமலும் இரு நபர்களுக்கு வதிவிற்காக விடுவிக்கப்பட்டிருந்தது.

- 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 14/0619/517/021-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பல்லேகலே தோட்டத்தில் உள்நாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து 42 வீட்டு அலகுகளுடன் கூடிய வீடமைப்பு செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு தனியார் பங்காளொருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் போது நிர்மாணத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படாமல் 39 வீட்டு அலகுகள் வரை குறைக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டத்தின் உண்மையான இலாபத்தில் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய அளவிற்கு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்குப் பதிலாக அச் செயற்திட்டத்தின் திட்டமிடல் கட்டத்தில் மதிப்பிடப்பட்ட இலாபத்தில் ((pre – Determined Profit) 10 சதவீதத்தினை பெற்றுக்கொள்ள உடன்பட்டிருந்தது.

- 1998 திசெம்பர் 17 ஆந் திகதிய 140/98 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், அனுமதியற்றோரை ஆதனங்களிலிருந்து அகற்றும் போது அண்மிய வருட மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், மெனிங்டவுன் வீடமைப்புத் திட்டத்தின் D/V/2/2/l ஆம் இலக்க வீட்டினை அகற்றும் போது 1998 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டில் வீடு அகற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபைக்கு ஏற்பட்ட நடடம் ரூபா 10 மில்லியன் ஆகும்.

- அவ்வாறே அனுமதியற்றோருக்கான நடைமுறையொன்று அமைச்சரவையால் பின்பற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக கம்பஹா, வேவல்தூவ வீடமைப்புத் திட்டத்தின் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் மூவரை அகற்றுவதற்காக அதிகார சபையினால் நடவடிக்கை எடுத்தமையின் காரணத்தினால் அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4 மில்லியன் ஆகும்.

## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

கூட்டு ஆதன, கூட்டு ஆதனம் மற்றும் தற்காலிக ஆதனங்களின் கட்டுப்பாடு, முகாமைத்துவம், அவற்றைப் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் போன்ற நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக 1973 இன் 10 ஆம் இலக்க பொது வசதிகள் சபை அதிகாரச்சட்டத்தினை திருத்தி சமர்ப்பிக்கப்பட்ட 2003 இன் 24 ஆம் இலக்க பொது வசதிகள் (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தினால் 2003 நவம்பர் 10 ஆம் திகதி முதல் கூட்டு முகாமைத்துவ அதிகார சபை தாபிக்கப்பட்டிருந்தது.

- மேற்குறித்த அதிகாரச் சட்டத்தின் 05 ஆம் பந்தியின் (உ) பந்தியின் பிரகாரம் கூட்டு ஆதனங்களின் முகாமைத்துவம் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டமையின் பின்னர் அதிகார சபையால் அதன் செயற்பாடுகளை முகாமை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும். அதிகார சபை வழங்கிய தகவல்களின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பதிவு செய்வதற்கு இலக்கிடப்பட்ட முகாமைத்துவ கூட்டுத்தாபனம் மற்றும் குழுக்களின் எண்ணிக்கை 1,080 எனினும், மிளாய்வாண்டின் இறுதியில் தாபிக்கப்பட்ட

முகாமைத்துவ கூட்டுத்தாபனம் மற்றும் குழுக்களின் எண்ணிக்கை 829 ஆனமையுடன் அதில் 60 சதவீதம் 2015 மே வரையிலும் செயற்பாடற்று காணப்பட்டது.

- அவ்வாறே அதிகாரச்சட்டத்தின் (எ) பிரிவின் படி கூட்டு ஆதனச் சொத்துக்களின் பொது வசதிகளின் பராமரிப்பினை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிப்பதற்காக அதிகார சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும், மாளிகாவத்த மற்றும் ஜல்தர வீடமைப்பு திட்டங்களின் பொது வசதிகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அதிகார சபையின் வருமானம் ரூபா 48 மில்லியனால் அல்லது 77 சதவீதத்தால் அதிகரித்திருந்ததெனினும் செலவுகளை தீர்த்ததன் பின்னர் நிதி விளைவுகள் ரூபா 449,155 ஆன இலாபமொன்றாக இருந்தது. வருமானம் அதிகரிப்பதற்கு ஒப்பாக செலவினங்களும் பாரியளவில் அதிகரித்திருந்தமையால் நிதி விளைவுகள் குறைவான பெறுமதியொன்றினை கொண்டிருந்தது.

  அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியிலான அதிகாரசபையின் தேறிய சொத்துக்களில் ரூபா 12 மில்லியன் சாதகமான மீதியொன்று வெளிப்படுத்தப்பட்டதெனினும், கடந்த 03 ஆண்டுகளில் அது முறையே ரூபா 25 மில்லியன், ரூபா 16 மில்லியன் மற்றும் ரூபா 32 மில்லியன் எனும் படியாக மறைப்பெறுமதியை கொண்டிருந்தது. மீளாய்வாண்டில் ஊழியர் சம்பளக் கொடுப்பனவுகளுக்காக திறைசேரியிலிருந்து ரூபா 10 மில்லியன் பெற்றுக்கொண்டமை மற்றும் ரூபா 29 மில்லியன் முன்னைய வருட சீராக்கங்கள் மீளாய்வாண்டின் தேறிய சொத்துக்களின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன. இந்த நிலைமையானது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை பாதகமாக பாதித்திருந்தது.

## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

- அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் ரூபா 10 மில்லியன் குறையொன்று பெறப்பட்டிருக்கும் போது அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முற்றிலும் அரசுக்குரித்தான கம்பனிகளின் பதவியணிக்கு வெகுமதிக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் இலாபமீட்டிய நிறுவகங்களின் ஊழியர்களுக்கு செலுத்துவதற்கென பரிந்துரை செய்யப்பட்டிருந்த ரூபா 15,000 தொகையான வெகுமதி கொடுப்பனவினை அடிப்படையாகக் கொண்டு அதிகாரசபையின் 89 உத்தியொகத்தர்களுக்கு ரூபா 1 மில்லியன் வெகுமதி கொடுப்பனவொன்று கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டிருந்தது.

- உலக குடியிருப்பாளர் தினத்தை முன்னிட்டு ‘‘கொழும்பு சிறார்கள்’’எனும் பெயரில் நாடகமொன்று மற்றும் வீதி உணவு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்காக ரூபா 23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- 2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய சீபி/07/0140/226/013 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நகர குடியிருப்பாளர் அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டவுடன் ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் தனியார் கம்பனியின் கலைத்தல் அக் கம்பனியின் சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்களும், பதவியணியும் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டுமெனினும், 2014 நவம்பர் மாதம் வரையிலும் பதவியணி உள்ளீர்ப்பு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- ஜனசெவன ஜவஷக்திய பங்களிப்பு சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 40 மில்லியன் அநுராதபுரம் வீடமைப்புத் திட்டத்தின் செலவினம் ரூபா 2 மில்லியன், போக்குவரத்து செலவினமான ரூபா 7 மில்லியன் மற்றும் செயற்திட்ட தொடக்கம் விழாச் செலவினமான ரூபா 5 மில்லியன் எனும்படியாக ரூபா 14 மில்லியன் தொகையானது நோக்கத்திற்கு முரணாக செலவழிக்கப்பட்டிருந்தது.

- 2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(உ) உபபிரிவின் பிரகாரம் குறைந்த செலவிலான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக ஆதனங்களை அபிவிருத்தி செய்வோரிடமிருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்படும் அனைத்து நிதியும் அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமெனினும், 2010 மார்ச் மாதத்தின் பின்னர் அதிகாரசபைக்கு அவ்வாறு பணம் கிடைத்திருக்கவில்லை. இவ்வாறு பெறவேண்டிய பணம் ரூபா 207 மில்லியன் ஆகும். மேலும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச் சேவை கட்டண அறவீடுகளை நிறுத்தியிருப்பதுடன், அதன் காரணமாக நிறுவகத்தின் பிரதானமான வருமான வழி இழக்கப்பட்டிருந்தது.

# பயணிகள் போக்குவரத்து

இலங்கையில் பயணிகள் போக்குவரத்து தேவைப்பாட்டின் 58 சதவீதம் அளவில் பொதுப் போக்குவரத்து சேவைகள் மூலமே நிறைவேற்றப்படுகின்றது. அச்செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் வழிநடாத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தினால் போக்குவரத்து அமைச்சு ஏற்படுத்தப்பட்டு அதன் கீழ் செயற்படும் இலங்கை புகையிரத திணைக்களம், இலங்கை போக்குவரத்து சபை, மோட்டார் போக்குவரத்து திணைக்களம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம், லக்திவ பொறியியல் நிறுவகம், வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மன்றம் போன்ற நிறுவனங்கள் மூலம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டினுள் அமைச்சின் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 7,557 மில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 17,453 மில்லியனுமாக வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்கின் பிரகாரம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 7,548 உம் மூலதனச் செலவினமாக ரூபா 13,023 உம் செலவிடப்பட்டிருந்தது. மூலதனச் செலவினத்திற்கான ஏற்பாட்டினுள் புகையிரதப் பாதைகள் நிர்மாணச் செயற்திட்டத்திற்காக ரூபா 11,002 மில்லியன் வெளிநாட்டு கடன்தொகையொன்று மீளாய்வாண்டினுள் கிடைக்கப் கிடைக்கப் பெற்றிருந்தது. அவ்வாண்டில் மொத்த பதவியணியினர் 138 ஆக இருந்தனர். 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டில் போக்குவரத்து அமைச்சு மற்றும் அதன் கீழான ஏனைய நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான புகையிரதப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 36,166 மில்லியன் மதிப்பீட்டில் ரூபா 11,123 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 06 புதிய புகையிரதப் பாதைகள் நிர்மாணிப்பு முன்மொழிவுகளிற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 376 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் 19.8 மில்லியன் மாத்திரம் திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தன. இச் செயற்திட்டங்களில் வருடாந்தம் அடைந்து கொள்ளக்கூடிய பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றத்தைக் காண்பிக்கும் செயற்திட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது சிக்கனமற்ற விதத்தில் திணைக்களம் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 6.55 மில்லியனாக இருந்ததுடன், 04 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 25 மில்லியன் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை புகையிரத திணைக்களம்

தற்போது இலங்கையின் புகையிரத வலையமைப்பு 1,640 கி.மீற்றர்களாகும். திணைக்களத்திற்குச் சொந்தமாக 13,980 ஏக்கர் காணி நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படுகின்றன. அதில் புகையிரத வீதி மற்றும் அலுவலக கட்டிடங்கள் களஞ்சியங்கள் என்பவற்றிற்காக பயன்படுத்தப்படும் காணி 8,616 ஏக்கர்களாகும். 2014 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பதவியணியினர் 16,893 ஆக இருந்தனர். மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் உழைத்த வருமானம் ரூபா 5,909 மில்லியனாக இருந்ததுடன், அரசிடமிருந்து கிடைத்த நிதிஏற்பாடுகளில் மீண்டெழும் செலவினமாக ரூபா 16,943

மில்லியனாக இருந்ததுடன், மூலதனச் செலவினமாக ரூபா 34,601 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டில் புகையிரத திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- திணைக்களங்களின் வருமானக் கணக்கின் பிரகாரம் புகையிரத ஆணைச்சீட்டுக்களுக்காக ரூபா 1,571 மில்லியனும் புகையிரத பருவ நுழைவுச்சீட்டுக்களை பொறுப்பேற்காமையால் அறவிடப்பட்ட ரூபா 1.1 மில்லியன் தண்டப்பணத்தையும் இணக்கக்கூற்றின் பிரகாரம் நிலுவையான நானாவித அறவீடுகள் ரூபா 84.84 மில்லியன் என்பன நீண்டகாலமாக அறவிட வேண்டியதாக இருந்த போதிலும், அவற்றை அறவிடுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- வருடக் கணக்கில் மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற 1047 பேரிடமிருந்து ரூபா 52.23 மில்லியனும் பதவியை வரிதாக்கிச் சென்ற 4071 ஊழியர்களிடமிருந்து ரூபா 21.42 மில்லியனும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட 462 பேரிடமிருந்து ரூபா 10.19 மில்லியனுமாக அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்காக திணைக்களம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- 1998 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், தீர்க்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 1,030.60 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளுக்குரிய பெறுமதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவின் பிரகாரம் வழமையான கடமை நேரம் நாளொன்றிற்கு 08 மணித்தியாலங்களுக்கு கழிக்கப்பட வேண்டிய போதிலும், 68 புகையிரத காப்பாளர்களின் வாரமொன்றிற்கு வேலை செய்ய வேண்டிய வழமையான நேரத்தைக் கழிக்காமல் அக்காலத்தின் போது ரூபா 960,341 தொகை மேலதிக நேரக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.
- ஓமந்தையிலிருந்து பளை வரை புகையிரத மீள் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் புகையிரத பாதைக்கு பயன்படுத்தப்பட்ட ரூபா 80 மில்லியன் பெறுமதியான 6849 சிலிப்பர் கட்டைகள் பழுதடைந்திருந்ததுடன் சிலிப்பர் கட்டைகள் வழங்கிய நிறுவகத்தின் உறுதிப்படுத்தலின் படி மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த சிலிப்பர் கட்டைகளின் தரம் தொடர்பாக பரீட்சித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிசோதனை முறைமையொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை. மேலும் அச்செயற்திட்டத்திற்கு மிகை மதிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 374.19 மில்லியன் பெறுமதியான சிலிப்பர் கட்டைகளும் தண்டவாளங்களும் எஞ்சியிருந்தன. ஏற்கனவே காணப்படும் பாதைகளை நவீனமயப்படுத்துவதற்காக அவற்றைப் பயன்படுத்துவதற்கு மாற்றுவழியை இனங்கண்டுள்ளதாக புகையித பொது முகாமையாளர் பதிலளித்திருந்தார். எனினும் 2015 மே 31 ஆந் திகதி வரை வரையிலும் இனங்காணப்பட்ட மாற்றுவழிகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னரும் 09 மாதங்களுக்காக செயற்திட்ட அலுவலகத்தை பேணி மாதமொன்றிற்கு ரூபா 300,000 வீதம் ரூபா 1.8 மில்லியன் அக்காலப்பகுதியில் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.
- 1987 சனவரி 05 ஆந் திகதிய 887 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வீட்டு வாடகை திருத்தம் செய்யப்படாமையால் 03 உப திணைக்களங்களுக்கரிய 145 வீடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1.93 மில்லியன் வருமானமொன்று அரசாங்கத்திற்கு கிடைக்காமல் போயிருந்ததுடன் இரத்மலானையில் அமைந்துள்ள 680 புகையிரத உத்தியோகபூர்வ வீடுகளுக்காக வேறாக நீர்மானி பொருத்தாமல் திணைக்களத்தின் பிரதான நீர்

வழங்களிலிருந்து நீர் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் வழங்கப்பட்ட நீருக்காக ரூபா 58.49 மில்லியன் தொகை திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை துறைமுகத்திலிருந்து உரிய நேரத்தில் விடுவிக்காமையால் மீளாய்வாண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் ரூபா 1.29 மில்லியன் தாமதக் கட்டணம் சிக்கனமற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தன.

## இலங்கை போக்குவரத்து சபை

1985 ஆம் ஆண்டின் போது இலங்கை போக்குவரத்து சபையாக மீண்டும் தாபிக்கப்பட்டதன் பின்னர், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொடர்ச்சியாக நட்டமடைந்து வந்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது திட்டமிடல் பிரிவினால் பேணப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மொத்த வருமானம் ரூபா 33,665 மில்லியனாக இருந்ததுடன், 2014 இன் மொத்தச் செலவினம் ரூபா 35.528.02 மில்லியனாக (பெறுமானத்தேய்வு உட்பட) இருந்ததுடன், அரசிடமிருந்து ரூபா 500 மில்லியன் கிடைத்திருந்தது. இறுதியாக கணக்குகள் கணக்காய்விற்கு 2012 ஆம் ஆண்டிற்காகவே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அக்கணக்கின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த இலாபம் ரூபா 3,966.54 மில்லியனாக இருந்ததுடன், அவ்வாண்டில் திறைசேரியிடமிருந்த கிடைத்த ரூபா 1,508.2 ஆன நிதிஏற்பாட்டினால் நட்டம் ரூபா 2,458.34 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. சபையினால் தொடர்ந்தும் நட்டம் அடைகின்றதன் அடிப்படையில் 2012 ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 25,538.5 மில்லியன் மறை பெறுமதியைக் கொண்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிற்காக இறுதி நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது உரிய கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. சபைக்கு ஒதுக்கப்பட்ட நேர அட்டவணையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக நாளொன்றிற்கு சராசரி 7204 பேரூந்துகள் தேவைப்பட்ட போதிலும் ஆண்டினுள் நாளொன்றிற்கு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பேரூந்துகளின் எண்ணிக்கை 4596 ஆக இருந்தன. இதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது மொத்த நேர அட்டவணையின் 37 சதவீதம் அளவில் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது ஒரு கிலோமீற்றருக்கு மொத்த வருமானம் ரூபா 87.84 முதல் 90.68 வரை அதிகரித்திருந்தது. அத்துடன் சபையிடமிருந்த பழைய பேரூந்துகளை அகற்றி புதிய பேரூந்துகளை சேர்த்தமையே இதற்கான காரணமாக இருந்ததாக சபையால் அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும் ஆண்டினுள் பஸ் வண்டியொன்றை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கான கிரயம் ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 95.70 ஆக இருந்தமையால் ஓட்டத்தில் ஈடுபடுவதால் ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 5.02 ஆன நட்டம் தொடர்ந்தும் ஏற்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் பதவியணியினர் 34,303 ஆக இருந்தனர். 2012 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட முடிவுக் கணக்குகள் கணக்காய்வின் போதும் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வின் போதும் எழுந்த முக்கியமான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் போக்குவரத்து சபைக்காக ஒழுங்கமைப்பு குறிப்பொன்று, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று மற்றும் பதவி உயர்வு முறைமையொன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 3,232.23 மில்லியன் ஆன 66 வரவு மீதிகள் மற்றும் ரூபா 2,010.90 ஆன 23 செலவு மீதிகள் முறையே அசைவற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முழுமையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு 2002 ஆம் ஆண்டின் போது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் முழுமையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.

- குறித்த காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ஊழியர் மற்றும் தொழில்கொள்வோர் பங்களிப்பினை அனுப்பப்படாமையால் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையில் சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை முறையே ரூபா 9,502.6 மில்லியன் மற்றும் ரூபா 45.18 மில்லியனாக இருந்தது. இவ்வாறு பங்களிப்புத் தொகை செலுத்தாமையால் 5 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையான மிகைக் கட்டணம் செலுத்த நேர்ந்திருந்தது.

- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற விண்ணப்பமொன்று மற்றும் அங்கீகாரமின்றி 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக 16,280 பயண தடவைகள் வழங்கியிருந்ததுடன், அதற்காக மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 142.52 மில்லியன் தொகை அந்த அரசியல் கட்சியால் கொடுப்பனவு எய்ப்புச் செய்யப்பட்டிருந்தது. சபையினாலும் முறையற்ற விதத்தில் இந்த பேரூந்துகளை வாடகைக்கு வழங்கியமையால் பேரூந்துகளை வாடகைக்கு வழங்கும் போது அறவிடப்படுகின்ற தொகையை விட குறைந்த தொகையொன்று அறவிடப்பட்ட காரணத்தினால் ரூபா 94.52 மில்லியன் வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

- 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மேல் மாகாண சபை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு போக்கவரத்து சபைக்குரிய பேரூந்துகள் வழங்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல அறிவித்தலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது களுத்துறை பிராந்திய அலுவலகத்திற்குரிய 5 டிப்போக்கள் மூலம் மத்துகவில் இடம்பெற்ற விழாவொன்றிற்கு 47 பேரூந்துகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு வழங்குவதற்கு முகாமைத்துவம் எடுத்த தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இரண்டு டிப்போக்ககள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 20 பேரூந்துகளுக்குரிய தகவல்கள் பரிசோதிக்கப்படட போது அப்பேரூந்துகள் எதுவித கட்டண அறவீடுகளின்றி ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

2014 ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் திணைக்களத்தின் மொத்த பதவியணியினர் 162 ஆக இருந்ததுடன், அவ்வாண்டின் மீண்டெழும் மற்றும் மூலதனமாக செலவிடப்பட்ட செலவினம் முறையே ரூபா 735.53 மில்லியன் மற்றும் ரூபா 130.93 மில்லியனாக இருந்தன. கணக்காய்விற்காக 2014 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கணக்குகளின் பிரகாரம் ஆண்டின் மிகை ரூபா 109.2 மில்லியனாக இருந்ததுடன், அவ்வாண்டில் ஆணைக்குழுவின் கொடுக்கல் வாங்கல்கள்

செயற்பாடுகள் தொடர்பான கணக்காய்வின் போதும் எழுந்த முக்கியமான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- முன்னைய ஆண்டின் இறுதியில் 31 கெமிசரிய பேரூந்து சேவைகளும் 136 நிசிசெரிய பேரூந்து சேவைகளும் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், அந்த அளவினையே மீளாய்வாண்டிலும் நடாத்திச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும் முறையே பேரூந்து சேவைகள் 21 மற்றும் 114 வரை குறைவடைந்திருந்தது.

- ஜீ.பீ.எஸ் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்து மாகாண பேரூந்துகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கும் புதிய கட்டுப்பாட்டு அறையொன்றை தாபிப்பதற்கும் மீளாய்வாண்டில் ரூபா 40 மில்லியன் தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையில் கட்டிடம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு அதற்காக ரூபா 18,189,547 தொகை செலவிடப்பட்டிருந்தது.

- அனைத்து மாகாண பேரூந்துகளிலும் மாகாணத்தில் ஓட்டத்தில் ஈடுபடும் பேரூந்துகளின் கால அட்டவணை காட்சிப்படுத்தும் நோக்கில் ஆணைக்குழுவினால் ரூபா 62.41 மில்லியன் செலவு செய்து 07 இலத்தரனியல் காட்சிப்படுத்தல் பலகைகளை வெவ்வேறு நகரங்களில் பொருத்தியிருந்த போதிலும், இதுவரையில் அந்த அனைத்து பலகைகளும் செயலற்றுக் காணப்பட்டன. அப்பெயர்ப் பலகைகள் செயலற்றிருந்த போதிலும், 2015 மே மாதம் இறுதி பெற்றுக்கொண்ட 11 நாள் மின்சாரம் மற்றும் இணைய வசதிகளுக்காக ரூபா 1.49 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும் ரூபா 423,265 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

- பஸ்தியன் மாவத்தை பஸ் நிலையத்தின் செயற்பாடுகளை அதன் முகாமைத்துவத்திற்கும் ஆணைக்குழுவின் தலைவருக்கும் தமது அலுவலகத்திலிருந்து மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் ரூபா 470,250 தொகை செலவு செய்து CCTV கெமரா முறைமையொன்று பொருத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அது செயலற்ற நிலைமையில் காணப்பட்டது.

- அனைத்து மாகாண பேரூந்து ஓட்டச் செயற்பாடு தொடர்பாக செயற்கைகோள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நேரடியாக கண்காணிக்க கூடிய வகையில் 2,095 பேரூந்துகளில் ஜீ.பீ.எஸ் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 79.06 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் ரூபா 8.31 மில்லியன் தொகை அந்த உபகரணங்களை பராமரிப்பதற்காக நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியதாக இருந்ததுடன், 2015 மே மாதம் வரையில் அனைத்து ஜீ.பீ.எஸ் உபகரணங்களும் செயலற்ற நிலைமையில் இருந்ததுடன், அவற்றை உரிய நிலைக்கு கொண்டு வர முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

ஆண்டின் போது கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் திணைக்களத்தினால் ரூபா 9,290.58 மில்லியன் உழைக்கப்பட்டிருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 1,463.51 மில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,922.54 மில்லியனும் பாதீட்டு ஏற்பாட்டிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் கோவைகள் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பிக்காமை, அதிகளவில் தாமதித்து வழங்கியதன் காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அதிகளவில் தடையொன்றாக இருந்ததுடன், கணக்காய்வினை முறையாக மேற்கொள்ள முடியாதிருந்தது. 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு கோரப்பட்டிருந்த 500 இற்கு மேற்பட்ட கோவைகள் 2015 யூலை 31 ஆந் திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

- திணைக்களத்தால் நீண்டகாலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் மற்றும் விபத்துக்களினால் அகற்றப்படும் வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் இலக்கத்தைப் பயன்படுத்தி சுங்க வரி செலுத்தாது சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட வாகனங்களின் தரவுகள் இந்த வாகனங்களுக்குரிய பதிவிற்கு உள்ளாக்கப்பட்டு அல்லது இந்த வாகனங்களை அடையாளம் காணும் இலக்கத்தை பயன்படுத்தி பல முறைகேடுகளைச் செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மோசடியான வாகனப் பதிவுகள் மேலும் அதிகரிப்பதற்கும் வாகன வரி வருமானம் போதியளவில் குறைவடைவதற்கும் அவை காரணங்களாக இருந்தன. வாகனப் பதிவிற்காக பயன்படுத்தப்படும் ஆரம்ப இலக்கம் 24,25,31,32,40,50,51,64 மற்றும் 65 உட்பட மிகவும் பழைய இலக்கத் தொகுதியின் கீழ் நவீனரக வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், வீதியில் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்த அவ்வாறு பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் காணப்பட்டமை 05 தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

- மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் இல்லாமல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மோட்டார் வாகனங்களை தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றுசேர்த்தல், புதிதாக வடிவமைத்தல், பாகங்களாகப் பிரித்தல், மெருகூட்டுதல் அல்லது வடிவமைப்பை மாற்றுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத போதிலும், வீதியில் ஓட்டத்தில் இருந்த வாகனங்களைப் பரிசோதித்த அவ்வாறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட 26 வாகனங்கள் அவதானிக்கப்பட்டன. மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம் இவ்வாறான வாகனங்களின் பதிவை இரத்துச் செய்தல், வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழங்காமல் இருக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் இவ்வாறான வாகனங்கள் தொடர்பான விபரங்களை இலங்கை பொலிஸ் மற்றும் குற்றத் தடுப்பு பரிசோதனைத் திணைக்களம் என்பவற்றிற்கு தெரியப்படுத்துதல் போன்ற இலகுவாகச் செய்யக்கூடிய செயற்பாடுகள் தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- சிங்கிள் கெப் வண்டியாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு பின்னர் ஜீப் வண்டிகளாக மாற்றப்பட்டிருந்த 18 வாகனங்களிலிருந்து சொகுசு வரியான ரூபா 4.32 மில்லியன் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- நவீன மோட்டார் வாகனங்களை திணைக்களத்தில் பதிவு செய்யும் போது பல்வேறுபட்ட மோசடிகளை தவிர்ப்பதற்காக பலமான உள்ளக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தாபிக்கப்படாமல் இருந்ததுடன், புதிய வாகனங்களைப் பதிவு செய்யும் போது அதற்குரிய இறக்குமதி தகவல்கள் சுங்க கணனி முறைமை மூலம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள கணனி முறைமைக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த தகவல்களைப் பரீட்சிக்காமல் 22 இரட்டை நோக்கு வாகனங்கள் மற்றும் 56 வாகனங்கள் லொறி வண்டிகள் என வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- நோயாளர் காவும் வண்டி மற்றும் சவ ஊர்தி போன்ற விஷேடமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களைப் பதிவு செய்யும் போது அந்த விஷேடமான நோக்கத்திற்குப் புறம்பாக செல்வதைத் தடுப்பதற்காக போதியளவான மற்றும் முறையான செயற்பாடொன்றை திணைக்களம் பின்பற்றப்படாதிருந்தமையால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெற்றிருந்ததுடன், கணக்காய்வு தெரிவுப் பரிசேதனையின் போது அவ்வாறான 4 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
- ஆடம்பர வரி அறவிடுதல் தொடர்பாக வரி அறவீடு மறறுறம் பெற வேண்டியய நிலுவை வரி தொடர்பாக முறையான அறிக்கைகளை பராமரித்துச் செல்லாமை, வரி அறவீட்டு நடவடிக்கைகள் முறையாக நிறைவேற்றாத காப்புறுதி நிறுவனங்கள் தொடர்பாக உரிய சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்தாமை மற்றும் உரிய கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்படாமை போன்ற முக்கியமான செய்பாடுகள் தொடர்பாக மீளாய்வாண்டினுள் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

# இளைஞர் விவகாரம்

இளைஞர் அபிவிருத்திக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அளப்பரிய பங்களிப்பை வழங்குவதுடன் மன்றத்தின் செயலாற்றலுக்காகவும் அதன் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காகவும் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்தும் ஏனைய வெளிவாரி நன்கொடைகளிலிருந்தும் ரூபா 1,483.86 மில்லியன் நிதி மன்றத்திற்கு கிடைத்திருந்தது. ஆண்டிற்கான ஒட்டுமொத்தச் செலவினம் ரூபா 1,626 மில்லியனாக காணப்பட்டது.

மன்றத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நேரடியான பங்களிப்பை வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 10 பிரிவுகளிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 432.67 மில்லியன் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 236.28 மில்லியன் குறித்துரைத்த நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தன. மன்றத்தின் 14 பண்ணையாளர்களின் 294 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மொத்தக் காணியில் ஏறத்தாழ 90 ஏக்கர்கள் பண்ணைத் தொழிலிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இளைஞர் கழகங்கள் மட்டத்தில் தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினால் திட்டமிடப்பட்ட அநேக நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை இளைஞர் கழகங்கள் ஒன்றியம் என்ற தொண்டர் அமைப்பினால் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ்வாறான 3 நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்காக அந்த அமைப்புக்கு ரூபா 3,949,682 செலுத்தப்பட்டிருந்தது. குறித்த அமைப்பு தொண்டர் நிறுவனமொன்றாக காணப்பட்டமையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படவில்லை.

இளைஞர் அபிவிருத்திக்காக வடிவமைக்கப்பட்டிருந்த 18 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ரூபா 857.84 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தன. பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் பொழிப்பாக்கப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## 2014 உலக இளைஞர் மாநாடு

அமைச்சிடமிருந்தான ஏற்பாட்டினையும் உள்ளடக்கி ரூபா 547.78 மில்லியன் தொகையை மன்றம் செலவிட்டிருந்தது. இம் மாநாட்டின் பிரதான குறிக்கோள் 2015 இன் அபிவிருத்திக்குப் பின்னரான நிகழ்ச்சி நிரலுக்கு இளைஞர்களை தொடர்புபடுத்துவதாகும். குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக கொழும்பு பிரகடனம் என்ற தொணிப்பொருளில் கொள்கை கூற்றொன்று வெளியிடப்பட்டிருந்த போதிலும், அதனை அடைந்து கொள்வதற்கு நேர்மறையான பங்களிப்பை வழங்கக்கூடிய விதத்தில் 2015 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டம் / செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை இளைஞர் வீடமைப்பு செயற்திட்டம்

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட வீட்டுப் பிரச்சினையுடைய 246 இளைஞர்களிற்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 46.12 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஒரு வீடேனும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

## வீட்டுத் தோட்டச் செயற்திட்டம்

இளைஞர் கழகங்களின் அங்கத்தவர்களை விவசாயம் மற்றும் நவீன வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதற்கு திசைதிருப்புவதன் மூலம் இளைஞர்களின் பொருளாதார பலத்தினை கட்டியெழுப்புவதற்கான வீட்டுத் தோட்டச் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவது தொடர்பில் ரூபா 1.14 மில்லியன் தொகையான வெளிநாட்டு உதவி கிடைத்திருந்த போதிலும், அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை இளைஞர் கனவு செயற்திட்டம்

வேறுபட்ட ஆற்றல்களைக் கொண்ட இளைஞர் மற்றும் யுவதிகளின் அழகியற்கலை, விளையாட்டு, கல்வி, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் திறன்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மதிப்பிட்டு, மேம்படுத்தும் நோக்குடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில்

செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூபா 7.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டப் பிரேரணைகளின் படி, எதிர்பார்க்கப்பட்ட மாவட்ட இளைஞர் பாசறைகளை நடாத்தி, செயற்திட்ட வெற்றியாளர்களின் பாடல்களை இரு வெட்டுக்களில் வடிவமைத்தல் மற்றும் இறுதிச் சுற்றில் 12 வெற்றியாளர்களிற்காக பணப் பரிசில்களை வழங்குதல் என்பன இடம்பெற்றிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அச் செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

## இளைஞர் பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டம்

அரசாங்கத்திற்குச் செலவுச் சுமையின்றி இளைஞர்களிற்கு உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட இளைஞர் பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டம் 2010 ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. வருமானத்துடன் ஒப்பிடுகையில் செலவினத்தின் சதவீதம் 2010 ஆம் ஆண்டில் 66 சதவீதமாக காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டளவில் அது 230 சதவீதமாக உயர்வடைந்திருந்தது.

## இளைஞர் பராளுமன்றம்

சமூகத்தின் சனநாயக நீரோட்டத்தில் இளைஞர் கருத்துக்களை புகுத்துதல் மற்றும் விசேடமாக அரசியல் எண்ணக்கருக்களைக் கொண்டு அவர்களை பரிபூரணமானவர்களாக மாற்றுதல் 25 ஆவது சர்வதேச இளைஞர் பூர்த்தி விழாவிற்கான இலங்கையின் பிரதான இளைஞர் செயற்திட்டமாக அமுல்படுத்துதல் போன்ற குறிக்கொள்களுடன் பாராளுமன்றம் தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 06 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், எதிர்பார்க்கப்பட்ட பங்குபற்றுதல் 2884 ஆக காணப்பட்ட போதிலும், பங்குபற்றியிருந்தோர் எண்ணிக்கை 1924 ஆகும். அதற்காக ரூபா 46.20 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 06 கூட்டத்தொடர்களிற்காக பாராளுமன்ற மாதிரி வடிவத்தை கழட்டிப் பொருத்தவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 15.40 மில்லியன் தொகையும் அதில் உள்ளடங்கியிருந்தது.

## அரசியல் கலாசாலை

இலங்கை இளைஞர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனங்கண்டு தலைமைத்துவ ஆற்றல் மற்றும் தர்க்கித்தல் ஆற்றலை மேம்படுத்தி நல்லாளுகையுடன் கூடிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிப்பதற்கான குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கலாசாலை நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 3 மில்லியன் அமைச்சின் ஏற்பாடுகளிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய மட்டத்தில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்க்கப்பட்டவாறு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## முருகண்டி கோவில் புகையிரத நிலையத்தை நிர்மாணித்தல்

முருகண்டி கோவில் புகையிரத நிலையத்தை நிர்மாணிப்பதற்காக சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 2.82 மில்லியன் தொகை 10 ஆண்டுகளிற்கும் மேலாக விளைவற்று வைத்திருக்கப்பட்டு க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளிற்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத மாணவர்களிற்காக பகுதிநேர வகுப்புக்களை நடாத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் இலங்கை இளைஞர் சமூக பேரவைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்டவாறு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்காமையால் எஞ்சியிருந்த ரூபா 2.6 மில்லியன் தொகை மீண்டும் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## இளைஞர் படை நிகழ்ச்சித்திட்டம்

இளைஞர் படை நிகழ்ச்சித்திட்டம் என அழைக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டமொன்று இளைஞர் சமூகங்களிற்கு இளைஞர்களின் போக்குகளை முன்னேற்றும் முதன்மைக் குறிக்கோளுடன் ரூபா 15.93 மில்லியன் நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு ஏனைய செலவு விடயங்களிலிருந்து நிதிகளை மாற்றியதன் மூலம் ரூபா 48.04 மில்லியனாக

அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 39.8 மில்லியன் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. பராமரிக்கப்பட்டிருந்த செலவின பதிவேடுகளின் படி, 2 சதவீதமான தொகை மாத்திரமே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளிற்கான விடயங்களிற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது.

## இளைஞர் நலன்புரி நிதியம்

பொதுமக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 1993 ஆம் ஆண்டில் சனாதிபதி அவர்களால் 1993 இன் 01 ஆம் இலக்க இளைஞர் நலன்புரி நிதிய கட்டளைகளின் கீழ் இளைஞர் நலன்புரி நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது. பொது மக்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட சொத்துக்கள் நிதியத்திற்கு மாற்றப்பட்டன.

1994 ஆகஸ்ட் மாதத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டம் இரத்துச் செய்யப்பட்டமையால் அதன்கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளும் செல்லுபடியற்றவையாகியிருந்தன. இளைஞர் நலன்புரி நிதியத்தை கலைத்தல் அந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், நிதியத்தின் கலைத்தல் கணக்குகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

சட்டமா அதிபர் அவரது 1999 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய கடிதத்தில் நிதியத்தின் அசையாத சொத்துக்களை மன்றத்திற்கு மாற்றுவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையெனக் குறிப்பிட்டிருந்த போதிலும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. விலைகள் கணிக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்களில் 877 அலகுகள், ரூபா 27,502,301 பெறுமதியான 8,135 தங்க ஆபரணங்கள், திறைசேரியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 8.99 மில்லியன் மற்றும் 02 மோட்டார் வாகனங்களும் 06 மோட்டார் சைக்கிள்களும் உள்ளடங்கலாக ஏனைய சகல சொத்துக்களும் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீதான தகவல்கள் இது வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# சமூக சேவைகள்

அமைச்சின் நோக்கங்ளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான குறைபாடுகளும் விடயங்களும் கீழே காண்பிக்கடுகின்றன.

ஊனமுற்றேறர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உள்ள பின்வரும் அதிகாரச் சட்டத்தின் வரைவு தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக அமைச்சு கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

- ஊனமுற்றோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புதிய வரைவு
- சமிக்ஞை மொழி அதிகாரச்சட்டத்தின் வரைவு
- வெள்ளைப் பிரம்பு பயன்படுத்துபவர்களுக்காக சட்டரீதியான பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரச்சட்டத்தின் வரைவு
- இலங்கையில் ஊனமுற்றோர் தொடர்பான தேசிய செயல்நடவடிக்கைத் திட்டத்தை வெளிப்படுத்துதல்
- 1966 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோர்களின் உரிமைகளால் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும் 2006 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.
- சமூகத்தில் இருக்கின்ற ஊனமுற்றோர்கள் மற்றும் முதியோர்கள் தொடர்பாக சரியானதும் நாளதுவரையானதுமான தரவு முறைமையொன்றைத் தயாரித்தல்.
- உதவிகளை வழங்குதல் பிரதேச செயலகங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட தகைமைகளையுடைய குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்றோர்களின் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாத்திரம் நிறைவேற்றுவது தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.
- தற்போது காணப்படுகின்ற சகல பகிரங்க கட்டிடங்கள், பகிரங்க இடங்கள் மற்றும் பொதுச் சேவைக்காக வழங்கப்படுகின்ற இடங்களில் ஊனமுற்றோர்களுக்கு நுழைவதற்கு முடியுமான வகையில் அமைத்துக் கொடுப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் கால எல்லை 2014 நவம்பர் 16 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் கட்டளையின் படி நடவடிக்கை எடுக்காத நிறுவனங்கள் மற்றும் இடங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.
- குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்றோர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் மற்றும் சக்கர நாற்காலிகளை வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையொன்றும் பொறிமுறையொன்றும் காணப்படும் போது அதற்கு முரணாக வெளி நபர்களின் பங்குபற்றலுடன் அது மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 29,962,902 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு இருந்தது.

- 6,493 மூக்குக் கண்ணாடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கு மோசடியான பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 979,950 தொகை மோசடி செய்தமை

- ரூபா 1,267,500 பெறுமதியான தூர மற்றும் அண்மித்த தென்படும் 1,950 மூக்குக் கண்ணாடிகள் முன்னாள் சமூக சேவைகள் அமைச்சரின் இணைப்புச் செயலாளருக்கு கையளிக்கப்பட்டதாக பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கண்ணாடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பான சான்றுகள் காணப்படவில்லை.

- கண்ணாடி கொள்வனவு செய்வதற்கு முன்னர் நலனாளிகளின் தேவை தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காமை.

- சக்கர நாற்காலிகள் பெறுவதற்கு தகைமையுடைய நாப்களினால் உரிய பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாது ரூபா 2.7 மில்லியன் பெறுமதியான 181 சக்கர நாற்காலிகள் அமைச்சரின் பிரத்தியோக செயலாளர் உட்பட பல்வேறு அரசியல் தரப்பினர்களுக்கும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் பகிர்ந்தளித்தல் தொடர்பான அறிக்கை அலுவலகத்தில் காணப்படவில்லை.

- 2014 ஆம் ஆண்டின் போது குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு ரூபா 3,000 பண உதவி வழங்கும் போது ஒரு பிரதேச செயலகத்திற்கு 5 பேர் வீதம் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களுக்காக 2,213 நலனளிகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 32,928,000 விடுவிக்கப்பட்டிருந்ததுடன் கம்பஹா மாவட்டத்தில் உதவிகளைச் செலுத்துவதற்காக ரூபா 9,352,347 மிகைச் செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது.

# தொழில்நுட்பம்

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரதான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## விதாதா நிகழ்ச்சித் திட்டம்

- முறையான பிரகாரம் கையேற்கப்படாத அரசாங்கத்திற்குரிய காணிகளில் திறைசேரி நிதி ஏற்பாடு ரூபா 306 மில்லியன் பயன்படுத்தப்பட்டு 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 68 விதாதா வள நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

- உத்தேசிக்கப்பட்ட 10 விதாதா நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்டிருந்ததுடன் 2012 செப்தெம்பர் மாதத்தின் போது பூர்த்திசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த இன்னுமொரு நிலையத்தின் நிர்மாணம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## பிளாஸ்டிக் கழிவுப்பொருட்களை பெற்றோலியமாக மாற்றும் செயற்திட்டம்

- 2015 ஆம் ஆண்டு வரை ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் ரூபா 155.57 மில்லியன் தொகையான திறைசேரி நிதியம் செலவிடப்பட்டிருந்த போதிலும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களை எரிபொருளாக மாற்றும் செயற்திட்ட செயற்பாடுகள் வணிக மட்டத்தில் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது.

- பிளாஸ்டிக் மீள் சுழற்சிசெய்தல் மிகவும் பொருளாதார ரீதியாகவும் பயனுள்ளதாகவும் இருந்ததுடன் எரிபொருள் உற்பத்திச் செலவினம் அதிக செயற்பாடுகளுக்குரியதாக இருந்தது. மேலும் உற்பத்தி செய்யப்பட்ட எரிபொருள் மோட்டார் வாகனங்களுக்கு ஈடுபடுத்த முடியாதிருந்தது.

- பிளாஸ்டிக்கிலிருந்து எரிபொருள் உற்பத்தி தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த நபருக்கு மாதமொன்றிற்கு ரூபா 75,000 படியும் அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு மாதமொன்றிற்கு ரூபா 125,000 படியும் செலுத்தப்பட்டிருந்தன.

## இலங்கை கோள்மண்டலம்

- டிஜிட்டல் விண்வெளிக் காட்சிகளை பொதுமக்களுக்கு காண்பிக்கும் இயலுமையை ஏற்படுத்தும் வகையில் ரூபா 151.2 மில்லியன் பெறுமதியான படம் காண்பிக்கும் இயந்திரமொன்று கோள்மண்டலத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் காணப்பட்ட தொழில்நுட்ப வழுவின் காரணமாக காட்சிகளை வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

- கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட தொழில்நுட்ப அறிக்கையின் படி கணனி முறைமைக்குள் பொருத்தப்பட்டுள்ள சில பாகங்கள் முன்னர் பயன்படுத்தப்பட்டவைகளாகும்.

மேலும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளரின் அறிக்கையின்படி இயந்திரம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்தது.

## தேசிய நனோ தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டம்

- நனோ தொழில்நுட்ப பூங்காவினை தாபிப்பதற்குரிய காணிக்காக ரூபா 304 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணியின் உரித்து முறையாக கையேற்கப்படாதிருக்கும் போது திறைசேரி நிதிஏற்பாட்டின் மூலம் ரூபா 823.6 மில்லியன் செலவில் தொழில்நுட்ப பூங்கா தாபிக்கப்பட்டிருந்தது.

- ரூபா 2,207 மில்லியன் செலவில் நனோ தொழில்நுட்ப பூங்கா மற்றும் இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களின் நோக்கம் இது வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை

## இலங்கை தரநியமங்கள் நிறுவகம்

தேசிய பொருளாதாரத்தின் சகல பிரிவுகளும் நியமமிடல் அளவீடுகள் நிலை உறுதிப்படுத்தல் மற்றும் அதற்கான வசதிகளை வழங்கும் நோக்கத்தில் இலங்கை நியமங்கள் நிறுவனம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் நோக்கங்களுக்கு முரணாக பின்வரும் செயற்பாடுகள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

- இலங்கை நியமங்கள் இலக்கம் 107:2008 இன் கீழ் மாதிரிகளுக்கு இணங்காது சீமெந்து 12,060,000 கிலோகிராம் சந்தைக்கு விநியோகித்தல்

- சீமெந்திற்கான இலங்கை நியமங்கள் இலக்கம் 107:2008 இன் 5.1(h) ஆம் பந்திக்கு முரணாக உற்பத்தியாளரினால் பொதியிடப்பட்ட திகதி முதல் 90 நாட்கள் வரை செல்லுபடியாகும் எனக் குறிப்பிடப்பட்ட சீமெந்து 336,500 கிலோகிராம் இற்காக "சீமெந்து இருப்பு விடுவிக்க முடியும்" எனக் குறிப்பிடப்பட்டு அங்கீகரிப்பதற்கு 90 நாட்கள் அளவிலான காலம் எடுத்திருந்தமை

- 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்து 13,944,000 கிலோ கிராம் பரிசோதனை அறிக்கை கிடைப்பதற்கு முன்னர் சந்தைக்கு விடுவிக்கப்பட்டமை

- இறக்குமதி செய்யப்பட்ட அமெரிக்க டொலர் 2,951,574 பெறுமதியான அலங்கார மின் குமிழ் இருப்புக்கள் 234,640 கிலோ கிராம் இலங்கை நியமங்கள் இலக்கம் 1231:2002 இல் குறிப்பிடப்பட்ட Harmonic Current Limits மற்றும் SDCM Value என்ற தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்படாமல் விடுவித்தல்

# உயர் கல்வி

உயர் கல்வி அமைச்சு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக கட்டமைப்பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய பல்கலைக்கழக முறைமையொன்றுக்கு தேவையான வளங்களை விநியோகித்தல் மற்றும் உயர்கல்வி தொடர்பில் பற்றுடைய தரப்பினரின் ஒத்துழைப்புடன் கல்விசார் கற்கைநெறிகளின் பல்வகைமை மற்றும் குணநலனினை சான்றுபடுத்துவதற்காக கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் மிகவும் உயர்ந்த நிலையில் நிர்மாணிப்பதற்கான இயலளவினை வழங்குவதுடன் இச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 15 பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. இந்த 15 பல்கலைக்கழகங்களுடன் இணைந்ததாக 17 நிறுவகங்களும் 03 சபைகளும் நிறுவப்பட்டு பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வை மற்றும் மேவுகையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இத்துறை தொடர்பான முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறாகும்.

## பல்கலைக்கழகங்களை தரப்படுத்தல்

2014 ஆம் ஆண்டினுள் பல்கலைக்கழகங்களை தரப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம் இலங்கையிலுள்ள 15 பல்கலைக்கழகங்களில் கொழும்பு, மொரட்டுவ, பேராதெனிய ஆகிய பல்கலைக்கழகங்கள் 2251 இற்கும் 2810 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்படுகின்றமையுடன் ருஹுனு, களனி ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தல் அறிக்கையின் 3000 முதல் 5000 இற்கு இடைப்பட்டதாகவும் ஏனைய பல்கலைக்கழகங்கள் 6097 முதல் 16071 இற்கு இடையிலும் தரப்படுத்தப்பட்டிருந்தன. இது 2013 ஆம் ஆண்டின் தரப்படுத்தலுடன் இணக்கம் செய்யும் போது 12 பல்கலைக்கழகங்கள் தரவரிசையிலிருந்து பின்தள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

## உயர் கல்விக்கான சந்தர்ப்பங்கள்

2013/2014 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழுங்களுக்கு செல்வதற்கு பழைய மற்றும் புதிய விதந்துரைகளின் மூலம் தகைமை பெற்ற 143,739 மாணவர்களில் 25,200 பேருக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமையுடன் அது தகைமை பெற்றோரில் 17.5 சதவீதம் ஆகும். இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் 144,816 மாணவர்கள் தகைமை பெற்றிருந்ததுடன் 24,198 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றிருந்தனர். அது தகைமை பெற்றோரில் 16.7 சதவீதமாகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 0.8 சதவீதத்தினால் அனுமதி பெற்றோரின் அதிகரிப்பொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

உள்நாட்டு மாணவர்களுக்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுவதற்காக வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2014 ஆம் ஆண்டில் இளமானிப் பட்டங்கள் மற்றும் பட்டப்பின் பட்டங்களுக்காக 242 வெளிநாட்டு புலமைப்பரிசில்தாரர்களுக்கும் 38 வெளிநாட்டு மாணவர்களுக்கும் எமது நாட்டின் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. 2014 ஆம் அண்டில் பல்கலைக்கழகங்களுக்காக மீண்டெழும் செலவினம் ரூபா 20,841 மில்லியன் மற்றும் மூலதனம் ரூபா 10,945 மில்லியன் எனும் படியாக ரூபா 31,786 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுடன் ஒப்பிடும் போது அவை முறையே ரூபா 2,525 மில்லியன் மற்றும் ரூபா 2,421 மில்லியனிலான அதிகரிப்பொன்றாகும்.

## மாணவர் நலன்புரி

### மாணவர் உதவுதொகை மற்றும் புலமைப்பரிசில்கள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டில் 12 பல்கலைக்கழகங்களின் 28,214 மாணவர்களுக்கும் 2013 ஆம் ஆண்டில் 27,488 மாணவர்களுக்கும் மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டுடன் இணக்கம் செய்யும் போது 2014 ஆம் ஆண்டில் 726 புலமைப்பரிசில்களின் அதிகரிப்பொன்று காணக்கூடியதாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 604 மில்லியன் ஆகும். 2014 ஆம் ஆண்டில் 22,730 மாணவர்களுக்கு 2013 ஆம் ஆண்டில் 20,009 மாணவர்களுக்கும் மாணவர் உதவுதொகைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டில் 2,721 மாணவர்களின் அதிகரிப்பொன்று காணக்கூடியதாக இருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 254 மில்லியன் செலவினமொன்று ஏற்கப்பட்டிருந்தது.

### மாணவர் விடுதிகள்

அரச பல்கலைக்கழக கட்டமைப்பினுள் விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 12,000 இனால் அதிகரிக்கும் பிரதான நோக்கில் ரூபா 13,200 மில்லியன் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு விடுதியொன்றிற்கு ரூபா 220 மில்லியன் தொகையான சாதாரண செலவினமொன்றை மதிப்பீடு செய்து பல்கலைக்கழகங்களினுள் 60 விடுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டமொன்று உயர் கல்வி அமைச்சினால் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ரூபா 5,856 மில்லியன் செலவினமொன்றை ஏற்று 30 விடுதிகளின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததெனினும் 24 விடுதிகளின் பணிகள் பூர்த்திசெய்யப்படாத நிலையில் உள்ளதுடன் 6 விடுதிகளின் பணிகள் ஆரம்பிக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் இச் செயற்திட்டத்திற்குரிய அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் பூர்த்திசெய்யப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டில் 12 பல்கலைக்கழகங்களின் 35,585 மாணவர்களுக்கு அதாவது மொத்த மாணவர் எண்ணிக்கையில் 43 சதவீதமானோருக்கு விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 258 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் 12 பல்கலைக்கழகங்களிலிருந்து 21,416 மாணவ மாணவியருக்கு அதாவது மொத்த மாணவர் எண்ணிக்கையில் 27 சதவீதமானோருக்கு ரூபா 305 மில்லியன் செலவிடப்பட்டு விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 14,169 மாணவர்களுக்கு மேலதிகமாக விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

### வருகை மற்றும் வெளிச்செல்லல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தில் 3.1 ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் வருகை, வெளிச்செல்லல் மற்றும் விடுமுறைகள் தொடர்பில் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய உயர்கல்வி நிறுவனங்களின் கல்விசார் பதவியணியினரின் வருகை, மற்றும் வெளிச்செல்லலும் அவர்கள் பெற்றுக்கொண்ட விடுமுறைகள் தொடர்பான பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2013 ஆம் ஆண்டில் 4,070 விரிவுரையாளர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்யாமல் ரூபா 7,135 மில்லியன் தொகையாக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். இது அந்த 09 பல்கலைக்கழகங்களினதும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் தொகையில் செலவினங்களின் சதவீதமாக முறையே 36 சதவீதம் மற்றும் 40 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்

பிரகாரம் கல்விசார் பதவியணியினருக்காக செலவிடப்பட்டிருந்த சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை கணக்காய்வின்போது உரியவாறு அவதானிக்க முடியாதிருந்தது.

## மாணவரொருவருக்கான கிரயம்

11 பல்கலைக்கழகங்களில் 2014 ஆம் ஆண்டில் (திறந்த பல்கலைக்கழகங்கள் நீங்கலாக) மாணவரொருவருக்காக ஏற்றிருந்த சாதாரண செலவினம் ரூபா 285,594 ஆகும். மாணவரொருவருக்காக ஏற்கப்பட்ட அதிகபட்ச செலவினமான ரூபா 365,475 தொகை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், ஆகக் குறைந்த செலவினமான ரூபா 112,803 தொகை ரஜரட்ட பல்கலைக்கழகத்திலும் பதிவாகியிருந்தது.

## செயலாற்றல்

பல்கலைக்கழக கட்டமைப்பினுள் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவ மாணவியரின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்காக தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் 18,740 மாணவ மாணவிகளுக்கு ரூபா 265 மில்லியன் செலவிடப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் 17,568 மாணவ மாணவிகளுக்கு ரூபா 136 மில்லியன் செலவிடப்பட்டு இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டை விட 2014 ஆம் ஆண்டில் 1,172 மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் செலவினத்தில் ரூபா 129 மில்லியன் அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது.

## உயர்கல்விக்கான வாய்ப்புக்கள்

2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளினும் பல்வேறு பட்ட பாடநெறிகளை பூர்த்தி செய்து முறையே 32,905 மற்றும் 22,087 பட்டதாரிகள் வெளியேறியிருந்தனர். 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 49 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறெனினும் வேலைவாய்ப்பு சந்தைக்கு பொருந்தக்கூடிய வகையில் பாடநெறிகளை அறிமுகப்படுத்தும் நடைமுறைகள் மேலும் அபிவிருத்தி செய்தல் மிகவும் பயனுடையதென அவதானிக்கப்பட்டது.

## ஈட்டப்பட்ட வருமானம்

பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்களை தாபிக்கும் நோக்கமானது உயர்கல்வியினை அபிவிருத்தி செய்வதற்காக பட்டங்கள், பட்டபின் படிப்பு பேராசிரியர் பட்டங்கள் போன்ற கற்கைநெறிகளை நடாத்திச்செல்வதுடன் சுய வருமானமீட்டுவதற்காக அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களால் டிப்ளோமா சான்றிதழ் பத்திர பாடநெறிகள், பட்டபின் படிப்பு ஆகியனவற்றை நடாத்தி வருமானமீட்டும் முறைமைக்கு ஒன்றித்திருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 342 பாடநெறிகளை பல்கலைக்கழகங்களில் நடாத்தி ரூபா 1604 மில்லியன் வருமானத்தினை ஈட்டி அந்த வருமானத்தில் 10 சதவீதம் மாத்திரம் பல்கலைக்கழகங்களின் பொது நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி வருமானம் வளப் பங்களிப்பாளர்கள் மற்றும் பல்வேறு நிதியங்களுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் வெளிவாரி கற்கைநெறிகளை நடாத்துதல் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணக்கம் மற்றும் பின்தொடர்தல் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## உள்ளக மற்றும் வெளிவாரி ஆராய்சிகள்

2014 ஆம் ஆண்டில் 09 பல்கலைக்கழகங்களின் 2230 பேராசிரியர்களுக்கு ஆராய்ச்சிக் கொடுப்பனவாக ரூபா 397 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததெனினும், ஆராய்ச்சி உத்தேசங்களை உறுதிப்படுத்தும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேரவையொன்றிற்கு முன்வைக்கப்பட்டிராததுடன், முன்னேற்றம்

தொடர்பான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பேராசிரியர்களை சரியான முறையில் இச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

## உடன்படிக்கை மீறல்கள்

1980 ஆம் ஆண்டிலிருந்து 11 பல்கலைக்கழகங்களின் ஒப்பந்தப் பிணைப் பொறுப்புக்களை மீறிய 129 விரிவுரையாளர்கள் இருப்பதுடன் இவ் விரிவுரையாளர்களிடம் ரூபா 453 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டி உள்ளதுடன் அதனூடாக பல்கலைக்கழகத்தினால் பல்கலைக்கழக கட்டளைச் சட்டங்களுக்கு இசைவான முறையில் ஒப்பந்த நிபந்தனைகள் உள்ளடக்கப்படாமையின் காரணமாக அறவிடப்பட முடியாத நிலையொன்று உருவாகியுள்ள மீதிகள் காணப்படுகின்றமையுடன் அப் பணம் பல்கலைக்கழக நலன்புரி நிதியங்களில் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் கட்டளைகள் சட்டங்களில் காணப்படுகின்ற நிபந்தனைகளுக்கு இணங்க உரிய முறையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படாமையால் பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டங்கள் தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பல்கலைக்கழக கட்டமைப்பினுள் உள்ளடக்கப்படாத மாணவர்களுக்கு பல்கலைக்கழக கல்வியினை தொடரும் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் பிரதான நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச்செல்லப்படும் திறந்த பல்கலைக்கழகங்கள் 2014 ஆம் ஆண்டினுள் 67 கற்கைநெறிகளுக்காக 41,344 மாணவர்களை இணைத்துக் கொண்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் ரூபா 953 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டினுள் 67 பாடநெறிகளுக்காக 38,294 மாணவர்கள் இணைக்கப்பட்டு ரூபா 611 மில்லியன் உழைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் மாணவர்கள் இணைப்பு 8 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வருமானம் 56 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டினுள் 6,450 மாணவர்கள் பல்வேறு பாடநெறிகளை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருந்தனர்.

## ஏழு வருட விடுமுறை

பல்கலைக்கழகங்கள் தாபனவிதிக் கோவையின் 36 ஆம் அத்தியாயத்தின் 36.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஏழு வருட விடுமுறையை அங்கீகரித்துள்ளோரும் தற்காலிகமாக பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்புடைய முக்கியமான நிதி நிர்வாகஸ்தர், பதிவாளர், நூலகர் ஆகிய பதவிகளை வகிப்பதனால் பல்கலைக்கழகங்களில் நிதி மற்றும் நிர்வாகத்தினை முறையாக மேற்கொள்ள இயலாத நிலையொன்று அவதானிக்கப்பட்டதுடன் இவ் ஏழு வருட விடுமுறையின் அடிப்படையில் உள்ள பெரும்பாலான உத்தியோகத்தர்கள் அரச நிறுவனங்களில் சேவையாற்றுவதன் காரணமாக அவர்களால் கூட்டிணைக்கப்பட்ட நிதியத்திலிருந்து இரண்டு முறைகள் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

# பாதுகாப்பு

இலங்கையின் சுதந்திரம் மற்றும் எல்லைப்பரப்பினை பாதுகாத்தல், அரச பாதுகாப்பு மற்றும் நாட்டுக்குள் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல் சம்பந்தமாக தேவையான தந்திரோபாயங்களைத் தயாரித்தலும் அமுல்படுத்துதலும் இந்த அமைச்சின் பிரதான செயற்பணியாக இருப்பதுடன், அதனை நிறைவேற்றுவதற்காக அரச பாதுகாப்பு அமைச்சின் கீழ் பிரதானமாக முப்படைகள், கரையோர பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்பன செயற்படுகின்றன.

இலங்கை தரைப்படை, இலங்கை கடற்படை மற்றம் இலங்கை விமானப்படை, தேசிய பாதுகாப்பு தொடர்பான பொறுப்பை ஏற்றுள்ளது.

வடக்கின் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் முப்படைகளின் வசமுள்ள விளைவற்ற ஊழியப் படையினை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கும் முப்படைகளினால் சுதந்திரமாக அமுல்படுத்தப்படுகின்ற சிறிய மற்றும் பெரியளவிலான வேறுபட்ட செயற்திட்டங்களுக்கும் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிலும் அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழும் செலவினம் | 231,250.45 | 199,371.13 | 184,221.91 |
| மூலதனச் செலவினம் | 38,041.20 | 29,809.87 | 16,049.34 |
| மொத்தம் | **269,291.65** | **229,181.00** | **200,271.25** |

மேற்படி தரவுகளை பகுப்பாய்வு செய்யும் போது அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள ஒவ்வொரு நிறுவனத்தினதும் வருடாந்த செலவினம் அதிகரித்திருந்தது.

அமைச்சின் கீழ் செயற்படுகின்ற அனைத்து நிறுவனங்களிலும் பொதுவாக பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு செயற்பாட்டின் போது காணப்படும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு முரணாக இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் எப்போதும் அவதானிக்கப்பட்டதுடன், அந்நிறுவனங்களின் திரவத்தன்மை தொடர்பாக சிக்கல்கள் இதற்கு காரணமாக உள்ளன. இதன் காரணமாக இச்செயற்பாட்டின் உள்ளகக் கட்டுப்பாட்டினைப் பலப்படுத்தும் தேவைப்பாடு கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறே வெவ்வேறு செயற்திட்டங்கள் ஊடாக இந்நிறுவனங்கள் உழைக்கப்பட்டிருந்த வருமானம் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் வேறாக நிதியங்களைப் பேணி அப்பணத்தை உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரச பாதுகாப்பு அமைச்சின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’ கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றில் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,058,093 ஆக இருந்ததுடன் நிலுவையாக இருந்த மீதிகள் 01 ஆண்டு முதல் 27 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்நிலுவை கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

- 2008 நவம்பர் 04 ஆந் திகதி ரூபா 2,070,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரம் எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 03 ஆண்டு காலப்பகுதியாக விளைவற்றுக் காணப்பட்டன.

- ஹொட்டெல் வியாபார அபிவிருத்திக்காக இலங்கை தரைப்படை தலைமையகம் அமைந்திருந்த காணி வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு ரூபா 19,817,306,000 இற்கு விற்பனை செய்த பணத்தை அரசியலமைப்பின் 149 உறுப்புரைக்கு முரணாக அக்குரெகொடை பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிப்பதற்காக பொதுத் திறைசேரியால் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தொகை திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 925,925,814 ஆன வட்டி வருமானம் உழைக்கப்பட்டு ரூபா 5,211,158,619 தொகையொன்று நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

- ரூபா 42,032 மில்லியன் பெறுமதியில் கொழும்பு தலைநகர் அபிவிருத்தி மற்றும் வெள்ளத்தடுப்புச் செயற்திட்டம் அமைச்சின் கீழ் காணப்பட்டதுடன், இச்செயற்திட்டத்தின் காலப்பகுதி மேவுகை செய்யப்படும் வகையில் செயற்திட்ட திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட காலத்திலிருந்து 50 சதவீதத்தை விஞ்சும் சந்தர்ப்பங்களில் செயற்திட்டத்தின் நிதிப் பயன்பாடு 17.3 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன், செயற்திட்ட ஆரம்பத்தின் போது செயற்படுத்த முடியுமாக இருந்த 10 உப கருத்திட்டங்களில் 4 இற்காக எதுவித செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- காலாவதியாமை காரணமாக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 577,170 பெறுமதியான 55 டோனர் 2015 மார்ச் 17 ஆந் திகதி நடைபெற்ற ஏலவிற்பனையின் போது ரூபா 1,200 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. களஞ்சியத்தில் இருப்பு நிலைமைய கருத்திற் கொள்ளாமல் டோனர் கொள்வனவு செய்து புதிய இருப்பு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட காரணத்தினால் இக்காலாவதியாதல் இடம்பெற்றிருந்ததுடன், திரட்டிய நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 575,970 ஆக இனங்காணப்பட்டிருந்தது.

- அமைச்சின் மனித வள தகவல்களை கணனி மயப்படுத்துவதற்காக ரூபா 893,985 தொகை செலவு செய்து சேர்வர் முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், கொள்வனவு செய்து 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும், தகவல்களை கணனி மயப்படுத்தும் போது எழுந்த சிக்கல் காரணமாக இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

- முப்படைகள், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சேவைகளால் உழைக்கப்பட்டிருந்த வருமானம் அரசியலமைப்பின் 149 உறுப்புரை மற்றும் 2009 பெப்ரவரி 03 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திரட்டு நிதியத்திற்கு செலவு வைத்தமை சீராக்குவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## இலங்கை தரைப்படை

2014 ஆம் ஆண்டின் போது இலங்கையின் தரைப்படையால் நாட்டின் பொருளதார அபிவிருத்தியை நோக்கி 33 செயற்திட்டங்களுக்காக பங்களிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், பொதுமக்கள் நலனுக்காக வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட பல பிரதேசங்களில் நடாத்தப்பட்டிருந்தன. நகர அபிவிருத்திக்காக ரூபா 2,379 மில்லியன் செலவிடப்பபட்டிருந்ததுடன், வீதி அபிவிருத்திக்காகவும் ஏனைய செயற்திட்டங்களுக்கும் இயந்திர உபகரணங்கள் மற்றும் ஆளணி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2909 ஆட்களை அழிக்கும் குண்டுகள், 32 யுத்த தாங்கிகளை அழிக்கும் குண்டுகள், 34,930 வெடி பொருள் இருப்பொன்று அகற்றப்பட்டிருந்தது. மேலும் ஆண்டிலும் இயற்கை மற்றும் இயற்கையல்லாத அனர்த்த நிலைமைகளின் போது பொது மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக உழைப்பு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.

### கணக்காய்வு அவதானிப்புக்கள்

- கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரச பாதுகாப்பு அமைச்சின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’ கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 422,372,763 ஆக இருந்ததுடன் நிலுவையாக இருந்த மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்நிலுவை கடன் மீதியினை அறவீடு செய்வது தொடர்பாக தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

- இறந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,685,203 ஆன கடன் மீதிகளில் அறவிடுவதற்காக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் ரூபா 1,026,584 ஆன மீதியொன்று 05 ஆண்டுகளை மிகைத்த மீதியொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 49,078,991 ஆன மீதிகள் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது ராகமவில் அமைந்துள்ள இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் அளவிலான காணியின் உரித்தினை பெற்றுக்கொள்ளாமல் இலங்கை தரைப்படையின் ஆயுதக் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்காக தரைப்படையினரால் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 362,706,785 செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு மற்றும் நிதிப்பிரமாணம் 66/69 இன் மாற்றீடுகளின் மொத்தத்தை மீறி செலவு செய்தலும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளலும் செய்யப்படக் கூடாத போதிலும், இலங்கை தரைப்படையால் 06 செலவின விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகளை மீறி ரூபா 91,586,470 கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

## இலங்கை கடற்படை

இலங்கை கடற்படையினால் 2014 ஆம் ஆண்டின் போது சோமாலியா கடற்கொள்ளைக் காரர்களிடமிருந்து இலங்கை கடல் எல்லையினை இலங்கை கடற்படை வெற்றிகரமாக பாதுகாத்திருந்தது. சட்டவிரோதமாக குடியகல்வு மற்றும் குடிவரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நபர்களை கைது செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறே நாட்டினுள் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்த 397.55 கிலோ கிராம் போதைப்பொருள் மற்றும் சிகரட்களுடன் 121 நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களின் நிர்மாணித்தல், திருத்துதல் வேலைகளுக்காக ரூபா 798.33 மில்லியன் தொகையான ஊழியப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் வெள்ள அனர்த்த நிலைமைக்கு உட்பட்ட 719 பேரைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கடற்படை துருப்புக்கள் ஹைட்டி இராச்சியத்தின் சமாதான கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு ரூபா 67.02 மில்லியன் ஆன வெளிநாட்டு நாணய மாற்றொன்று 2014 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்டிருந்தது.

### கணக்காய்வு அவதானிப்புக்கள்

- இலங்கை கடற்படையின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’ கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12.25 மில்லியன் ஆக இருந்ததுடன் நிலுவையாக இருந்த மீதிகள் 01

ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்நிலுவை கடன் மீதியினை அறவீடு தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமாக காணப்பட்டன.

- 2011 யூன் 11 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் குழுக் கூட்டத்தின் கலந்துரையாடல் குறிப்பு அறிக்கையின் 07 ஆவது விடயத்தின் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் இலங்கை கடற்படைக்கு கிடைப்பதற்கு முன்னர் காசோலைகளை எடுழுதுதல், வழங்குனருக்கு காசோலைகளை வழங்குதல், முற்கொடுப்பனவு அனுப்புகை என்பன முற்றிலும் பிழையான கொடுக்கல் வாங்கலாக இருந்தமையால் உடனடியாக தவறுகள் திருத்தம் செய்யப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் இலங்கை கடற்படையினால் 2011 யூலை முதல் 2014 ஏப்ரல் வரை அம்முறைமையைப் பயன்படுத்தி 6720 சந்தர்ப்பங்களில் ரூபா 2,091.96 மில்லியன் தொகை செலவு செய்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

- 2009 பெப்ரவரி 09 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம், 2013 திசெம்பர் 09 ஆந் திகதிய தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம், 2008 யூன் 28 ஆந் திகதிய அரச நிதிப் பணிப்பாளரின் கடிதம் மற்றும் இலங்கை அரசியலமைப்பின் 149 உறுப்புரையின் பிரகாரம் இலங்கை கடற்படையினால் வெளித்தரப்பினருக்கு வழங்கிய சேவைகளுக்காக மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்ட ரூபா 1,048.09 மில்லியன் தொகையான வருமானம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை கடற்படைக்காக 7000 சோடி சப்பாத்துக்கள் கொள்வனவு செய்யும் போது முதல் தடவை கூறுவிலை கோரப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட விலை நிராகரிக்கப்பட்டு இரண்டாவது கூறுவிலை கோரப்பட்டு கூடிய விலையில் கொள்வனவு செய்தமையால் இலங்கை கடற்படைக்கு ரூபா 5.98 மில்லியன் ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

- மின்பட்டியல்களுக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்தப்படாததன் காரணமாக இலங்கை மின்சார சபைக்கு தண்ட வட்டியாக ரூபா 4.83 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

- இலங்கை கடற்படையினால் 2011 ஆம் ஆண்டின் போது 5 கட்டளைகளுக்குரிய ரூபா 15.91 மில்லியன் பணத்தை நிதிப் பிரமாணங்களின் தேவைப்பாட்டிற்கு முரணாக பிணைப் பொறுப்பொன்று பெற்றுக்கொள்ளாமல் கட்டளைச் சந்தர்ப்பத்திலேயே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், 03 வருடங்கள் கடந்ததன் பின்னர் வழங்கப்பட்டிருந்த பொருட்களின் பெறுமதி ரூபா 10.76 மில்லியன் ஆக இருந்தது. எஞ்சிய ரூபா 5.15 மில்லியன் தொகை நீதிமன்ற நடைமுறையொன்று அடிப்படையில் வட்டியின்றி 12 தவணைகளில் 2014 யூன் முதல் அறவிடப்பட வேண்டியேற்பட்டது. அரச வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை நிரப்புவதற்காக பெற்றுகொண்ட கடனுக்காக அதிகளவு வட்டி செலுத்தும் நிலைமையில் இவ்வாறு வட்டிக்கு பெற்றுக்கொண்ட பணத்தை மேலே குறிப்பிடப்பட்ட தனியார் நிறுவனமொன்றின் பயன்பாட்டிற்காக வட்டி இல்லாத கடனாக வழங்கப்பட்டிருந்தது.

## இலங்கை விமானப்படை

மீளாய்வாண்டின் போது 13,09.55 மணித்தியாலங்கள் பறந்திருந்ததுடன் அதில் 2,138.55 பறக்கும் மணித்தியாலங்கள் ஆகாயச் செயற்பாடுகளாக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை மற்றும் விமானிகள் இல்லாத விமானங்களினால் 64.33 மணித்தியால பறப்புக்களின் மூலம் உதவி புரிதலும், முப்படைகளின் 25,970 நபர்களுக்கு ஆகாயப் போக்குவரத்து வசதிகளும் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே முல்லைதீவு விமான ஓடுபாதை நிர்மாணம், திகன மற்றும் மட்டக்களப்பு விமானப் பயணத் தளமொன்றை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 25.12 மில்லியன் தொகை, ரூபா 21.69 மில்லியன் தொகையும் ரூபா 21.55 மில்லியன்

தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் ஹைட்டி இராச்சியத்தின் சமாதான கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி 576,890 அ. டொலர் வெளிநாட்டு நாணய மாற்றொன்றினை உழைத்தமை மற்றும் விமான சேவைகள் வழங்கியதன் மூலம் ரூபா 248.69 மில்லியன் ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

அதற்கு மேலதிகமாக "நமக்காக நாம் வீடமைப்புச் செயற்திட்டம்" இற்காக 103,660 மனித நாட்கள் பயன்படுத்தியதன் மூலம் உத்தியோகத்தர்களின் வீடுகளை நிர்மாணிப்பதற்காக பாரியளவு பங்களிப்பொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அரச கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காகவும் திருத்த வேலைச் செயற்பாடுகளுக்கும் பங்களிப்புச் செய்திருந்தனர்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

- விமானங்களை வாடகை வருமானத்தை சேகரித்தல் தொடர்பாக வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரான விமானப் படைத்தளபதி அவரின் அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய உத்தியோகத்தரால் அவ்வருமானங்களை சேகரிக்க வேண்டிய போதிலும், சில விமானப்படை உத்தியோகத்தரால் உருவாக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றினால் அந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்து. அவ்வாறு சேகரிக்கப்பட்டிருந்த விமான வாடகை வருமானத்தில் ரூபா 23.04 மில்லியன் தொகை அவ்வருமானத் தலைப்பிற்கு செலவு நடவடிக்கை எடுக்கப்படாமல் அரசின் கணக்கொன்றல்லாத நிறைவேற்று நலன்புரி நிதியத்தின் பெயரிலான விமானப் படையின் உள்ளக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

- விமானப்படையின் நிலையான சொத்துக்கள் முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவுக் கூற்றிலும் டீஜீஎஸ்ஏ 4 மாதிரியிலும் பதிவு செய்யும் போது போதியளவில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

- 2014 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 4,278,066,949 ஆன பொறுப்புக்கள், அவ்வாண்டில் திரண்ட பொறுப்புக்கள் மற்றும் 2014 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 3,949,117,296 ஆன பொறுப்புக்கள் தொடர்பாக உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணப்படாதிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் காணப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு உழைக்கும் போது செலுத்தும் வரிக் கொடுப்பனவின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த படிகள் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்குட்பட்டிருந்த 50 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 16,019 தொகை குறைத்து அவ்வரி செலுத்தப்பட்டிருந்தது.

- அரச பாதுகாப்பு மற்றறு் நகர அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ரணவிரு ரியல்ஸ்டார் நிகழ்ச்சியின் இறுதிப் போட்டியில் விமானப் படையிலிருந்து பங்குபற்றிய போட்டியாளரை வெற்றி பெறச் செய்வதற்கு அப்போட்டியாளரின் இலக்கத்திற்கு குறுந்தகவல்களை அனுப்புவதற்காக விமானப்படை நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 20.90 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

- நி.பி 95 இன் கீழ் விமானப்படைக்கு சிவில் உத்தியோகத்தர்களை சேர்த்து விமானப்படையின் செயற்பாடுகளுக்கு புறம்பான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தியிருந்ததுடன், அவ் ஊழியர்களுக்கு

விமானப்படை நிதிஏற்பாட்டிலிருந்து 2013 ஆம் ஆண்டில் ரூபா 15.88 மில்லியன் தொகையும் 2014 சனவரி முதல் ஆகஸ்ட் வரை ரூபா 15.65 மில்லியன் தொகையும் சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

- திறைசேரி பிரதி செயலாளரின் 2014 நவம்பர் 19 ஆம் திகதிய பீடீ/என்/எவ்/103/03/09/03 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வெளித்தரப்பினருக்கு சேவைகள் வழங்கி உழைக்கப்படுகின்ற வருமானத்திலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், விமானப் படையின் பௌதீக வள மற்றும் மனிதவளங்களை பயன்படுத்தி பேணப்பட்டு வந்த 96 நிதியங்கள் தொடர்பாக உழைக்கப்பட்ட வருமானம் அவ்வாறு திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்படாமல் விமானப் படை நிதியங்களுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

- 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படும் போது கொள்வனவு நடவடிக்கைகளுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 1,245.61 மில்லியன் ஆன மூலதனச் செலவினம் மற்றும் ரூபா 8,131.97 மில்லியன் ஆன மீண்டெழும் செலவினம் என்பன அத்திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த தந்திரோபாயங்களின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அறிக்கை பேணல் மற்றும் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக மாதமொன்றிற்கு ரூபா 50,000 வீதம் 15 வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளும் போது உடன்படிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், முற்பணம் வழங்கப்படமாட்டதென இணங்கியிருந்த போதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முன்னர் ஆண்டு முழுவதற்குமாக ரூபா 600,000 வீதம் 15 வழங்குனர்களுக்கு ரூபா 9 மில்லியன் தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## சிவில் பாதுகாப்பு திணைக்களம்

2014 ஆம் ஆண்டின் போது சிவில் பாதுகாப்பு திணைக்களம் நாட்டின் பொருளாதார பாதுகாப்பு அபிவிருத்திக்காக 23 படையணிகள் மற்றும் பயிற்சி முகாம்கள் என்பவற்றின் மூலம் பேணிச் செல்லப்படும் செயற்திட்டங்களுக்காக 17,676 துருப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 371.54 மில்லியன் ஆன வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன், பொது மக்கள் நலனுக்காக அரச நிறுவனங்களின் பாதுகாப்பு கடமைகளில் எப்போதும் ஈடுபடுத்தப்பட்டிருந்துடன், சிவில் மக்களுக்காக சமூகநலன் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட சமய மற்றும் கலாசார நடவடிக்கைளுக்காகவும் பங்களிப்பு செய்திருந்தது.

### கணக்காய்வு அவதானிப்புக்கள்

- சிவில் பாதுகாப்பு துருப்பினர்களுக்கு ஓய்வூதியச் சம்பளத்துடன் கூடிய நிரந்தர நியமனக் கடிதத்தை வழங்குவதாக குறிப்பிடப்பட்டு ரூபா 13.81 மில்லியன் செலவிடப்பட்டு விழாவொன்று நடாத்தப்பட்டிருந்த போதிலும், நிரந்த சேவையில் தாபித்து நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வாடகைக் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படும் திணைக்களத்தின் தலைமையலுவலக கட்டிடத்தின் பூங்கா மண்டபத்தின் சீவிலிங் நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 2.73 மில்லியன்

தொகை செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், அச்செலவினத்தை வாடகையிலிருந்து கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் வழங்கப்பட்ட செயல் நிமித்த கட்டுநிதி எந்தக் காரணமாயினும் வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 18 சந்தர்ப்பங்களுக்குரிய வழங்கப்பட்டிருந்த ரூபா 2.85 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இம்முற்பணங்களை தீர்ப்பதற்கு 12 மாதங்கள் கடந்திருந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றினால் பல்வேறு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 39.57 மில்லியன் தொகையினை குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றாமல் வைப்புக் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

- சனாதிபதி செயலகத்தினால் முறையான அங்கீகாரமின்றி 16 வாகனங்கள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்களை இதுவரை பொறுப்பேற்றிருக்கவில்லை.

- விமானப் படையின் கலையரங்க தொகுதியில் நடைபெற்ற ரணவிரு ரியல்ஸ்டார் நிகழ்ச்சியில் பயன்படுத்துவதற்காக ரூபா 773,254 பெறுமதியான 02 காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்ய்பபட்டிருந்ததுடன், பயன்பாட்டின் பின்னர் 18 மாதங்களாக செயற்பாடற்றுக் காணப்பட்டன.

# பெருந்தோட்டக் கைத்தொழில்

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் இறப்பர் ஆராய்ச்சி நிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இலங்கை தேயிலை சபை, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, தே சக்தி நிதியம், துருசவிய நிதியம் மற்றும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிலையம் ஆகிய சட்டரீதியான 07 நிறுவனங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட கலுபோவிடியான தேயிலை தொழிற்சாலை சங்கம் ஆகியன அமைச்சுக்குச் சொந்தமாக இருந்ததுடன் பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பெருந்தோட்டத் துறை மூலம் பெருந்தோட்டத் தொழிலின் வினைத்திறன், இலாபமீட்டல் மற்றும் நிலைப்பாட்டினை மேம்படுத்தல், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பயிர்ச்செய்கையை பரவலாக்கள் மற்றும் மேம்படுத்தல் செயற்பாடு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகியனவும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. மேலும், அமைச்சு மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுக்கு மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 4276.81 மில்லியனாக இருந்ததுடன் இதில் ரூபா 3914.67 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வின் போது முக்கிய அவதானிப்புகள் கீழ்வருமாறு.

- அமைச்சுக்குச் சொந்தமான வாகனங்கள் விபத்துக்குள்ளாகியதால் 11 வாகனங்கள் தொடர்பில் ஏற்பட்ட சேதங்களில் இதுவரை ஈடு செய்யப்பட முடியாமல் போன ரூபா 7.74 மில்லியன் நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கான முறையான வழிமுறையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதாணிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் 2009 முதல் 2014 வரையான 6 வருடங்களுக்கான காலாவதியான நிலுவை வாடகையான ரூபா 439.76 மில்லியன் அறவிடப்படாமல் இருந்ததுடன் அதற்கான தாமதக் கட்டணம் அறவிடல் தொடர்பான கோரிக்கைகள் வரி ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 1994 ஆம் வருடம் முதல் செயலிழந்த நிலையில் காணப்பட்ட இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் மற்றும் இறப்பர் மீள் நடுகை நிவாரண நிதியம் ஆகியவற்றை மூடி விடுவதற்கு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திணைக்களம் தவறியிருந்தது.

## இலங்கை இறப்பர்ஆராய்ச்சி நிலையம்

இறப்பர் பயிர்ச்செய்கையின் உயிரியல் விஞ்ஞான ஆய்வு, இயற்கையான இறப்பர் பாலின் இரசாயனம் மற்றும் பொருட்கள் உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வினை மேற்கொள்வதை நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற இந் நிறுவனத்தில் தொழில்சார் திறனுடன் கூடிய ஆராய்ச்சிப் பிரிவு 4 உயர் அதிகாரிகளுக்கான பதவிகள், 3 தலைமை ஆராய்ச்சி அதிகாரிகளுக்கான பதவிகள், 12 சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரிகளுக்கான பதவிகள் மற்றும் 14 ஆராய்ச்சி அதிகாரிகளுக்கான பதவிகள் ஆகியவற்றுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன.

- 2014 ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தின் காரணமாக ஒரு பகுதி அழிவுக்குள்ளான டார்டன்பீல்ட் இறப்பர் தொழிற்சாலையின் சேதம் ரூபா. 4.28 மில்லியன் ஆகவும், அழிவடைந்த இறப்பர் தொகையின் பெறுமதி ரூபா. 1,607,350 ஆகவும், மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் சரியான பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்காமையால் காப்புறுதி இழப்பீடாக ரூபா 702,517 மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்தது.

- 2014 வருட இறுதியில் ரூபா 34.96 மில்லியன் ஆகக் காணப்பட்ட வியாபார மற்றும் கடன் பட்டோர் கணக்கு மீதியில் 52.4 வீதமாகக் காணப்பட்ட 497 கடன்பட்டோர் கணக்குகளுடன் தொடர்பான ரூபா 18.33 மில்லியன் தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 8.05 மில்லியன் தொகை 10 வருடங்கள் தொடக்கம் 20 வருடங்கள் வரையிலும் ரூபா 2.55 மில்லியன் தொகை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த மீதியாகவும் காணப்பட்டது.

## துருசவிய நிதியம்

இறப்பர் துறை உற்பத்திக்கு பெரும் பங்களிப்பு வழங்குகின்ற சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களை வலுப்படுத்தி அவர்களது பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற நோக்கில் 12 மாவட்டங்களில் கிராமிய மட்டத்தில் பரந்து காணப்படுகின்ற சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களை ஒன்றுதிரட்டி 696 துருசவிய சங்கங்கள் நிறுவப்பட்டிருந்த போதும் நிதியத்தினால் முறையான முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்காமையினால் 696 சங்கங்களில் 315 செயலிழத்தல் மற்றும் உறுப்புரிமை கட்டணத்தை அறவிடலில் தாமதம் ஆகிய சிரமங்களுக்கு முகம் கொடுத்திருந்தன.

ஒப்பந்த அடிப்படையிலே இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 5 ஊழியர்களின் சேவையை நிரந்தரமாக்குகின்ற பொழுது முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 30(1) இன் விதிமுறைகளுக்கு முரனான சம்பளத் திட்டங்களில் நிலைப்படுத்தியமையால் 2013 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2015 யூன் 30 ஆம் திகதி வரை சம்பளமாக ரூபா 517,530 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## இலங்கைத் தேயிலை சபை

இலங்கைத் தேயிலை உலக சந்தையிலே அதிகம் கவரப்படுகின்ற பானங்களிலே முதலிடத்தைப் பெறச் செய்தல் சபையின் தூர நோக்காக இருக்கின்ற அதேவேளை இலங்கையில் தேயிலைத் தொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கைத் தேயிலையை உலகம் முழுவதிலும் பிரபலமடையச் செய்தல் ஆகியன தொடர்பில் செயற்படுவதும் சபையின் பிரதான இலக்காகும். இந் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தேயிலை உற்பத்தியாளர்கள், பொதியீட்டாளர்கள் மற்றும் தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து பதிவுக் கட்டணம், பதிவுப் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ஆகியன அறவிடப்படுவதுடன் இக் கட்டணம் தேயிலை சபை சட்டத்திற்கமைவாக அமைச்சரவையின் அனுமதியைப் பெறாமலும் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்காமலும் 2010 ஜுலை 29 ஆம் திகதி சபையினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும் செஸ் நிதியத்தினை அமைத்தல் மற்றும் செயற்படுத்தலுக்காக சட்ட விதிமுறைகளிலே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- தேயிலை விருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகளுக்காக ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் தேயிலைக்கு ரூபா 3.50 வீதம் தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து 2010 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 5818.67 மில்லியன் தீர்வையாக அறவிடப்பட்டிருந்ததுடன் இதிலே ரூபா 876.48 மில்லியன் மாத்திரம் 2014 ஆம் வருட இறுதி வரை தேயிலை விருத்தி நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை குறுங்கால முதலீட்டிலே ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

- கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் கட்டடத்தில் தேயிலை விற்பனை நிலையமொன்றினை (Tea House) அமைப்பதற்காக சபையினால் 2014 ஆம் வருடத்தில் ரூபா 58.369 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் 2014 மார்ச் மாதம் முதல் திசெம்பர் வரையிலான 10 மாத காலத்தினுள் சபை ரூபா 13.5 மில்லியன் தேறிய நட்டத்தினை அடைந்திருந்தது. எனினும் தேயிலை விருத்தி நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்றிட்டத்திற்காக சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- ஐந்து வருடங்களுக்கு மேலாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் மூலம் பெறப்பட வேண்டிய தொகையான ரூபா 25 மில்லியனுக்குப் பதிலாக அச் சபைக்குச் சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள ரூபா. 16 மில்லியன் பெறுமதியான “சிலோன் டீ மியூசியம்” இன் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கும் ரூபா. 8 மில்லியன் மீதியை பதிவழிப்பதற்கும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை தேயிலை சபை 2012 ஜுன் மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற பொது வியாபாரச் செயற் குழுக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொண்டிருந்தது. எனினும் இச் செயற்பாடானது 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## தேயிலை ஆராய்ச்சி நிலையம்

- பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் பிரதேச அலுவலக நிலையப் பொறுப்பதிகாரிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களின் பராமரிப்பிற்கான மாதாந்த ஊழியர் கொடுப்பனவு மீளளித்தல் செய்வதற்கு 2007 மே மாதம் 24 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் வரிசை அமைச்சினதும் திரைசேரியினதும் அனுமதியின்றி அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 13 அதிகாரிகளுக்காக முறையே ரூபா 2.72 மில்லியன் மற்றும் ரூபா 2.74 மில்லியன் சபையினால் மீளளித்தல் செய்யப்பட்டிருந்தது.

- முழுச் சம்பளத்துடனான கற்கை விடுமுறை பெற்று கட்டாய சேவைக் காலத்தினுள் சேவையாற்றாது சேவையிலிருந்து விலகியிருந்த 09 அதிகாரிகளிடமிருந்து ரூபா 22,035,213 தொகை 2015 யூன் மாதம் 30 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## தேயிலை சக்தி நிதியம்

- 2013 மற்றும் 2014 ஆகிய வருடங்களின் இறுதி நிதிக் கூற்றுக்கள் 2015 செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் நிதியத்திற்குச் சொந்தமான 13 தொழிற்சாலைகளில் 5, தொழிற்றாலைகள் 2008 ஆம் ஆண்டு முதல் 2012 வரையிலான 5 வருடங்களில் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தன. 2012 ஆம் வருடத்தில் பஸ்ஸர தொழிற்சாலை தவிர்ந்த ஏனைய அனைத்து தொழிற்சாலைகளும் நட்டமடைந்திருந்தன. அதற்கமைய 2012 ஆம் வருடத்தில் தொழிற்சாலைகளின் நட்டமானது ரூபா 57.65 மில்லியனாக இருந்ததுடன் ஒரு தொழிற்சாலையைத் தவிர ஏனைய அனைத்து தொழிற்சாலைகளினதும் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தது.

- நிதியத்தின் பிரதான அலுவலகக் கட்டட நிர்மாணத்திற்காக 50 வருட தீர்வை அடிப்படையில் ரூபா 28 மில்லியன் பெறுமதியான 40 பர்சஸ் நிலத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ள உடன்பட்டு 2010 மார்ச் மாதம் 31 ஆம் திகதி ரூபா 8,082,256 முற்பணமாக அவ்வதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் வருடத்தில் பணிப்பாளர் சபையின் தீர்மாணத்திற்கமைவாக அக் கட்டடத்தை வேறு ஒரு இடத்தில் நிர்மாணிப்பதற்கு முடிவுசெய்யப்பட்டிருந்தாலும் செலுத்தப்பட்டிருந்த மேற்படி முற்பணத் தொகையானது 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

## சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை

- 2014 ஆம் ஆண்டினுள் அபிவிருத்திச் செலவாக அதிகாரசபை ரூபா. 345.10 மில்லியன் செலவு செய்திருந்ததுடன் அதிலே ரூபா. 331.21 மில்லியன் உதவித் தொகையாக தேயிலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மீதிச் செலவுகளில் 2014 நவம்பர் 12 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட தேயிலை பயிரிடுவோர் ஒன்றுகூடலுக்காக செலவிடப்பட்ட ரூபா 5.65 மில்லியன் மண் மற்றும் நீர் பாதுகாப்பு வினைத்திறன் விருத்தி விசேட வேலைத்திட்டத்தின் கீழ் 190,123 தேயிலைப் பயிர்ச் செய்கையாளர்களுக்காக ரூபா 406.34 மில்லியன் நன்கொடை வழங்கப்படுவதற்கான காசோலைப் புத்தகக் கட்டணமாக ரூபா. 2.84 மில்லியன் விண்ணப்பப்படிவம் மற்றும் சுவரொட்டிகளுக்காக ரூபா 1.58 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தமை பொருளாதாரச் செலவினங்களல்லாத வகையிலே கணக்காய்வின் போது அவதாணிக்கப்பட்டது.

- தேசிய தேவையின் நிமித்தம் அதியுயர் வினைத்திறனைப் பெற்றுக் கொள்வதற்கும் தேயிலை பயிர் நிலங்களைப் பராமரிப்பதற்கும் வருடாந்தம் 2300 ஏக்கர் மீள் நடுகை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் உதவி முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் 720 ஏக்கர் மாத்திரம் மீள் நடுகை செய்யப்பட்டிருந்ததுடன் அது 116,492 ஏக்கர் விசாலமான முழு முதிர்ச்சியடைந்த தேயிலைப் பயிர் நிலங்களின் 0.62 வீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இம் முதிர்ச்சியடைந்த தேயிலைப் பயிர்ச்செய்கையில் 21,613 ஏக்கர் 25 வருடங்களுக்கு முன்னர் பயிரிடப்பட்டவை என்பது அவதாணிக்கப்பட்டது.

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை

- இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அல்கடுவ பெருந்தோட்டச் சங்கம் ஆகியவற்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ஆரம்ப நிலத்தின் அளவானது 27,242.76 ஏக்கராக இருந்ததுடன் அதில் 58 வீதம் அதாவது 15,825.35 ஏக்கர் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. 6,064.18 ஏக்கர் அதாவது முழுப் பயிர் நிலத்தின் 22 வீதம் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்த உகந்த நிலையிலே காணப்பட்ட போதும் பயிர்ச் செய்கைக்காகவோ அல்லது பொருளாதார வினைத்திறன் மிக்க ஒரு நடவடிக்கைக்காகவோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- தேயிலை பயிரிடப்பட்டிருந்த 8008.95 ஏக்கர் முழு நிலத்தில் 5135.44 ஏக்கர் விதைத் தேயிலை பயிரிடுவதற்கும் 2873.51 ஏக்கர் கொழுந்துத் தேயிலை பயிரிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டிருந்தது. தேயிலை பயிரிடப்பட்டிருந்த முழுப் பயிர் நிலத்தின் 64 வீதம் விதைத் தேயிலைப் பயிர்ச்

செய்கையாக இருந்ததுடன் அப் பயிர்ச் செய்கையானது 100 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்ததாக இருந்ததனால் ஆயுட் காலம் கடந்துவிட்டிருந்தது. இதன் மூலம் கிடைக்கும் கொழுந்து விளைச்சல் கொழுந்துத் தேயிலைப் பயிர்ச் செய்கையுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகும்.

- மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் 2011 தொடக்கம் 2014 வரையிலான காலப்பகுதியில் மதிப்பிடப்பட்டிருந்த பசளைத் தேவையில் 17 இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட சதவீதத்தினையும் அல்கடுவ பெருந்தோட்ட சபையினால் 2011 தொடக்கம் 2014 வரையிலான காலப்பகுதியில் 29 இற்கும் 92 இற்கும் இடைப்பட்ட சதவீத உரப் பாவனையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தேயிலைப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான பசளை உரிய தரத்திலே பயன்படுத்தப்படாமையால் தோட்டங்களிலிருந்து பெறப்படுகின்ற கொழுந்து விளைச்சலின் பண்பு மற்றும் அளவு என்பன குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

- மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, அல்கடுவ பெருந்தோட்ட சபை மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மூலம் 2011 ஆம் வருடம் தொடக்கம் 2014 ஆகஸ்ட் மாதம் வரை மீள் பயிரிடல் மேற்கொள்ளப்படவில்லை.

- மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் 62,440 மரங்கள் அகற்றப்பட்டு அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்படுவதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தின் மூலம் நிறுவனங்களில் காணப்படுகின்ற ரூபா. 1,549 மில்லியன் செலுத்தப்படாத ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் மிகையூதியம் என்பவற்றைச் செலுத்துவதற்கு 2013 ஒக்டோபர் 17 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இச் செயற்றிட்டம் உரிய முறையில் செயற்படுத்தப்படாமல் இருந்ததுடன் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு மர விற்பனை மூலம் ரூபா. 28 மில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அதில் ரூபா. 16 மில்லியன் மாத்திரம் சட்டரீதியான பொறுப்புக்களை தீர்த்துக் கொள்வதற்காகவும் மீதி சபையின் சாதாரனத் தேவைகளை ஈடுசெய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மூலம் இச் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான கொழும்பு 10, டார்லி வீதியில் அமைந்துள்ள களஞ்சியசாலைக் கட்டிடத்தொகுதியில் ஒரு கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட தனியார் நிறுவனமொன்றிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வரிப் பணத்தில் குத்தகையாளரின் வேண்டுகோளுக்கிணங்க ரூபா 34.85 மில்லியன் ஐ பதிவழிக்க அதிகாரசபை உடன்பட்டிருந்தது.

- இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அலகொள்ள தோட்டத்தில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் சேதமடைந்த தேயிலைத் தொகையின் பெறுமதி ரூபா 4.55 மில்லியன் ஆகவும் தேயிலைக் கொழுந்தின் பெறுமதி ரூபா 327,285 ஆகவும் விறகின் பெறுமதி ரூபா 98,314 ஆகவும் கடதாசி உறைகளின் பெறுமதி ரூபா 140,599 ஆகவும் இருந்தது. இது தொடர்பாக நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையில் நிதிப்பிரமாணம் 104 ஆம் பிரிவிற்கமைவாக சேதத் தொகையினை மீளப் பெற்றுக் கொள்ளலுடன் சம்பந்தமான சிபாரிசுகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்ததா என்பது சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

## தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு

தெங்கு பயிரிடல் சபை, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிலையம் ஆகிய 3 சட்டபூர்வ நிறுவனங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட குருனாகலை பெருந்தோட்டச் சங்கம் மற்றும் வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டச் சங்கம் ஆகிய 2 அரச சங்கங்கள் என்பன அமைச்சிக்குச் சொந்தமாக இருந்ததுடன் கொள்கை, நிகழ்ச்சி மற்றும் செயற்றிட்டம் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறன் மிக்கதாகவும் மக்கள் விரும்பும் விதத்திலும் பெற்றுக் கொடுத்தல், வீண் விரயம் மற்றும் ஊழல் ஆகியவற்றைத் தடுத்து புதிய முகாமைத்துவ தொழில்நுட்ப திறன்களைப் பயன்படுத்தி அனைத்து வழிமுறைகளையும் மீலொழுங்கு செய்தல், பல் பயிர் நடுகை மற்றும் திரண்ட பண்ணை முறைமை மூலம் பெருந்தொட்ட நிலங்களை உச்ச அளவில் பயன்படுத்தல், இதன் மூலம் உற்பத்தி மற்றும் தொழில்வாய்ப்பு ஆகியவற்றை அதிகரித்தல் மற்றும் தெங்குத் தொழில் அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் ஆராய்ச்சியுடன் தொடர்பான செயற்பாடுகள் ஆகியன அமைச்சின் பிரதான இலக்குகளாகும். அமைச்சிக்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஒதுக்கீடானது ரூபா 1,941 மில்லியனாக இருந்ததுடன் இதில் ரூபா 1,717 மில்லியன் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது.

- நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முறையான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது 2014 வருடாந்த உத்தேச வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வெலிகமை தென்னோலை வாடுதல் மற்றும் பழுதடைதல் நோய்த் தடுப்பு வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 5 மில்லியன் அமைச்சரவையினால் தெங்கு பயிரிடல் சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சபையினால் அத் தொகையில் ரூபா 4.9 மில்லியன் அம்பாந்தோட்டை மெதமுலன தென்னிலங்கை தெங்கு அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதாணிக்கப்பட்டது.

- தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் வீட்டுத் தேங்காய்ப் பாவனையின் போது ஏற்படுகின்ற வீண்விரயத்தைக் குறைப்பதனால் தெங்கு ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கின்ற நோக்கில் தேங்காய்க்குப் பதிலீடாக தேங்காய் பால், தேங்காய் பால்மா மற்றும் தேங்காய் நெய் ஆகியவற்றைப் பிரபல்யப்படுத்துவதற்கான பிரச்சார ஊடகங்களாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன தெரிவு செய்யப்பட்டிருந்தன. 2014 ஆகஸ்ட் 14 ஆம் திகதி தொடக்கம் 2015 ஏப்ரல் 13 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9.34 மில்லியன் உம் 2014 செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் 2014 தெசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3.94 மில்லியன் உம் அதிகாரசபை செலுத்தியிருந்தது. இதில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியன முறையே ரூபா 8.79 மில்லியன் மற்றும் ரூபா 136,970 ஆகிய தொகைகள் எஞ்சியிருப்பதாக அதிகாரசபைக்கு அறிவித்திருந்த போதும் மீளாய்வாண்டின் ரூபவாஹினிக் கூட்டுத்தாபன நிதிக் கூற்றுக்களுக்கு அமைவாக அதிகாரசபைக்கு எந்தப் பணமும் மீளச் செலுத்தப்பட வேண்டியதில்லை எனவும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து அதிகாரசபைக்கு கிடைக்கவிருந்த பணம் ரூபா. 1.27 மில்லியன் எனவும் தெளிவாகியது. மேலும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றால் பிரச்சாரம் செய்யப்பட்டதை உறுதி செய்வதற்கான போதியளவு தகவல்கள் அதிகார சபையினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

- 2003 ஜுன் 02 திகதியும் பீஈடீ 12 இலக்க பொது முற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.8.2 பிரிவிற்கு மாற்றமாக தெங்கு பயிரிடல் சபையின் பிரதான அலுவலக சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் தோட்ட முகாமையாளர்களுக்காக இரண்டு ஊழியர்களின் ஒரு மாதச் சம்பளத்திற்குச் சமமான கொடுப்பனவும், உதவி தோட்ட முகாமையாளர்கள் பிரதான அலுவலகத்தின் உதவிப் பொது முகாமையாளர்கள் மற்றும் தோட்டப் பராமரிப்புச் சேவையின் கனிஷ்ட நிறைவேற்று அதிகாரிகளுக்காக ஒரு ஊழியரின் ஒரு மாதச் சம்பளத்திற்குச் சமமான கொடுப்பனவுமாக 2011 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2014 தெசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ரூபா 16.71 மில்லியன் திரைசேரியின் அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதேபோன்று மாதிரி தென்னைத் தோட்டங்களில் தோட்ட முகாமையாளர்கள் மற்றும் உதவித் தோட்ட முகாமையாளர்கள் இக் கொடுப்பனவைப் பெறுவதோடு அவர்களது உத்தியோகபூர்வ வீடுகளில் சேவை புரிவதற்காக அம் மாதிரித் தென்னைத் தோட்டங்களில் செக ரோல் ஊழியர்கள் இருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதாணிக்கப்பட்டது.

# சக்திவளத் துறை

## இலங்கை மின்சார சபை

மீளாய்வாண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் ரூபா 13,154 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் 22,264 மில்லியனாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 35,418 மில்லியன் பின்னடைவைக் காட்டுகின்றது. கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டதன் படி, 2014 ஆம் ஆண்டில் நீர்மின்சார உற்பத்தியானது நீரேந்துப் பகுதிகளில் காணப்பட்ட குறைந்தளவான நீர் மட்டம் காரணமாக 2013 இல் உற்பத்தி செய்யப்பட்ட 6,906 ஜீடபிள்யூஎச் உடன் ஒப்பிடுகையில் 2,372 ஜீடபிள்யூஎச் இனால் அல்லது 34 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமையால் 459 ஜீடபிள்யூஎச் இனால் அதிகரித்திருந்த கேள்வியைச் சமாளிப்பதற்கு அனல்மின் மற்றும் நிலக்கரி மின்சார உற்பத்தியினை 2,778 ஜீடபிள்யூஎச் அல்லது 59 சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டியிருந்தமை இந்தப் பின்னடைவிற்குப் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

| | 2014 | 2013 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| **மூலம்** | **ஜிடபிள்யூஎச்** | **ஜிடபிள்யூஎச்** | **ஜிடபிள்யூஎச்** | **%** |
| நீர்மின் | 4,534 | 6,906 | -2,372 | -34 |
| அனல்மின் | 4,305 | 3,260 | 1,045 | 32 |
| நிலக்கரி | 3,202 | 1,469 | 1,733 | 118 |
| மாற்றீடு செய்யப்படாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 315 | 263 | 52 | 20 |
| **மொத்தம்** | **12,357** | **11,898** | **459** | **4** |

அதன்படி, முன்னைய ஆண்டிற்கு எதிராக 2014 ஆம் ஆண்டில் சபை சுதந்திர மின்சார உற்பத்தியாளர்களிடமிருந்து அனல் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்காகவும் லங்கா கோல் கம்பனியிடமிருந்து நிலக்கரியை கொள்வனவு செய்வதற்காகவும் அதிகளவு செலவினத்தை செய்திருந்தது. இந்த இரண்டு காரணிகளாலும் ஏற்பட்ட கிரயத்தின் அதிகரிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 37,997 மில்லியன் மற்றும் ரூபா 6,354 மில்லியனாக காணப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான சபையின் மின்சார வழங்கலுக்கு ஏற்பட்ட நேர்க் கிரயத்தின் பொழிப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** |
| எரிபொருள் | 46,582 | 22 | 29,425 | 18 |
| மின்வலு கொள்வனவு | 101,149 | 48 | 80,308 | 48 |
| நிலக்கரி | 17,031 | 8 | 10,677 | 6 |
| செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு | 24,913 | 12 | 26,196 | 16 |
| பெறுமானத்தேய்வு | 21,174 | 10 | 20,319 | 12 |
| மொத்தம் | 210,849 | 100 | 166,925 | 100 |

மேற்படி பகுப்பாய்வின் படி,முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 37 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவம் செய்து 2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்கான மொத்தக் கிரயத்தில் முறையே 78 சதவீதம் மற்றும் 72 சதவீதம் ஆன செலவினம் மின்சார உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தது.

மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 2 சதவீதத்தால் அதிகரித்திருந்த அதேநேரம், தேறிய நடைமுறைச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூபா 737 மில்லியன் நேர்ப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ரூபா 5.8 பில்லியன் எதிர்மறைத் தொகையாக மாற்றமடைந்து 689 சதவீத குறைவை பிரதிநிதித்துவம் செய்தது. இந்த குறைவுக்கான பிரதான காரணம் கடன் அறவிடல் செயன்முறையில் முன்னேற்றம் ஏற்படாதிருக்க வேலைதொடக்க முற்பணங்கள் அறிவிடப்பட்டமையாகும். 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ஈடுபடுத்திய மொத்த மூலதனத்தில் முப்பத்தி இரண்டு சதவீதம் அல்லது 220 பில்லியன் கடன்களினூடாகப் பெறப்பட்ட நிதிகளால் நிதியிடப்பட்டிருந்த அதேவேளை முன்னைய ஆண்டின் கடன் பங்கு ஐம்பத்தி நான்கு சதவீதமாகும்.

## லக்விஜய மின்சார நிலையத்தின் செயற்பாடுகள்

- லக்விஜய மின்சார நிலையம் நிலக்கரி இருப்பு மட்டங்களிற்காக அதாவது மீள் கட்டளை மட்டம், உச்ச இருப்பு மட்டம், இழிவு இருப்பு மட்டம், மீள் கட்டளைத் தொகை போன்றவற்றிற்காக பதிவேடுகளை பேணியிருக்கவில்லை. மேலும், நிலக்கரி கையாள்கைக்காக பராமரிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளின் சரியான மற்றும் நம்பகத் தன்மையினை பின்வரும் குறைபாடுகள் காரணமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

- நிலக்கரி உள்ளெடுத்தலுக்கு நம்பகரமான அளவீடுகள் இல்லாமை
- பொறிக்கான நிலக்கரி உள்ளீட்டிற்கு நம்பகரமான அளவீடு இல்லாமை
- லங்கா கோல் கம்பனி அல்லது சீஈபீ இனால் கப்பலிருந்து இறக்கப்படுபவை கண்காணிப்புச் செய்யப்படாமை
- பொறியியலாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட இருப்புக் கட்டுப்பாட்டுக்குப் பதிலாக களஞ்சியக் காப்பாளர் பதிவுசெய்தல் நடவடிக்கையில் மாத்திரம் ஈடுபடுதல்

  உதாரணமாக: மீளாய்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்த 181,016 மெ.தொ. நிலக்கரி இருப்புப் பதிவேட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- லக்விஜய மின்சார நிலையத்தின் தற்போதைய நிலக்கரி களஞ்சியப்படுத்தல் இயலளவு 738,720 மெற்றிக் தொன்களாகும். சாராசரி மாதாந்த நிலக்கரி நுகர்வு 195,000 மெற்றிக் தொன்களாக காணப்படுகின்றமையால் களஞ்சியம் 3.788 மாத தேவைக்கு மாத்திரம் போதுமானதாக உள்ளது. இருப்பினும், ஒவ்வோர் ஆண்டிலும் ஏப்ரல் முதல் செப்தெம்பர் வரையான (6 மாதங்கள்) பருவப்பெயர்ச்சிக் காலத்தில் நிலவுகின்ற பாதகமான காலநிலை மற்றும் கடல் நிலமை காரணமாக நிலக்கரியை இறக்குவதற்கு முடியாது போகின்றமையால் மொத்த நிலக்கரி தேவையினையும் களஞ்சியப்படுத்துவதற்கு போதியளவு களஞ்சிய இயலளவு காணப்படவில்லை.

- 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலக்கரி இருப்பு சுதந்திர அகழ்வாராய்ச்சிக் கம்பனியொன்றினால் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கம்பனியால் வழங்கப்பட்ட அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு, ரூபா 375 மில்லியன் பெறுமதியான 32,323 மெற்றிக் தொன் மேலதிக நிலக்கரி இருப்பினை மெய்மையாய்வுக் குழு இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும், சரியான தன்மையில் காணப்பட்ட ஐயம் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட

குறைபாடுகள் காரணமாக அந்த மேலதிக இருப்பை இருப்புப் பதிவேடுகளிற்கும் கணக்குகளிற்கும் எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, நிலக்கரி இருப்பு கையாள்கை தொடர்பில் பொருத்தமான கட்டுப்பாடுகளை தாபித்து பராமரிப்பதற்கான பொறுப்புலக்விஜய மின்சார நிலையத்துக்கு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

- 2014 ஆம் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்துக்கு எதிராக மேலதிகமாக நுகரப்பட்ட நிலக்கரியின் பெறுமதி ரூபா 2,144 மில்லியனாக காணப்பட்டது.

- புத்தளம் களப்பினூடாக பரிமாற்றல் வழியொன்றை தாபிப்பதற்காக நுரைச்சோலை மீனவர்களின் எதிர்ப்பினை சமாளிப்பதற்கு முற்பணமாக உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கும் பிரதேச செயலகங்களிற்கும் செலுத்தப்பட்டிருந்த ரூபா 103 மில்லியன் தொகை மூலதனமாக்கும் நோக்குடன் கணக்குகளில் நடைபெற்றுவரும் வேலையாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இச்செலவினத்தின் நியாயத் தன்மையினையும் வெளிப்படைத் தன்மையினையும் கணக்களிப்பொறுப்பினையும் உறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு சான்றோ அல்லது மூல ஆவணங்களோ கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. மேற்படி தொகையில் குறித்த நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 18 மில்லியன் தொகை 2015 யூன் 25 ஆந் திகதி வரை 06 மாதங்களிற்கும் மேலாக விளைவற்று வைத்திருக்கப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் அவதானிக்கப்பட்டது. ஆகையால், அக் கொடுப்பனவறிகான உண்மையான தேவைப்பாடு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

## வரையறுக்கப்பட்ட லங்கா கோல் (தனியார்) கம்பனியின் செயற்பாடுகளின் தாக்கம்

- மூன்று கப்பலேற்றல்களிலிருந்து கிடைத்திருந்த நிலக்கரியின் மொத்த கலொரிபிக் பெறுமதி (ஜீசீவீ) மூன்று தனிப்பட்ட தர பரிசோதகர்களால் வழங்கப்பட்டிருந்த தர அறிக்கைகளில் குறைபாடுள்ளவையாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, சுதந்திர பரிசோதகர்களின் அறிக்கையின் பிரகாரம் நிலக்கரியின் ஜீசீவீ பொறியின் நியமப் பெறுமதிகளைக் காட்டிலும் குறைவாகக் காணப்பட்டமையால் துறைமுகத்தில் கப்பலேற்றுகையில் தர பரிசோதகரால் வழங்கப்பட்ட அறிக்கை செம்மையற்றதாக இருந்ததுடன் குறித்த தரப்பரிசோதகர் இந்திய நீதிமன்றத்தால் கறுப்புப் பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றாகும் என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. இக் குறைபாடுகள் காரணமாக 143,932 மெ.தொன் குறைந்த தரமுடைய ஜீசீவீநிலக்கரி இருப்பினை எரித்தமையினால் அறிவிக்கப்பட்டடிருந்த மேற்படி மூன்று கப்பல் நிலக்கரியிலிருந்து சீஈபீ இற்கு ரூபா 345 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

- மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட குறைந்த தரமுடைய ஜீசீவீ நிலக்கரி இருப்பு நுகரப்பட்டமை காரணமாக மாற்றுவழி சக்தி மூலங்களிலிருந்து 25 எம்டபிள்யூ குறைச் சக்தியினை பெறவேண்டியேற்பட்டமையால் ரூபா 508 மில்லியன் மேலதிகக் கிரயம் ஏற்பட்டிருந்தது.

- லங்கா கோல் கம்பனியும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமும் குறைவாக வழங்கப்பட்ட 29,896 மெற்றிக் தொன் நிலக்கரியை குறைவாக வழங்கப்பட்ட திகதியான 2012 ஏப்ரல் 04 இலிருந்து 16 மற்றும் 17 ஆம் கப்பலேற்றலுக்கான கொடுப்பனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களிற்குள் வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும், அவர்கள் அவ்வாறு செய்யத் தவறியிருந்தனர். குறைவாக வழங்கப்பட்டிருந்த நிலக்கரியின் பெறுமதி ரூபா 654 மில்லியனாகும். மேலதிக கொடுப்பனவை அறிவிடுதவற்கு 2014 திசெம்பர் 31 வரை சீஈபீ நடவடிக்கை

எடுக்காதிருந்ததுடன் மேலதிகப்பற்று வட்டியினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட மூலதனத்திற்கான சந்தர்ப்பக் கிரயம் ரூபா 229 மில்லியனாகும்.

- பொறிக்கு பரிந்துரைத்த பெறுமதியினை காட்டிலும் நிலக்கரியின் கலொரிபிக் பெறுமதி குறைவாக இருந்தமையாலும் அப் பொறி குறைபாட்டுப் பொறுப்புக் காலத்தினுள் காணப்படுகின்றமையாலும் அவற்றை பயன்படுத்துதல் தொடர்பில் பொறியின் மதியுரைஞர் அல்லது உற்பத்தியாளரிடமிருந்து அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பொது முகாமையாளர் மேலதிகப் பொது முகாமையாளர் (உற்பத்தி) இற்கு அறிவித்திருந்தார். இருப்பினும், குறித்த தரப்பினரிடமிருந்து அவ்வாறான அபிப்பிராயம் பெற்றுக்கொள்ளப்படுவதனை கணக்காய்வில் அவதானிக்க முடியவில்லை. அத்துடன், சட்டமா அதிபர் தனது 2012 திசெம்பர் 21 ஆந் திகதி கடிதத்தினால் அறிவுறுத்தப்பட்டிருந்தவாறு பிழையான தீர்மானத்தை எடுப்பதில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தினை அறவிடுவதற்கு 2015 யூலை வரை சீஈபீ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- கொள்வனவு மேன்முறையீட்டுச் சபையினாலும் நியம அமைச்சரவை நியமித்த கொள்வனவுச் சபையினாலும் தீர்மானங்களை மேற்கொள்கையில், இரண்டு கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளை முறையற்ற விதத்தில் மதிப்பீடு செய்திருந்தமையால் பிழையான வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தமையால் ரூபா 264 மில்லியன் (யூஎஸ்டொ. 2,310,263) மேலதிக் கிரயம் சீஈபீ இக்கு ஏற்பட்டிருந்தது.

- சீஈபீ இற்கும் லங்கா கோல் கம்பனிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி, நிறை தீர்மானித்தல் கிரயம் லங்கா கோல் கம்பனியால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். லங்கா கோல் கம்பனியினால் தெரிவு செய்யப்பட்டிருந்த கப்பல் ஆய்வாளரின் சுதந்திரம் கேள்விக்குரியானதாகும். எவ்வாறாயினும், நிலக்கரி கையாள்கையுடன் சம்பந்தப்பட்ட சகல செலவினங்களும் சீஈபீ இனால் மீளளிக்கப்பட்டிருந்த போதிலும், நேரடியான உறுதிப்படுத்தலொன்றாக நிறை சான்றிதழ் சீஈபீ இற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. நிலக்கரி கொள்வனவுக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதான குறைபாடாக இது காணப்படுகின்றது.

- நிலக்கரி இருப்பை அளவிடுவதற்காக சர்வதேச மட்டத்தில் பயன்படுத்தப்படுகின்ற உபாயங்கள் அல்லது நுட்பங்கள் நிலக்கரி களஞ்சியத்தில் அல்லது கப்பலிலுள்ள நிலக்கரி இருப்பினை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்வதற்கு சீஈபீ பயன்படுத்தியோ அல்லது அறிமுகப்படுத்தியோ இருக்கவில்லை.

- நிலக்கரியின் அறிவிக்கப்படுகின்ற அளவினை திருத்தமாக நிறுப்பதற்காக சீஈபீ இடம் முறையொன்று காணப்படாமையால் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினாலும் சுதந்திர அளவை முகவராலும் அளவிடப்படுகின்ற நிறையினை சீஈபீ ஏற்றுக்கொள்கின்றது. ஆனால், சில சந்தர்ப்பங்களில் ஒரே சுதந்திர மதிப்பீட்டாளர் ஏற்றுகின்ற மற்றும் இறக்குகின்ற துறைமுகங்களில் நிலக்கரியை அளவிடுகின்றமை இனங்காணப்பட்டது. ஆகையால், அளவிடல்களின் சரியான மற்றும் வெளிப்படையான தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. மேலும், அளவிடும் கருவிகள் (நிறுக்கும் பாலம்) திருத்தமற்றதாக காணப்பட்டதுடன் அவற்றை திருத்தவதற்கு அல்லது அறிவிக்கப்பட்ட நிலக்கரியின் நிறையினை அளவிடுவதற்காக மாற்று முறையை கையாள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனவே, பட்டியலிடப்பட்ட மற்றும் இறக்கப்பட்ட தொகைகளிற்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. இதன் காரணமாக இருப்புப் பதிவேட்டிலுள்ள அளவு மற்றும் பெறுமதி தொடர்பில் ஐயப்பாடு காணப்படுகின்றது.

- லக் விஜய மின்சார நிலையத்துக்குச் சொந்தமான இரண்டு இழுவைப் படகுகள், மூன்று பார்கஸ், மற்றும் வழிப் படகு ஒன்று என்பன நிலக்கரியை இறக்குகின்ற செயற்பாடுகளிற்கு பொருத்தமற்றவையாக காணப்பட்டமையால் அவை கொள்வனவு செய்யப்பட்ட 2009 ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், வரிசை அமைச்சின் கண்காணிப்பின் கீழ் செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் சீஈபீ இன் பிரதிநிதிகள் ஆகியோரின் பரிந்துரையுடன் நிலக்கரி மின்சார செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடனிலிருந்து அதற்கான வெளிச்சமூட்டல் உபகரணங்களை சீஈபீ கொள்வனவு செய்திருந்தது. அந்த அதிகாரிகளின் தவறான தீர்மானத்தின் காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈபீ செய்திருந்த ரூபா 1,250 மில்லியன் கிரயம் சிக்கனமற்றதாக காணப்பட்டது.

- வர்த்தக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கான நாணயக் கடிதங்களை திறப்பதற்காக சீஈபீ லங்கா கோல் கம்பனிக்கு கொடுப்பனை செய்வதுடன் பல சந்தர்ப்பங்களில் அவைகளில் காணப்பட்ட பெறுமதிகள் உள்ளபடியான பட்டியல் விலைகளைக் காட்டிலும் கூடுதலாக காணப்பட்டன. மேலும், லங்கா கோல் கம்பனி அவ்வாறு செலுத்தப்பட்ட மேலதிக தொகைகளை மீளளிப்பதற்கு வழமையாக நீண்ட காலத்தை எடுத்துக்கொள்கின்றது. உதாரணமாக 43 மற்றும் 44 ஆம் இலக்க கப்பலேற்றலுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 97 மில்லியன் தொகையினை மீளளிப்பதற்கு முறையே 196 மற்றும் 171 நாட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. 14 சதவீத மேலதிகப்பற்று வட்டியின் அடிப்படையில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு மீளளிக்கப்படாதுள்ள தொகைகளின் மூலதனத்திற்கான சந்தர்ப்பச் செலவு ரூபா 7 மில்லியனாக காணப்பட்டது.

- ரூபா 15,697 மில்லியன் பெறுமதியான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்கான 03, 04 மற்றும் 05 கேள்வி இலக்கங்கள் தொடர்பில் கிடைத்திருந்த கேள்விப்பத்திரங்கள், கேள்விகளை திறத்தல் கூட்டக் குறிப்புகள், தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைள் மற்றும் கொள்வனவுச் சபை அறிக்கைகள் போன்ற விபரங்கள் கொள்வனவுச் செயன்முறையின் பொருத்தமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தவதற்காக கணக்காய்வுக்க கிடைத்திருக்கவில்லை.

சபையின் தலைமை அலுவலகத்திற்காக “விதுலக்பாய” எனப் பெயர் சூட்டப்பட்டு பிரேரிக்கப்பட்டிருந்த கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் பணிப்பாளர் சபையால் 2014 ஒக்தோபர் 07 ஆந் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் உடனடியாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த நிர்மாண இடைநிறுத்தலுக்கான காரணங்கள் சபை தீர்மானத்தில் உள்ளடங்கியிருக்காததுடன் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவுமில்லை. இடைநிறுத்தப்படும் திகதி வரை ஏற்பட்டிருந்த நிர்மாண மற்றும் உசாத்துணை கிரயங்கள் ரூபா 380 மில்லியனாக காணப்பட்டதுடன் அதற்காக ஏற்பட்ட மொத்தக் கிரயம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

தரத்தில் காணப்பட்ட குறைவு காரணமாக தரப் பரிசோதகரால் நிராகரிக்கப்பட்டிருந்த கிராமிய மின்சார செயற்திட்டத்திற்கான ஈரான் கடனின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த “இன்சுலேடர்” இன் பெறுமதி ரூபா 2 மில்லியனாகும். அந்த தவறான கொள்வனவு தொடர்பில் சபை மேற்கொண்டிருந்த ஒரேயொரு நடவடிக்கை அவற்றை பயன்படுத்தாத உருப்படிகளாக கொடுகொட களஞ்சியத்திற்கு மாற்றியமையாகும்.

2009 இலிருந்து அமுலுக்கு வரவுள்ள அடுத்த சம்பளத் திருத்தத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரியினை ஊழியருக்கு சாட்டுதல் வேண்டுமென 2007 திசெம்பர் 13 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தினை புறக்கணித்து ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை

தனது சொந்த நிதிகளிலிருந்து செலுத்தியிருந்தது. மேற்குறிப்பிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தைப் புறக்கணித்து சபையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 1,407 மில்லியனாகும்.

1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது முப்பத்தி ஒன்பது வேறுபட்ட பதவியணியினருக்கான படிகள் அவ்வப்போது சபையால் அதன் பதவியினர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறான படிகளாக 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 642 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டிற்காக 849 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது.

சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.

2012 இல் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டத்தினை மிகைத்து 3655 ஊழியர்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளியிலிருந்து பெறப்பட்டிருந்தனர். அது சபையின் மொத்த பதவியினர் பலத்தில் 20 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது.

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2014 ஆம் ஆண்டிற்கான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதியின் மொத்தக் கிரயம் ரூபா 600 பில்லியனாகக் (யூஎஸ்டொலர் 4,597 மில்லியன்) காணப்பட்டதுடன் இது 2014 இன் நடைமுறைச் சந்தை விலையில் கணிக்கப்பட்ட ரூபா 9,785 பில்லியன் தொகையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 6 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் 2014 இன் மொத்த இறக்குப் பெறுமதியான ரூபா 2,535 பில்லியனில் (யூஎஸ்டொலர் 19,417 மில்லியன்) ஏறத்தாழ 24 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்திருந்தது.

## நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 1,854 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை முன்னைய ஆண்டிற்த எதிரான வரிக்கு முன்னரான நட்டமான ரூபா 7,889 மில்லியனுடன் ஒப்பிடுகையில், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 9,743 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. ரூபா 2,715 மில்லியன் மண்ணெண்ணை மானியத்தை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்திருந்தமை மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிக் கிரயம் ரூபா 4,578 மில்லியனால் குறைவடைந்திருந்தமை, கூட்டுத்தாபனத்தின் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யும் செயன்முறையில் காணப்பட்ட முன்னேற்றம் என்பன மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன. மேலும், 2013 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 53 பில்லியன் வியாபாரப் பெறவேண்டிய நிலுவைகளை 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 37 பில்லியன் வரை குறைத்துக்கொள்வதற்கு சபைக்கு உதவியிருந்த உள்நாட்டு எரிபொருள் விலைகளிற்கு முழுமையான சீராக்கத்தை செய்யாதிருக்கையில் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்தமையால் கிடைத்திருந்த அதிக இலாப எல்லை மற்றும் கடன் சேகரிப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பன கூட்டுத்தாபனத்தின் நிதி நிலமையில் ஏற்பட்ட முன்னேற்றத்தக்கு பங்களித்திருந்த ஏனைய முக்கிய காரணிகளாகும்.

கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் மீளாய்வாண்டில் 4.88 சதவீத இலாப எல்லையை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டின் 4.86 சதவீத இலாப எல்லையுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் 0.02 சதவீத முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டின் ரூபா 22,744 மில்லியன் நேரொத்த மொத்த இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் ரூபா 24,447 மில்லியனாக ரூபா 1,703 மில்லியனால் அல்லது 7.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் ரூபா 1,741 மில்லியன் தேறிய இலாபத்தை விளைவித்திருந்த போதிலும், கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 231,532 மில்லியன் எதிர்மறையான தேறிய சொத்து நிலையைக் கொண்டிருந்தது. மேலும், “இடர் குறைப்பு” (ஹெட்ஜிங்) கொடுக்கல்வாங்கல் மீது கூட்டுத்தாபனத்தால் 2012 இல் தாங்கிக்கொள்ளப்பட்ட நட்டங்களின் எதிர்மறையான தாக்கம் கூட்டுத்தாபனத்தின் முன்னைய ஆண்டிற்கான நட்டத்தை அதிகரிப்பதற்கு காரணமாகியது. மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றல் முன்னேற்றமடைந்திருந்த போதிலும், 2008 முதல் ஏற்பட்ட பாரிய நட்டத்தின் விளைவாக கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்து நிலைமை தொடர்ந்தும் எதிர் மறையாக காணப்பட்டது. ஆகையால் இலங்கை அரசாங்கத்தின் உதவியின்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை ஐயத்திற்குரியதாகும்.

## துறை ரீதியான செயலாற்றல்

கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த பின்வரும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களிலிருந்து கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டத்தை அனுபவித்திருந்தது.

| துறை | ஆண்டிற்கான மொத்த நட்டங்கள் | | | |
|---|---|---|---|---|
| | 2014 ரூபா மில். | 2013 ரூபா மில். | 2012 ரூபா மில். | 2011 ரூபா மில். |
| மின்வலு உற்பத்தி | | | | |
| **நப்தா** | 413 | 1,081 | 1,048 | 798 |
| | | | | |
| உள்நாடு | | | | |
| **எல்பீ எரிவாயு (கே.ஜீ)** | 312 | 436 | 377 | 224 |
| **மண்ணெண்ணை** | 1,775 | 2,449 | 3,525 | 6,886 |
| | | | | |
| ஏற்றுமதி | | | | |
| **நப்தா ஏற்றுமதி** | 1,700 | 976 | 43 | 675 |
| **பர்னஸ் 1500 ஏற்றுமதி** | 1,530 | 2,690 | 70 | 329 |
| | | | | |
| நிலக்கீழ் | | | | |
| **டீசல்** | 168 | 67 | - | - |
| **எரிபொருள் எண்ணை 1500** | 1,123 | 729 | - | - |
| **எரிபொருள் எண்ணை 3500** | 19 | - | | |

குறைந்த எல்லையுடன் சுத்திகரிப்பு ஆலையின் செயற்பாட்டு வினைத்திறனின்மை, நலிவான உற்பத்தி மற்றும் அடிக்கடி ஏற்படுகின்ற தடைகள் காரணமாக நாட்டின் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பை சமாளிப்பதற்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருள் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு, சுத்திகரிப்புக் கிரயத்தினைக் காட்டிலும் குறைந்த விலையில் நப்தா மற்றும் பர்னஸ் எண்ணை 1500 இனை ஏற்றுமதி செய்திருந்தமை, ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா லிமிடட் ஆகியவற்றிற்கு ஒப்பந்த வாடிக்கையாளர் விலையிலும் குறைவான சகாய விலையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுதல், இலங்கை மின்சார சபைக்கு (பர்னஸ் ஒயில் மற்றும் நப்தா) உயர் மானிய விலையில் வழங்கப்படுதல், களஞ்சிய வசதிகளின் நலிவான மேற்பார்வை, இழப்பீடுகள் செலுத்தப்பட்டமை, யூஎஸ்டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமை போன்ற காரணிகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிதி நட்டத்திற்கும் மூலதனத் தேய்விற்கும் பங்களித்திருந்தன.

சர்வதேச எண்ணை விலை அசைவுகளை வெளிப்படுத்துகின்ற மற்றும் அரசாங்கத்தின் குறிக்கோள்களுடன் இணைந்து செல்கின்ற பயனுள்ள விலையிடல்கள் கூட்டுத்தாபனத்தினால் வடிவமைத்து அமுல்படுத்தப்படாதிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் இந்த நிதிப் பிரச்சினைகளைத் சமாளிப்பதற்காக எரிபொருள் பொருட்களின் உள்நாட்டு சில்லறை விலைகள் செப்தெம்பர் 2014 வரை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், சர்வதேச சந்தையில் எண்ணை விலைகளில் ஏற்பட்ட குறைவுக்கு இசைவுறும் வகையில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் உள்நாட்டு விலைகள் 2014 ஆம் ஆண்டில் அதாவது 2014 செப்தெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் இரண்டு தடவைகள் குறைக்கப்பட்டதுடன் சர்வதேச விலைகள் தொடர்ந்தும் குறைவடைந்தமையால் 2015 சனவரியில் மேலுமொருமுறை குறைக்கப்பட்டது. இருப்பினும், மேற்படி விலை குறைப்புகள் சர்வதேச விலைகளில் ஏற்பட்ட உண்மையான குறைவுகளை முழுமையாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. அதேநேரம், சர்வதேச எண்ணை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் நலன்களை மின்சார பாவனையாளர்களிற்கு வழங்குவதற்காக மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற (உயர் கந்தக மற்றும் குறைக் கந்தக) பர்னஸ் எரிபொருள் எண்ணையின் விலைகள் 2015 முதலாம் காலாண்டில் லீற்றருக்கு ரூபா 10 ஆல் குறைக்கப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியின் 2014 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் படி, எரிபொருளின் இறக்குமதி விலைச் சுட்டெண் 2014 இன் முதலாம் அரைப்பகுதியில் அதிகரித்திருந்த போதிலும், சர்வதேச பொருளாதாரத்தின் நலிவான செயலாற்றல் மற்றும் விசேடமாக “ஒபெக்” (பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு) சாராத நாடுகளிடமிருந்தான மிகை நிரம்பல் என்பன காரணமாக ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் தொடர்ச்சியாக குறைவடைந்து 2014 ஆம் ஆண்டில் எரிபொருள் இறக்குமதி விலைச் சுட்டெண்ணை 6.3 சதவீதத்தால் குறைவடையச் செய்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் உலக எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு எதிராக உயர்வான இறக்குமதி அளவுகள் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூபா 269,449 மில்லியன் பெறுமதிக்கு மேலாக 2014 இல் 8.6 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்திருந்தது.

உள்நாட்டு உற்பத்திகள் போதுமானவையாக காணப்படாமையால் கேள்வியினை சமாளிக்கும் நோக்குடன் மீளாய்வாண்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதி அதிகரித்திருந்தது. ஆகையால், பழைய பாகங்களில் ஏற்படுகின்ற கோளாறுகளை தவிர்ப்பதற்கும் மீள் உற்பத்திகளை தடுத்து இலாபத்தன்மையினையும் செயற்பாட்டு நெகிழ்வினையும் அதிகரிப்பதற்காக வெகுவிரைவாக சுத்திகரிப்பு ஆலையினை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

## சுத்திகரிப்புச் செயற்பாடுகளின் வினைத்திறனின்மை

1969 இல் நிறுவப்பட்ட தற்போதுள்ள 45 வருடங்கள் பழமைவாய்ந்த சுத்திகரிப்பு ஆலையினால் நாட்டின் அதிகரித்துச் செல்லும் பெற்றோலியப் பொருட்களிற்கான தேவையை நிறைவேற்ற முடியாதுள்ளதுடன் உலகிலுள்ள ஏனைய நவீன தொழல்நுட்பம் மற்றும் வசதிகளுடன் உயர் வினைத்திறனுடன் செயற்பட்டு குறைந்த கிரயத்தில் உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய சுத்திகரிப்பு ஆலைகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த எல்லையில் காணப்படுகின்றது. இருப்பினும், குறைந்த கிரயத்தில் சந்தைக்கு எரிபொருள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தீர்மானமாகியுள்ள சபுகஸ்கந்த எண்ணைச் சுத்திகரிப்பு விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் இதுவரை சீபீசீ இனால் அமுல்படுத்தப்படவில்லை. அத்துடன், இச்செயற்திட்டத்திற்காக 2014 திசெம்பர் 31 வரை செய்யப்பட்டிருந்த ரூபா 837.6 மில்லியன் செலவினம் பயனற்றுக் காணப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் 1,643,218 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தினால் (கையாளப்பட்ட) சுத்திகரிக்கப்பட்ட மசகு எண்ணையின் அளவு 2014 இல் 1,760,170 மெற்றிக் தொன்களாக அதிகரித்திருந்த போதிலும், நாளொன்றிற்கான 6,900 தொன்கள் அல்லது 2014 ஆம் ஆண்டிற்கான 2,415,000 மெற்றிக் தொன்கள் உற்பத்தி இயலளவினை செயன்முறை மட்டங்கள் அடைந்திருக்கவில்லை.

சர்வதேச மசகு எண்ணை விலை 2013 இல் நிலவிய பீப்பாய் ஒன்றுக்கான யூஎஸ்டொலர் 109.15 விலையிலிருந்து 2014 இல் பீப்பாய் ஒன்றுக்கு யூஎஸ்டொலர் 99.68 வரை குறைவடைந்திருந்தது. 2014 இன் முதலாம் அரையாண்டு வரை எண்ணை விலைகள் உயர்வாகவே காணப்பட்டதுடன் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் அது 50 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. சர்வதேச விலைப் போக்குகளைத் தொடர்ந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படுகின்ற மசகு எண்ணையின் சராசரி விலையும் 2013 இல் பீப்பாய் ஒன்றுக்காக காணப்பட்ட யூஎஸ்டொலர் 109.96 விலையிலிருந்து 2014 இல் பீப்பாய் ஒன்றுக்கு யூஎஸ்டொலர் 104.83 வரை 4.7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் வழமைபோல் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் ஈராணிய இலகு மசகு எண்ணையை சுத்திகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சுத்திகரிப்பு நியமங்களுடன் பொருந்தும் வகையில் வேறுபட்ட இரண்டு வகையான மசகு எண்ணையை [வேறுபட்ட காலப்பகுதியில் சீபீசீ வித்தியாசமான மசகு எண்ணைக் கலவையை (முர்பான்+ஓமான் பிலண்ட்) செயன்முறைப்படுத்துகின்றது.] இறக்குமதி செய்ய வேண்டியிருந்த தேவையினாலும் சீபீசீ இனால் கைச்சாத்திடப்பட்டிருந்த தவணை உன்படிக்கைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணையின் விலைகள் பொதுவாக சர்வதேச விலைகளைக் காட்டிலும் கூடுதலாக காணப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் மசகு எண்ணையின் இறக்குமதி விலை ஆண்டுக்கான சராசரி விலையினைக் காட்டிலும் மிகக் குறைவாகக் காணப்பட்டது. இருப்பினும், சுத்திகரிப்பு நவீனமயப்படுத்தப்படாமையால் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் கிரயத்தை குறைக்க முடியாதுள்ளது.

## பெறவேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் பெறவேண்டிய முறையே ரூபா 6,078 மில்லியன் மற்றும் ரூபா 30,982 மில்லியனை உள்ளடக்கிய வியாபாரப் பெறவேண்டியவைகளின் மொத்தம் ரூபா 37,60 மில்லியனாக காணப்பட்டது.

### “இடர் குறைத்தல்” (ஹெட்ஜிங்) கொடுக்கல் வாங்கல்கள்

இடர் குறைத்தல் கொடுக்கல்வாங்கல்களின் படி, பல்வேறு வர்த்தக வங்கிகளுடன் செய்து கொள்ளப்பட்ட இடர் குறைத்தல் ஒப்பந்தங்கள் தொடர்பான நடுவர் தீர்ப்பு செயற்பாடுகளில் கூட்டுத்தாபனம் ஒரு தரப்பாகக் கலந்துகொண்டிருந்தது. ஆகையால் தரப்பினர்களிற்கிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த தீர்ப்பனவு உறுதியின் கீழ் ஸ்ரான்டர்ட் சார்டட் வங்கிக்கு (எஸ்சீபீ) யூஎஸ்டொலர் 60 மில்லியன் (ரூபா 7,612 மில்லியன்) தொகையினை 2013 யூன் 03 ஆந் திகதி செலுத்தியிருந்தது. கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி சட்ட மற்றும் ஏனைய கட்டணங்களள் உள்ளடங்கலாக 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 5,261,827 பிரயாணச் செலவினம் உள்ளடங்கலாக ரூபா 9,780 மில்லியன் ஆகும்.

கூட்டுத்தாபனத்தின் இடர் குறைத்தல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் ரூபா 571 மில்லியன் தொகை சட்ட செலவினமாக செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 568 மில்லியன் தொகை 2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்கனவே மீளளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக டச் வங்கியினால் தொடரப்பட்டிருந்த நடுவர்தீர்ப்பு விவாதங்களில் பங்குபற்றிய வெளிநாட்டு வழக்கறிஞர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டமைக்காக 2014 திசெம்பர் 31 வரை இலங்கை மத்திய வங்கியினால் ரூபா 379 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### முகாமைத்துவ திறமையின்மை

#### தொழில் முயற்சி வளத்திட்டமிடல் (ஈஆர்பீ) முறைமை

வரயறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறையால் (சீபிஎஸ்ரீஎல்) அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்முயற்சி வளதிட்டமிடல் முறைமையின் பங்குபற்றல் தொடர்பில் அவரவர்களுக்கு உரிய பொறுப்புக்கள் தொடர்பாக கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய குத இறங்குதுறை மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி என்பவற்றுக்கிடையில் உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு விஞ்ஞாபனமோ இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக எரிபொருள் இருப்பு மீளாய்வுசெய்தல் நடவடிக்கைகளிற்காக இந்த முறைமை போதியளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ஆகியவற்றிற்கு சகாய விலையில் எரிபொருளை வழங்குதல்

ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் மற்றும் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ஆகியவை ஒப்பந்த வழங்குனர்களாக காணப்பட்ட போதிலும் மேற்படி கம்பனிகளுக்கு அசாதாரண சகாய விலையில் விமாணச் சேவை எரிபொருள் வழங்கப்பட்டமையால் 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 670 மில்லியன், ரூபா 457 மில்லியன், ரூபா 2,010 மில்லியன் மற்றும் ரூபா 1,903 மில்லியன் நட்டம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. விபரங்கள் வருமாறு.

| கம்பனியின் பெயர் | ஆண்டின் போது ஏற்பட்ட நட்டத் தொகைகள் | | | |
|---|---|---|---|---|
| | **2014** ரூபா மில். | **2013** ரூபா மில். | **2012** ரூபா மில். | **2011** ரூபா மில். |
| ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் | 1,762 | 1,866 | 424 | 627 |
| மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் | 141 | 143 | 33 | 43 |
| **மொத்தம்** | **1,903** | **2,009** | **457** | **670** |

சகாய விலையில் இந்த இரண்டு கம்பனிகளுக்கும் எரிபொருள் வழங்கப்படுவதனை தவிர்த்து, அவற்றினது நலிவான நிதிச்செயலாற்றல்கள் காரணமாக நிலுவையான எரிபொருள் சிட்டைகளைத் தீர்த்தல் மிகவும் பலவீனமானதாக காணப்பட்டது. உதாரணமாக: 2014 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் படி, ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் ரூபா 29 பில்லியன் செயற்பாட்டு நட்டத்தை பதிவுசெய்திருந்ததுடன் மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் ரூபா 652 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை பதிவுசெய்திருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள மீதிகளின் அதிகரித்துச் செல்லும் போக்கு கீழே தரப்பட்டுள்ளது.

| கம்பனியின் பெயர் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி | | | | |
|---|---|---|---|---|---|
| | **2014**<br>ரூபா மில். | **2013**<br>ரூபா மில். | **2012**<br>ரூபா மில். | **2011**<br>ரூபா மில். | **2010**<br>ரூபா மில். |
| ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் | 20,900* | 29,520* | 25,890* | 12,351 | 541 |
| மிஹின் லங்கா (தனியார்) லிமிடட் | 1,339 | 4,314 | 3,416 | 1,227 | 361 |

ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸ் லிமிடட் இடமிருந்து பெறப்பட வேண்டிய யூஎஸ்டொலர் 121.17 மில்லியன் தொகை வியாபார பெறவேண்டியவைகளை தீர்க்கும் நோக்குடன் 2012 யூலை 05 ஆந் திகதி எல்ஐபீஓஆர் யூஎஸ்டொலர் நிபந்தனையில் 4 சதவீத வட்டி வீதத்தில் 4 ஆண்டுகளில் காலாண்டு ரீதியாக செலுத்த வேண்டிய கடனொன்றாக மாற்றப்பட்டிருந்ததுடன் அதில் 2012, 2013 மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட முறையே ரூபா 14,728 மில்லியன், ரூபா 10,020 மில்லியன் மற்றும் ரூபா 6,391 மில்லியன் நிலுவையான கடன் மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 37,060 மில்லியன் மொத்த வியாபார பெறவேண்டியவற்றில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை மேற்படி இரண்டு கம்பனிகளிடமிருந்தான வியாபார பெறவேண்டியவை பிரதிநிதித்துவம் செய்திருந்தது.

### வங்கித் துறையிலிருந்து பெறும் கடன்களின் அதிகரிப்பு

தனது எண்ணெய் சிட்டைகளுக்கு நிதியளிப்பதற்காக வங்கித் துறையிலிருந்து பெறும் கடன்களை கூட்டுத்தாபனம் அதிகரித்திருந்ததுடன் அதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் இலாபம் குறைவடைந்து கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களின் நிலைமையினை மேலும் தேய்வுக்குட்படுத்தியிருந்தது. மேலும் கீழே காட்டப்பட்டவாறு அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காண்பித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் பாரிய நிதிக் கிரயம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கு வங்கிக் கடன்கள்<br>ரூபா மில். | நிதிக் கிரயம்<br>ரூபா மில். |
|---|---|---|
| 2010 | 168,020 | 6,859 |
| 2011 | 310,060 | 9,001 |
| 2012 | 399,520 | 18,360 |
| 2013 | 406,850 | 18,540 |
| 2014 | 376,607 | 13,962 |

## எண்ணையினை எடுத்துச்செல்வதற்காக குழாய்வழி வலையமைப்பு

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், மற்றும் பர்னஸ் எண்ணெய் போன்ற முடிவடைந்த பெற்றோலியப் பொருட்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவைக்கு போக்குவரத்துச் செய்வதற்காக பல தசாப்தங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்ட பெற்றோலியக் குழாய்வழிகள் மோசமாக சேதமடைந்துள்ளதுடன் அவற்றில் சில குழாய் வழிகள் சேதமடைந்து திருத்த முடியாத அளவில் காணப்பட்டன. நாட்டின் மொத்தக் கேள்வியில் அதிகளவிலான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் கொலன்னாவை எண்ணெய் குதத்திற்கு இச்சேதமடைந்த குழாய்வழிகளுடாக போக்குவரத்துச் செய்யப்படுவதனால் இக் குழாய் வழிகளை நவீனமயப்படுத்தி புதுப்பித்தல் மிக அவசர தேவையாக உள்ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் இச்சேதமடைந்த குழாய்வழிகளுடாகவே இறக்குமதி செய்யப்படுவதனால் தடங்கல்களுக்கான ஆபத்து காரணமாக நாடு முழுவதிலும் பாரிய எரிபொருள் பிரச்சினை ஏற்படுவதற்குள்ள வாய்ப்பினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

முத்துராஜவெல இலிருந்து அண்ணளவாக 7.2 கிலோ மீற்றருக்கு அப்பாலும் கடற்கரையிலிருந்து 6 கிலோ மீற்றருக்கு அப்பாலும் நடுக்கடலில் அமைந்துள்ள “சிங்ல் பொயின்ட் போய் “மூரிங்” (SPBM) ஊடாக முத்துராஜவெல தாங்கிக்கு எரிபொருள் பாய்ச்சப்படுகின்றது. கடல் கொந்தளிப்பாக இருக்கும் சந்தர்ப்பத்தல் அல்லது எஸ்பீபிஎம் பராமரிப்பிற்கு உட்பட்டிருக்கும் வேலையில் மாற்று விநியோக மூலங்கள் காணப்படவில்லை. அதேவேளை பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை குதங்களுக்கிடையே மாற்றுவதற்காக முத்துராஜவெல குதத்திற்கும் கொலன்னாவ தாங்கிக்குமிடையே இணைப்புக்கள் காணப்படவில்லை. அவற்றிலுள்ள இவ்வாறான சிக்கலான தன்மைகள் காரணமாக அந்தக் குதங்களை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்ததது.

“நாட்டிற்கு குறுக்கான குழாய் வழிச் செயற்திட்டம்” இற்காக 2012 செப்தெம்பர் 13 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான செயற்திட்டம் இதுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## மீன்பிடி கூப்பன் முறைமை

எரிபொருளை மானிய விலையில் கொள்வனவு செய்வதற்கு மீனவர்களிற்கு வசதியளிக்கும் நொக்கில் மீன்பிடி கூப்பன் முறைமை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் பொது திறைசேரியினதும் ஒத்திசைவுடன் இது மீன்படி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் அமுல்படுத்தட்டிருந்தது. இருப்பினும், கூப்பன் முறைமையின் அமுல்படுத்தலில் காணப்பட்ட பலவீனமான கட்டுப்பாடு காரணமாக அந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைந்து கொள்ள முடியாது போயிருந்தது. அவ்வாறான சில நலிவுகள் கீழே தரப்படுகின்றன.

- மீனவர்கள், எரிபொருள் விநியோகத்தர்கள் மற்றும் கூப்பன் முறைமையின் அமுல்படுத்தலடன் சம்பந்தப்பட்ட ஏனைய ஆட்கள் ஆகியோரால் புரியப்பட்ட மோசடிகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் காரணமாக இந்த முறைமை 2013 செப்தெம்பர் இல் அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டிருந்தது.
- விநியோகத்தர்களால் கோரப்பட்டிருந்த ரூபா 24 மில்லியன் தொகை கோரிக்கைகளுடன் மோசடியான கூப்பன்கள் இணைக்கப்பட்டிருந்தமை, இரட்டைக் கோரல்கள் போன்ற அநேக காரணங்களால் கூட்டுத்தாபனத்தால் பிடித்து வைக்கப்பட்டிருந்தது.
- போலியான மற்றும் மோசடியான கூப்பன்களிற்கு கூட்டுத்தாபனம் ரூபா 3 மில்லியன் தொகையை விநியோகத்தர்களிற்கு மீளளித்திருந்தது.

- 2012 யூலை 20 முதல் 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான காலத்தில் கோரப்பட்டிருந்த தொகைக்கும் மேலதிகமாக ரூபா 1 மில்லியன் தொகை விநியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.
- 2013 திசெம்பர் 31 ஆந் திகதியன்று மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் ரூபா 176 மில்லியன் தொகையை கூட்டுத்தாபனத்திற்கு மிகையாக மீளளித்திருந்தது. இருப்பினும், இது மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்படாதிருந்ததுடன் இது மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## நிலக்கீழ் வணிகம்

எரிபொருள் எண்ணை 1500 இனை வழங்குதல், சுத்திகரிப்பு செயன்முறைமையினூடாக எண்ணையை உற்பத்தி செய்தல், நிலக்கீழ் தரகர் அனுமதிப்பத்திரமளித்தல் என்பவற்றிலிருந்து மீளாய்வாண்டில் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 1,277 மில்லியனாக காணப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத் தரகர்களிடமிருந்து பெறவேண்டியிருந்த தொகை ரூபா 1,665 மில்லியனாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படுகின்ற நட்டத்தினை தவிர்ப்பதற்காக இந்த உற்பத்திப் பொருளை மிகவும் சிக்கனமாக கையாள்வதற்கான எவ்வித பொருத்தமான திட்டமும் காணப்படவில்லை. 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாவனையாளர்களிற்கு 54,796 மெற்றிக் தொன் மற்றும் 44,138 மெற்றிக் தொன் விற்பனை செய்யப்பட்டமையால் ஏற்பட்டிருந்த நட்டம் முறையே ரூபா 1,277 மில்லியன் (ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூபா 23,296) மற்றும் ரூபா 3,219 மில்லியன் (ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூபா 72,936) ஆக காணப்பட்டன.

- நிலக்கீழ் எரிபொருள் வணிகத்தை முன்னேற்றுவதற்காக சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் துறை

நீர் ஊற்றுக்களையும் சுற்றாடல் சமச்சீர் நிலையையும் பாதுகாத்தவாறு தூய குடிநீர் உற்பத்தி மற்றும் விற்பனை என்பன சபையின் பிரதான நோக்காவதுடன் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் நூற்றுக்கு 44 சதவீதமானோர்க்கு குழாய் நீர் வழங்குவதற்காக 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூபா 283 மில்லியன் ஆகும். இதற்கமைய மொத்தச் சனத்தொகையில் நூற்றுக்கு 56 சதவீதமானோர் தொடர்ந்தும் கிணறுகள், குளங்கள், வாவிகள், ஆறுகள் என்பவற்றிலிருந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்தவாறிருப்பதுடன் 2020 ஆம் ஆண்டளவில் நாட்டின் 60 சதவீதமானோர்க்கு குழாய் நீரை வழங்கப்படவுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புப் பிரிவு தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டவற்றுள் சில கீழே காணப்படுகின்றன.

- குழாய் நீர் விநியோகத்திற்குத் தேவைப்படும் நீர் பெரும்பாலும் ஆறுகளிலிருந்தே பெறப்படுவதுடன் அசுத்த நீரை சுத்திகரிப்பதற்காக சபைக்கு அதிகளவு கிரயம் தேவைப்படுகின்றது. பாதுகாப்பான குடி நீரைப் பெற்றுத் தருவதற்கும் போதிய சுகாதார வசதிகளை வழங்குவதற்குமாக அரசிற்குப் பெருமளவு மூலதனம் செலவானதுடன் அத்தொகை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உதவிகள் வாயிலாக நிதியளிக்கப்படுகின்றன. இதன் பொருட்டு கடந்த 5 ஆண்டுகளில் அரசிற்கு ஏற்பட்ட செலவினம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **ரூபா. மில்லியன்** |
|---|---|
| | |
| 2010 | 26,442 |
| 2011 | 27,222 |
| 2012 | 31,279 |
| 2013 | 26,076 |
| 2014 | 27,249 |

இற்கமைய, உள்ளூர் நிதியம் மற்றும் வெளிநாட்டு உதவியின் கீழ் அமுலாக்கப்படும் செயற்திட்டங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் முக்கிய அவதானிப்புக்கள் வருமாறு.

(i) ஆரம்ப திட்டம் மற்றும் ஆய்வகளின் பிரகாரம், செயற்திட்ட முடிவுற எதிர்பார்க்கப்படும் காலம் முடிவு செய்யப்பட்டிருந்த போதும், மாதிரிச் செவ்வைகளுக்கான செயற்திட்டங்கள் சிலவற்றுள் 90 சதவீதத்திற்கு மேற்பட்டவை எதிர்பார்த்த காலத்துள் முடிவடையவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்த போதும் முடிவில் மேலதிக சேவைகள் மற்றும் விலை அதிகரிப்பு போன்றவற்றால் அரசிற்குப் பெருமளவு கிரயம் செலவாயிற்று.

(ii) வெளிநாட்டு செயற்திட்டங்கள் சம்பந்தமாக நிதி நிறுவங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைப் பிரகாரம் திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் நியமங்களுக்கு அமையவும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமெனக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 12 வெளிநாட்டுச்

செயற்திட்டங்களைப் பொறுத்தவரை அத்தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட கணக்கும் குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

(iii) வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் நீர் வழங்கல் சபைக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உப கடன் அற்றவாறு அமுலாகும் 17 செயற்திட்டங்களும் கணக்காய்வு மாதிரிச் செவ்வைகளுக்குள்ளாகின.

(iv) வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் மூலம் நிதி வழங்கலில் ஏற்படும் அசௌகரியங்களைப் போன்றே வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் மூலம் நிர்மாண வேலை நடவடிக்கைகள் நடத்தப்படும் போது செலவாகும் பெருமளவு கிரயம் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்து திறைசேரி பிணை முறியுடன் உள்ளூர் வங்கிகளின் ஊடாக உள்ளூர் ஒப்பந்தக்காரர்களின் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் யோசனைகளுக்கேற்ப 52 நீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கு ரூபா 62.7 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் அமுலாக்குவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும், கொடுப்பனவு செய்ய வேண்டிய வட்டி வீதம் உயர் மட்டத்தில் இருப்பதாலும் மூல மதிப்பீட்டுக் கிரயம் அசாதாரணமாக அதிகரிக்கப்பட்டிருப்பதும் காரணமாக எதிர்பார்த்த பொருளாதார, ஆக்கபூர்வ வினைத்திறனுடனான நிதிப் பயன்பாடு அதன் வாயிலாக ஏற்படாது போதல் அவதானிக்கப்பட்டது.

- வெளிநாட்டு உதவியின் கீழ் அமுலாகி தோல்வியை சந்தித்த செயற்திட்டங்கள் சம்பந்தமான அவதானிப்புக்கள் பின்வருமாறு

(i) அம்பத்தலே குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர்கொழும்பு சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ஸ்பானியா உதவியாக (ளுநுவுயு) 12.9 மில்லியன் யூரோ பெறப்பட்டிருந்தது. அதனைக் கணக்கிலிடுகையில் கடனாக அல்லது மாணியமாக கணக்கிலிட வேண்டும் என்பது தொடர்பாக திறைசேரியால் சபைக்குக் குறிப்பாக அறிவுறுத்தப்படவில்லை.

செயற்திட்டத்தின் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரை வழங்கும் குழாக் கிணற்றினது சுற்றோட்டம் குறைவடைந்தமை, நீரில் இரும்பு மற்றும் இரசாயன பொருட்களின் அளவு சிபார்சு செய்யப்பட்ட மட்டத்திற்கும் குறைவடைநதமை ஆகிய காரணங்களால் 2010 ஆம் ஆண்டு முதல் அவ் செயற்திட்டம் செயலற்றவாறிருந்ததுடன் நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூபா 363 மில்லியன் ஆகவுமிருந்தது.

இந்நீர் சுத்திகரிப்பு நிலைய வேலை முடிவுற்று 5 ஆண்டுகள் கடந்து விட்ட போதும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட 3000 நுகர்வோருக்குக் குடிநீர் வழங்குவதற்குச் சபை தவறிவிட்டது.

(ii) யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்குமான நீர் வழங்கல் செயற்திட்டம் தொடர்பாக நீரைப் பெறுவதற்கான பிரதான நீர்த்தேக்கம் இரணைமடு நீர்த்தேக்கமாயினும், மக்களின் எதிர்ப்பு காரணமாகவும் மூல ஆரம்ப சாத்தியக் கூறு ஆய்வுகள் திறம்பட நடைபெறாமையும்

காரணமாக இற்றவரை அது சாத்தியமற்றதாக உள்ளது. இதற்குத் தீர்வாகக் கடல் நீரை சுத்தப்படுத்தி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்ட போதும், பிரதேச மீனவர்களின் எதிர்ப்பு காரணமாக அதுவும் அமுலாக முடியாது போனமையால் செயற்திட்டக் காலப் பகுதி முடிவுறுதல் நீடிப்பதற்கும் மொத்தக் கிரயம் அதிகரிப்பதற்கும் காரணமாயிற்று.

(iii) மொறட்டுவை, இரத்மலானை, ஜாஎல, ஏகல அசுத்த நீர் செயற்திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரர் வங்குறோத்து நிலையை எய்தியதால் ஒப்பந்தம் இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது. அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6 மற்றும் 5.4.7 பந்திகளின் பிரகாரம் வெளிநாட்டு வங்கி ஒன்றிலிருந்து தேக்கம் மற்றும் செயலாற்றல் பிணை முறி பெறப்படுகையில் உள்ளுர் வங்கி ஒன்றிலிருந்து உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக செயற்பட்டமையால் சபைக்கு ஏற்பட்ட நிதியிழப்பை ஈடுசெய்ய அறவிடப்பட வேண்டியிருந்த 9,065,048 பெறுமதியான அமெரிக்க டொலர்களுக்குரிய செயலாற்றல் பிணை முறி மற்றம் நிர்மாண வேலை ஒப்பந்தம் சம்பந்தமான தடுத்து வைத்த தொகையாகிய 7,959,086 அமெரிக்க டொலர்கள் என்பவற்றிக்கான பிணை முறிகளை விடுவிக்க சபையால் இயலாது போயிற்று. மேலும் இது தொடர்பாகச் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறைசேரியின் ஆலோசனைப் பிரகாரம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

- கிராமிய மக்களுக்கு நீர் வழங்குவதற்காக அமுலாக்கப்பட்ட கிராமிய நீர்த்திட்டம் 2,255 ஆகும். இவற்றுள் 308 திட்டங்கள் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கைவிடப்பட்டோ அல்லது செயற்படாதோ இருந்தன நீர் ஊற்றுக்கள் இல்லாதொழிந்தமை, நீரின் தன்மை நியமங்களுக்கு ஏற்ப இல்லாமை, சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களால் முறைப்படி பராமரிக்கப்படாமை மற்றும் அவற்றினது வினைத்திறமையின்மை, சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களது நிதிக் கட்டுப்பாடு ஒழுங்கற்றிருத்தல், குழாய் முறைக்குப் பாதிப்பு ஏற்பட்டமை, சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்கு சபையினால் தேவையான தொழில்நுட்ப உதவிகள் கிடைக்கப்பெறாமை போன்ற நலிவுகளால் இது ஏற்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

- பல்வேறு நீர்ச் செயற்திட்டங்களுக்கெனக் காணிகளைக் சுவீகரிக்கும் போது பெருமளவு கால விபரம் ஏற்படுவதுடன் 6 காணிகளைச் சவீகரிப்பதற்கு 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 13 மில்லியன் பல்வெறு பிரதேச செயலகங்களில் முற்பணமாக கைவிடப்பட்டிருந்த போதும் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அச் சுவீகரிப்பு நடைபெறாதிருந்தது.

- மஹகால்ல நீர் வழங்கல் திட்டத்திற்கு 1.123 ஹெட்டயர் காணி ரூபா 17 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்ட போதும், அக்காணியானது 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் எதுவித பயனுமற்றிருந்தது.

- காக்காப்பள்ளி நீர் வழங்கல் திட்டத்தின் பொருட்டு 0.3895 ஹெக்டெயர் காணி 1994 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்டிருந்த போதும், அக்காணியானது அக்காணியும் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்படாதிருந்தது. கம்பஹா மற்றும் குருறாகலை பிரதேச உதவிச் சேவை நிலையத்தில் ரூபா 24 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் கணக்கிலிடப்பட்டிருந்தன. குருநாகலை பிரதேச களஞ்சியத்தில் ரூபா 11 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டுச் செயற்திட்டங்களிலிருந்து பெறப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்படாது கையிருப்பாகப் பேணப்பட்டவாறிருந்தது.

- நீர்க்கழிவு, சட்டபூர்வமற்ற நீர் இணைப்புக்கள், கட்டணமின்றி வழங்கப்படும் நீர் மற்றும் நிர்வாகச் சிக்கல் போன்ற காரணங்களால் சபையின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 29 சதவீதம் மற்றும் கொழும்பு நகரிலே விநியோகிக்கப்படும். நீரில் 47 சதவீத அளவிற்கும் வருமானம் பெறப்படாததுடன் அதனைக் குறைப்பதற்காக வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் மூன்றின் கீழ் ரூபா 1,440 மில்லியன் செலவு வழங்கப்பட்டிருந்த போதும், வருமானம் கிடைக்கப் பெறாத நீர் விதத்தில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டிராமை பின்வரும் தகவல்கள் மூலம் அவதானிக்கப்பட்டது.

| **ஆண்டு** | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| **வருமானம் கிடைக்கப் பெறாத ஒட்டு மொத்த சதவீதம்** | 32 | 31 | 32 | 30 | 30 | 30 | 29 |

அவ்வாறே, கொழும்பு நகரிலே வருமானம் கிடைக்கப் பெறாத நீரின் அளவை 48 சதவீதத்திலிருந்து 41 சதவீதத்திற்கும் 7 சதவீதத்தால் குறைப்பதற்கு மீளாய்வாண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட போதும் 47 சதவீதம் மாத்திரமே உள்ளவாறு எய்தப்பெற்றிருந்தது.

- மேலும், கொழும்பு நகரில் பொருத்தப்பட்டுள்ள ஏறக்குறைய 80 ஆண்டுகள் பழமையான நீர் விநியோகக் குழாய் முறைமையைச் சீர்திருத்தவோ அல்லது மீள ஸ்தாபிப்பதற்கோவோனா காலத்தின் தேவை நிலவுகின்ற போதும் அது அமுலாகாது மந்தகெதியில் இருந்தது.

- மக்களது சகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடிநீரை பாதுகாப்பதற்கும் நகரமயமாக்குவதுடன் ஒரு செர மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குதலும் கழிவறை வசதிகளை வழங்குவதும் சபையின் பொறுப்பாகும். வெளிநாட்டு உதவிகளைப் பெறும் 7 கழிவறைச் செயற்திட்டங்கள் ரூபா 22 பில்லியன் செலவில் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், ஒப்பந்தங்களை வழங்குதலும் வேலைத் தாமதம் காரணமாகவும் சபையினால் கழிவறை முறைமையினால் சேவை வழங்குவதில் போதியளவு முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை.
- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சபையின் செயற்பாட்டு இலாபம் ரூபா 1,426 மில்லியன் 2014 ஆம் ஆண்டில் 5 சதவீத அதிகரிப்பிற்கு உள்ளாகியதுடன் நிகர இலாபம் 42 சதவீதத்தால் அதிகரித்துமிருந்தது. சபையின் வருமாணம் 10 சதவீதத்தாலும் ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் 21 சதவீதத்தாலும் அதிகரித்தமை இதற்கான காரணமாகும். சபையின் செயற்பாட்டு செலவினத்தில் 4.8 சதவீதம் ஊழியர் சம்பளங்களுக்குச் செலவிடப்பட்டதால் நீர் வழங்கலில் நேரடியாக ஈடுபட்ட குழுவினரது ஊழியர் செலவினம் 9 சதவீத அதிகரிப்பு தென்பட்டது. மீளாய்வாண்டின் போது புதிய ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டதால் 5 சதவீத அதிகரிப்புடன் ஊழியர் சம்பளம் மற்றும் வேதனம் அதிகரிக்கப்பட்டமையும் ஊழியர் கிரய அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது.

# அரசாங்க சேவைக்கான ஓய்வூதிய நலன்

அரச சேவைக்காக அர்ப்பணித்த உத்தியோகத்தர்களின் சேவையின் இறுதி நலனை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களின் ஓய்வு பெற்ற பின்னரான வாழ்க்கை நிலையினைக் கட்டியெழுப்புதல் மற்றும் நடாத்திச் செல்வதற்குத் தேவையான முக்கியமான பங்களிப்பினை தடையின்றி வழங்குதல் ஓய்வூதியத் திணைக்கத்தின் பிரதான பணியாகும்.

இந்த பிரதான பணியினை நிறைவேற்றின் கொள்வதற்காகவும், திணைக்களத்தின் நோக்கம் மற்றும் செயற்பொறுப்புக்களை மிகவும் தரமானதாகவும், செயற்திறனானதாகவும் உச்சநிலைக்குக் கொண்டு செல்வதற்காகவும் கணனிமயப்படுத்தப்பட்ட ஓய்வூதியம் செலுத்தும் முறைமையொன்று திணைக்களத்தில் தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இந்த கணனி முறைமையொன்றின் மூலம் மிகவும் உயர்ந்த செயற்திறனான சேவைகள் ஓய்வூதியக்காரர்களுக்கு கிடைத்திருந்த போதிலும், உரிய கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளகக் கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமையொன்றின் நலிவின் காரணமாக, ஓய்வூதியம் மற்றும் நலன்களைச் செலுத்தும் போது சரியான மற்றும் குறைபாடுகள் நிகழுதல் மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருக்கின்றமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் ஓய்வூதிய நலன்களைப் பெறுகின்ற ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 546,379 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அரசாங்கத்தின் ஓய்வூதியச் செலவினம் ரூபா 145,293 மில்லியனாக இருந்தது. அது அரசாங்கத்தின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாகக் கருத்திற்கொள்ளும் போது 11 சதவீதமாக இருந்ததுடன் அரசாங்க மொத்த வருமானத்தில் 12 சதவீதத்திற்கு அண்ணளவான அளவொன்று ஓய்வூதியம் செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் வருடாந்தம் செலவிடப்படுகின்றது.

ஓய்வூதிம் செலுத்தும் நடைமுறைகள் தொடர்பாகக் காணப்பட்ட மற்றும் காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள், ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்துதல் மற்றும் மோசடிகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- ஓய்வூதியக் கணனி முறைமைக்கு பிழையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக இரட்டைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் ஏனைய மோசடிகளின் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 30.6 மில்லியன் நிதி மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. ஊடகப்படுத்தப்பட்ட கணனி முறைமையொன்று காணப்படாமை மற்றும் கணனியில் தகவல்களை உள்ளடக்கும் போது மாற்றங்களைச் செய்தல் மற்றும் தயாரித்தல் ஓய்வூதியம் செலுத்துகின்ற பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளும் இயலுமை காணப்பட்டமை காரணமாக இந்த தவறுகளும் மோசடிகளும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

- பிழையான ஓய்வூதியத் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வங்கி முறைமையின் ஊடாக ஓய்வூதியம் செலுத்தும் முறைமையொன்றை தாபித்து முறைமையின் தகவல்கள் தொடர்பான நலிவான கட்டுப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட பின்வரும் முறையற்ற நிலைமைகளும் ஓய்வூதிய மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது.

(i) ஓய்வூதிய இலக்கத்தை வழங்கி ஊடகப்படுத்துதல் மற்றும் பன்முகப்படுத்துதல் என இரண்டு முறையில் ஏதாவது காலப்பகுதியில் செய்யப்படுவதன் காரணமாக ஓய்வூதிய இலக்கத்தை வழங்கும் தனியுரிமைத் திட்டம் காணப்படாமையின் காரணமாக ஒரே ஓய்வூதிய இலக்கம் பல ஓய்வூதியக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை.

(ii) ஓய்வூதியத் தரவு முறைமைக்காக உள்ளடக்கப்பட்ட தகவல்களில் ஏதாவது தகவலொன்று நிலையான கட்டுப்பாட்டுக் கருவியாக (Unique Key) ஈடுபடுத்தப்படாமை.

(iii) ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பாக நிதிப்பிரமாணம் 145(2)(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகங்களிலும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு முறையான பிரகாரம் பணிப்பொறுப்புக் கையளித்தல் மேற்கொள்ளப்படாமை.

(iv) விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத்திற்காக வழங்கல் பத்திரங்களைக் கையளித்தல் ஓய்வூதியத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டமை.

(v) ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தின் போது விதவைகள், அனாதைகள் கோவையை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக விதவைகள், அனாதைகள் கொடுப்பனவுகளில் பாரியளவான தாமதமொன்று காணப்பட்டமை மற்றும் அதன் பிரகாரம் நிலுவை விதவைகள் அனாதைகள் செலுத்தவேண்டிய அளவு அதிகரித்துச் செல்கின்றமை.

(vi) ஓய்வூதிய உத்தியோகத்தர்களும் அது தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான இடமாற்றக் கொள்கை கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமையின் காரணமாக மிகவும் நீண்ட காலமாக ஒரே பிரிவில் ஒரே செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் இருக்கின்றமை.

(vii) பிரதேச செயலகங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வூதிய உத்தியோகத்தர்களுக்கு பணிகளைக் கையளிக்கும் போது உரிய செயற்பணிகள் கையளித்தல் மேற்பார்வை உத்தியோகத்தரொருவரின் பரிசோதனைக்கு உட்படுகின்ற வகையில் உள்ளகப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் வகையில் கையளிக்கப்படாமை மற்றும் வரையறையற்ற அதிகாரக் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமை.

(viii) இனங்காணப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதிய மோசடிகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அந்தத் தவறுகள் மற்றும் மோசடிகளுக்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்காமை.

(ix) பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் போன்ற கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற நிறுவன மட்டத்தில் ஒன்றிணைந்த கட்டுப்பாட்டுக் கணக்கொன்றை தயாரிக்காமல் ஓய்வூதியம் செலுத்தியமை.

(x) வங்கி முறைமையின் ஊடாக ஓய்வூதியக் கொடுப்பனவை தாபிக்கும் போது சரியான ஓய்வூதியக்காரர்களின் வங்கிக் கணக்கிற்கு பணம் செலவு வைக்கப்படுகின்றமை

தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வங்கி முறைமையுடன் உரிய கட்டுப்பாட்டு முறைமைக்கு உடன்படும் முறைமையொன்று தாபிக்கப்படாமை.

- உயிர்வாழ்வுச் சான்றிதழ் சமர்ப்பிக்காத ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துதல், மரணச் சான்றிதழ் சமர்பித்த ஓய்வூதியங்களின் ஓய்வூதியத்தை நிறுத்தாதிருந்தமை மற்றும் உரிய சான்றிதழ்கள் உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கு கிராம உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமை. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது மாத்திரம் மரணமடைந்த ஓய்வூதியக்காரர்களின் மரணச்சான்றிதழ் சமர்ப்பித்ததன் பின்னரும், ஓய்வூதியத்தைத் தடைசெய்யாமல் ஓய்வூதிகாரர்களின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட பணம் ரூபா 2.49 மில்லியன் ஆக இருந்ததுடன் அத்தொகை ஓய்வூதிய உரித்துடையோரில் தங்கிவாழ்வோர்களினால் பெறப்பட்டிருந்தது.

- செயற்பாட்டிலுள்ள ஓய்வூதியக் காரர்களின் எண்ணிக்கைக்கும் ஓய்வூதியக் கோவைகளின் எண்ணிக்கைக்குமிடையே இணக்கமின்மை காணப்படுகின்றமை, ஓய்வூதியக் கோவையில் காணப்படவேண்டிய அத்தியாவசிய ஆவணங்கள் உரிய ஓய்வூதியக் கோவையில் காணப்படாமை மற்றும் ஓய்வூதியம் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளும் போது சமமான முறையில் கொடுப்பனவுகள் காணப்படுகின்ற கோவைகளின் கணிப்பீடுகளில் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றமை.

- 2009 யூலை முதல் திசெம்பர் வரையும், 2010 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையும் ஓய்வூதியம் செலுத்தும் தரவுகள், கணனிமயப்படுத்தப்பட்ட தரவு முறைமையுடன் முழுமையாக விலகியிருந்தது.

- ஓய்வூதிய தரவு முறைமைக்கு ஓய்வூதியக்கார் ஒருவர் தொடர்பாக உள்ளடக்க வேண்டிய சகலதும் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் ஓய்வூதியத்தை கோருவதற்கு அல்லது செலுத்துவதற்கு அது இடையூறாக இல்லாதிருந்ததுடன், 2014 யூலை மாதத்தில் ஓய்வூதிய தரவு முறைமையின் பிரகாரம் வங்கிக் கணக்கு இலக்கம் இன்றிய 100,915 ஓய்வூதியக்காரர்களும், தேசிய அடையாள அட்டையின் இலக்க குறிப்பிடப்படாத 148,248 ஓய்வூதியக்காரர்களும் வங்கிக் குறியீடு (எந்த வங்கிக்கு ஓய்வூதியம் செலவு வைக்கப்படுகின்றது என்பதை அறிந்து கொள்வதற்காக) குறிப்பிடப்படாத 134,974 ஓய்வூதியக்காரர்களும் ஆக தரவு நிரல் பூர்த்திசெய்யாதிருக்கும் போது ஓய்வூதியம் செலுத்தப்பட்ட நபர்கள் பாரிய எண்ணிக்கையில் தரவு முறைமையின் தகவல்களின் பிரகாரம் இனங்காணக்கூடியதாக இருந்தது.

- திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் யுத்தத்தின் போது மரணித்த மற்றும் ஊனமுற்ற படையினருக்காக 55 வயது பூர்த்தியாகும் வரை சம்பளம் செலுத்துவதற்காக பாதுகாப்புப் பிரிவிற்கும் பொலிசிற்கும் பணத்தை விடுவிக்கும் போது செலவின அறிக்கை ஒழுங்கு முறையில் பெறப்பட்டிருக்கவில்லை. இப்பணத்தைச் செலுத்துதல் தொடர்பாக திணைக்களத்தின் தொடர்பும் மேற்பார்வையும் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக சம்பளத்துடன் ஓய்வூதியம் அல்லது விதவைகள் ஓய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவுப்படியும் பிழையாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக விமானப் படையின் தரவுகள் மற்றும் கடற்படையின் தரவுகளுடன் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 2008 ஆம் ஆண்டு முதல் ஊனமுற்ற மற்றும் மரணமடைந்த 301 விமானப் படையினருக்காக ரூபா 17.12 மில்லியன்

தொகையும், 36 கடற்படையினருக்காக ரூபா 4.39 மில்லியன் தொகையும் ஆக ரூபா 21.51 மில்லியன் தொகை பிழையாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

இதன் போது, ஓய்வூதிய தரவு முறைமை 2008 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டமையால் அதற்கு முன்னரான நிலைமையை பரீட்சிக்க முடியாதிருந்தமையும், தகவல்கள் உரிய பிரகாரம் இன்மையினால் ஓய்வூதிய தரவு முறைமையுடன் சீராக்க முடியாத கடற்படை மற்றும் விமானப் படை வீரர்களின் எண்ணிக்கை 1,679 ஆக இருந்தமையும், வயது 55 வருடங்களைப் பூர்த்திசெய்த சம்பளம் நிறுத்தப்பட்ட படையினரின் தரவுகளை மேலும் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருந்தமையும்,

பொலிஸ் மற்றும் இராணுவம் தொடர்பாகவும் இந்த சகல விடயங்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது இராணுவப் பிரிவு மற்றும் பொலிஸ் உத்தியோத்தர்களுக்கு மேற்கூறப்பட்ட விடயங்களின் படி ஓய்வூதித் திணைக்களம் இவை எல்லாவற்றையும் தொடர்புபடுத்தாமையின் காரணமாக, பிழையாக வாழ்க்கைச் செலவுப்படி மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை பிழையாக வாழ்க்கைச் செலவுப் படி மேலதிகமாகச் செலுத்தப்பட்டமையால் அரசாங்கத்திற்கு பாரியளவான நட்டம் ஏற்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அதவதானிக்கப்பட்டன.

- உழைக்கும் ஆற்றல் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட ஊனமுற்ற பாதுகாப்புடை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளுடன் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் கடற்படையினரில் 187 பேரினது உழைக்கும் ஆற்றல் சதவீதம் 50 இற்குக் குறைவான நிலையின் போது சம்பளம் மற்றும் படிகளுடன் ஓய்வூபெற்ற ஓய்வூதியமும் செலுத்தப்பட்டிருந்தது.

- 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தலாக ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 188.96 மில்லியன் தொகை காணப்பட்ட போதிலும் இந்த மேலதிக செலுத்தல்களுக்காக பரிசோதனை மேற்கொண்டு பொறுப்புவாய்ந்தவர்களைத் தீர்மானித்துக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- ஈ - ஓய்வூதிய செயற்திட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டம் 2011 செப்தெம்பர் 20 ஆந் திகதி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியத் திணைக்களத்தால் பயிற்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் ஏனைய செலவினங்கள் தவிர ரூபா 182 மில்லியன் செலவினமொன்றைச் செய்ததன் பின்னர் முறைமையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வழு எனக் காண்பித்து 2013 நவம்பர் 01 ஆந் திகதி முதல் இந்த செயற்திட்டம் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது.

- நிலுவை ஓய்வூதிய கொடுப்பனவு பிரதேச செயலகம் மூலம் மேற்கொள்ளுதல் 2014 யூன் மாதம் முதல் நிறுத்தப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக ஆய்வு செய்து திணைக்களத்தின் கட்டமைப்பு அதன் பிரகாரம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது 58 ஓய்வூதியக்காரர்களுக்காக ரூபா 14,784,286 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2014 நவம்பர் 18 ஆந் திகதிய 14/2014 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின்படி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்ற சிவில் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்களின்

கொடுப்பனவுத் தகவல்கள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஊடகமயப்படுத்தப்பட்ட தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டு 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெற்றுச் செல்லும் ஓய்வூதியக்காரர்களின் மாதாந்த ஓய்வூதியம் 2014 நவம்பர் மாதம் முதல் கொடுப்பனவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது 07 ஓய்வூதியக் காரர்களுக்காக ஓய்வூதியம் செலுத்தும் போது இரட்டைக் கொடுப்பனவாக ரூபா 339,631 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- ஓய்வூதிய தரவு முறைமை தொடர்பான நடவடிக்கைகள் வெளி மதிப்பரையாளர்களின் சேவை 2012 ஆம் ஆண்டு முதல் பெறப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அவர்களிடமிருந்து அக்கடமை பெறப்படும் போது குறிப்பிட்ட காலம் குறிப்பிடப்பட்டிராததுடன் இவ்வாறான மதியுரையாளரால் தயாரிக்கப்பட்ட கணனி மென்பொருளின்படி இந்த சகல ஓய்வூதியக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது அந்தச் செயற்பாடுகளுக்காக அந்த உத்தியோகத்தர் தொடர்புபட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

- ஓய்வூதிய கொடுப்பனவு தரவுகள் மற்றும் ஆரம்ப ஓய்வூதியம் செலுத்தும் தரவுகள் ஓய்வூதிய தரவு முறைமையில் உள்ளடக்கும் போது உள்ளடக்கப்பட்ட நபரை இனங்காணக்கூடிய வகையில் அந்த நபருக்கு மற்றும் உரித்தான இரகசியக் குறியீடு பயன்படுத்தப்படாதிருந்ததுடன் முறைமைக்கு தரவுகளை உள்ளடக்கும் பயிற்சியான கணனி உதவியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டமையின் காரணமாக பிழையான தரவுகள் கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்துவதன் நலிவுகள்

ஓய்வுபெற்ற சில அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய அறவீடுகள் காணப்படும் போது அத்தொகையை அறவிடாமல் மொத்த ஓய்வூதியப் பணிக்கொடையும் ஓய்வூதியக்காரரின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்தமையினால் உரிய ஓய்வூதியக்காரரிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடவேண்டியிருந்த பாரிய தொகையினை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. உதாரணமாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் உள்ளாக்கப்பட்ட தென் மாகாண சபையின் 09 வலயக் கல்வி அலுவலகங்களில் 141 ஓய்வூதியக்காரர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய ரூபா 7.68 மில்லியன் தொகையான பணமும் 03 மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களில் 24 ஓய்வூதியக்காரர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 537,323 தொகையும் ஆக ரூபா 8.22 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் அறவிடப்படாமல் ஓய்வூதியக்காரர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

ஓய்வூதிய உறுப்புரைக் கோவையின் 2 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் படி ஓய்வூதியப் பணிக்கொடை பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்து ஓய்வூதிப் பணிக்கொடை பெற்ற பின்னர் உரிய ஓய்வூதிக்காரர் ஓய்வு பெற்றுச் சென்ற திகதி முதல் 10 வருடங்கள் வரை கழிக்கப்பட்ட ஓய்வூதியம் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய போதிலும் ஓய்வூதிப் பணிக்கொடை பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவித்து ஓய்வூதியப் பணிக்கொடை பெற்றிருந்தும் உயர்நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிபதிகளுக்கு கழிக்கப்படாத ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

# மாகாண சபைகள்

# மேல் மாகாண சபை

மேல் மாகாண சபையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 45,803 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 14,526 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் ரூபா 31,277 மில்லியன் தொகை உள்ளக வழியால் சேகரிக்கப்படுவதற்கும் இதில் ரூபா 39,024 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 6,779 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 13,306 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 31,092 தொகை உள்ளக வழியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 38,582 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 5,863 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

மேல் மாகாண சபை நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரித்தான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ஒப்பந்தக்காரர்களுக்கு பெறுமதி சேர் வரி (VAT) செலுத்தப்படுகையில் ஒப்பந்த பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதி சேர் வரி (VAT) பதிவு இலக்கம் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பெயர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிராமையால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் செயற்பாடற்ற பெறுமதி சேர் வரி உரித்தாளர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்ட 25 ஒப்பந்தக்காரர்களுக்காக 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 3.89 மில்லியன் தொகையும் ரூபா 6.65 மில்லியன் தொகையும் பெறுமதி சேர் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 158.03 மில்லியன் செலவிட்டு 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கொங்கிரீட் இடப்படும் இயந்திரங்கள் இரண்டைக் கொள்வனவு செய்து மூன்று ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் ஒரு சந்தர்ப்பத்தின் போது ஆய்வு நிலையில் பயன்படுத்துவது தவிர எவ்வித வீதி நிர்மாணிப்பிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. கொங்கிரீட் இடப்படும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்கையில் அவ் இயந்திரம் இலங்கை வீதி நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதற்குள்ள இயலுமை தொடர்பான சரியான நிர்ணயங்கள் தொடர்பில் சாத்தியவளக் கற்கை மேற்கொள்ளப்பட்டிராமையால் அவ் இயந்திரம் பயனற்ற நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2012 பாதீட்டு தீர்மானத்தின் பிரகாரம் 2011 திசெம்பர் 12 ஆம் திகதிய 28/2011 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலம் இலங்கை பொறியியலாளர் சேவைக்குரித்தான உத்தியோகத்தர்களுக்காக 2012 சனவரி முதல் மாதாந்தம் ரூபா 15,000 படி செலுத்தப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட தொழிற்துறை கொடுப்பனவை மேல் மாகாண சபைக்கும் உரித்தாக்கிக்கொண்டுள்ளனர். மாகாண வீதி அபிவிருத்தி

அதிகாரசபையில் இலங்கை பொறியியலாளர் சேவைக்கு உரித்தற்ற 23 பொறியியலாளர்களுக்காக 2012 சனவரி முதல் 2014 திசெம்பர் வரை தொழிற்துறைக் கொடுப்பனவாக ரூபா 11.34 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரித்தான கம்பஹா மாவட்டத்தின் 04 நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகளின் மூலம் ரூபா 05 பில்லியன் பெறுமதியான 158 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள், பொதி முறையின் கீழ் 26 செயற்திட்டங்களாக 03 தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. இவ் வகையில் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு பொதி தொடர்பிலான பரீட்சிப்பின் போது உடன்படிக்கையின் படி, வழங்கப்பட்டுள்ள காலப்பகுதியில் எவ்வித செயற்திட்டமும் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் உடன்படிக்கையின் படி, அவ் ஒப்பந்தத்தின் மூலம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்களான ரூபா 365.95 மில்லியன் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்திற்காக ரூபா 768.71 மில்லியன் தொகையான வேலை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 342.39 மில்லியன் தொகையான முற்பணத்திற்காக முற்பண பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 6.20 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட கியுபர் (Cuber) இயந்திரம் 2014 நவம்பர் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய விதத்திற்கு திருத்தப்படாது திவுலபிட்டிய கொங்கிரீட் பிரிவின் களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

- மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தரும் மக்களுக்கு தரகர்களால் போலித் தகவல்கள் வழங்கப்பட்டு அவர்களிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு போலியான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் வியாபாரம் மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டமை, வழங்கப்பட்டுள்ள போலியான வருமான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையிலிருந்து கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பல வருட காலமாக இத்தகைய போலி அனுமதிப்பபத்திரம் வழங்கப்பட்டிருக்கையிலும் காரியாலயத்தின் சூழலில் வஞ்சனையான நபர்கள் நடமாடுவதாக பொது மக்களை தெளிவூட்டுவதற்கு முறையான நடைமுறை அமுல்படுத்தப்படுவதற்கும் இனங்காணப்பட்டுள்ள அத்தகைய போலி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் சட்டத்தை அமுலாக்குவதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவகப் பதிவு அதிகாரச்சட்டத்தின் 3(5) ஆம் பிரிவின் படி, ஒவ்வொரு மாகாணத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வருமானச் சேகரிப்பு அதிகாரத்திற்கு இணங்காத வகையில் மாகாண சபைக்குக் கிடைக்கவேண்டிய வருமானம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்பு சபைக்கு உரித்தாகும் சில ஏற்பாடுகள் 2007 மார்ச் 22 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

- கிரிபத்கொட ஆதார வைத்தியசாலை திடீர் விபத்துக்கள் பிரிவின் கட்டிடமொன்றின் நிர்மாண நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதன் நிர்மாணிப் பணிகளுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்குமாக செயற்திட்டம் 08 கட்டங்களின் கீழ் ரூபா 37.26 மில்லியன் தொகையைச் செலவிட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் யூலை மாதம் வரையிலும் இந் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிராத காரணத்தால் செலவிடப்பட்ட தொகையிலிருந்து பொது மக்களுக்கு நலன்பெறுதல் மேலும் தாமதமாகியிருந்தது.

- மாகாண அமைச்சர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட தனியார் பதவியணிக்கு ஆலோசகர் பதவி உள்ளடக்கப்பட்டிராத போதிலும் மாகாண அமைச்சரவையின் தீர்மானமும் ஆளுனரின் அங்கீகாரத்தில் 2008 சனவரி முதல் 2014 சனவரி வரை அவ்வப்போது பிரதம அமைச்சர் உள்ளடங்கலாக சகல அமைச்சர்களுக்குமாக ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர், இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களுக்கு ரூபா 30,000 படி மாதாந்தக் கொடுப்பனவும் வாகன, எரிபொருள், தொலைபேசிக் கொடுப்பனவு போன்ற ஏனைய சலுகைகளும் வழங்கப்பட்டிருந்தன.

- 2007 இன் 01 ஆம் இலக்க மேல் மாகாண சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, மாகாணத்தின் நகர மற்றும் கிராமிய பிரதேசங்களிலிருந்து சுற்றாடலுக்குச் சேரும் கழிவுப் பொருட்களை உச்ச அளவில் தடுத்து மாகாணத்தில் பொது மக்களைப் போன்று மிருகங்கள் மற்றும் விருட்சங்கள் ஆகியவற்றின் நலன்கருதி சுற்றாடலைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வது நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. உள்ளூராட்சி நிறுவகங்கள் மற்றும் ஏனைய வெளி நிறுவகங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் ஏறத்தாழ நாளொன்றிற்கு 500 தொன் அளவில் முறையற்ற விதத்தில் கரதியான் காணிக்கு வெளியகற்றப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் அதிகாரசபை உழைத்திருந்த வருமானம் மொத்த வருமானத்தில் 90% மாத்திரமேயாகக் காணப்பட்டது. கரதியான் காணிக்கு முறையற்ற விதத்தில் கழிவை அகற்றுவதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பில் அதிகாரசபை பொதுமக்களிடமிருந்தும் வேறு நிறுவகங்களிடமிருந்தும் எதிர்ப்பு வெளிப்பட்ட போதிலும் இது தொடர்பாக அதிகாரசபை முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

- 2006 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மேல் மாகாண சமூக சேவைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், மேல் மாகாணத்தில் செயற்படும் வயது முதிர்ந்தோர், அங்கவீனர்களுக்கான இல்லங்கள் மற்றும் அவர்களுக்காக சேவை வழங்கும் நிறுவகம் அனைத்தும் சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். 2014 திசெம்பர் மாதமளவில் 73 வயோதிப இல்லங்கள் மற்றும் 39 அங்கவீனர்களின் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் பதிவு செய்யப்பட்டிராத முதியோர் மற்றும் அங்கவீனர்களுக்கான இல்லங்கள் பாரியளவில் மேல் மாகாணத்தில் செயற்பட்டிருந்த போதிலும் அந் நிறுவகங்கள் பதிவுசெய்யப்படுவது தொடர்பில் முறையான நடைமுறை சமூக சேவைகள் திணைக்களத்தால் செயற்பட்டிருக்கவில்லை.

- மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்தின் உயர் முகாமைத்துவ பதவிகள் உள்ளடங்கலாக பல்வேறு பதவிகளில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கையானோர் ஆளுனரின்/ மாகாண அமைச்சரவையின் அங்கீகாரத்தில் ஒப்பந்த அடிப்படையில் மீள கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த தரங்களில வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு பதில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

- மாகாண சபையின் சில திணைக்களங்கள்/ பிராந்தியக் காரியாலயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் கணக்காளர் பதவியொன்று இல்லாத போதிலும் அத் திணைக்களங்கள்/ பிராந்தியக் காரியாலயங்களுக்காக ஆளனரின் அங்கீகாரத்தில் பதில் கடமை/ கடமை மேவுகை அடிப்படையில் வேறு அலுவலகங்களிலிருந்து கணக்காளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- மாகாண சபை ஆரம்பத்திலிருந்து வருடாந்த காசுப்பாய்ச்சலின் மூலம் பிரதம அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், மாகாண நிர்வாக மற்றும் பொருளாதார அபிவிருத்தி எனும் விடயங்கள் ஆளுனரின் அங்கீகாரம் 2009 மே மாதத்தின் போது பிரதம செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் படி, பிரதம அமைச்சு செயலாளரின் விடயத்திற்குட்பட்டிருந்த அமைச்சரவைக் கூட்டங்கள் நடாத்தப்படல் மற்றும் அமைச்சரவைக் குறிப்புகளை வழங்குதல் பிரதம செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிரதம செயலாளர், மாகாண திறைசேரியின் செயலாளராக மாகாண கணக்கீட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதனால் அமைச்சரவைக் கூட்டங்களை நெறிப்படுத்தி அமைச்சரவைக் குறிப்புகளுக்கு கையொப்பமிடப்படுவது ஏற்ற நடவடிக்கையல்லாததுடன் இதனை ஆளுனரது செயலாளரும் ஏற்றுக்கொண்டிருந்த போதிலும் அந் நிலை 2014 திசெம்பர் மாதம் வரையிலும் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# மத்திய மாகாண சபை

மத்திய மாகாண சபையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 24,752 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 19,527 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் ரூபா 5,225 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்படுவதற்கும் இதில் ரூபா 20,825 மில்லியன் தொகை மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 3,927 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 21,824 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 5,285 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 21,661 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 4,565 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

மத்திய மாகாண சபை நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரித்தான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் அடிப்படை நோக்கத்தை எய்துவதற்காக அத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 12,108.41 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் 07 செலவின விடயங்களின் கீழ் ரூபா 116.58 மில்லியன் தொகை ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி நிலைப் பயன்பாட்டிற்காக செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரிப்பதற்காக தேவையான பாடத்திற்கு ஏற்ற முடிவுகள் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அத்துடன் பெறுபேறுகளை உயர்த்துவதற்குத் தேவையான நடைமுறைகளை இனங்கண்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டின் போது பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பிலான பொழிப்பாக்கப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டதுடன் இப் பரீட்சைப் பெறுபேறுகளிடையே 54 தேசிய பாடசாலைகளின் தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| பரீட்சை | தோற்றிய எண்ணிக்கை | சித்தியெய்திய எண்ணிக்கை | சித்தியடையாத மொத்த எண்ணிக்கை | சகல பாடங்களிலும் சித்தியடைந்திராத எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசு | 43,595 | 4,891 | 38,704 | - |
| க.பொ.த (சா.த) * | 34,085 | 22,481 | 11,604 | 1,255 |
| க.பொ.த (உ.த) * | 25,975 | 15,547 | 10,428 | 1,862 |

மாகாண ஒட்டுமொத்த பெறுபேறுகளின் படி, மத்திய மாகாண க.பொ.த (சா.த) இற்காக 6 ஆவது இடமும், க.பொ.த (உ.த) இற்காக 7 ஆவது இடமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

- மத்திய மாகாண சபை நிர்வாகக் கட்டிடத்திற்காக 300 KVA யும் 400 KVA யும் இயக்கசக்தி கொண்ட மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் 2 வழங்கப்பட்டு ஸ்தாபிக்கப்படுவதற்காக 2013 சனவரி 28 ஆம் திகதி இலங்கை மின்சார சபைக்கு ரூபா 31.30 மில்லியன் தொகையான பணம் செலுத்தப்பட்டு 2 ஆண்டு கால தாமதத்தின் பின்னர் அதாவது 2015 பெப்ரவரி மாதம் ரூபா 16.49 மில்லியன் பெறுமதியான 400 KVA மின்பிறப்பாக்கி இயந்திரம் மாத்திரம் வழங்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

- 2014 ஏப்ரல் 23 ஆம் திகதிய இல. சீபீசீ/சீஎம்/சீபீ/2014/32 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி, மத்திய மாகாண சபை பதவிவகிக்கும் அமைச்சர்களுக்காக 03 இல்லங்கள் ஒதுக்கப்பட்டு அதற்காக ரூபா 2.20 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டு தங்குமிட வசதிகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அவ் இல்லங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன.

- தலைமை அமைச்சின் கீழான 550-60-4-0-2602 ஆம் இலக்க ‘‘மஹாவெலியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த சொத்துக்களின் பராமரிப்பு’’ எனும் செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் தொகையான ஏற்பாட்டில் ரூபா 4.33 மில்லியன் தொகை பல்லேகலே ஜனசவிகமவில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும் நடைபாதை அமைப்பதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூபா 4.08 மில்லியன் ஆன போதிலும் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அச் செயற்திட்டத்தில் 60 சதவீதம் பூர்த்திசெய்யப்படுவதற்காக ரூபா 4.44 மில்லியன் தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. இது மொத்த மதிப்பீடான ரூபா 355,516 தொகையை விஞ்சியிருந்தது.

- 2013 ஆம் ஆண்டு முதல் புரள்வு வரி அறவீடு நிறுத்தப்பட்டிருந்த போதிலும், மத்திய மாகாண வருமானத் திணைக்களத்தால் ரூபா 64.66 மில்லியன் தொகையான புரள்வு வரி உள்ளடங்கலாக ரூபா 175.14 மில்லியன் தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- அரசாங்க செலவின முகாமைத்துவத்தின் சீஎஸ்ஏ/பீஜ/40 ஆம் இலக்க 2006 சனவரி 04 ஆம் திகதிய சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் தலைமை அமைச்சருக்கும் அவரின் அந்தரங்கப் பதவியணிக்கும் வைத்துக்கொள்ளப்படக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 07 ஆன போதிலும், மத்திய மாகாண பிரதான அமைச்சர் அலுவலகத்திற்கு 12 வாகனங்களும் குழாமின் 02 வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

# வடமத்திய மாகாண சபை

வடமத்திய மாகாண சபையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 15,666 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 12,628 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் ரூபா 3,038 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்படுவதற்கும் இதில் ரூபா 11,286 மில்லியன் தொகை மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 4,071 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் பயன்படுத்தப்படுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 12,077 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 2,752 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 11,672 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 3,219 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன.

வட மத்திய மாகாண சபை நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரித்தான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- தலைமை அமைச்சின் பதவியணியால் ரூபா 8 மில்லியன் தொகையான 106 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உள்ளடங்கலாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுவதில் தாமதம் அல்லது தவறுதல் காரணமாக மீளாய்வாண்டிற்கான கணக்காய்வை 2015 ஏப்ரல் 24 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட முடியாதிருந்தது.

- மாகாண சபை மற்றும் மாகாண சபைச் செயலகத்தால் பதவி உத்தியோகத்தர்களினதும், சபாநாயகரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் அந்தரங்கப் பதவியணிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5.83 மில்லியன் தொகை சம்பளம் மற்றும் படிப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அப் பதவியணியின் வருகையை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிராததுடன் அக் காரியாலயத்தைப் பரீட்சிக்கையில் அவர்கள் காரியாலயத்தில் கடமையாற்றியிராமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

- 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் சபைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளும் கட்சியின் பிரதான ஒழுங்கமைப்பாளர் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதான ஒழுங்கமைப்பாளர் என 04 பதவிகள் ஏற்படுத்தப்பட்டு அப் பதவிவகிப்போருக்கு மாகாண சபை அமைச்சருக்குரித்தான சலுகைகளுக்கும் மேலான சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. அச் சலுகைகளுக்காக உரிய பதவிவகிப்போருக்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 6.46 மில்லியன் தொகையும் முன்னைய இரு ஆண்டுகளின் போது ரூபா 11.06 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

- திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய கட்டுநிதி மீதி அடுத்த ஆண்டின் சனவரி 10 ஆம் திகதி அல்லது மாகாணத் திறைசேரியால் குறிப்பிடப்பட்ட நாளுக்கு முன்னர் மீளச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புகளின் படி திசெம்பர் 31 இல் உள்ளவாறான 18 கட்டுநிதிக் கணக்குகள் தீர்க்கப்படாது கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 374.62 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

- மாகாண சபை அபிவிருத்தி மானியம், மாகாணம் குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி மானியம், உலக வங்கி மானியம், ஒன்றிணைந்த மானியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,615.59 மில்லியன் தொகையான 1892 புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்களில் 1881 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு இதற்காக ரூபா 1,055.22 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஆண்டின் போது 1291 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. இவ்வாறே மீளாய்வாண்டிற்கு நிறைவடையாத வேலைகளாகக் காணப்பட்ட ரூபா 1,011.22 மில்லியன் தொகையான 719 செயற்திட்டங்களில் 568 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு இவற்றில் 501 செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

- மாகாண சபையின் நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட 540 ஏக்கர் காணிகள், 33 வாகனங்கள், 124 கட்டிடங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் பாரியளவில் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- மாகாண சபை பிரதம அமைச்சரினதும் மாகாண சபை அமைச்சர்களினதும் படிப்பணமும் ஒவ்வொரு அமைச்சின் செலவினத் தலைப்புகளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் அம் மொத்தப் படிப்பணமும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அக் கொடுப்பனவுகளுக்கு மேலதிக மாகாண சபை மற்றும் சபைச் செயலகத்தின் செலவினத் தலைப்பின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 4.88 மில்லியன் தொகையான சாரதிக் கொடுப்பனவு மற்றும் அந்தரங்கப் பதவியணிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய இரு ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த அக் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 8.06 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

- 2007 நவம்பர் 19 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சுற்றறிக்கைக் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2006 சனவரி 04 ஆம் திகதிய அதிமேதகு சனாதிபதியின் சுற்றறிக்கைக் கடிதத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ பிரதம அமைச்சரின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படக்கூடிய ஆகக்கூடுதலான உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆன போதிலும் வடமத்திய மாகாண கௌரவ பிரதம அமைச்சர் அவ்வெல்லைக்கு மேலாக 15 வாகனங்களைப் பயன்படுத்தியிருந்ததுடன் அவ்

வாகனப் பயணிப்பிற்காக ரூபா 5.99 மில்லியன் பெறுமதியான எரிபொருள் 44,850 லீற்றர்களும் பெறப்பட்டிருந்தது. இவ்வாறே கௌரவ பிரதம அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ டீசல் வாகனங்கள் இரண்டிற்கும் பாதுகாப்பு வாகனத்திற்கும் உரித்தான எரிபொருள் எல்லை மீறப்பட்டு ஆண்டின் போது 13250 எரிபொருள் பெறப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 1.8 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- வாகனங்களுக்கு எரிபொருள் கட்டளை வழங்கப்படுவதற்காக வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருள் கோரற் பத்திரங்களின் நிறுவகத்தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் கட்டளைகள் வழங்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சுச் செயலாளரின் உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்டு பிரதம அமைச்சர் அல்லது அவரது அந்தரங்கப் பதவியணி உத்தியோகத்தர் எரிபொருள் கட்டளையை வழங்கி அவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

- பிரதம அமைச்சரின் அந்தரங்கப் பதவியணியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 20 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மேலதிக மற்றும் லீவு நாட் சம்பளமாக ரூபா 9.8 மில்லியன் தொகை அந்தரங்கப் பதவியணிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, ஒரு பதவியில் மாதாந்த மேலதிக மற்றும் லீவு நாட் கிரயம் ரூபா 54,467 ஆகக் காணப்பட்டது.

- கௌரவ அமைச்சர்கள் மற்றும் ஆளுநருக்காக வருடாந்தம் ரூபா 1.39 மில்லியன் தொகையான வாழ்க்கைக் காப்புறுதித் தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தப்படுவதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் அல்லது வேறு ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் நிறுவகங்கள் மற்றும் மாகாண பாடசாலைகள் மற்றும் மாகாண வைத்தியசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 27,270 ஆனதுடன் வெற்றிடமாக உள்ள பதவியணி 5985 ஆகக் காணப்பட்டது.

# தென் மாகாண சபை

தென் மாகாண சபையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 21,523 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 15,895 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் ரூபா 5,628 மில்லியன் தொகை உள்ளக வழியால் சேகரிக்கப்படுவதற்கும் இதில் ரூபா 18,812 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 2,711 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 17,332 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 5,410 மில்லியன் தொகை உள்ளக வழியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 20,147 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,368 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

தென் மாகாண சபை நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரித்தான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களின் பதவி உயர்வு சம்பள மீளாய்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

  (i) 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்பு தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்குச் செலுத்தப்படுவதற்குரித்தான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட 2006 திசெம்பர் 26 ஆம் திகதிய டீஎம்எஸ்/பீ/03/01/03/01/எஸ்ஏ ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு முரணாக சம்பளப் பரிமாற்றம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

  (ii) முறையான அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தில் அதிகாரசபையின் சகல நிறைவேற்றுத்தரத்தில் அல்லாத ஊழியர்களுக்கு 2008 யூலை 01 ஆம் திகதி முதல் 4 சம்பள ஏற்றங்களின் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்தது.

  (iii) 2006 ஏப்ரல் 10 ஆம் திகதிய 28 ஆம் இலக்க, 2006 மே 26 ஆம் திகதிய 28(1) ஆம் இலக்க, 2006 ஆகஸ்ட் 1 ஆம் திகதிய 28(II), 2007 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 36 ஆம் இலக்க மற்றும் 2007 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 36(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் 1990 மார்ச் 09 ஆம் திகதிய 15/90 ஆம் இலக்க 1990 யூன் 15 ஆம் திகதிய 15/90(1) ஆம் இலக்க பொது

நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2006 சனவரி 01 முதல் 2012 சனவரி வரை 60 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

- தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் 2013 சனவரி மாதம் முதல் 2014 நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியின் போது 21 அமைய ஊழியர்கள் சேர்க்கப்பட்டு அவர்கள் தென்மாகாண கல்வி காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள், செய்திகள் அமைச்சருக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அதிகாரசபைக்குரித்தான எவ்வித கடமைகளும் அவர்களால் மேற்கொள்ளப்படாத போதிலும் 2015 மே மாதம் வரை சம்பளமாக ரூபா 5.46 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக தென்மாகாண கல்விச் சேவைக்காக சேர்க்கப்பட்டிருந்த 12 ஊழியர்களும் இவ் அமைச்சருடன் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக 2014 ஆம் ஆண்டிற்கான சம்பளமாக ரூபா 2.86 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- மாத்தறை கல்வித் திணைக்களத்திற்குரித்தான கல்லூரியின் பாடசாலை பணி உதவியாளராக 2013 ஒக்டோபர் 14 முதல் நியமனம் பெற்ற கொட்டபொல பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் அந்நாள் முதல் 2015 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது 02 நாட்கள் மாத்திரம் பாடசாலைக்கு வருகை தந்து 2013 நவம்பர் மாதம் முதல் 2015 மார்ச் மாதம் வரை சம்பளமாக ரூபா 406,798 தொகையைப் பெற்றுக்கொண்டிருந்தார். இதற்கு மேலதிகமாக அக் காலப்பகுதிக்காக கொட்டபொல பிரதேச சபையின் உறுப்பினராகவும் ரூபா 135,000 தொகை அமைச்சரின் கொடுப்பனவாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், தென் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட சாரதி ஒருவர் 2006 ஆம் ஆண்டு முதல் பிரதேச சபை உறுப்பினராகப் பணியாற்றியிருந்ததுடன் தமது நித்திய சேவை நிலையத்திற்கு வருகை தரல், வெளிச்செல்லல் என்பவை கைச்சாத்திடப்படாது எவ்வித கடமைகளிலும் ஈடுபட்டிராதிருக்கையில் 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை சம்பளமாக ரூபா 1.99 மில்லியன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தார்.

- தென் மாகாண கல்வி திணைக்களத்திற்குரித்தான காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் கடமையாற்றும் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணிக்காக அவ்வப்போது மேற்கொள்ளப்படும் சம்பள மீளாய்வுகளுக்குரித்தான வகையில் குறித்தவாறு சம்பளப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டிராமை மற்றும் ஏற்பாடுகளின் பற்றாக்குறை காரணமாக 2015 யூலை 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய நிலுவைச் சம்பளத் தொகை ரூபா 1,212.4 மில்லியனாகக் காணப்பட்டது. இந் நிலை தென்மாகாண கல்விச் சேவையிலுள்ள பதவியணிக்கு நேர்ந்திருந்த அசாதாரணம் என்பதும், மாகாணக் கல்வி சேவையின் ஆக்கபூர்மான நிலைக்குப் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதெனவும் அவதானிக்கப்பட்டது.

- ‘‘சுப தகுனக் தினூ ஜயக்ரஹண ரெக கனிமு’’ எனும் கோட்பாட்டின் கீழ் 2015 ஆம் ஆண்டிற்காக முறையான கொள்வனவு நடைமுறையின்றி 380,000 வாழ்த்து மடல் அச்சிடப்பட்டு 2015 சனவரி 08 ஆம் திகதி நிலவிய சனாதிபதி தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர்

தென்மாகாணத்தின் சகல பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. தென்மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள், செய்திகள் அமைச்சுச் செயலாளரால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறித்த வாழ்த்து மடல்கள் மாணவர்களின் பெற்றோருக்குக் கிடைக்கப்பெறுவது குறித்து தனிப்பட்ட ரீதியில் திருப்திகொள்ள வேண்டுமென சகல அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

- தென்மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் செயற்படுத்தப்படும் புதிய வகையிலான தேயிலைப் பயிர் நாற்றுகள் செயற்திட்டத்தின் மூலம் ஒரு நாற்றுப் பயிர்ச்செய்கையாளருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையில் மீளத் தீர்க்கப்பட்டிராத ரூபா 8.58 மில்லியன் தொகையும் இதற்குரித்தான ரூபா 5.69 மில்லியன் தொகையான வட்டியும் ரூபா 5.93 மில்லியன் தொகையான திணைக்களக் கட்டணம் உள்ளடங்கலாக ரூபா 20.20 மில்லியன் தொகை 2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதிகாரசபையால் அத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது எவ்வித முறையான அங்கீகாரமும் இன்றி அவருக்குரித்தான 1 ஏக்கர் 25 பேர்ச் காணி ரூபா 7.03 மில்லியன் இற்கு கையேற்கப்பட்டிருந்தது. இக் காணி 1998 திசெம்பர் 02 ஆம் திகதி ரூபா 17,500 இற்கும் 2001 பெப்ரவரி 25 ரூபா 50,000 இற்குப் பரிமாற்றப்பட்டிருந்ததுடன் 2009 மார்ச் 24 ஆம் திகதி நாற்றுமேடை உரிமையாளரால் இக் காணி ரூபா 300,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டு 2013 மார்ச் 03 ஆம் திகதி ரூபா 350,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இக் கொள்வனவாளருக்கு 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதி அதிகாரசபையால் ரூபா 600,000 தொகை செலுத்தப்பட்டு காணி அதிகாரசபைக்கு கையேற்கப்படாது இதற்குப் பதிலாக நாற்றுமேடை உரிமையாளருக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு 19 நாட்களுக்குப் பின்னர் அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின்றி தென்மாகாண வருமான ஆணையாளரின் மதிப்பீட்டில் ரூபா 7.08 மில்லியன் இற்கு அதிகாரசபையால் பொறுப்பேற்கப்பட்டிருந்தமையும் இதன் படி காணிக்காக அதிகாரசபை ரூபா 7.68 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வின் போது மேலும் கண்டறியப்பட்டது.

# கிழக்கு மாகாண சபை

2014 ஆம் ஆண்டில் அரசாங்க மாணித்தின் மூலம் ரூபா 21,271 மில்லியன் மற்றும் ஏனைய உள்ளகத் தோற்றுவாய்கள் மூலம் ரூபா 2,510 மில்லியன் என ரூபா 23,781 வருவாயாக கிழக்கு மாகாண சபையால் மதிப்பிடப்பட்டிருந்தது. மொத்தமாகச் செலவழிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 21,141 மில்லியன் ஆகும். இதில் ரூபா 16,115 மில்லியன் மீண்டுவருஞ் செலவினத்திற்கும் ரூபா 5,026 மில்லியன் மூலதனச் செலவினத்திற்குமாகும். எவ்வாறாயினும், அரசாங்க மானியமாகிய ரூபா 18,148 மில்லியன் மற்றும் ஏனைய உள்ளக வருவாயத் தோற்றுவாய்க்கான ரூபா 2,501 மில்லியன் என ரூபா 20,649 மொத்த வருவாயில் ரூபா 15,754 மில்லியன் மீண்டுவருஞ் செலவினத்திற்கும் ரூபா 4,661 மில்லியன் மூலதனச் செலவினத்திற்குமான ரூபா 20,415 மில்லியன் மொத்தச் செலவினம் 2014 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்தது.

கிழக்கு மாகாண சபை நடவடிக்கைகள் தொடர்பான 2014 ஆம் ஆண்டிற்குரிய முக்கிய கணக்காய்வு அவதானிப்புரைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2014 ஆம் ஆண்டின் போது 3 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 15 மாகாணத் திணைக்ளங்கள் என்பவற்றிக்கு 36 செலவினக் குறியீடுகளின் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 26.56 மில்லியன் மூலதனமானது முற்றாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டுக்கான மதுபான அனுமதிப் பத்திர வருவாயாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 25 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், மதுபான அனுமதிப்பத்திரக் கட்டணமாக மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட தொகை ரூபா 16.3 மில்லியன் மாத்திரமே ஆகும்.

- மாகாண சபையால் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட தண்டப் பணம் மற்றும் சொத்துப் பரிமாற்றம் தொடர்பான முத்திரைத் தீர்வை என மொத்தமாகச் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 783.64 மில்லியன் ஆகும். இவை 2014 டிசெம்பர் 31 வரை குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படாது மாகாண வருவாய்த் திணைக்களச் சேமிப்புக் கணக்கில் தேங்கியவாறிருந்தன.

- தீர்வை, வரி வாடகை குத்தகை எனும் முக்கிய வருவாய்த் தோற்றுவாய்கள் மூலம் கிழக்கு மாகாணத்தின் 3 மாநகர சபைகள், 5 நகர சபைகள், 36 பிரதேச சபைகள் என நிலுவையாக இருந்த மொத்தத் தொகை ரூபா 522.11 மில்லியன் ஆகும். 2014 டிசெம்பர் வரை இவை அறவிடப்பட்டிருந்தன.

- ஐந்து பிரதேச நிறுவனங்களுக்குரிய அரச காணிகளுக்கான குத்தகை வருவாயான ரூபா 73.17 மில்லியன் தொகையானது 2009 முதல் 2015 ஜுன் 30 வரை அறவிடப்பட்டிருந்தது.

- உள்ளபடியான தேவைகளை கருத்திற்கொள்ளாது மாகாணத்தில் இயங்கும் 62 மருத்துவ நிறுவனங்கள் ரூபா 21.64 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்களை அதிகளவில் பெற்றிருந்தன. எவ்வாறாயினும், அவை காலாவதியானவை ஆகையால் அவற்றைப் பயன்படுத்த முடியாது போயிற்று.

- தரமற்ற ரூபா 8.37 மில்லியன் பெறுமதியான 160 வகைப்படுத்தும் பொருட்கள் அடிப்படை மருத்துவ நிலையத்திலும் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவிலும் நடவடிக்கை எதுவுமின்றி 2014 டிசெம்பர் 31 வரை இருந்தன.

- மாகாணத் திணைக்களம் ஒன்றினது விலங்குப் பண்ணையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 576,660 பெறுமதியான ஐந்து வகையான மருந்துப் பொருட்கள் காலாவதியாகும் காலம் முடிவடைவதற்கு முன்பே பயன்படுத்தப்படாமையால் காலாவதியாகியிருந்தது.

- மாகாண விளையாட்டுத் துறைத் திணைக்களம் 2011 முதல் 2013 வரை கொள்வனவு செய்த ரூபா 1.12 மில்லியன் பெறுமதியுடைய விளையாட்டு அணிகலன் குறித்த விளையாட்டுக் கடிகங்களுக்கு வழங்கப்படாது 2015 ஜனவரி 26 வரை களஞ்சியத்தில் இருந்தன.

- சுகாதாரத் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளுக்கென இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திந் செயற்திட்டத்திலிருந்து 2014 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 36.61 மில்லியன் நிதியானது கறித்த பணிகளுக்குப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

- அபிவிருத்தி மேற்கொள்வதற்காக மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்தி மாகாணத்தின் கீழ் ஒவ்வொரு மாகாண அமைச்சிற்கும் திணைக்களத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது ஏனைய அமைச்சுக்களுககும் திணைக்களங்களுக்கும் ஏனைய தேவைகளுக்கு வழங்கப்பட்டு அவை ஒதுக்கீடு செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாது போன பல சந்தர்ப்பங்கள் நிலவின.

- அறிவாற்றல் செயற்திட்டத்தின் அத்திவாரமாக மாற்றமுறும் பாடசாலைக் கல்வியின் கீழ் ரூபா 108.2 மில்லியன் மொத்தக் கிரயத்தில் கிழக்கு மாகாணத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட 13 மாஹிந்தோதய ஆய்வு கூடங்கள் 2014 ஆம் ஆண்டில் குறித்த மாகாணத்திற்க்குக் கையளிக்கப்பட்டிருந்த போதும், 2015 ஆகஸ்ட் 14 வரை அவை பயன்படுத்தப்படாதிருந்தன.

- 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 82.64 மில்லியன் மொத்தக் கிரயத்தில் மஹிந்தோதய ஆய்வுகூடங்களுக்கு வழங்கப்பட்ட 325 கணனிகள், தளபாடங்கள், உபகரணங்கள் என்பன ஓராண்டிற்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

- 2012 ஆம் ஆண்டில் ஆலையடி வேம்பு அக்கரைப்பற்று என்பவற்றில் மாகாணத் திணைக்களம் ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலையங்களது மொத்தக் கிரயம் ரூபா 5.25 மில்லியன் ஆகும். பிரதேசத்தின் பால் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வசதிகளை வழங்குவதற்கான இவை குறித்த நோக்கிற்காக 2015 ஜூலை 7 வரை பயன்படுத்தப்டாதிருந்தன.

- 2012 ஆம் ஆண்டில் ரூபா 18 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்ட கட்டிடம் ஒன்று 2015 ஏப்ரல் வரை பயன்படுத்தப்படாதிருந்தது. வீடுகளில் வன்முறை ஏற்படுகையில் பாதிக்கப்படுவர்களுக்கான பாதுகாப்பு வதிவிட வசதிகளை வழங்குவதற்கென திருகோணமலையில் பாதுகாப்பு மனை ஒன்றை அமைப்பதே இதன் நோக்கமாகும்.

- 2013 ஆம் ஆண்டில் ரூபா 1.99 மில்லியன் கிரயத்தில் மூதூரில் உள்ள அல்லை நகரில் நிர்மாணிக்கப்பட்ட ஐசீடீ கல்வி நிலையம் 2015 ஆகஸ்ட் 4 வரை பயன்படுத்தப்படாதிருந்தது.

- கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் தேவையான அங்கீகாரத்தையும் விடுவித்தல் சான்றிதழ்களையும் பெறாது ரூபா 12.02 மில்லியன் மொத்தக் கிரயத்தில் 2010 ஆம் ஆண்டில் அப்பாறையில் அலுவலகக் கட்டிடம் ஒன்றை கமத்தொழில் திணைக்களம் நிர்மாணித்திருந்தது. இதன் விளைவாக நகர்புற அபிவிருத்தியதிகார சபையிடமிருந்து முன்கூட்டியே அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சேவைக்கட்டணமாகத் திணைக்ளம் செலுத்திய தொகை ரூபா 1.01 மில்லியன் ஆகும். திணைக்களத்திற்கு எதிராக ந.அ.அ.ச தொடுத்த வழக்கில் சட்ட வலியுறுத்துவதற்குக் கட்டணமாக ரூபா 16,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- 21 அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றின் பதவியணியினர் கடன்களது ரூபா 51.44 மில்லியன் கூட்டுத்தொகை 02 முதல் 10 ஆண்டுகளாக அறவிடப்படாதிருந்தன. இவற்றுள் ரூபா 46.25 மில்லியன் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களையும் ரூபா 4.18 மில்லியன் கூட்டுத்தொகை மரணமடைந்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களையும் ரூபா 1.02 மில்லியன் கூட்டுத்தொகை முன்னாள் மாகாண சபை அங்கத்தவர்களையும் குறிப்பனவாகும்.

- மாகாண சபைக்குச் சொந்தமான பல்வேறு வகையான 620 வாகனங்கள் பெறுமதி காண்பிக்கப்பட்டு கணக்கிலிடப்பட்டிருந்தன.

- மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் சித்தி பெறுவர்களது கூடிய சதவீதத்தை நிலைநாட்டும் பொருட்டு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 7 பாடசாலைகள் 88 மாணவர்களை கா.பொ.த (சா.த) பரீட்சைக்கும் தோற்ற அனுமதிக்கவில்லை. குறித்த மாணவர்களின் உயர் கல்வியை இச் செய்கையானது பெருவாகப் பாதித்திருந்தது.

# வட மாகாண சபை

வட மாகாண சபை 2014 ஆம் ஆண்டில் அரசாங்க மானியமாக ரூபா 14,647 மில்லியன் மற்றும் ஏனைய உள்ளகத் தோற்றுவாய்கள் மூலம் ரூபா 1,949 மில்லியன் என ரூபா 16,596 மில்லியன் வருவாய்க்கான மதிப்பீட்டை மேற்கொண்டிருந்தது. இதில் மீண்டுவருஞ் செலவினத்திற்கு ரூபா 14,591 மில்லியன் மற்றும் மூலதனச் செலவினத்திற்கு ரூபா 2,005 மில்லியன் என மொத்தமாகச் செலவிட எதிர்பார்த்த தொகை ரூபா 16,596 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், அரசங்க மானியமாகப் பெறப்பட்ட ரூபா 14,382 மில்லியன் மற்றும் ஏனைய உள்ளகத் தோற்றுவாய்கள் மூலம் பெறப்பட்ட ரூபா 1,866 மில்லியன் ஆகப் பெறப்பட்ட ரூபா 16,248 மில்லியன் மொத்த வருவாயில் 2014 ஆம் ஆண்டின்போது மீண்வருஞ் செலவினத்திற்கு ரூபா 13,925 மில்லியன், மூலதனச் செலவினத்திற்கு ரூபா 1,967 மில்லியன் என மொத்தமாகச் செலவாகிய தொகை ரூபா 15,892 மில்லியன் ஆகும்.

வடமாகாண சபையின் 2014 ஆண்டிற்கான நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2013 ஒக்டோபர் 25 ஆந் திகதியன்று தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்டபோதும், 2007-2013 (7 ஆண்டுகள்) ஆண்டுகளுக்கான வடமாகாண சபையின் நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) பிரிவின் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 31 வரை சபையில் முன்வைக்கப்படாதிருந்தன. இதன் விளைவாக, 2007 முதல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை மாகாண சபை திருத்துவதற்கான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படாதிருந்தன.

- வடமாகாண ஆளுநரின் அங்கீகாரத்துடனான குறிப்பு அல்லது மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் எதுவுமின்றி வடமாகாணத்தின் ஆளுநர் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

  2007 ஜனவரி 01 முதல் வடமாகாண சபைக்கான ஆளுநரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஒன்று செயற்பட்டவாறிருந்தது. எவ்வாறாயினும், கிழக்கு மாகாண ஆளுநரது முயற்சியின் பேரில் 2007 ஜனவரி 01 ஆந் திகதிய ஆளுநரது குறிப்பு இலக்கம் 01/2007 இன் 03 ஆம் பந்திக்கமைய ஆளுநரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. ஆளுநரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பொதுமக்களதும் ஸ்தாபனங்களதும் சங்கங்களதும் நன்கொடைகள், உதவு தொகைகள் என்பவற்றையும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களால் உருவாகிய வருவாயையும் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மேற்படி தோற்றுவாய்கள் மூலம் அவ்வாறான உதவுதொகைகள் எதுவும் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருக்கவில்லை. ஆளுநரின் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 22 ஆந் திகதியன்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டின்போது ஆளுநர் நிதியத்தில் ரூபா 13.86 மில்லியன் ஆக இருந்தபோதும், 2014 ஜனவரி 10 ஆம் திகதிய 1/2014 ஆம் இலக்க ஆளுநரது குறிப்பின் மூலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அதனைக் கணக்காய்வு செய்வதற்கான அதிகாரம் தன்னிச்சையாக இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

- மாகாண அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் குறிப்பிட்ட தேவைகளுக்கென கணக்குகளிலிருந்த பல்வேறு நிதியங்கள் ஆளுநரின் தற்றுணிபு நிதியத்தை உருவாக்குவதற்கு குறித்த அதிகாரம் எதுவுமின்றி மாற்றஞ் செய்யப்பட்டிருந்தன. மாகாண சபையில் சட்டம் அங்கீகரிக்ப்படாது ஆளுநர் தற்றுணிபு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு மாகாண சபைகள் அதிகார சட்டத்திலோ அல்லது வேறெந்த அதிகாரச் சட்டத்திலோ ஏற்பாடுகள் இல்லாமையால் வைப்புக் கணக்கிலிருந்து நிதி மாற்றம் செய்தமையானது அதிகாரமற்றதாகக் கருதப்பட்டது. மேலும், ஆளுநரின் தற்றுணிபு நிதியத்தை உருவாக்குவதற்கான அங்கீகாரத்தை ஆளுநரே

வழங்கியுள்ளதும் அவதானிக்கப்பட்டது. ஆளுநரின் தற்றுணிபு நிதியத்திற்கு மாற்றஞ்செய்யப்பட்ட தொகை 2 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

- மாதாந்த ரூபா 100,200 மாத்திரமே எரிபொருள் படியாகப் பெறுவதற்கு உரித்துடைய ஆளுநருக்கு சனாதிபதி செயலகத்தின் 2011 டிசெம்பர் 19 ஆந் திகதிய PCMD/1/4/23/4/4 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 247,400 முதல் ரூபா 497,600 வரை கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அரச வாகனங்களுக்கு சுப்பர் பெட்றோல் வழங்குவதற்கு எதுவித ஏற்பாடும் சுற்றறிக்கையில் இல்லாதபோதும், சுப்பர் பெட்றோல், சாதாரண பெட்றோல் என்பவற்றின் கொள்வனவிற்குக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எல்லைக்குக் கூடுதலாக ஆளுநருக்கு வழங்கப்பட்ட எரிபொருள் படி மீதான உழைக்கும்போதே செலுத்தும் வரியும் அறவிடப்படாதிருந்தது.

- சுற்றறிக்கை அறிவுறுத்துரைகள் எவற்றிற்கும் இணங்காத விதத்தில் ஆளுநர் நிர்ணயித்த அடிப்படையில் ஊடக ஒருங்கிணைப்பாளருக்கு ஆளுநரின் செயலாளரால் மீளாய்வாண்டின்போது செய்திகளைத் திருத்துவதற்கான கட்டணமாக ரூபா 430,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணாக தாபன விடயங்களை அமுலாக்குதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 1999 ஜுன் 01 ஆந் திகதிய PD/BP/9 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம், மாகாண அரசசேவை உத்தியோகத்தர்களது தாபன விடயங்களை அமுலாக்குதல் இயன்றவரை அவற்றோடொத்த அரச சபையின் நடைமுறைகளுக்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.

ii. முறையான கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது 2011 ஜனவரி முதல் உத்தியோகபூர்வத் தேவைகளுக்கு மாகாண சபையால் வாடகை அடிப்படையில் 14க்கு மேற்பட்ட கட்டிங்கள் பெறப்பட்டிருந்தன. இதன்பொருட்டு 2011 முதல் 2014 வரை வாடகையாக ஏறக்குறைய ரூபா 25 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக விலைமதிப்புத் திணைக்களத்தின் பிரதான விலைமதிப்பீட்டாளரின் விலைமதிப்பு பெறப்படாது, தாபன விதிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக இவ்வீடுகளில் குடியிருந்த செயலாளர்களிடமிருந்து ரூபா 500 மாத்திரமே வாடகையாகப் பெறப்பட்டிருந்தது.

ஒவ்வொரு செயலாளரின் பொருட்டும் ரூபா 150,000 (கிட்டத்தட்ட) க்கு மேற்பட்ட வீட்டுத்தளபாடங்களுடன் வழங்கப்பட்டு மாகாண சபை நிதியத்திலிருந்து மின்சாரம், நீர் என்பவற்றிற்கு கொடுப்பனவு வழங்கப்பட்டுமிருந்தது. தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தினது 5:3 பிரிவுக்கமைய வாடகை வீட்டில் குடியிருந்தமைக்காக வாடகையையும் அவர்களால் செலுத்தப்பட வேண்டிய மின்சாரம், நீர் ஆகியவற்றிற்கான செலவினத்தையும் செயலாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

iii. 2013 ஆம் ஆண்டில் பிராந்திய ஆணையாளர்களுக்கான பதவியணியினருக்குரிய அங்கீகாரம் பெறப்பட்டிருந்தபோதிலும் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை அத்தறுணத்தில் இருக்கவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் பிராந்திய ஆணையாளர்களது சேவையை இலங்கை நிர்வாக

சேவை உத்தியோகத்தர் அல்லாத ஓய்வு பெற்று மீள நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் வழங்கியவாறிருந்தனர். 2011 மே 11 ஆந் திகதிய 9/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக வாகனப் பராமரிப்பு, எரிபொருள் ஏனைய பராமரிப்புச் செலவினம் என்பவற்றுடன் ஒரு சேர சம்பளமும் படியுமாக இது தொடர்பாக அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 9.1 மில்லியன் ஆகும். மேலும், பிராந்திய ஆணையாளர்களது செயலாற்றல் / கடமைகள் என்பன கணக்காய்விற்குக் கிடைக்குமாறு செய்யப்படவில்லை.

- வட மாகாண சபைக்குச் சொந்தமான 16 வாகனங்கள் ரூபா 5.09 மில்லியன் மதிப்பீட்டுப் படி ரூபா 5.41 மில்லியனுக்குப் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. பொருட்கணிப்புச் சபை அறிக்கையில் இவ்வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட முடியாதளவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிர்வாக ஒழுங்கீனங்கள் காரணமாக 39 மாதங்கள் கடந்த பின்னரும் வாகங்களைக் கொள்வனவு செய்தவர்களுக்கு 10 வாகனங்களின் உரித்து மாற்றம் செய்யப்படாதிருந்தது. இதனையடுத்து, உரித்துமாற்றத்திற்கான புத்தகங்களையும் ஆவணங்களையும் வழங்காமைக்காக இரு கொள்வனவாளர்கள் தலைமைச் செயலாளருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வழங்குகளைப் பதிவு செய்திருந்தனர்.

- வட மாகாணத்தின் 34 உள்ளூராட்சி நிறுவனங்களில் சேகரிக்கப்படும் குப்பை, கூழங்கள் எரியூட்டப்பட்டோ அல்லது புனதாக்கப்பட்டோ இருந்தன. இதற்கென கொம்போஸ்ட் செயற்திட்டம் ஒன்று அமுலாக்கப்படவில்லை. இது தொடர்பாக திண்மக் கழிவு முகாமைத்துவக்கென சாவகச்சேரி நகர சபை ரூபா 32 மில்லியன் செலவில் கட்டடிங்களைக் கட்டியும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை ரூபா 4.73 மில்லியன் செலவில் எல்லைச் சுவர் ஒன்றை நிர்மாணித்திருந்தபோதும், குறித்த தேவைகளுக்கு இச்சொத்துக்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

- சுன்னாகம் நிலத்தடி நீர் பிரதேசமானது சுன்னாகம் எரிபொருள் மின்சார நிலையத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ளது. 2012 ஆம் அண்டில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (தேநீவஅச) சுன்னாகம் நிலத்தடி நீர் பிரதேசத்தில் எரிபொருள் படிவு இருப்பதை அவதானித்திருந்தது.

  2013 நவெம்பரில் சுன்னாகம் மின் நிலையத்தைச் சூழவுள்ள உடுவில் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏறக்குறைய 100 கிணறுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 80 சதவீதமான கிணறுகளில் கழிவு எண்ணை 0.33 முதல் 19.40 மில்லிகிறாம் 11 (SLS எல்லை 0.2 மில்லிகிறாம்/11.0 மி.கி/1) அளவில் மாசடைந்திருந்தமையை கண்டு பிடித்தது. மேலும் இலங்கை மின்சார சபையின் (சுன்னாகம்) பிரதேச அலுவலகமும் 16 கிணறுகளைப் பரீட்சித்திருந்தன. அவ்வறிக்கைகளிலும் பிரதேசத்தில் எண்ணெய் கிறீஸ் பரவி இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டது.

  வட மாகாணத்தின் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஆத்தபுஷ்டியான நடவடிக்கைகள் எதனையும் மூன்று ஆண்டுகளாக்கு மேலாக வட மாகாண சபை மேற்கொள்ளாதிருந்தது.

- உணவு, விவசாய ஸ்தாபனம் கொள்வனவுக் கிரயத்தில் 50 சதவீதக் கழிவுடன் 570 நீர்ப் பம்புகளை பிரதிக் கமத்தொழில் பணிப்பாளருக்கு வழங்கியிருந்தது. 570 நீர்ப் பம்புகளில் 264 நீர்ப் பம்புகள் மாத்திரடே விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. விவசாயிகளிடமிருந்து 2011 ஆகஸ்ட் 15 முதல் செப்டம்பர் 12 வரை சேகரிக்கப்பட்ட ரூபா 2.89 மில்லியன் அரசாங்கக் கணக்கிலிடப்படாது பிரத்தியேக வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மில்லியன் மாகாண கமத்தொழில் பணிப்பாளரால் கையாடல் செய்யப்பட்டிருந்தது.

# சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாண சபையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 22,726 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 19,766 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் ரூபா 2,960 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்படுவதற்கும் இதில் ரூபா 16,970 மில்லியன் தொகை மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 5,756 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் பயன்படுத்தப்படுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 16,865 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 3,071 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 15,729 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,792 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன.

சப்ரகமுவ மாகாண சபைக்குரித்தாக 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட மொத்த குறுங்கால முதலீட்டின் பெறுமதி வெளிப்படுத்தப்படும் வகையில் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 3,607.93 மில்லியன் ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் வங்கியால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தின் படி ரூபா 3,634.52 மில்லியன் தொகை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 வைப்புக்களும் ஒரு சேமிப்புக் கணக்கும் நிலவுவது கண்டறியப்பட்டமையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை தொடர்பாக கூற்றில் குறுங்கால முதலீட்டு மீதி ரூபா 26.58 மில்லியன் தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் ரூபா 3 மில்லியன் படி மாகாண சபை பராமரிப்பு நிதியம் எனும் பெயரிலான செலவின விடயத்திற்கு ஏற்பாடு ஒதுக்கப்பட்டு, ஆண்டின் இறுதியில் மொத்த ஏற்பாட்டுத் தொகையும் அச் செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது மேலும் கண்டறியப்பட்டது.

  பிரதேச செயலகங்களின் மாகாண சபைக்குரித்தான பணத்திற்கான வங்கிக் கணக்குகளில் ரூபா 100,000 வைத்துக்கொள்ளப்பட்டு எஞ்சிய பணம் மாதாந்தம் மாகாண சபைக்கு அனுப்பிவைக்குமாறு சீஎஸ்ஏசீ/ ஏபீ/04/01 ஆம் இலக்க மற்றும் 2007 பெப்ரவரி 22 ஆம் திகதிய சப்ரகமுவ மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமையாளர்) இன் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகத்தால் இதற்கு முரணாக செயற்பட்டிருந்த காரணத்தால் 2013 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2014 ஆம் ஆண்டின் செப்தெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாத இறுதியிலும் குறித்த பிரதேச செயலக வங்கிக் கணக்குகளின் ரூபா 213.48 மில்லியன் கூட்டுத்தொகையான வங்கி மீதி நிலவியதாகவும் இதனால் மாகாண அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படக் கூடிய தொகை எவ்வித வட்டியும் இன்றி வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளில் சப்ரகமுவ மாகாண தலைமை அமைச்சரின் அந்தரங்க பதவியணிக்கு உரித்தற்ற ஓர் பதவியான, பிரதம அமைச்சரது ஆலோசகர் எனும் பதவிக்காக 2014 மார்ச் 20 ஆம் திகதிய ஆளுனர் செயலாளரின் ஆ.கா./சலே/2/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2014 ஏப்ரல் 02 ஆம் திகதி முதல் ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டு

அந்நாள் முதல் 2015 பெப்ரவரி மாதம் வரை படிப்பணமாக ரூபா 938,417 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2014 ஆம் ஆண்டின் போது பிரதம அமைச்சரின் அந்தரங்கப் பதவியணியின் உத்தியோகத்தர்கள் இருவராலும் சொந்தப் பதவியணியில் உள்ளடங்காத இரு நபர்களாலும் தலைமை அமைச்சரின் கடமையாகக் குறிப்பிட்டு அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடனும் அங்கீகாரமின்றியும் 04 குழாம் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக எரிபொருளுக்காக ரூபா 692,516 தொகை செலவிடப்பட்டிருந்தது.

- சப்ரகமுவ மாகாணத்தின் 09 பிரதேச செயலகங்களால் பல்வேறு நிறுவகங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 18.42 மில்லியன் கூட்டுத்தொகையான நீண்டகால வரி மற்றும் தண்டப்பணமும் ரூபா 4.45 மில்லியன் தொகையான வருடாந்த குத்தகை மற்றும் தண்டப்பணமும், 02 பிரதேச செயலகங்களுக்குரித்தான ரூபா 175,984 கூட்டுத்தொகையான விளைவு வரியும், 2015 யூலை மாதமளவில் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இது தொடர்பாக 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 96/05 ஆம் இலக்க காணிகள் ஆணையாளரின் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. மேலும், 02 பிரதேச செயலகங்களுக்குரித்தான ரூபா 7.14 மில்லியன் கூட்டுத்தொகையான நீர் வரி மற்றும் தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. சப்ரகமுவ மாகாண சபையின் வருமானங்களின் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கான விசேட நிலையான குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் அதன் நோக்கங்களில் எதுவும் எய்தப்பட்டிராமை குழுக் கூட்ட அறிக்கைகள் மற்றும் மாகாண வருமானத் திணைக்களத்தின் கடந்த ஆண்டு வருமானச் சேகரிப்புகளின் முன்னேற்றம் தொடர்பான ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. எனினும், 2013 பெப்ரவரி முதல் 2015 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்குரித்தான இக் குழுவின் உறுப்பினர்களுக்கு பங்கேற்புக் கொடுப்பனவுகள், மாதாந்தக் கொடுப்பனவுகள் மற்றும் ஊக்குவிப்புப் படிப்பணமாக ரூபா 1.39 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் குழுச் செயலாளர் நியமிக்கப்படுகையில் ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் மீள கடமையில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பாக விநியோகிக்கப்பட்டிருந்த 2007 மே 11 ஆம் திகதிய 2007/09 ஆம் இலக்க மற்றும் 2007 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 2007/09(1) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- 2014 ஆம் ஆண்டளவில இரத்தினபுரி மாவட்டத்தின் 10 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கேகாலை மாவட்டத்தின் 02 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் எவ்வித ஆயுர்வேத சிகிச்சை நிலையமும் அற்ற நிலையில் 2014 ஆம் ஆண்டில் மாகாணத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் மூடப்பட்டுள்ள பாடசாலைகளையும் கைப்பணி நிலையங்களையும் ஈடுபடுத்தி சப்ரகமுவ மாகாணத்தின் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் 05 மத்திய மருந்தகங்கள் நிர்மாணிக்கப்படுவதற்காக ரூபா 1.5 மில்லியன் தொகையான ஏற்பாடு

மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது அச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

சுகாதாரத்துறையின் 07 விளிப்புணர்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 6.88 மில்லியன் தொகையில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 2.34 மில்லியன் தொகை எஞ்சியிருந்து அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் சேமிப்பு சதவீதம் 6 முதல் 80 சதவீதம் வரையில் காணப்பட்டதுடன் நிதியம் உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டு குறித்த வகையில் உரிய சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தவறியிருந்தது.

- 2001 மார்ச் 28 ஆம் திகதிய நிதி 01/2001 ஆம் இலக்க மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் படி மாகாண சபை அமைச்சர் ஒருவருக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய கடனின் உச்ச எல்லை ரூபா 250,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக சப்ரகமுவ மாகாண சபையின் அமைச்சரவை தீர்மானத்தில் சபைச் செயலக அலுவலகத்தால் ஒரு அமைச்சருக்கு ரூபா 500,000 படி கடன் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மேற்குறித்த வகையில் அங்கீகரிக்கப்பட்ட எல்லை மீறப்பட்டு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் 2012 யூன் 27 ஆம் திகதி அமைச்சரவைப் பதவி வலிதற்ற 12 அமைச்சர்களுக்குரிய ரூபா 1.42 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதி தொடர்ந்தும் விளைவற்றிருந்தமையும் பிணையாளிகள் அல்லது பிணையின் மூலம் அக் கடன் தொகை அறவிடப்பட்டப்படுவதற்காக போதிய மற்றும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமையும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

2014 ஆம் ஆண்டின் போது முன்னாள் ஆளுனரால் ஆளுனர் அலுவலகத்தின் மூலம் பரிசுகள் வழங்கப்படுவதற்காக ரூபா 18.55 மில்லியன் செலவிடப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அக் கொள்வனவுகளின் போது கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையின் 3.4, 5.6, 7.8 மற்றும் 7.9 எனும் வழிகாட்டல்களுக்கு முரணாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குறித்த வழங்குனர்களிடமிருந்து பொருட்கள் பொறுப்பேற்கப்படுவது மற்றும் கொடுப்பனவு செய்யப்படுவது முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் இப் பொருட்கள் முன்னாள் ஆளுனரால் தனது விருப்பிற்கமைய சொந்தப் பரிசுகளாக பல்வேறு தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும், கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. மேலும், இப் பொருட்கள் எத்தரப்பினருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பது தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய எவ்வித எழுத்து மூலச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- தலைமை அமைச்சால் உலக வங்கி மானியத்தின் கீழ் செயற்படுத்தப்படும் Electronic Internal Morbidity & Mortality Register (EIMMR) செயற்திட்டம் மற்றும் தலைமை அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்கள் தலைமை அமைச்சின் கீழுள்ள ஏனைய திணைக்களங்களின் தேவைப்பாட்டிற்காக ரூபா 23.48 மில்லியன் செலவிடப்பட்டு 236 கணனி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படுகையில் தொழில்நுட்ப மாதிரிகள் தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டை மேற்கொண்டு மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டு பொருள் பொறுப்பேற்றல் போன்ற நடைமுறைகள் மோசடியான தன்மையில் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக வழங்குனருக்கு மாகாண சபை நிதியத்தில் ரூபா 2.15 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்படுவதற்கு நேர்ந்திருந்தது.

  கல்வித் தகவல்கள் தொழில்நுட்ப மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் அமைச்சால் கல்வி முறைமை அறிவுக் கேந்திரத்தின் அடிப்படையாக பரிணமிக்கும் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும 09 மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களுக்கான தகவல்கள் தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் தளபாடங்களின் விநியோகிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டு கையளிக்கப்பட்டு ஸ்தாபிக்கப்படுவது தொடர்பாக ரூபா 60.37 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு 589 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அங்கு தொழில்நுட்ப மாதிரி தயாரிப்பு மற்றும் மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டு பொருட்கள் பொறுப்பேற்கப்படுவது போன்ற செயற்பாடுகள் முறையற்ற விதத்திலும் கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படும் காரணத்தால் வழங்குனருக்கு மாகாண சபை நிதியத்தில் ரூபா 7.96 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்படுவதற்கு நேர்ந்திருந்தது.

- சப்ரகமுவ மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, வெளிநாடுகளை ஈடுபடுத்தி பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் 06 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுப் பயணத்திற்காக 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 8.97 மில்லியன் கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வரையிலும் எந்தவித நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படு நிலையில் இருக்கவில்லை. மேலும், குறித்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான முழுமையான சாத்தியவளக கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிராமையும், செயற்படுத்தலின் முறையான அதிகாரப்பொறுப்பொன்று இன்மையும் கண்டறியப்பட்ட போதிலும் அந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் வெளிநாட்டு சுற்றுலாக்களை மேற்கொண்டமை கண்டறியப்பட்டதுடன் 04 நிகழ்ச்சித்திட்டங்களின் போது தலைமை அமைச்சர் நாட்டிற்கு வெளியில் செல்வதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கௌரவ சனாதிபதியின் அங்கீகாரமும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

  வெளிநாட்டு அழைப்பின் கீழ் பல்வேறு சமய மற்றும் கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது 04 சந்தர்ப்பங்களில் பிரதம அமைச்சரும் அந்தரங்கச் செயலாளரும் மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 2.62 மில்லியன் செலவிட்டு வெளிநாட்டிற்குச் சென்றிருந்தனர்.

- ஒப்பந்த உடன்படிக்கையின் படி குறித்த ஒப்பந்தக்காரரால் உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதிக்கு சமனான முழுமையான காப்புறுதிக் காப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மாகாண சபையின் இரு அமைச்சுக்களால் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் செயற்படுத்தப்பட்ட 03 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய காப்புறுதிக் காப்பைப் பெற்றுக்கொண்டிராமையால் ஒரு சந்தர்ப்பத்தின் போது இயற்கை அனர்த்தத்தின் காரணமாக அழிவிற்குள்ளான நிர்மாணிப்பொன்று மீள வளமை நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்காக காணிகள், மாகாண நீர்ப்பாசன, கமநல, கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் அமைச்சினால் ரூபா 2.62 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

2006 மார்ச் 18 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவச் சுற்றறிக்கையினதும் 2006 ஒக்டோபர் 23 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அதி மேதகு சனாதிபதி அவர்களின் கடிதத்தின் பிரகாரம் பிரதம அமைச்சருக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் இரண்டும் ஒரு பாதுகாப்பு வாகனமும் மாத்திரமே ஒதுக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறெனினும், அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது 12 வாகனங்கள் பிரதம அமைச்சரால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்களைப் பராமரிப்பதற்காகவும் பழுதுபார்ப்பதற்காகவும் 2014 ஆம் ஆண்டின் போது பிரதம அமைச்சினால் ரூபா 3.03 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

# வடமேல் மாகாண சபை

வடமேல் மாகாண சபையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 26,727 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 20,672 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் ரூபா 6,055 மில்லியன் தொகை உள்ளக வழியால் சேகரிக்கப்படுவதற்கும் இதில் ரூபா 22,119 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 4,608 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 19,393 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 5,719 மில்லியன் தொகை உள்ளக வழியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 21,198 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,980 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

வடமேல் மாகாண சபை நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரித்தான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- சிறுநீரக நோயாளிகளுக்காக தூய நீர் வழங்கும் நோக்கில் வடமேல் பிரதம அமைச்சால் ரூபா 1.25 மில்லியன் பெறுமதியான 500 செம்மண் வடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இவற்றில் ரூபா 358,848 பெறுமதியான 144 வடிகள் விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் நோய் நிர்ணயிப்பின்றி உள்ளூராட்சி நிறுவகமொன்றில் உத்தியோகத்தர்களுக்கிடையேயும் அச் செம்மண் வடிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. இச் செம்மண் வடிகள் கொள்வனவு செய்யப்படுகையில் இவற்றின் தரம் கருத்திற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் அவற்றில் குறைபாடுகள் பல நிலவியமை அவதானிக்கப்பட்டது.

- பிரதம அமைச்சால் 2014 ஆம் ஆண்டில் குறித்த பணிக்கான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு ரூபா 21.47 மில்லியன் பெறுமதியான 15,000 பிளாஸ்டிக் கதிரைகள், 20 சட்டி பானைகள், 50 ஒலிபெருக்கித் தொகுதிகள், 200 உருக்கு அலுமாரிகள் மற்றும் 1324 கல்நார் தகடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பொருட்கள் கிராமிய மக்கள் நிலையில் தொண்டர் அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

  (I) ரூபா 658,763 பெறுமதியான பொருட்கள் குறித்த தரப்பினருக்குக் கிடைக்கப்பெற்றிருந்தமை குறித்த சாட்சிகள் இருக்கவில்லை.

  (II) 21 சந்தர்ப்பங்களின் போது பகிர்ந்தளிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 701,634 பெறுமதியான பல பொருட்களின் வகைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட கையொப்பத்திலும் உத்தியோகபூர்வ முத்திரைகளிலும் முறைகேடுகள் நிலவின.

(III) ரூபா 436,900 பெறுமதியான 289 கூரைத் தகடுகள் 10 நபர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் குறித்த தரப்பினர் அப் பிரதேசத்தின் குடியிருப்பாளர்கள் அல்லது வாக்குரிமைப் பெயர்ப்பட்டியலில் வாக்குரிமையாளர்கள் என்பதுவும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(IV) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சங்கத்திற்காக மாத்திரம் ரூபா 739,000 பெறுமதியான 600 பிளாஸ்டிக் கதிரைகளும் 16 உருக்கு அலுமாரிகளும் வழங்கப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

(V) வட மேல் மாகாணத்தில் உள்ள தொண்டர் அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் புத்தளம் மாவட்டத்தின் எவ்வித தொண்டர் அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டிராது குருநாகல் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அமைப்புகளுக்கிடையே மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

- வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகள் சிலவற்றில் காணப்பட்ட உடைந்த கதிரை மேசைகள் வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபையின் மூலம் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், இதற்காக மாகாண நிதிய விதிகளின் படி உரிய கட்டணமும் முறையான மாதிரியும் வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த பாடசாலை மூலம் அல்லது வடமேல் இயந்திர உபகரண அதிகாரசபையின் மூலம் ஒவ்வொரு உபகரணத்தினதும் பழுதுபார்க்கப்பட வேண்டிய பாகங்கள் முன்னரே இனங்காணப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி, ஒவ்வொரு பழுதுபார்த்தலின் நிலையின் படி கொடுப்பனவு செய்யப்படாது முற்றாகப் பழுதுபார்க்கப்பட்டதாகக் கருதப்பட்டு ரூபா 4.21 மில்லியன் தொகை வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

- 2014 ஆம் ஆண்டளவில் வடமேல் மாகாணத்தின் 126 பாடசாலைகள் மூடப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இவற்றில் 72 பிரதேச செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 54 ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குரித்தான 295 இல்லங்கள் காணப்பட்டதுடன் இவற்றில் 60 உத்தியோகபூர்வ இல்லங்களில் மாத்திரம் உத்தியோகத்தர்கள் குடியிருந்ததுடன் 107 பழுதுற்ற நிலையில் காணப்பட்ட போதிலும் குறித்த நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மாகாண கல்வி திணைக்களத்திற்குரித்தான 337 பாடசாலைகளில் இருக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட அதிபர்களுக்குப் பதிலாக குறைந்த தரத்திலுள்ள அதிபர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் 206 பாடசாலகளில் இருக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட அதிபர்களுக்குப் பதிலாக கூடிய தரத்திலுள்ள அதிபர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவதானிக்கப்பட்டது. மேலும் திணைக்களத்திற்குரித்தான 10 பாடசாலைகளில் இருக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட பிரதி அதிபர்களுக்குப் பதிலாக இதனிலும் பார்க்க குறைவான தரத்திலுள்ள பிரதி அதிபர் தரத்திலானோர் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் 150 பாடசாலைகளில் தரத்திலுள்ள பிரதி அதிபர்கள் இருக்க வேண்டிய போதிலும் அப் பாடசாலைகளுக்கு தரத்திலுள்ள பிரதி அதிபர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே திணைக்களத்திற்குரித்தான 147 பாடசாலைகளின் பதில் கடமையாற்றும் அதிபர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் 112 பாடசாலைகளில் அதிபர்கள் இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

- மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் இதன் கீழுள்ள நிறுவகத்திற்காக சேர்க்கப்பட்டிருந்த ஆரம்ப நிலையில் 80 பதவிகளின் மிகையான பதவியணி எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பாடசாலைப் பதவியணியின் வெற்றிடமாகக் காணப்பட்ட 4,927 பதவிகள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரித்தான 04 வைத்தியசாலைகளில், சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தில், புத்தளம் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகக் களஞ்சியத்திலும் பிரதேச மருந்து வழங்கற் பிரிவின் பெறுமதி ரூபா 11.97 மில்லியன் தொகையுமான மருந்துப் பொருட்களும் சத்திரசிகிச்சை மருத்துவ உபகரணங்களும் 253 நுகர்வுப் பொருட்களைக் கொண்ட 3,880,075 அலகுகளும் பெறுமதி கணிப்பிடப்பட முடியாத மேலும் மருந்துப் பொருட்களும் சத்திரசிகிச்சை உபகரணங்களும் 199 நுகர்வுப் பொருள் இருப்பு வகையிலான 1,210,385 அலகுகளின் இருப்பும், காலாவதி, தெரிவு மாதிரிகள் ஒத்திராமை, நிறம் மற்றும் மணத்தின் மாற்றம் போன்ற விடயங்கள் காரணமாக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

- குளியாப்பிட்டிய வைத்தியசாலையின் மருந்தகக் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக 2011 திசெம்பர் 23 ஆம் திகதி ரூபா 1.25 மில்லியன் செலவிட்டு வைத்தியசாலையின் ஐந்து மாடிக் கட்டிடத்தின் மேல் மாடியின் இன்சினரேட்டர் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந் நிர்மாணிப்பு, அக் கட்டிடத்தின் நிலைப்பாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் குளியாப்பிட்டி பிரதேச பொறியியலாளரால் பரிந்துரைக்கப்பட்டிராததுடன் வைத்தியசாலையின் நிபுணர்கள் உள்ளடங்கலாக சகல பிரிவுத் தலைவர்களும் நிர்மாணிப்பை அங்கீகரிக்க முடியாதென அறிவித்திருந்தனர்.

  எனினும், அவ் எதிர்ப்பு மற்றும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாகக் கருத்திற்கொள்ளாது நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012 யூன் 11 முதல் ஆகஸ்ட் 14 ஆம் திகதி

வரையான காலப்பகுதியில் 14 நாட்கள் அளவில் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டதை அடுத்து வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரிகளின் எதிர்ப்பில் அந் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இதன் படி, கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 05 ஆம் திகதி வரை குறித்த உபகரணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. நிலைமை அவ்வாறிருக்கையில் இரண்டாவது சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 யூன் 27 ஆம் திகதி மீள புதைகுழி தயாரிக்கப்படுவதற்காக ரூபா 2.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் படி, வைத்தியசாலையின் சகல பிரிவுகளினதும் எதிர்ப்பின் மத்தியில் கழிவு எரித்தல் தொகுதியொன்றைப் பொருத்தி, அதனை பயன்பாட்டிற்கு எடுத்திராது அதன் நிர்மாணிப்பிற்காக மீளப் பணத்தை ஒதுக்குவதன் மூலம் அரசாங்கப் பணத்தை விளைவற்ற முறையில் செலவிட்டிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவகம் (பதிவு செய்தல்) அதிகாரச்சட்டதின் 3.5 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் சேகரிக்கப்பட்ட கட்டணங்களில் 50 சதவீதம் அதாவது ரூபா 5.6 மில்லியன் தொகை மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் விசேட கணக்கிற்கு இதில் ரூபா 3.61 மில்லியன் தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரித்தான 1,577 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 09 ஆயுர்வேத வைத்தியசாலைகளும் 18 மத்திய மருந்தகங்களும் இருந்த காணிகள் திணைக்களத்திற்கு கையேற்கப்படும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் அவ் வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகக் கட்டிடங்களின் பழுதுபார்த்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு இது தடங்கலாகக் காணப்பட்டது.

- 2014 ஆம் ஆண்டின் போது மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட 14 மருந்து வகைகளைக் கருத்திற்கொள்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவைப் போல் 4 முதல் 450 சதவீதம் வரையான அளவு வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வாறே 2014 ஆம் ஆண்டின் போது அவ்வாறு வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 11 வகையான மருந்துப் பொருட்கள் தொடர்பாகக் கருத்திற்கொள்கையில் இவை ஔடதங்கள் திணைக்களத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் 2014 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு சேமிக்கப்படக் கூடியதாக இருந்த பணம் ஏறத்தாழ ரூபா 1.62 மில்லியன் மாத்திரமேயாகக் காணப்பட்டது. போதிய மனித மற்றும் பௌதீக வளங்கள் இன்மையால் மருந்து வகைகளின் தேவைப்பாட்டின் அளவைத் திணைக்களத்தில் உற்பத்தி செய்யப்படுவதற்கு முடியாதிருந்தது.

- 2014 சனவரி 01 ஆம் திகதி முதல் வடமேல் அபிவிருத்தி அதிகாரசபைக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்த இரு உத்தியோகத்தர்கள் அந்நாள் முதல் பிரதம அமைச்சரின் அந்தரங்கப் பதவியணிக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக அதிகாரசபையால் மாதமொன்றிற்கு ரூபா 20,000 படி ரூபா 480,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவை வழங்குவது வினைத்திறனற்ற சம்பளக் கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டது.

- வடமேல் மாகாண சபையின் கீழ் மாகாண குறித்த அபிவிருத்தி ஏற்பாடுகளில் 08 ஆண்டு காலத்தின் போது ஹொட்டேல் பாடசாலை ஒன்று நடாத்தப்படுவதற்காக கட்டிடமொன்றை நிர்மாணித்து உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 95.53 மில்லியன் தொகை செலவிட்டிருந்த போதிலும் இதிலிருந்து வடமேல் மாகாண சபைக்கு எவ்வித நலனும் பெற்றுக்கொள்ளப்படாது அரசாங்கத்திலிருந்து வெளி நிறுவகத்திற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் மூலம் இவ் ஆதனம் கையேற்கப்பட்டிருந்தது. இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவ நிறுவகத்தினால் ஹொட்டேல் பாடசாலைப் பாடநெறி நடாத்தப்படல், மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல், பரீட்சைகள் நடாத்தப்படல், சான்றிதழ்கள் வழங்கல், செய்முறைப் பயிற்சிகளுக்காக அனுப்புதல் மற்றும் மேலதிகக் கல்வி போன்ற விடயங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபடுவதுடன் அந் நிறுவகம் உழைக்கும் வருமானத்தில் எவ்வித நலனும் மாகாண சபைக்கு அறவிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

- வடமேல் அபிவிருத்தி அதிகாரசபையால் இப்பாகமுவை தலாகஸ்வெவ சுற்றுலா நிலையமொன்றை ஆக்குவதற்காக 2009 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 1.17 மில்லியன் தொகை ஏற்கப்பட்டு 10 படகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் வீடமைப்பாளரின் செலவினமாக ரூபா 238,925 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 1.41 மில்லியன் கூட்டுத்தொகையான செலவினத்தை ஏற்றிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இது செயற்படுத்தப்பட்டிராமையால் இது விளைவற்ற செலவினமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வடமேல் கைப்பணி சேவைகள் பணியகத்தால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1.48 மில்லியன் தொகை செலுத்தப்பட்டு 02 இன்கியுபேட்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை 2015 யூன் 06 ஆம் திகதி வரையிலும் பணியகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

- 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமான வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், குறித்த கட்டணங்களில் பிடித்து வைத்தல் வரி கழிக்கப்பட்டு, கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டு மாதமொன்றின் அடுத்துள்ள மாதத்தின் 15 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு வருமான வரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், வடமேல் மாகாண இயந்திர உபகரணங்கள் அதிகாரசபையால் ரூபா 13.28 மில்லியன் பெறுமதியான வரித் தொகை பல வருட காலமாக குறித்த காலப்பகுதியின் போது செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான அறவீட்டுத் தொகைககள் அடுத்துவரும் மாதத்தில் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், வடமேல் இயந்திர உபகரணங்கள் அதிகாரசபையால் ரூபா 16.16 மில்லியன் தொகையான கழிப்பனவு மீதிகள் குறித்த வகையில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் குறித்த தினத்தில் செலுத்தப்பட்டிராமையால் மிகைக்கட்டணமும் தண்டப்பணமுமாக ரூபா 3.97 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியின் போது செலுத்தப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 544,634 தொகை மிகைக்கட்டணமாகவும் தண்டமாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

- வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகாரசபையின் நிதிக் கட்டுப்பாடு சீரற்றமையால் மீளாய்வாண்டின் போது வங்கி மேலதிகப்பற்றாக ரூபா 571,141 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- பழுதுபட்டமையின் காரணமாக பல வருட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத வியாபாரச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அகற்றப்பட்டுள்ள ரூபா 19.66 மில்லியன் பெறுமதியான 15 வகை இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது வடமேல் இயந்திர உபகரண அதிகாரசபையின் நிலையான சொத்தாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவை அகற்றப்படுவதற்கோ அல்லது வேறு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- பல வருட காலமாக போதிய சேவைக்கான கேள்வியைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டத்தைத் தயாரிக்காத காரணத்தால் வடமேல் இயந்திர உபகரணங்கள் அதிகாரசபையிடமுள்ள ரூபா 16.84 மில்லியன் கிரயப் பெறுமதியான 08 வாகனங்கள் விளைவற்றிருந்தமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறே ரூபா 25.38 மில்லியன் பெறுமதியான 11 வாகனங்கள் பல வருடகாலமாக சிறிய சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது அல்லது சேவைக்குத் தேவையான மேலதிக உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிராத காரணத்தால் விளைவற்றுக் காணப்பட்டன.

- வடமேல் சனகலா நிலையத்தின் கூட்ட மண்டப நிர்மாண நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக 02 கட்டங்களின் கீழ் ரூபா 10.75 மில்லியன் தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது முற்றாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடிய நிலைக்குக் கொண்டுவருவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது.

- 2010 ஒக்டோபர் 07 ஆம் திகதிய சீ.ஏ/09/என்.எஸ்.சீ.சீ/பொது ஆம் இலக்க கடிதம் மற்றும் 2012 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய பீ.சீ.எம்.டீ/1/4/23/1/14 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின்

கடிதத்தின் மூலம் அரசாங்க சேவைகளின் சம்பளம் மற்றும் பதவியணி எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகையில் தேசிய கொள்கைக்கு இணையாக செயற்படும் தேவைப்பாடு எடுத்துக்காட்டப்பட்டிருந்த போதிலும் வடமேல் மாகாண சபைச் செயலாளரின் பதவியணிப் பதவிகளுக்குரித்தான சம்பள அளவுத் திட்டம், சபையின் பதவியணி ஆலோசனைக் குழுப் பரிந்துரையில் தீர்மானிக்கப்பட்டு உயரிய சம்பளப் பரிமாணத்தில் வைக்கப்பட்டிருந்தது.

- வடமேல் பிரதம செயலாளர் காரியாலயத்தால் 2014 ஆம் ஆண்டிற்கும் இதற்கும் முன்னைய ஆண்டுகளுக்கும் உரித்தாக பிரதேச சபைகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 113.63 மில்லியன் தொகையான முத்திரைக் கட்டணங்களும் ரூபா 26.69 மில்லியன் தொகையான நீதிமன்றத் தண்டப்பணமுமாக ரூபா 140.33 மில்லியன் கூட்டுத்தொகை பெறுமதி உரிய நிறுவகங்களுக்கு செலுத்தப்படாதிருந்தன.

- மாகாண வருமானத் திணைக்களத்தால் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை சேகரித்துக்கொள்ளப்பட வேண்டிய புரள்வு வரித் தொகையில் சேகரித்துக்கொள்ளப்பட்டிருந்த அளவின் சதவீதமாக முறையே 11.43 முதல் 0.6 சதவீதம் வரையான வீச்சில் முற்றிலும் குறைவான சதவீதத்தைக் கொண்டிருந்தது

- மாகாணக் கல்விக் காரியாலயத்தால் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 8.06 மில்லியன் தொகையான முற்பணத் தொகை பல்வேறு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இம் முற்பணத்தைத் தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியல்களின் பெறுமதி ரூபா 6.01 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இதன் படி, தேவையான அளவிலும் பார்க்க கூடுதலாக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகை ரூபா 2.05 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் இது மொத்த முற்பணத் தொகையில் 25 சதவீதத்தைக் கொண்டிருந்தது. இவ்வாறே, 32 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1.65 மில்லியன் தொகையான முற்பணத் தொகையில் கையில் எஞ்சியிருந்த தொகை வழங்கப்பட்ட முற்பணத்துடன் ஒப்பிடப்படுகையில் 24 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

- நிதி விதிகளுக்குரித்தற்ற வகையில் மாகாண கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் கையில் வைத்துக்கொள்ளப்பட்டு பின்னர் தீர்க்கப்பட்ட தொகை ரூபா 2.05 மில்லியன் ஆனதுடன் எஞ்சிய ரூபா 6.01 மில்லியன் பெறுமதியான உண்டியல்கள் தீர்க்கப்படுகையில் 20 நாட்களுக்கும் 62 நாட்களுக்கும் இடைப்பட்ட கால தாமதம் நிலவியது. இவ்வாறே, 16 மாகாண கல்வி அலுவலக உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4.76 மில்லியன் பெறுமதியான முற்பணத் தொகை நிகவெரட்டிய வலய அலுவலகத்தின் 08 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 344,250 முற்பணத் தொகையும் அவர்களால் முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட முன்னர் அவ் உத்தியோகத்தருக்கே மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

# ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையால் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 17,253 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டு இதில் ரூபா 14,873 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கும் ரூபா 2,380 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்படுவதற்கும் இதில் ரூபா 13,380 மில்லியன் தொகை மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 3,873 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் பயன்படுத்தப்படுவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 16,433 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 2,596 மில்லியன் உள்ளக மார்க்கமாக சேகரித்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 13,869 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 4,448 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன.

ஊவா மாகாண சபை நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்குரித்தான முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தின் உருளைக்கிழங்கு முளைகளின் கணக்கு மீதி ரூபா 41.01 ஆகக் காணப்பட்டதுடன் அம் மீதி 10 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக வெளிப்படுத்தப்படுத்தப்பட்டிருந்தன. இம் மீதி குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் முன்னைய 05 ஆண்டுகளின் போதும் அறவிடப்பட்டிருந்த சதவீதம் 05 ஆகக் காணப்பட்டமையால் அச் செயற்பாடு படிப்படியாக மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் படி, மாகாண சபையின் மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 13,869.33 மில்லியன் ஆகவும் மூலதனச் செலவினம் ரூபா 4,447.95 மில்லியன் ஆகவும் காணப்பட்டதுடன் மாகாண சபையின் ஒவ்வொரு அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளின் படி, மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 13,705.07 மில்லியன் ஆகவும் மொத்த மூலதனச் செலவினம் ரூபா 4,453.69 மில்லியன் ஆகவும் இருந்தமையால் மீண்டெழும் செலவினத்திற்கும் மூலதனச் செலவினத்திற்குமிடையே ரூபா 164.26 மில்லியன் தொகையும் ரூபா 5.74 மில்லியன் தொகையுமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 பிரதேச செயலகங்கள் அடங்கலாக மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் 32 அலுவலகங்களுக்குரித்தான ரூபா 170.18 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டுநிதி மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

- பதுளை, ஊவாபரணகம, ஹப்புத்தளை, மஹியங்கனை மற்றும் பண்டாரவளை பிரதேச செயலகங்களில் நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணி 48 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 5.96 மில்லியன் தொகையான வருடாந்த வரி தடவைகள்/ தண்டப்பணம் மற்றும் ரூபா 556,259 தொகையான வட்டிப் பணம் அறவிடப்பட்டிராததுடன் ஹப்புத்தளை மற்றும் ஹாலியெல பிரதேச செயலகத்தால் 14 குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 9.94 மில்லியன் தொகையான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத் தடவைகள்/ வரித் தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

- லுணுகல இல 02 மதுபானசாலைகள் வரிகள் 2014 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்படுவதற்காக விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படுகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் இரண்டில் கூடிய விலை சமர்ப்பிக்கப்பட்டு கேள்விதாரர்களின் ரூபா 7.03 மில்லியன் தொகையான விலைகள் கலால்வரி ஆணையாளரால் மதிப்பிட்டு ரூபா 9.5 மில்லியன் இற்கும் குறைவான தொகையைக் கொண்டிருந்தது. வர்த்தமானி அறிவித்தலின் படி, மதிப்பீட்டு விலைக்கு மதுபானசாலை வரிகளைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்வியாளர்களிடம் கோரி அவர் இதற்கு உடன்பாட்டை நிராகரித்திருப்பின் வரியை மீள விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவ் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக மதிப்பீட்டுப் பெறுமதியில் 10 சதவீதம் குறைக்கப்பட்டு அதாவது ரூபா 8.55 மில்லியன் இற்கு கேள்வி விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் பெற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருந்த மதுபான அனுமதிப்பத்திர வருமானத்தில் ரூபா 950,000 தொகையான வருமானம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

- மாவட்ட இயந்திரவியல் தொழிற்சாலைக்கான முற்பணக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் 2011 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் நிலுவை வருமானம் ரூபா 9.97 மில்லியன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மொனறாகலை கல்வி வலயத்திற்குரித்தான 12 பாடசாலைகளின் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட்ட பணம் ரூபா 1.76 மில்லியன் தொகை 2014 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் செலவிடப்படாது விளைவற்று கணக்குகளில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

- வெலிமட வலயக் கல்வி வலயத்தின் 2014 ஆம் ஆண்டின் மூலதன ஏற்பாடுகளில் கல்வி வலயத்தில் நடாத்தப்பட வேண்டிய பெறுமதி ரூபா 2.21 மில்லியன் தொகையான 40 நிகழ்ச்சித்திட்டங்கள் கணக்காய்வுத் தினமாகிய 2014 திசெம்பர் 12 ஆம் திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிராததுடன் அந் நிகழ்ச்சித்திட்டங்களில் 2014 ஆம் ஆண்டின் க.பொ.த. சாதாரணதர பரீட்சைகளை இலக்காகக் கொண்டு ரூபா 121,560 தொகையான 03 நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- பிபில வலய கல்வி அலுவலகத்திற்குரித்தான 78 பாடசாலைகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஆக்கபூர்வமான பயன்பாட்டுத் தொகையான ரூபா 15.85 மில்லியன் தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- .மாகாண அரசாங்க சேவைகள் ஆணையாளரால் 3 ரூட்களும் 18.5 பேர்ச்களுமான குடாமுத்தடுவ எனும் பெயரிலான காணி கையேற்கப்படுவதற்காக பதுளை பிரதேச செயலகத்திற்கு ரூபா 2.28 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் இக் காணி கையேற்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் ரூபா 2.28 மில்லியன் தொகை 05 ஆண்டு காலமாக விளைவற்று பதுளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தமையால் அத் தொகை வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படுவதற்கிருந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.